வரு.75 இல. 14 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2023 ஏப்ரல் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

April 02 Sunday, 2023

28 பக்கங்கள் 100/-
















வெடுக்குநாறி மலை எழுந்தருளும்

## ஆதி லிங்கேஸ்வரருக்கு இன்று புனராவர்த்தன கும்பாபிஷேகம்



வவுனியா, நெடுங்கேணி, வெடுக்குநாறி மலையின் ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டு அந்தரீத புனராவர்த்தன கும்பாபிஷேகம் இன்று ஞாயிறு (02) அதிகாலை சிவஸ்ரீ வை.கு.ஜெயசுத குருக்கள் தலைமையில் நடைபெறும்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதியின் இந்து மத விவகார இணைப்பாளர் கலாநிதி 06



தமிழ்,சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஆடைகளை கொள்வனவு செய்ய பெருந்தொகையான மக்கள் தீவின் பல்வேறு பகுதிகளில் இருந்து மஹரகம, பமுன்வ,கொழும்பு புறக்கோட்டை, இரண்டாவது குறுக்குத் தெருவிலுள்ள கடைகளில் அலைமோதுவதை படங்களில் காணலாம். படம் ரஞ்சித் அசங்க

நாடு அராஜகமாக மாறுவதை தடுத்த படையினருக்கு நன்றி

## நாட்டில் சட்டம், ஒழுங்கை சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்க போவதில்லை



ஜனாதிபதியாக தான் இருக்கும் வரையிலும் நாட்டில் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் எந்தவிதமான நடவடிக்கைகளுக்கும் இடமளிக்கப் போவதில்லையென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார்.

அநுராதபுரம் விமானப் படை தளத்தில், முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளிடையே விசேட உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தொடர்ந்தும் உரையாற்றுகையில், நான் நாட்டை பொறுப்பேற்ற போது நாடு அராஜக நிலைக்கு போய்க்கொண்டிருந்தது. பாராளுமன்றத்தையும் கைப்பற்றுவதற்காக முஸ்தீபுகள் அரங்கேறிக்கொண்டிருந்தன. அத்தகைய நிலையில் இராணுவமும், விமானப் படையும், கடற்படையும் பொலிஸாரும் இணைந்து வன்முறைப் போராட்டக்காரர்களால் பாராளுமன்றம் கையகப்படுத்தப்படுவதையும், நாடு அராஜகத்துக்குள் ஆளாவதையும் 06

G.C.E. A/L விடைத்தாள் திருத்துவதில் தாமதம்

# இலட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலக் கல்விக்கு பெரும் பாதிப்பு

### ஆசிரியர் சங்கங்களுக்கு அழுத்தம் கொடுக்க பெற்றோரின் தலையீடு அவசியம்



க.பொ.த. உயர்தர விடைத்தாள்களை திருத்தம் செய்யும் நடவடிக்கையில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கமும் சில பாடசாலை ஆசிரியர்களும் பங்குபற்றாததால் நாட்டிலுள்ள இலட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலக் கல்வி சீர்குலைந்துள்ளது.

விடைத்தாள்களை திருத்தம் செய்யும் நடவடிக்கை கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்த போதும், இன்றைய நிலவரப்படி ஒரு மாதமும் 10 நாட்களும் திருத்த நடவடிக்கைகள் தாமதமாகியுள்ளன. இப்பணிக்கென பல்கலைக்கழக பேராசிரியர்கள் சுமார் 1,400 பேர் தேவைப்படுவதுடன், மதிப்பெண் பெற்றுக் கொடுக்கும் முறையைத் தயாரித்தல் மற்றும் விடைத்தாள் திருத்தம் செய்வதற்காக வரும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதும் அவர்களின் பணியாகும்.

தற்போது பல்கலைக்கழக பேராசிரியர் சங்கத்தின் அழுத்தம் காரணமாக பல்கலைக்கழக பேராசிரியர்கள் இச்செயற்பாடுகளிலிருந்து விலகி இருப்பதால் ஓய்வுபெற்ற சில பேராசிரியர்களே இதற்கு முன்வந்துள்ளனர். 06

பதுளையில் 'பிக் மெட்ச்' கிரிக்கெட் போட்டி

## வாகன பேரணியில் விபத்து 02 மாணவர் பலி, 09 பேர் காயம்

லுணுகல நிருபர்



பதுளையிலுள்ள இரண்டு பிரபல பாடசாலைகளுக்கிடையிலான 'பிக் மெச்' கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமாகி நேற்றும் பதுளை கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிக்கு ஆதரவு தெரிவிக்க வந்த வாகன தொடரணியில் பயணித்த கெப் ரக வாகனமொன்று மைதானத்துக்கருகில் விபத்துக்குள்ளானதில் 02 மாணவர்கள் பலியாகியுள்ளனர்.

வாகனத்தில் பயணித்த மேலும் 09 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்துள்ள பேர் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டபோதே சிகிச்சை பலனின்றி 19 வயதுடைய இரண்டு மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அத்தோடு 09 பேர் பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் அவர்களுள் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### எங்கள் கருத்து...

## இலவசங்கள், மானியங்களை நம்பி வாழ்வதல்ல நிம்மதி!

இலங்கையில் பொருளாதார நெருக்கடி உருவெடுத்தமைக்கு கடந்தகால அரசுகளை மாத்திரம் குற்றம் கூறுவதால் பயனில்லை. எமது மக்களில் பெரும்பாலானவர்களின் சுபாவமும் அதற்கு சிறியளவில் காரணமாகின்றது.

எமது நாடு 1948 ஆம் ஆண்டு பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கமே நாட்டு மக்கள் இலவசத்துக்கும், மானியங்களுக்கும் நன்றாகவே பழக்கப்பட்டுப் போயுள்ளனர். சுதந்திரத்துக்குப் பின்னர் 'கூப்பன் முறை' என்பது நடைமுறையில் இருந்தது.


வருமானம் குறைந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூப்பன்கள் வழங்கப்படுவதுண்டு. அதற்கேற்ப அக்குடும்பங்கள் கூட்டுறவுக் கடைகளில் இலவசமாக சில பொருட்களைப் பெறுகின்ற முறைமை அன்றிருந்தது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் பெருமளவு அரிசி இலவசமாகக் கிடைத்தது.

இலவச மருத்துவம், இலவசக் கல்வி, 'ரயில்வே வொரண்ட்', சமுர்த்திக் கொடுப்பனவு, முதியோர் கொடுப்பனவு, பொதுப்போக்குவரத்துப் பயணத்துக்கான சீசன் டிக்கெட், குடிநீர் விநியோகம், அத்தியாவசிய சேவைகள் என்றெல்லாம் இலவசங்களும் மானியங்களும் இன்றும் தொடர்கின்றன. இலவசங்களுக்காகவும், மானியங்களுக்காகவும் அரசாங்கம் செலவிடுகின்ற பணம் மிகவும் அதிகமாகும்.

எமது நாட்டில் மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகள் பலவற்றில் மானியங்கள் உள்ளனவென்பது மக்களில் அதிகமானோருக்குத் தெரிவதில்லை. உற்பத்திச் செலவைவிடக் குறைவாகவே மின்சாரத்தையும் குடிநீரையும் மக்களுக்கு வழங்க வேண்டியுள்ளது. உற்பத்திச் செலவுக்கேற்ப அவற்றை வழங்கினால் மக்களை வீதிக்கு இறக்குவதற்கு எதிரணிகள் தயாராகவே உள்ளன.

மானியங்களுக்குப் பழக்கப்பட்டுப் போன எமது நாட்டில், அரசாங்கத்தின் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதென்பது இயலாத காரியம். அன்றைய காலத்தில் நாட்டில் மக்கள் குடித்தொகை குறைவாக இருந்ததால் இலவசங்களையும் மானியங்களையும் தாராளமாக வழங்குவதற்கு அரசினால் முடியுமாக இருந்தது. ஆனால் சனத்தொகை கட்டுமீறி அதிகரித்துள்ள இக்காலத்தில், இலவசங்களையும் மானியங்களையும் தொடர்வதென்பது 06

## 10 இலட்சம் முட்டைகள் நேற்று நாட்டை வந்தடைவு



இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மேலும் 10 இலட்சம் முட்டைகள் கொழும்பு துறைமுகத்தை நேற்று வந்தடைந்ததாக அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த முட்டைகளின் தரம் தொடர்பில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார 06

IMF நீடிக்கப்பட்ட கடன் வசதி

## செயன்முறை தொடர்பிலான மீளாய்வுக்கு குழு நியமனம்

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி எவ்வாறு செயற்படுகிறது என்பதை ஆராய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மீளாய்வுக்குழுவொன்றை நியமித்துள்ளார். ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட நிபுணர் குழுவொன்றையே 06

## ஆஸி. மெய்வல்லுநர் போட்டிகள்; ஈட்டி எறிதலில் பதக்கங்கள்



### தினேஷுக்கு தங்கம், துலானுக்கு வெள்ளி

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற அவுஸ்திரேலிய பகிரங்க மெய்வல்லுநர் போட்டிகளில் பரா விளையாட்டு வீரர்களுக்கான ஈட்டி எறிதலில் இலங்கைக்கு ஒரு தங்கப் பதக்கம் உட்பட 02 பதக்கங்கள் கிடைத்துள்ளன. பரா ஈட்டி எறிதலில் உலக சாதனை வீரர் தினேஷ் பிரியந்த தங்கப் பதக்கத்தையும் அவரது சக பரா வீரர் சமித்த துலான் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றெடுத்துள்ளனர். 06

## முறையற்ற பஸ் கட்டணம் அறவீடு

### முறையிட தொலைபேசி இலக்கம்

எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்ட பின்னர் பஸ் கட்டணம் 12.9 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ள போதிலும், சில பஸ்களில் பழைய கட்டணமே வசூலிக்கப்படுவதாக பயணிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

விலை குறைக்கப்பட்ட கட்டணங்களை அறவிடாத பஸ்கள் தொடர்பான முறைப்பாடுகளை 1955 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தெரிவிக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பயணிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

## வெடுக்குநாறி ஆலய விவகாரம்; வழக்கு விசாரணை 10 ஆம் திகதி

### வவுனியா நீதவான் நீதிமன்றம் உத்தரவு

வவுனியா, ஒலுமடு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு வவுனியா நீதவான் நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்த நெடுங்கேணி பொலிஸார் ஆலய நிர்வாகத்தினரின் தொலைபேசி அழைப்புக்களை பெற கடந்த செவ்வாய்க்கிழமை (28) வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் அனுமதி கோரினர்.

இதன்போது நீதிமன்றத்திலிருந்த சட்டத்தரணிகள் பொலிஸாரின் கோரிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்ததுடன், விக்கிரகங்களை உடைத்தமை தொடர்பில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகள் 06

## ஜீவன் தலைமையில் மீண்டும் இ.தொ.கா மக்கள் சந்திப்பு

### உடப்புஸ்ஸலாவையில் ஆரம்பமானது



நாட்டில் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக கடந்த காலங்களில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இ.தொ.காவின் மக்கள் சந்திப்பு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஆறு மாத காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மக்கள் குறைகேட்கும் சந்திப்பின் முதல் சந்திப்பு நுவரெலியா உடபுஸ்ஸலாவ டலோஸ் தோட்டம் முத்து மண்டபத்தில் 30 ஆம் திகதி ஆரம்பமாகியது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான 06

Your Bank Is Wherever You Are

ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 01-02 |
| --- | --- |
| ஸஹர் முடிவு | 04.38 |
| ஸுபஹ் | 04.53 |
| சூரிய உதயம் | 06.10 |
| ழுஹர் | 12.16 |
| அஸர் | 03.21 |
| மஃரிப் | 06.20 |
| இஷா | 07.30 |

Call 0117 756 756
www.amanabank.lk
Amãna Bank
It's Your Bank

# அடுத்த தலைமுறைக்கான தொழிநுட்பம் நீர்ப்பகுப்பாய்வு மூலம் மின்சார உற்பத்தி (GH2O)



Next Generation water electrolysis power Generation system ( GH2O) கிறீன் லங்கா சஸ்டேனபிள் சொலுசன் பிறைவேட் லிமிட்டட் (Green Lanka Sustainable Solutions ( Pvt) Ltd) நிறுவனமானது ஜப்பான் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நீரை மாத்திரம் மூலப்பொருளாக கொண்டு ஐதரசன் வாயுவில் இயங்கக்கூடிய மின்பிறப்பாக்கிளை இலங்கையில் அறிமுகப்படுத்தல், சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைக்கு பின்னரான சேவை வழங்குதல் போேற்றவற்றிகாக இலங்கை நாட்டுக்கான பங்குதாரராகவும் நியமிக்கப்படுள்ளது. இந்நிறுவனத்தின் பணிப்பாளரும் GH20 திட்ட முகாமையாளுமான திரு சி. செந்தில்குமரன் அவர்களுடான நேர்காணல் வருமாறு.

**கேள்வி: இலங்கை நாட்டில் உள்ள மின்சாரப் பிரச்சினைக்கு தற்போதைய பொருளாதாப் பிரச்சினை எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது?**

கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் ஏற்பட்ட பொருளாதா பிரச்சினை காரணமாக நாடு பாரிய தொடர் பிரச்சினைக்கு முகம்கொடுப்பதுடன் அதிலிருந்து விடுபடுவதற்கான பல முயற்சிகளை மேற்கொண்டு வருவதை நாம் அறிவோம். இருப்பினும் சில பிரச்சினைகளுக்கு நீடித்து நிலைக்கக் கூடிய தீர்வுகளை வழங்க முடியாதுள்ளதால் ( Sustainable Solutions) அவை மக்களின் வாழ்வாதாரத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை மிகவும் வேதனைக்குரிய விடயமாக உள்ளது. குறிப்பாக மின்சாரக் கட்டணத்தில் ஏற்பட்ட சடுதியான அதிரிப்பு, மின்சாரக் கட்டணத்துக்கான புதிய வரி அறவீடு இலங்கை மக்களின் ஜீவனோபாயத்தில் சிக்கல் தன்மையை ஏற்படுத்தியுள்ளதுடன் வாழ்வியல் முறைகள் முற்றாக மாற்றமடைந்து வருகின்றமையை நாம் அவதானிக்க்கூடியதாக உள்ளது. நீடித்து நிலைக்கக்கூடிய திட்டம் ஏதும் அமுல்படுத்தாத சந்தர்ப்பத்தில் மின்சாரக் கட்டணக்குறைப்பு என்பது எந்த வகையிலும் சாத்தியமற்றது. பாரிய அளவிலான அந்நிய செலாவணியானது எரிபொருள் இறக்குமதிக்காக செலவழிக்கப்படுவதுடன் அவற்றில் பெரும்பகுதியானது மின்சார உற்பத்திக்காக பயன்படுத்தப்படுவதால் பாரிய பொருளாதார இழப்பு ஏற்படுவதுடன் எமது சூழலும் மாசடைந்து வருகின்றது. அண்மைக்கால காற்று மாசு சுட்டெண் அதிகரிப்புக்கு எரிபொருள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்னுற்பத்தி நிலையங்களால் வெளியிடப்படும் வாயுக்களும் காரணமாக இருக்கலாம் என பல அறிஞர்கள் கருதுகின்றனர். மேலும் நாட்டில் தற்போது உற்பத்தி செய்யப்படும் மின்சாரமானது அதிகரித்துவரும் மின்சாரத்தேவைக்கு கடன் வட்டி வீதம் அதிகரித்தமை, மக்களின் வாங்கும் திறன் குறைவடைந்தமை, மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் மின்சார சபையினால் வழங்கப்படும் மேலதிக மின்சார அலகுக்கான கொடுப்பனவு நீண்டகாலமாக வழங்கப்படாமை போன்ற காரணங்களை குறிப்பிட முடியும். அத்துடன் இதற்கு பொருத்தமான தீர்வு தற்போது அரசாங்கத்திடம் இல்லை. கடந்த காலங்களில் அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் சிலர் மின்சாரத்தில் இயங்கப்படும் வாகனங்களை இலங்கை நாட்டில் அறிமுகப்படுத்துவதன் மூலம் எரிபொருள் இறக்குமதியை கட்டுப்படுத்தி அந்நியசெவாணி இருப்பை அதிகரிக்கலாம் என்பது சாத்தியமான தீர்வாக காணப்படுகின்றபோதும் அது உண்மையில்லை. மின்சார வாகனங்களை அதிகமாக பயன்படுத்தும் போது மின்சாரத்துக்கான கேள்வி அதிகரிக்கும் அதாவது இலங்கையில் எரிபொருள் கொண்டு மின் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதால் எரிபொருள் இறக்குமதி அதிகரிக்கும் என்பது யதார்த்தம்.

**கேள்வி: மேற்படி சவால்களை கருத்தில்கொண்டு தங்கள் நிறுவனத்தால் சந்தைக்கு வரவுள்ள தண்ணீரை மூலப்பொருளாக கொண்டு மின் உற்பத்தி செய்யும் மின்பிறப்பாக்கியானது இலங்கையின் மின்சாரப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வாக அமையும்?**


இம்மின்பிறப்பாக்கியானது அடுத்த தலைமுறைக்கான அதி உச்ச தொழிநுட்பத்தை கொண்டு ஜப்பான் நாட்டில் உருவாக்கப்பட்டதாகும். இங்கு நீர் மாத்திரம் உள்ளீடாக வழங்கப்படுகிறது என்பதுடன் வேறு எந்தவொரு உள்ளீடுகளோ அல்லது வெளிச்சக்திகளோ வழங்கப்படுவதில்லை என்பது முக்கியமான விடயாமாகும். உள்ளீடாக வழங்கப்படும் நீரானது மின்பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு அதன் மூலம் உருவாகும் ஐதாரசன் வாயுவானது மின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்றது. இச்செயற்பாட்டை ஆரம்பிப்பதற்காக மின்கலங்கள் மின்பிறப்பாக்கியுள் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால் மின் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டவுடன் அவற்றின் ஒருபகுதி மின்கலங்களை சார்ஜ் செய்யப ˙பயன்படும். அண்மையில் பலரும் அறிந்துகொண்ட ஒரு முக்கிய அமைப்பு பியுவல் செல் (fuel cell) அதாவது பியுவல் செல் ஆனது இரசாயன சக்தியை எந்தவொரு எரியூட்டமுமின்றி மின்சக்தியாக மாற்றக்கூடிய இயந்திரம் என்று குறிப்பிடலாம். ஐதரசனானது சக்தியை திறம்படக் காவிச் செல்லக்கூடிய மூலகம் என்பதுடன் இதை பியுவல்செல்லில் உள்ளீடாக வழங்கும் சந்தர்ப்பத்தில் வளியில் உள்ள ஒட்சிசனுடன் தாக்கமடைந்து மின்சக்தியை உருவாக்கும். இங்கு உற்பத்தி செய்யப்படும் நேராட்ட மின்சாரமானது பெருப்பிக்கும் தொழில்நுட்பம் மூலமாக பெருப்பிக்கப்பட்டு இன்வேட்டர் மூலமாக ஆடலோட்ட மின்சாரமாக மாற்றப்பட்டு வெளியிடப்படுகிறது.

**கேள்வி: தாங்கள் குறிப்பிட்ட பியுவல்செல் தொழிநுட்பமானது வேறு எங்காவது பாவிக்கப்படுகிறதா?**

கடந்த வருடம் பிரபல்யமான கார்களை உற்பத்தி செய்யும் ரொயாட்ட நிறுவனமானது பியுவல் செல் கார்களை சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது. ஐதரசன் வாயுவை கார் எரிபொருள் கொள்கலத்தினுள் நிரப்புவதன் மூலம் அது இயங்கக்கூடியது. ஒரு கிலோகிராம் ஐதரசன் வாயுவானது 81 மைல்கள் பயணம் செய்யக்கூயது. இலங்கையில் அறிமுகம் செய்யப்படுமாயின் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஐதரசன் வாயு நிரப்பு நிலையங்களாக மாறவேண்டும்.

**கேள்வி: தாங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள் மின் பகுப்பாய்வுச் செயற்பாட்டுக்கு மின்சார உள்ளீடு அவசியம் அவை மின்கலம் மூலம் ஆரம்பத்தேவைக்கு வழங்கப்படுவாதாகவும் பின்னர் பியுவல் செல்லானது மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளீர்கள். பொதுவாக உள்ளீட்டுச் சக்தியானது வெளியிடப்படும் சக்தியை விட அதிகமாக காணப்படும். அப்படியானால் எவ்வாறு மின் உற்பத்தி சாத்தியமாகும்?**

இங்கு தான் இம் மின்பிறப்பாக்கியின் அதியுச்ச தொழிநுட்பம் பயன்படுத்தப்படுகிறது. தாங்கள் கேட்டகேள்வி மிகவும் சரியானது. முதலாவதாக ஐதரசன் வாயு உற்பத்திக்கு ஊக்கிகளும் பொருத்தமான மின் அழுத்த வேறுபாடு பாவிக்கப்படுவதால் மிகக் குறைந்த மின்சார உள்ளீடு வழங்கப்படுகிறது. அத்துடன் பியவல் செல்லினால உற்பத்தி செய்யப்படும் மின்சாரமானது G- Motor எனும் இயந்திரத்தினூடாக செலுத்தப்படும் போது அங்கு உள்ளீட்டு சக்தியானது 10 மடங்காக உருமாற்றம் பெற்று வெளியீடாக பெற்றுக்கொள்ளப்படும். இருப்பினும் உற்பத்தியாளர் 5 மடங்கு சக்தி பெருப்பித்தலுக்கு உத்தரவாதம் அளிக்கிறார்கள்.




**கேள்வி: மிகவும் புதுமையான விடயம் G- Motor ஆனது எவ்வாறு செயற்படுகின்றது அதன் தொழிநுட்பம் பற்றி மேலதிக தரவுகளை தரமுடியுமா?**

இம் மின்பிறப்பாக்கியின் அதி உச்ச தொழில்நுட்பமே G- Motor ஆகும். உற்பத்தியாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் அது தொடர்பான எல்லாத் தகவல்களையும் பகிர முடியாது. சிலவிடயங்களை சில தேவையின் நிமித்தம் மாத்திரம் தெரியப்படுத்த முடியும். இருப்பினும் சில அடிப்படையான விடயங்களை மாத்திரம் குறிப்பிட விரும்புகின்றேன். இங்கு மிகவும் வலிமையான காந்தங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றினால் உருவாக்கப்படும் காந்த விசை காரணமாக மின் மோட்டார்கள் சுற்றப்படுகின்றன. அதாவது மின்காந்த சுழற்சி மூலம் ( Electro Magnetic Rotary power) மின்சக்தியானது பெருப்பிக்கப்படுகிறது.

**கேள்வி: இத்திட்டமானது இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டால் தற்போதைய மின்சாரப் பிரச்சினையை தீர்க்க முடியுமா? அல்லது நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வைப்பெற்றுக்கொள்ள முடியுமா?**

ஆம். முன்னர் குறிப்பிட்டது போல் இம் மின்பிறப்பாக்கியானது தூய நீரின் உள்ளீட்டுடன் சக்தியை உருவாக்கக்கூடியது. அத்துடன் எங்களுடைய உற்பத்தி நிறுவனமானது 2 கி.வா முதல் 50 மெகா வாற் வரை உற்பத்தி செய்யக்கூடிய மின்பிறப்பாக்கிகளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் திறனில் உள்ளது. உதாரணமாக நுரைச்சோலை மின் நிலையத்தின் திறனானது 900 மெகா வாற் ஆகும். மீள் சுழற்சி தொழிநுட்ப முறையினால் நீர் பயன்படுததப்படுவதால் பெரிய அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய மிகக்குறைந்த அளவு நீர் தேவைப்படுவதுடன் எமது நீர்வளமும் பாதுகாக்கப்படும். இதன் மூலம் உற்பத்திச் செலவை பாரிய ஆளவில் குறைக்கமுடியும். பராமரிப்பு செலவு, முதலீட்டுக்கான திருப்பம் என்பவற்றை கருத்தில்கொள்ளும் பட்டசத்தில், மின்சாரச் செலவை 40-60 % வரையால் குறைக்க முடியும்.

**கேள்வி: இம்மின் பிறப்பாக்கி நிறுவப்பட்டதன் பின்பு தொடர் செயற்பாடுகள் எவ்வாறு மேற்கொள்ள வேண்டும்?**

உண்மையில் இம் மின் பிறப்பாக்கியானது 24 மணிநேரமும் சுயமாக இயங்கக் கூடியது. நீர் விநியோகத்தை தொடர்ச்சியாக வழங்க குழாய்கள் சரியாக பொருத்தப்பட்டால் எவ்வித கண்காணிப்பும் தேவையில்லை. வழங்கப்படும் நீரானது மின்பிறப்பாக்கியில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு வழங்கப்படும். இம் மின்பிறப்பாக்கியின் தொழில்நுட்ப செயற்பாடுகள் யாவும் ஜப்பானில் உள்ள தொழில்நுட்ப மையத்தால் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படும்.

**கேள்வி: 50 கி.வா மின்சாரத்தை ஒரு மணித்தியாலத்துக்கு உற்பத்தி செய்து வழங்க எவ்வளவு தண்ணீர் தேவைப்படலாம்?**

50 கி.வா மின்சாரத்தை 1 மணித்தியாலத்துக்கு வழங்க 500 மி.லீ தண்ணீர் போதுமானது. அதாவது ஒரு நாளைக்கு 12 லீ தண்ணீர் போதுமானது. ஆச்சரியம் ஆனால் உண்மை. ஆனால் ஆரம்பத்தில் 1400 லீ தண்ணீரானது தாங்கியில் நிரப்பப்படல் வேண்டும்.

**கேள்வி: இங்கு சுற்றுப்புறச் சூழலை பாதிக்கக்கூடிய வாயுக்கள் ஏதும் வெளியேற்றப்படுகின்றதா? அவ்வாறாயின் அதன் பாதிப்பு எவ்வகையானது?**

இம்மின் பிறப்பாக்கியில் நடைபெறும் நீர்பகுப்பாய்வு மூலம் ஒக்சிசன் வாயு மாத்திரம் வெளியேற்றப்படுகிறது. அதாவது 0.02 ppm ஒட்சிசனும் 0.1 ppm ஓசோனும் வெளியிடப்படுவதுடன் இவை பாதகமற்ற வாயுக்கள்.

**கேள்வி: எத்தனை வருடங்களுக்கு இம் மின்பிறப்பாக்கியை தொடச்சியாக பயன்படுத்த முடியும்?**

**கேள்வி மாறுபடும் சந்தர்ப்பத்தில் எவ்வாறு செயற்படும்? விற்பனைக்கு பின்னரான சேவைகள் எவ்வாறு காணப்படும்?**

பொதுவாக 1 வருட உத்தரவாதம் வழங்கப்படுவதுடன் தேவையின் நிமித்தம் 25 வருடங்களுக்கு உத்தரவாதம் வழங்கமுடியும். இருப்பினும் இதை 25 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்த முடியும் ஆனால் வருடாந்த தேய்மானம் 0.5% ஆக காணப்படும். இம் மின்பிறப்பாக்கியானது சீரான மின்சாரத்தை தொடர்ச்சியாக வழங்கக்கூடியதுடன் அந்தவகையில் சீரான தேவையின் நிமித்தம் பாவிப்பதை சிபார்சு செய்கின்றோம். இலங்கை மின்சார சபையானது மேலதிக மின்சாரத்தை கொள்வனவு செய்ய உடன்படும் சந்தர்ப்பத்தில் மேலதிக மின்சாரத்தை National Grid க்கு வழங்குவதுடன் வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியும். விற்பனைக்கு பின்னர் நிறுவனமானது வருடாந்த விற்பனைக்கான சேவையை வழங்கும். பொதுவாக 365 நாட்களின் பின்பு சேவை வழங்கப்படும். இங்கு இயந்திரங்கள் பாவிக்கப்படாமையால் தேய்மானங்கள் எதுவும் இல்லை என்பதுடன் சுத்தப்படுத்தலுடன் மின்கலங்களை பரிசோதனை செய்வதுடன் தேவைப்படுமிடத்து புதியவைகள் பொருத்தப்படும்.

**கேள்வி: ஐதரசன் மின்பிறப்பாக்கியை தவிர வேறு எதாவது புதுமையான மற்றும் தற்போதை இக்கட்டான காலத்துக்கு பொருத்தமான பொருட்கள் மற்றும் திட்டங்கள் உள்ளனவா?**

பதில்: இம் மின்பிறப்பாக்கியை சந்தை யில் அறிமுகப்படுத்தியதை தொடர்ந்து தண்ணீரினால் இயங்கக்கூடிய மின்சாரக்காரை அறிமுகப்படுத்தவுள்ளோம். இக் காரானது 2 லீற்றர் தண்ணீரில் 2800 கிலோமீற்றர் துரம் பயணிக்கக்கூடியது என்பதுடன் எமது நாட்டுக்கு மிகவும் பொருத்தமானது. மின்பிறப்பாக்கியிலுள்ள அதே தொழிநுட்பம் இங்கும் பயன்படுத்தப்படுகிறது. அரசாங்கத்தினுடைய இறக்குமதிக் கொள்கைகள் மாற்றமடையும் போது அடுத்த நடவடிக்கைகளை மேற்கோள்வோம். மேலும் எமது நாட்டிலிள்ள தீவுப்பகுதிகளுக்கு தொடச்சியான மின்சாரத்தை வழங்குவதற்காக கடல் நீரை நேரடியாக பாவிக்கப்படக்கூடிய வகையில் மின்பிறப்பாக்கியில் மாற்றத்தை மேற்கொண்டு அதை சந்தைப்படுத்தவுள்ளோம். இதன் மூலம் தீவுப்பகுதிகளை சுற்றுலாத்துறை மையமாக்கி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தலாம். மூன்று நிமிடங்களில் மின்னேற்றம் செய்யக்கூடிய E Battery ( Conductive Polymer Battery) அறிமுகம் செய்யவுள்ளோம். இது லித்தியம் பற்றரியை விட பலமடங்கு பயனுள்ளது.

> **“ இம்மின்பிறப்பாக்கியானது அடுத்த தலைமுறைக்கான அதி உச்ச தொழிநுட்பத்தை கொண்டு ஜப்பான் நாட்டில் உருவாக்கப்பட்டதாகும். இங்கு நீர் மாத்திரம் உள்ளீடாக வழங்கப்படுகிறது என்பதுடன் வேறு எந்தவொரு உள்ளீடுகளோ அல்லது வெளிச்சக்திகளோ வழங்கப்படுவதில்லை என்பது முக்கியமான விடயமாகும். ”**





கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் சித்திரை அங்காடி 2023 மலிவு விற்பனை கண்காட்சி நேற்றுக்காலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மன்றத்தலைவி பத்மினி கந்தசாமி தலைமையில், சட்டத்தரணி ஜெயந்தி விநோதன் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்வில் சைவமங்கையர் கழக முகாமையாளர் சட்டத்தரணி செல்வி மாலா சபாரட்ணம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நாடாவினை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் சுபத்திரா கணேசன் மலர் செண்டு கொடுத்து கௌரவிக்கப்படுவதையும் போஷகர்களான யமுனா கணேசலிங்கம், நீலா தயாபரன் மற்றும் அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தபின் அவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் பாரம்பரிய உடை கண்காட்சியையும் காணலாம்.



கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சர்வதேச மகளிர் தினம் 2023, கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில், வெகு சிறப்பாக இடம்பெற்றது. மிதிலைச்செல்வி ஸ்ரீ பத்மநாதன் தலைவியாகவும், ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்திசேகரன் பிரதம விருந்தினராகவும், திருமதி மலர்மதி கங்காதரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டபோது பிடிக்கப்பட்ட படங்கள்.





மட்டக்களப்பு ஏறாவூர் முன்னா பியூட்டி அகடமியில் பல்வேறு துறைகளில் பயிற்சியினைப் பூர்த்தி செய்த மூன்றாம் தொகுதி யுவதிகளுக்கு சான்றிதழ் மற்றும் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. தையல், அழகுக்கலை, மருதாணி மற்றும் கேக் தயாரிப்பு போன்ற துறைகளில் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்துள்ள யுவதிகள் இதன்போது விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளர் எம்எஸ். சுபைர் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக்க கலந்துகொண்டார். சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஜி.ஏ நாஸரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னா பியூட்டி அகடமியின் ஸ்தாபகர் முனாபிறா றிஸ்வான், ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளர் எம். தஸ்லிம் , நகர சபை முன்னாள் உறுப்பினர் முகமட் றியால் அழகுக்கலை நிபுணரும் உளவியல் ஆலோசகருமான திருமதி மர்சூக்கா மெகலார் மற்றும் ஸ்கை தமிழ் ஊடக பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

ஏறாவூர் நிருபர் நாஸர்



நாட்டிய கலாமந்திர் அதிபர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவியும் அல்லி, தில்லை நடராஜா தம்பதிகளின் புதல்வியுமான செல்வி அபிராமி தில்லை நடராஜாவின் அரங்கேற்றம் எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியல்பீட கணனியியல் பொறியியல்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி உதயசங்கர் தயாசிவம் பிரதம விருந்தினராகவும், திலகநர்த்தனாலயம் இயக்குனர் கலாபூஷணம் யசோதரா விவேகானந்தன் கௌரவ விருந்தினராகவும், கொழும்பு வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலய அதிபர் திருமதி அருந்ததி ராஜவிஜயன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகளின் ஆன்மிக அருளுரைகள்

சிவபேறு தந்திடும் தீக்கையினை தெய்வத்தமிழில் பெற்றிட அரிய வாய்ப்பினை தென்னாடு செந்தமிழாகம சிவமடம் நல்கியுள்ளது. மறைமலை அடிகளார் வழிவந்த அருட்குருநாதர் ஒளியகம் ந. ஒளியரசு ஐயாவின் திருக்கரங்களாலே, திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் வாமதேவ தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகளின் ஆன்மிக அருளுரைகளோடு முதலாம், இரண்டாம் தீக்கை என்றழைக்கப்படுகின்ற நுழைவு (சமய) தீக்கை, நோன்மை (விசேட) தீக்கை ஆகியனவற்றைப் பெற்று பேரருள் பெற்றிடலாம்.



தென்னாடு செந்தமிழாகம சிவமடம், குளங்கரை வீதி கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணத்தில் பங்குனித்திங்கள் 19ம் நாள் (02.04.2023) காலை 7.00 மணிக்கு திருக்கோயில் வழிபாட்டுடன் ஆரம்பமாகும். தென்னாடு செந்தமிழாகம சிவமட சபையினர் இப் புனித நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளனர். தமிழகத்திலிருந்து வருகை தரும் சுவாமியின் ஆன்மிக அருளுரையில் கலந்து கொண்டு இறையருள் பெறுவதோடு சுவாமிகளின் அருளாசிகளையும் பெற்றுக் கொள்ளுமாறு தென்னாடு செந்தமிழாகம சிவமடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



வட்டுக்கோட்டைஅமெரிக்கான் மிசன் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் கீரிமலை வலிதுன்டல் பாடசாலையின் கால்கோள் விழாக்களில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினரும் தேசோதய தலைவர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் மாணவர்களுக்கு புத்தகப்பைகளை வழங்கினார். கனடா வாழ்.மிட்லன் மீடியா நிறுவன உழியார்களின் நிதிப்பங்களிப்பில் இவை வழங்கப்பட்டன.

( படம் வேலணை குறூப் நிருபர்)

## வலம்புரி கவிதா வட்டத்தின் 86 ஆவது கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 86 ஆவது கவியரங்கு 05/04/2023 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கொழும்பு 13, இல. 12, சங்கமித்த மாவத்தை, ரோயல் அகடெமியில் நடைபெறும். கவிஞர் கலாபூஷணம் வதிரி சி. ரவீந்திரன் தலைமையில் கவியரங்கு இடம்பெறும். நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன்(செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழகணேஷ் (பொருளாளர்)0 71 756 3646 உடன் தொடர்பு கொள்ளவும்.










தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் கீழ் பதிவு செய்துகொள்ளும் (உள்நாட்டு துறை அல்லாதவர்கள் - தொழில் வழங்குநரிடமிருந்து காப்பீட்டைப் பெறாதவர்கள்) இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான காப்புறுதிக் காப்பீட்டை வழங்குவதற்கான விலைக்கோரல் அழைப்பு**

**2023-06-01 முதல் தொடங்கி 2024-05-31 வரை**

**தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB)**

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் கீழ் பதிவு செய்துகொள்ளும் (உள்நாட்டு துறை அல்லாதவர்கள் - தொழில் வழங்குநரிடமிருந்து காப்பீட்டைப் பெறாதவர்கள்) இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான காப்புறுதிக் காப்பீட்டை வழங்குவதற்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (IRCSL) கீழ் பதிவு செய்துகொண்டுள்ள காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் செயலாளர் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கொள்கையின் பிரகாரம் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பதிவுடன் வருடாந்தம் பல்வேறு நாடுகளுக்கு வெளியேறிச் சென்ற சுமார் 260,000 புலம்பெயர் தொழிலாளர்களுக்கு விரிவான காப்புறுதிக் காப்பீட்டை வழங்குவதை இந்தக் காப்புறுதித் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக இடம்பெறும். தகுதியுள்ள சேவை வழங்குநர்கள் (காப்புறுதி) இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினால் குறிப்பிடப்படும் குறைந்தபட்ச நலன்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

மீளளிக்கப்படாத 25,000.00 ரூபா கட்டணத்தை 2023-04-03ஆம் திகதி முதல் 2023-04-20ஆம் திகதி வரையில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணிக்கிடையில் செலுத்தி மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றுடன் நிறுவனத்தின் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் (BRC) மூலப் பிரதி மற்றும் புகைப்படப் பிரதியொன்றையும் சமர்ப்பித்து பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் 2ஆம் மாடி, முகாமையாளர் (பெறுகை) அவர்களிடமிருந்து விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி உறுதிசெய்துகொண்டதன் பின் அதே நாளில் மீளளிக்கப்படும்.

விலைமனுதாரர்கள் இலங்கையில் செயற்படும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 600,000.00 ரூபாவிற்கான வங்கி உத்தரவாதமொன்றை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவரின் பெயரில் பெற்று விலைக்கோரல் பிணை முறியாக விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் 2ஆம் மாடி, பெறுகை பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் விலைமனுக்களை உள்ளிடலாம்.

2023-04-24ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் வேளையில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

எந்தக் காரணத்தைக் காட்டாமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் எந்தவொரு விலைமனுவையும் தயாரித்தல் தொடர்பிலான நேரடியான அல்லது மறைமுகமான எவ்விதமான செலவையும் மீள்செலுத்தும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இது தொடர்பில் அமைச்சுப் பெறுகைக் குழுவின் தலைவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று நாராஹென்பிட்டி, மெஹெவர பியச, 7ஆம் மாடி, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் மாநாட்டு அறையில் 2023-04-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

மேலதிக விபரங்களை பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பெறுகை முகாமையாளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி :** 011-2887585 / 011-2880550
**மின்னஞ்சல் :** mgr_procurement@slbfe.lk

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு**

**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்.**

# இலங்கையின் ஒற்றுமைக்கான பெரும் இடையூறு இனப்பிரச்சினை!

## பொருளாதாரப் பிரச்சினையும், இனப்பிரச்சினையும் பிரித்துப் பார்க்க முடியாதவை!

**நாட்டைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் இன்றைய நிலையில், பொருளாதாரப் பிரச்சினையையும், இனப் பிரச்சினையையும் பிரித்துப் பார்க்க முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியுள்ளார்.**



கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார். 'நாட்டில் எதனைச் செய்ய முற்பட்டாலும் எமது ஒற்றுமைக்கு மிகப் பெரிய இடையூறாக இனப் பிரச்சினை காணப்படுகின்றது என்பதை உணர வேண்டும். நாம் சகலரும் இலங்கையர்களாக சிந்திக்க வேண்டும். பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து இனப்பிரச்சினையை பிரித்துப் பார்க்க முடியாது. இதனைச் செய்வதன் ஊடாகவே அபிவிருத்தியை அடைய முடியும்' என அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் எனக் கூறும் முதலாவது சந்தர்ப்பம் இது அல்ல என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஜனாதிபதியாகப் பதவியேற்றதிலிருந்து இவ்விடயத்தில் அவர் அக்கறை காண்பித்து வருகின்றார்.

கடந்த டிசம்பர் மாதம் முதல் இதற்கான முயற்சிகள் அவருடைய தரப்பிலிருந்து எடுக்கப்பட்டு வருகின்றன. சர்வகட்சி மாநாட்டை இதற்காகக் கூட்டியிருந்த அவர், 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றை எட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

இருந்தபோதும் சர்வகட்சிகளுக்கிடையிலான சந்திப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படாவிட்டாலும் இது விடயத்தில் ஜனாதிபதி உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றார் என்பது தெளிவாகியுள்ளது.



### இனங்களுக்குகிடையில் வேற்றுமையை விதைத்து அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளும் செயற்பாடுகளில் தென்னிலங்கையின் சில அரசியல் சக்திகள்!



### இனமுரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பகாலம் தொடக்கம் மேற்கொண்டு வருகின்ற தீவிர முயற்சிகள்!

நாடு பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவைச் சந்தித்திருக்கும் நிலையில், படிப்படியாக நாட்டை முன்னேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது அரசியல் ஸ்திரத்தன்மை என்பது முக்கியமானதொரு விடயமாகும். சர்வதேச நாடுகளும் இதனைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறான பின்னணியிலேயே ஜனாதிபதி இவ்வாறான நிலைப்பாட்டை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்த வரையில் இதற்கு முன்னர் பிரதமராகப் பதவி வகித்த காலங்களிலும் இதற்கான முயற்சிகளை எடுத்திருந்தமையை மறுக்க முடியாது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு எனும்போது குறிப்பாக தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படுவது முக்கியமானதாகும். விசேடமாக நீண்ட காலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை இதில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடிக்கிறது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டவர்கள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களின் விடுதலை தொடர்பில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளது.

அதேசமயம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், இச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைப் படிப்படியாக விடுவிப்பதற்கு கடந்த காலங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதை நாம் மறந்துவிட முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகித்த நல்லாட்சி அரசாங்கத்திலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதே நேரம், யுத்தத்தின் போது காணாமல் போனவர்கள் குறித்த விவகாரம் தொடர்பிலும் அரசாங்கம் தீர்வொன்றை வழங்க வேண்டும் என்பது தமிழ் மக்களின் கோரிக்கைகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இதற்கான அர்ப்பணிப்பு அரசாங்கத்தின் தரப்பில் காணப்படுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி கூட்டியிருந்த சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவது தொடர்பில் பிரஸ்தாபித்திருந்தார். இனப்பிரச்சினைத் தீர்வு என வரும்போது 13 ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பரவலாக்கல் குறித்த பேச்சுக்கள் அடிபடுவது வழமையானதாக அமைந்து விடுகிறது.

அரசியலமைப்பின் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முழுமையாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக ஜனாதிபதி இதன்போது கூறியிருந்தார். ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்கு தென்பகுதியில் உள்ள இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் ஒருசில அரசியல் கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

வழமையான தமது செயற்பாடுகளில் ஒன்றாக அவர்கள் இவ்வாறு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இவ்வாறான தரப்பினரின் அரசியல் பின்புலத்தை எடுத்துப் பார்த்தால், நாட்டில் இனங்களுக்கிடையில் ஒற்றுமையான சூழல் காணப்பட்டால் அவர்களின் அரசியல் இருப்பை உறுதிசெய்ய முடியாது என்பது நன்கு அறியப்பட்டதாகும். எனவேதான், எப்பொழுதும் பெரும்பான்மையான சிங்கள மக்கள் மத்தியில் தேவையற்ற சந்தேகத்தையும், அச்ச உணர்வையும் ஏற்படுத்தி அதன் ஊடாக தமது அரசியல் செயற்பாடுகளைக் கொண்டுசெல்ல அவர்கள் முயற்சிக்கின்றனர்.

எதுவாக இருந்தாலும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முன்னர் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் ஒரு சில விசமத்தனமான நடவடிக்கைகள் கைவிடப்பட வேண்டும்.

உதாரணமாகக் கூறுவதாயின் வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் அழிக்கப்பட்டமை போன்ற செயற்பாடுகள் இனங்களுக்கிடையில் காணப்படும் ஒற்றுமையை சீர்குலைப்பதற்கான செயற்பாடுகளாகக் காணப்படுகின்றன. இதுபோன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இதுபோன்ற செயற்பாடுகள் இனங்களுக்கிடையில் காணப்படும் ஒற்றுமையைக் குழப்பித் தேவையற்ற முரண்பாடுகளைத் தோற்றுவித்து விடும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி போன்ற சர்வதேச நாடுகளின் உதவிகளை எதிர்பார்த்திருக்கும் சந்தர்ப்பத்தில் இனங்களுக்கிடையில் தேவைற்ற முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகள் ஒட்டுமொத்த முயற்சிகளுக்குத் தீமையை ஏற்படுத்துவதாக அமைந்து விடும்.

**பி.ஹர்ஷன்...**

---

# இவ்வருடத்தில் G20 உச்சிமாநாடு;

# இந்தியாவின் ஐந்து ட்ரில்லியன் டொலர் பொருளாதார கனவு விரைவில் நனவாகும்!

**இந்தியாவையும் ஜப்பானையும் பொறுத்தவரையில் சர்வதேச ரீதியில் இவ்வருடம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தற்போது ஜி20 மாநாட்டுக்கு இந்தியா தலைமை தாங்கி வரும் நிலையில், ஜி 7 மாநாட்டை ஜப்பான் விரைவில் நடத்துகிறது.**

அதேசமயம் ஜி20 மாநாடு இவ்வருடத்தில் இந்தியாவில் நடைபெறவிருக்கின்றது. ஜி20 அமைப்பென்பது உலகரீதியில் மிகவும் முக்கியத்துவம் மிகுந்த அமைப்பென்பதுடன், அந்த அமைப்பின் தலைமைப்பதவியை தற்போது இந்தியாவே வகித்து வருகின்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜி20 அமைப்பின் தலைவராக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தற்போது பதவி வகித்து வருகின்றார்.

இவ்வாறான நிலையில் ஜப்பானியப் பிரதமர் ஃபுமியோ கிஷிடா சமீபத்தில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இந்தியாஜப்பான் வருடாந்த உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக கடந்த மாதம் 20 ஆம் திகதி ஜப்பானியப் பிரதமர் இந்தியாவுக்கு வருகை தந்திருந்தார். பிரதமர் நரேந்திர மோடியுடன் அவர் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார்.

இந்தச் சந்திப்பானது சர்வதேசரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்பட்டது.

உலகளாவிய மிகமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளை கையாளுவதற்கு G20 மற்றும் G7 நாடுகள் இரண்டும் எவ்வாறு நெருக்கமாகச் செயல்படலாம் என்பது குறித்து இரு பிரதமர்களும் விரிவாகக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தியாஜப்பான் வருடாந்த உச்சிமாநாட்டின் போது இந்திய உலக விவகார கவுன்சில் (ICWA) 'அமைதிக்கான இலவச மற்றும் திறந்த இந்தோபசிபிக் திட்டத்தை' அறிவித்திருந்தது.

ஜப்பானியப் பிரதமர் கிஷிடா, இந்தோபசிபிக் பிராந்தியத்தை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் குறித்து இந்தியாவுடன் நெருக்கமாக பணியாற்றுவதற்கு தனது விருப்பத்தை இந்தியாவிடம் தெரிவித்துள்ளார்.

இந்த வருடாந்த உச்சிமாநாட்டின் போது, பிரதமர் கிஷிடா இவ்வருடத்தில் நடைபெறவுள்ள G20, G7, QUAD மற்றும் SCO மாநாடு உட்பட பல வரவிருக்கும் உச்சிமாநாடுகளைப் பற்றி ஆலோசித்தார் .



பிரதமர் கிஷிடா, இந்தோபசிபிக் திட்டம் குறித்து பிரதமர் நரேந்திர மோடியுடன் விவாதித்ததுடன், அதனை செயல்படுத்துவதில் இந்தியாவின் ஒத்துழைப்பையும் கோரினார்.




இவ்வருடம் 2023 இல் நடைபெறும் 18 ஆவது G20 மாநாடு இந்தியாவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். அதேசமயம் நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிதும் துணைபுரியும் என பொருளாதார வல்லுநர்களால் நம்பப்படுகிறது.

இரண்டாம் உலகப் போர் வரையிலான காலத்தில் பெரும்பாலான வளர்ந்த நாடுகளுக்கு இடையே ஒருமித்த கருத்துக்கள் இருந்ததில்லை. இதன் விளைவாக பொருளாதாரம் சார்ந்த முன்னேற்றம் வளரும் நாடுகளுக்கு எட்டாக்கனியாகவே இருந்து வந்தது.

தங்களுடைய கொள்கைகளுக்கு ஒத்துப்போகும் நாடுகளுக்கு மட்டுமே பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த உதவிகளை மேலை நாடுகள் செய்து வந்தன. இதன் காரணமாக அடிக்கடி போர்ப் பதற்ற சூழலும், உலக நாடுகளின் பொருளாதாரத்தில் அதிக ஏற்றத்தாழ்வுகளும் காணப்பட்டன. இரண்டாம் உலகப்போருக்கு பின்னரான காலத்தில் இதனைக் களைவதற்கு சில வளர்ந்த நாடுகள் புதிய கொள்கைகளை வகுக்க ஆரம்பித்தன.

வளரும் மற்றும் பொருளாதார வளர்ச்சி சார்ந்த வாய்ப்புள்ள நாடுகளைக் கண்டறிந்து அவற்றுடன் இணைந்து செயல்பட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செயற்படுத்தத் தொடங்கின.

ஆரம்ப நிலையில், வளர்ந்த நாடுகள் மட்டுமே அரசியல் பொருளாதாரம் சார்ந்து தங்களை இணைத்துக் கொண்டன. 1970 ஆம் ஆண்டின் மத்தியில் தொழிற்துறையை முக்கியத்துவமாக கொண்ட ஐந்து நாடுகளை கொண்டு ஒரு குழு தொடங்கப்பட்டது. இவை G5 என்றழைக்கப்பட்டன. இந்த குழுவில் ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், ஐக்கிய இராச்சியம் (UK) மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் அடங்கும்.




பின்னர் 1975 ஆம் ஆண்டில் கனடா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளை இணைத்து அவை G7 குழு நாடுகளாக மாற்றம் பெற்றன.

G7 குழுவில் உள்ள நாடுகளைச் சேர்த்து பெல்ஜியம், நெதர்லாந்து, சுவீடன் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் இணைந்து G10 குழு அமைப்பு ஏற்பட்டது.

இவற்றில் உள்ள பெரும்பாலான நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உறுப்பினர்களாக இருந்தன. 11 நாடுகள் இருந்தாலும், இந்த அமைப்பு G10 குழு என்றே அழைக்கப்பட்டது. G5, G7 மற்றும் G10 என பல குழுக்கள் வந்திருந்தாலும் இது வளரும் நாடுகளுக்கு பெரும்பாலும் வளர்ச்சிக்கான வாய்ப்பை அளிக்கவில்லை.

1990 ஆம் வருடத்தின் பிற்பகுதியில் ஏற்பட்ட உலக பொருளாதார நெருக்கடி, வளரும் நாடுகளுக்கு ஒரு பெரும் வாய்ப்பாக அமைந்தது எனலாம். அப்போது அமெரிக்கா பொருளாதார வீழ்ச்சியை சந்தித்தது. எண்ணெய் வள நாடுகளில் கடுமையான எண்ணெய் விலைவாசியும் ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக வேலை வாய்ப்பின்மையும், நிதி சிக்கலும் அதிகரித்திருந்தது.

இது போன்ற பெரும் சவாலை சமாளிக்க 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜெர்மனியின் பெர்லின் நகரத்தில் தொடங்கப்பட்டது தான் G20 குழு அமைப்பு. நிதி ஆதாரத்தை வலுப்படுத்தவும், சர்வதேச நிதி கட்டமைப்பை நவீனப்படுத்தவும் இந்த குழு உருவாக்கப்பட்டது. அந்த வருடத்தின் G7 மாநாட்டிலும் G20 தொடங்குவதன் முன்னறிவிப்பு வெளியிடப்பட்டது.

ஆர்ஜென்டினா, அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, இத்தாலி, ஜப்பான், தென்கொரியா, மெக்சிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென் ஆபிரிக்கா, துருக்கி, ஐக்கிய இராச்சியம் (UK), அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகள் G20 குழுவில் உறுப்பினர்களாக உள்ளன.

சர்வதேச நிலைத்தன்மை, காலநிலை மாற்றங்கள், பொருளாதாரத்தில் நீடித்த வளர்ச்சி மற்றும் உலக பொருளாதாரம் தொடர்பான மற்ற சிக்கல்களுக்கும் தீர்வு காண இந்த G20 குழு செயல்படுகிறது.

(17ஆம் பக்கம் பார்க்க)

**எஸ்.சாரங்கன்...**

அரசியல் அரங்கம்

அர்ஜூன்

# நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு IMF நிபந்தனைகள் உதவியளிக்கும்

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பேட்டி



**பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் உதவியாக இருக்கும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியுதவி இலங்கைக்குக் கிடைக்கப் பெற்றமை உள்ளிட்ட விடயங்கள் குறித்த தகவல்களை அவர் எம்முடன் பகிர்ந்து கொண்டார்.**

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதிக்கு ஒப்புதல் கிடைத்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் இலங்கை இனிமேலும் வங்குரோத்து நிலையிலுள்ள நாடாகக் கருதப்படாது எனக் கூறியிருந்தார். இது குறித்து உங்கள் கருத்து என்ன?**

பதில்: உள்ளூர் மற்றும் சர்வதேச கடன்களுக்காக நாம் ஏறத்தாழ 80 பில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலுத்த வேண்டியுள்ளது. இந்த 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் அதற்குள் அடக்குமா எனச் சிலர் கேட்கின்றனர். இதில் மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி எங்களின் நிலுவைக் கடன்களைச் செலுத்த முடியாது என்று முழு உலகுக்கும் அறிவித்தோம். நாம் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளோம் என்பதை இது மறைமுகமாக உணர்த்தியது, அது மிகவும் துரதிர்ஷ்டவசமான அறிக்கை.

அதைச் சரி செய்ய ஒரே இடம் சர்வதேச நாணய நிதியம் என்பதால் அவர்களின் இணக்கப்பாட்டை எட்டுவதற்கு நாம் கடுமையான முயற்சிகளை எடுத்தோம். பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் அவர்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடிந்தது. ஒரு நாடாக இது எமக்குக் கிடைத்த முக்கியமான சாதனையாகும். இதன் விளைவாக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியிடமிருந்து மேலும் 7 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய இந்த நேர்மறையான சமிக்ஞையின் விளைவாக அது நடைபெறும். தொழிலதிபர் ஒருவர் வங்கியில் மேலதிக கடனைத் திறக்க முடியாத சூழ்நிலையில் நாம் காணப்பட்டோம். அந்த நிலைமை முற்றாக மாற்றப்பட்டு, இந்த அபிவிருத்தியின் காரணமாக எமது நம்பிக்கை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தப்படும். இதனையே ஜனாதிபதி பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

**கே: இலங்கை முதல் தவணையாக 330 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றது. பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும் கடன் நிலைத்தன்மையை அடையவும் இது எவ்வாறு உதவும்?**

பதில்: விரிவாக்கப்பட்ட நிதியுதவி தாக்கம் செலுத்தும். இந்த நேரத்தின் முக்கியத்துவம் என்னவென்றால், சர்வதேச நாணய நிதியம் முன்னர் எமக்குக் கடன்களை வழங்கிய சந்தர்ப்பங்களில், அந்த நிதிகளை மத்திய வங்கிக் கணக்கில் மட்டுமே வைத்து அவற்றைப் பயன்படுத்த முடியும். அதாவது நாம் அந்தப் பணத்தை கடன்களை செலுத்த அல்லது வரவுச்செலவுச் சமநிலையைப் பேண மட்டுமே பயன்படுத்த முடியும். இம்முறை, சர்வதேச நாணய நிதியம் எங்கள் பிரச்சினையை சரியாக உணர்ந்துள்ளது. எனவே, இதற்கு முன்னர் 16 தடவை வழங்கப்படாத சிறப்பான சந்தர்ப்பத்தை எமக்கு வழங்கியுள்ளனர். இம்முறை இந்தப் பணத்தை ரூபா அல்லது டொலர்களாக திறைசேரிப் பிரதிச் செயலாளரின் கணக்கில் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தை நாம் நமது செலவினங்களின் முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் கடன்களை செலுத்த அல்லது வேறு சில விஷயங்களுக்காகப் பயன்படுத்தலாம். சர்வதேச நாணய நிதியம் எங்கள் செலவினத் தலைப்புக்களை மிகவும் இறுக்கமான முறையில் நிர்வகிப்பதை உணர முடியும். குறிப்பிட்ட துறைகளுக்கு பணம் வழங்கப்படவில்லை என்று சிலர் புகார் கூறுகின்றனர். எவ்வாறாயினும் எரிபொருள், எரிவாயு, உரம், மருந்து மற்றும் பொதுத்துறை சம்பளம் மற்றும் சமுர்த்தி மானியங்களை வழங்குதல் போன்ற அத்தியாவசிய முன்னுரிமைகளை நாங்கள் சரியாகத் தேர்ந்தெடுத்தோம்.

எனவே சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதி, உள்ளூர் கடன்களின் வட்டிகளை செலுத்துவதற்கு குறிப்பாக நமது செலவினங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் போது ஓரளவு நமக்கு உதவும். பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க மற்றும் கடன் நிலைத்தன்மையை அடைவதற்கு இந்தக் கடன் வசதி மிகவும் இன்றியமையாததாக இருக்கும். இம்முறை எமது சமூக பாதுகாப்பு வலையமைப்பை மேலும் வலுப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் கேட்டுக் கொண்டுள்ளது.

**கே: கடன் நிலைத்தன்மையை மீட்பதற்காக இருதரப்பு மற்றும் தனியார் கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா?**

பதில்: நாங்கள் அதைத் தொடங்குவோம். அதுதான் நம் முன் இருக்கும் அடுத்த பெரிய சவால். அவகாசம் பெறுவது, வட்டி வீதத்தை குறைப்பது மற்றும் சில கடன்களை தள்ளுபடி செய்வது எப்படி என தனித்தனியாக அவர்களிடம் பேசுவோம். பெறப்பட்ட மொத்தக் கடன் தொகையில், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் சுமார் 17 பில்லியன் அமெரிக்க டொலர் நிவாரணம் கிடைக்கும் என நம்புகிறோம்.

இந்தப் பணியை எப்படி நிறைவேற்றுவது என்பதுதான் நம் முன்னால் உள்ள சவால். இந்த குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இது தொடங்கும். நாங்கள் பணியாளர் நிலை ஒப்பந்தத்தை அடைந்ததும், இருதரப்பு கடனளிப்பாளர்களைச் சந்தித்து அவர்களின் முதன்மை ஒப்புதலைப் பெறுவதற்கு சர்வதேச நாணய நிதியம் எங்களுக்கு வாய்ப்பளித்தது. அவர்கள் கடன் மறுசீரமைப்பிற்கு ஒப்புக்கொண்டனர். அந்த சம்மதம் கிடைத்த பிறகு அடுத்த கட்டத்திற்குச் சென்றோம். புள்ளிவிபரங்களின் அடிப்படையில் நடைமுறையில் அவர்களின் ஒப்புதல் எவ்வாறு பெறப்படுகிறது என்பது குறித்து அவர்களுடன் ஒருமித்த கருத்தை எட்டுவது அடுத்த முக்கிய பிரச்சினை.

> **‘கடுமையான சிரமங்களை எதிர்கொள்ளும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைப் பாதுகாப்பது எங்கள் பிரதான பொறுப்பு**


**கே: சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் குறித்து கவலை தெரிவிக்கும் சில பிரிவுகள், 15 நிபந்தனைகளுக்கு அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாகக் கூறுகின்றனர். இந்த நிலைமை எமக்கு ஏதேனும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துமா அல்லது நாட்டை முன்னேற்றுவதற்கு இந்த இலக்குகளை அடைய வேண்டுமா?**

பதில்: இது சர்வதேச நாணய நிதியத்திற்கு எந்த நன்மையையும் அளிக்காது என்ற உண்மையை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். இருப்பினும், பாரம்பரிய மற்றும் அரசியல் கண்ணோட்டத்தில் சில விஷயங்களைப் பார்ப்பவர்கள், சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையில் சில நிபந்தனைகளைப் பயன்படுத்தி, மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் அவற்றை ஊதிப் பெரிதாக்க முயற்சிக்கலாம். இருப்பினும், சமூக பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்துதல், வெளிப்படைத்தன்மையைப் பேணுதல், ஊழலுக்கு எதிரான இயக்கத்தைத் தொடர்தல், உள்ளூர் வங்கிகளை வலுப்படுத்துதல் மற்றும் நஷ்டத்தில் இயங்கும் அரசுத் துறை நிறுவனங்களை மறுசீரமைத்தல் போன்ற மிக முக்கியமான பரிந்துரைகளை சர்வதேச நாணய நிதியம் செய்துள்ளது.

தற்போதைய நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு இவை உதவும் வழிகள் என்று நான் பார்க்கிறேன். நாம் அதை ஒரு பாரம்பரிய வடிவத்தில் பார்க்கும் போது, ஒருவேளை நாம் ஏற்றுக்கொள்ளாத சில பரிந்துரைகள் இருக்கலாம். மேலும், மாநில செலவினங்களை கண்டிப்பாக நிர்வகிக்க வேண்டும். நியாயமான முறையில் பார்க்கும் போது, இவற்றை நிபந்தனைகள் என்று சொல்ல முடியாது. உண்மையில், இவைதான் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு நாமே கையாள வேண்டிய உத்திகள். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்குப் பதிலாக, அவர்களின் வாழ்வாதாரத்தைத் தொடர கடுமையான சிரமங்களை எதிர்கொள்ளும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைப் பாதுகாப்பது எங்கள் பிரதான பொறுப்பாகும்.

> **பெறப்பட்ட மொத்தக் கடன் தொகையில், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் சுமார் 17 பில்லியன் அமெரிக்க டொலர் நிவாரணம் கிடைக்கு–மென்று நம்புகிறோம்**





மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

# தேசிய முக்கியத்துவம் மிகுந்த இடங்களை பாதுகாப்பதற்கான கொள்கை அவசியம்

பொருளாதார சீர்திருத்தங்களின் பின்னர் அண்டை நாடான இந்தியாவில் விரைவாக அபிவிருத்தி ஏற்பட்டு வருகின்றது. அங்கு சமூக வேறுபாடுகளும் காணப்படுகின்றன. பொருளாதார எழுச்சியுடன் புதுடில்லியில் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

1962 இல் அங்கீகரிக்கப்பட்ட டில்லி நகரத் திட்டத்தை புதுப்பிக்கும் யோசனை செயல்படுத்தப்பட்டதோடு, 2001 மற்றும் 2021 ஆம் வருடங்களுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு 2047 ஆம் ஆண்டுக்காக புதிய நகரம் ஒன்றை நிர்மாணிக்கவிருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. இந்தத் திட்டம் குறித்து பலதரப்பாரும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துகளைக் கொண்டுள்ளார்கள்.

நகர திட்டங்களை திட்டமிடுபவர்களின் கருத்துப்படி டில்லியின் மக்கள் தொகையில் 30 வீதமானோர் 18 வயதுக்குட்பட்டவர்கள். இளைஞர்களின் எண்ணங்களுக்கு ஏற்ப நகரை மாற்றி குழந்தைகள் சுதந்திரமாக நடமாடக் கூடியவாறு நகரை அமைக்க திட்டமிட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லி நகரில் மாற்றங்களை ஏற்படுத்தும் பணியில் பழம் பெருமைமிக்க அம்சங்கள் அகற்றப்படுவதாக புராதன உரிமைகளை மதிக்கும் வர்க்கத்தினர் குற்றம் சாட்டுகின்றார்கள். பழைய கட்டடங்களை உடைத்து அகற்றுவதோடு, பாதைகள் அகலப்படுத்தப்படுகின்றன. வீதிவிளக்குகள் மாற்றப்படுகின்றன. மரங்கள் நடப்படுவதோடு பொதுவசதிகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. புதுடில்லியில் காணப்பட்ட வரலாற்றுச் சின்னங்கள் திட்டம் ஏதும் இன்றி அழிக்கப்படுகின்றன என்பது பழைமை விரும்பிகளின் கருத்தாகும். புதிய யோசனைகளை முன்வைப்போர் அதனை நிராகரிப்பதோடு கட்டமைப்புக்குள் ஏற்படும் மாற்றம் இல்லாமல் எதிர்காலம் இல்லை என சுட்டிக்காட்டுகிறார்கள். காலனித்துவ மனநிலையை பாதுகாப்பது அல்லது பழைய பிரபுத்துவ கட்டமைப்பைத் தொடர்வதற்கு இனியும் இடமளிக்கக் கூடாது என்பதே அவர்களின் நோக்கமாகத் தெரிகின்றது.

எவ்வாறாயினும் இந்தியாவின் புராதன நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாக்க புதிய திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். நவீனமயமாக்கல் மற்றும் புதியவற்றை அறிமுகம் செய்யும் வேளையில் புராதான உரிமை பாதுகாக்கப்படுகிறது. இந்தியா முழுவதும் பாதுகாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படும் இடங்களின் எண்ணிக்கை 3695 ஆகும். அவை தொல்பொருள் ஆய்வுகளுக்கு அமைய உறுதி செய்யப்பட்ட இடங்கள்.

தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை பாதுகாப்பதற்காக அரசு பணத்தை செலவிடுவதோடு, அந்த இடங்களை பாதுகாக்க மற்றும் அதன் பெருமையை உத்தேசித்து வெளியார் நுழைவதையும் கட்டுப்படுத்தியுள்ளார்கள். பாதுகாக்கப்பட்ட இடங்கள் அல்லது நினைவுச் சின்னங்கள் என உறுதி செய்யப்பட்ட பின்னர் அந்த இடத்திலிருந்து 100 மீற்றர் தூரம் தடை செய்யப்பட்ட வலயம் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஏதேனும் ஒரு விதத்தில் கட்டடங்களை அமைக்கவோ அவற்றை மாற்றவோ முடியாது. மேலும் 200 மீற்றருக்குள் உட்பட்ட வலயத்தில் சட்டத்திற்கு உட்பட்டு மாற்றங்களை ஏற்படுத்தலாம் என குறித்த சட்டம் தெரிவிக்கின்றது .

முக்கியமான இடங்கள் மற்றும் தொல்பொருட்கள் பாதுகாக்கப்படுவதோடு, நூதனசாலையில் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்படும் சில பிரிவுகளை அவ்வாறே வைத்திருப்பது குறித்தும் இந்திய ஆய்வாளர்கள் ஆராய்கின்றார்கள். சில பொருட்களின் முக்கியத்துவம் குறித்த சரியான குறிப்புகள் இல்லை. அது பிரச்சினையாக உள்ளது.நிபுணர்கள் சிலரை பயன்படுத்தி அவற்றின் பெறுமதியை பற்றி அறிவதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய முக்கியத்துவம் வழங்க முடியாது சேர்த்து வைக்கப்பட்டுள்ள அடையாளங்களை நூதனசாலைகளில் இருந்து அகற்றி வேறு இடத்தில் பராமரிக்க முடியும் என்பதோடு, அதன் மூலம் விசேட பிரிவுகள் குறித்து கூடிய கவனத்தை செலுத்தும் முறையை இந்திய நிபுணர்கள் முன்வைத்துள்ளார்கள். இவ்வாறான யோசனைகளுக்காக அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது.

இந்தியாவின் பாரிய தன்மையின் அளவு மற்றும் தொல்பொருள் பெறுமதிமிக்க இடங்களை பார்ப்பதற்கு பயணிக்க வேண்டிய தூரத்தை கருத்தில் கொண்டு பொறுப்பு வாய்ந்த பிரிவு அக்கறை உள்ளவர்களுக்காக தொழில்நுட்ப காட்சிக் கூடங்களை உருவாக்கியுள்ளன. புதுடில்லி தேசிய நூதன சாலையில் வேறான கலரி ஒன்றை அமைத்து அஜந்தா மற்றும் எல்லோரா ஓவியங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கு பிரவேசிப்பவர்கள் முப்பரிமாண பதிவு செய்யப்பட்ட ஓவியங்களை பார்ப்பதற்கு மாத்திரமல்ல அந்த ஓவியங்களை வேறுபடுத்தி ஆராய்ச்சி செய்வதற்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவில் இருந்து பௌத்த மதம் பரவிய விதம், பல நாடுகளின் ஓவியம் மற்றும் புத்தர் சிலைகள் உள்ளிட்ட பிரிவொன்றும் புதுடில்லி தேசிய நூதனசாலையில் புதிதாக இணைக்கப்பட்டுள்ளது.

இராமாயணம், விஜயனின் வருகை, கௌதம புத்தர் மூன்று முறை வருகை தந்தது, அதற்குப் பின்னரான ஆக்கிரமிப்புகள் என்ற ரீதியில் பல யுகங்களை கடந்த சம்பவங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருட்கள் பெருமளவில் இலங்கையிடம் உள்ளன. பலாங்கொட மனிதன் வசித்த இடம், பாகியன்கல், சிகிரியா, அநுராதபுரம், பொலநறுவை, மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள பெறுமதிமிக்க விலைமதிக்க முடியாத தொல்பொருள் ஆய்வுகளுக்கு உட்படாத இடங்கள் எவ்வளவு என இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்தியாவிற்கு இணைந்ததாக இலங்கையிலும் தொல்பொருள்இடங்கள் மற்றும் சின்னங்கள் அல்லது ஸ்தூபிகள் பற்றி விரிவான ஆவணங்கள் உள்ளனவா என தேடுவது அவசியமாகும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்** ...

# 'எமது கண்களின் ஊடாக எமது வாழ்வு' 4,5,6ஆம் திகதிகளில் இரத்தினபுரியில்

"எமது கண்களின் ஊடாக எமது வாழ்வு" என்பது 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4, 5 மற்றும் 6ஆம் திகதிகளில் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள பெல்மதுல்ல என்ற இடத்தில் உள்ள சில்வர் ரே ஹோட்டலில், புகைப்படம் எடுத்தல், திரைப்படம் மற்றும் இசை என்பவற்றின் ஊடாக சமூக ஒருங்கிணைப்பையும், உரையாடலையும் ஊக்குவிக்கும் பொருட்டு இடம்பெறவுள்ள ஒரு நிகழ்வாகும். இந்நிகழ்வு மலைநாட்டு சமூகங்களின் துன்பங்களை மதித்து, அவர்களின் உரிமைகளுக்காக குரல்கொடுப்பதற்கும், பரஸ்பர புரிந்துணர்வை ஊக்குவிப்பதற்கும், இலங்கையில் சமூக ஒற்றுமைக்கான முக்கிய தடைகளைத் தீர்ப்பதற்கு கூட்டுப் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கும் அடிப்படையாக அமையும். ஐரோப்பிய ஒன்றியமும் ஜேர்மன் குடியரசு வெளியுறவு அலுவலகமும் இணை நிதியுதவி வழங்கியுள்ளதோடு, ஆனது, இலங்கையின் நீதி, சிறைச்சாலை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுடன் இணைந்து, இலங்கையில் சமூக ஒற்றுமையையும் சமாதானத்தையும் வலுப்படுத்தும் நிமித்தம் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இந்த நிகழ்வினை, இரத்தினபுரி கலைக்குழு, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், ஊவா சக்தி அமைப்பு மற்றும் சுய சக்தி அமைப்புடன் இணைந்து முன்னெடுக்கின்றது. இச்செயற்பாடானது, சபரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் சபரகமுவ மாகாண கல்வியமைச்சு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றது.

04 ஏப்ரல் 2023 செவ்வாய்க்கிழமையன்று 09:30 முதல் 15:30 தே கஹட்ட (புகைப்படக் கண்காட்சி) யும் 16:00 மணி முதல் 18:00 மணிவரை நெஞ்சே எழு (இளைய நிலா இசைக்குழுவினர் வழங்கும் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

05 ஏப்ரல் 2023 (புதன்கிழமை) அன்று காலை 09:30 முதல் 15:30 வரை தே கஹட்ட (புகைப்படக் கண்காட்சி)16:00 மணிமுதல் 18:00 உரிமைக் குரலும்(குறிஞ்சிக் கதிர் இசைக்குழு வழங்கும் இசைநிகழ்ச்சி) 06 ஏப்ரல் 2023 (வியாழக்கிழமை) அன்று காலை 09:30 முதல் மாலை 15:30 வரை தே கஹட்ட (புகைப்படக் கண்காட்சி) யும்,

16:00 முதல் 17:30 வரை ஜீவனே கீதய (ரவிபந்து வித்யபதி வழங்கும் இசைநிகழ்ச்சி)யும் 17:30 முதல் 19:00 மணிவரை பொதுமக்கள் கலந்துரையாடலும் (இரத்தினபுரி கலைக் குழுவின் ஏற்பாடு) இடம்பெறும்.

# மக்கொனை, அஹதிய்யா பாடசாலையில் இப்தார் நிகழ்வு

ஏழாவது வருடமாக மக்கொனை அஹதிய்யாப் பாடசாலை ஏற்பாடு செய்துள்ள அஹதிய்யா பாடசாலையில் கல்வி கற்கின்ற சுமார் 275 மாணவ, மாணவிகளுக்கான இப்தார் மஜ்லிஸ் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை (02) ஆம் திகதி அல்ஹஸனியா ம.வி. பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலையின் அதிபர் அல்ஹாஜ் ஐ.எம்.எம். உவைஸ் தலைமையில் அஸர் தொழுகையின் பின்னர் ஆரம்பமாகி இப்தார் நிகழ்வுகள் நிறைவு பெறும்.

வெளிநாடுகளில் கடமை புரிகின்ற அஹதியா பாடசாலையின் பழைய மாணவர்கள், அஹதிய்யாப் பாடசாலையின் வளர்ச்சியில் பல வருடங்களாக பல வகைகளிலும் உதவி ஒத்தாசை புரிந்து தங்களால் முடிந்த நிதி உதவியை வழங்கும் உள்ளூர் மற்றும் வெளியூர் நலன் விரும்பிகள், பல விதங்களிலும் ஒத்தாசை புரிகின்ற அஹதிய்யா பாடசாலை நிர்வாக அங்கத்தவர்கள், அதிபர் மற்றும் ஆசிரியர்கள் உட்பட அனைவரது ஒத்துழைப்பின் மூலம் நிகழ்வை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மக்கொனை அஹதிய்யாப் பாடசாலை செயலாளர் ஜிப்ரியா இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

## 10 இலட்சம் முட்டைகள்...

திணைக்களத்தின் அனுமதி பெறப்படவுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வாலிசுந்தர தெரிவித்துள்ளார்.

அனுமதி கிடைத்தவுடன் பேக்கரிகள் மற்றும் ஹோட்டல்களுக்கு இந்த முட்டைகளை விநியோகிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஜீவன் தலைமையில்...

ஜீவன் தொண்டமானின் தலைமையில் மக்கள் குறைகேள் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது இச்சந்திப்பில் கலந்து கொண்ட தோட்ட மக்கள் தமக்கான குறைப்பாடுகள் மற்றும் அபிவிருத்தி அபிலாஷைகளை தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து உடபுஸ்ஸலாவை நகர மக்கள் உள்ளிட்ட சென்ட் மாக்கிறட் தோட்ட மக்களை அமைச்சர் கே.டி.எஸ்.வரவேற்பு மண்டப சந்திப்பில் கலந்துக் கொண்டார்.

அங்கு அமைச்சரின் கவனத்துக்கு மக்கள் தங்களுக்கான குறைப்பாடுகளை தெரிவித்தனர்.

இதனையடுத்து மூன்றாவது சந்திப்பு, உடபுஸ்ஸலாவை எமஸ்ட் தோட்ட விளையாட்டு மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதில் கலந்து கொண்ட அமைச்சருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டதுடன் எமஸ்ட் தோட்ட மக்கள் உள்ளிட்ட பலர் தங்களுடைய குறைப்பாடுகளை மனம் திறந்து வெளியிட்டனர்.

அத்துடன் வீடமைப்பு, குடிநீர் மற்றும் தோட்ட நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படும் அடக்கு முறைகள் மற்றும் தொழில் கெடுப்பிடிகள் தொடர்பில் மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களை தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் உடபுஸ்ஸலாவை பிரதேச மக்களுக்காக ஆரம்பமான மூன்று மக்கள் சந்திப்பில் மக்கள் குறைகளை செவிமடுத்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், மக்கள் குறைகளை தீர்ப்பதற்கு அரசியல் ரீதியாகவும்,தொழிற்சங்க ரீதியாகவும் பேச்சுவார்த்தையூடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.



பிரபல பாடலாசிரியரும் இசையமைப்பாளரும் பாடகருமான பேராசிரியர் சனத் நந்தசிறியின் பூதவுடல் நேற்றுக் காலை (1) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு எடுத்து வரப்பட்ட போது நிலையத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க பூதவுடலை கையேற்பதை படத்தில் காணலாம்.

# தண்ணிமலை, ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமி ஆலய கும்பாபிஷேகம்

## எண்ணெய்காப்பு 04 ஆம் திகதி

புளத்கொஹுபிட்டிய, தண்ணிமலை உந்துகொடை அருள்மிகு ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தின் அஸ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் (05) ஆம் திகதி காலை 9.10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தில் எதிர்வரும் 2023.04.04 ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

150 ஆண்டுகள் பழமைவாய்ந்த இவ்வாலயத்தின் பாலஸ்தாபனம் 2022ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 5ஆம் திகதி காலை 9.10 மணிமுதல் 10.38 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இராஜகோபுரம், ஸ்தூபி கும்பாபிஷேகம் தொடர்ந்து விநாயகப் பொருமான், ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி மற்றும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று தசமங்கள தரிசனம், எஜமான் அபிஷேகம், ஆசியுரை, குருமார் கௌரவிப்புக்கள் என்பன இடம்பெறும். அன்று பகல் 1.00 மணிக்கு மஹா அபிஷேகம், விஷேட பூஜை, திருமுறை பாராயணம், விபூதி பிரசாதம், மகேஸ்வர பூஜை என்பன நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும்.

# சிங்கள திரைப்பட நடிகர் கலன்சூரிய காலமானார்

பிரபல நடிகர் அமரசிறி கலன்சூரிய தனது 82 ஆவது வயதில் நேற்று (01) காலை காலமானார். 1940 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் திகதி பிறந்த கலன்சூரிய, சிங்கள சினிமாத் திரைகளிலும், நாடகம் மற்றும் சின்னத்திரை ஆகியவற்றிலும் பாராட்டப்பட்ட நடிகராக திகழ்ந்தார். கலன்சூரிய 1969 இல் மறைந்த நடிகர் விஜய குமாரதுங்கவுடன் இணைந்து 'ஹந்தானே கத்தாவ' என்ற தனது முதல் திரைப்படத்தில் திரைக்கு அறிமுகமானார். 50 ஆண்டுகளுக்கும் மேலான அவரது திரைப்பட வாழ்க்கையில், கலன்சூரிய அக்கர பஹ, அஹஸ் கௌவ்வ, பூஜா, பம்பரு அவித், யச இசுரு, தொலோஸ்மஹே பஹன, ஆஹாஸ் மாலிகா மற்றும் தியயட்ட கிந்தர, அபேக்ஷா உள்ளிட்ட பல குறிப்பிடத்தக்க பிரபல சிங்கள திரைப் படங்களில் நடித்துள்ளார்.

## ஆதி லிங்கேஸ்வருக்கு...

சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, உதவிக் குருக்கள் பிரம்மஸ்ரீ ஈசன் செந்தில்நாதக் குருக்கள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிரதம அதிதிகளாக அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர் குலதீபனும் கலந்துகொள்ளவுள்ளார்.

ஆலய அறங்காவலவர் சபையினர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஆஸி. மெய்வல்லுநர்...

நேற்றுமுன்தினம் (31) நடைபெற்ற ஆண்களுக்கான F46 பிரிவு ஈட்டி எறிதல் போட்டியில் ஈட்டியை 63.18 மீற்றர் தூரத்துக்கு எறிந்த தினேஷ் பிரியந்த தங்கப் பதக்கத்தை சுவீகரித்து இலங்கைக்கு பெருமை தேடிக்கொடுத்துள்ளார்.

இதே போட்டியில் F44 பிரிவில் ஈட்டியை 64.20 மீற்றர் தூரத்துக்கு எறிந்த சமித்த துலான் வெள்ளிப் பதக்கத்தை வென்றெடுத்தார். அவர் F44 பிரிவில் முதலிடத்தைப் பெற்றமை விசேட அம்சமாகும்.

டோக்கியோ 2020 பராலிம்பிக் விளையாட்டு விழாவில் F46 பிரிவில் 67.79 மீற்றர் தூரத்துக்கு ஈட்டியை எறிந்ததன் மூலம் உலக சாதனையுடன் தினேஷ் பிரியந்த தங்கப் பதக்கத்தை சுவீகரித்திருந்தார். அதே போட்டியில் F44 பிரிவில் சமித்த துலான் வெண்கலப் பதக்கத்தை வென்றிருந்தார்.

இது இவ்வாறிருக்க பொதுநலவாய விளையாட்டு விழாவில் பதக்கம் வென்ற இலங்கை வீரர் பாலித்த பண்டார, குண்டு எறிதல் போட்டியில் நேற்று சனிக்கிழமை (01)பங்கு பற்றியிருந்தார்.

# ரமழான் சிந்தனை

# ஸகாத் திட்டம் வெற்றி பெற்றிட...

இஸ்லாத்தின் வழிகாட்டல்களின் அடிப்படையில் நோக்கும் போது ஸகாத் கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டியதொரு கடமை என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்க முடியாது. அவ்வாறு நிறைவேற்றும் போது தான் அதன் நோக்கத்தை அடைய முடியும். தனிமனிதர்களாக நின்று சிதறிய நிலையில் ஸகாத்தை வழங்குவதன் ஊடாக ஸகாத் திட்டம் வெற்றிகரமானதாக மாற்றமடைய முடியாது.

அதனால் ஸகாத்தின் நோக்கத்தை சரியாக புரிந்துகொண்டு அதனை அடைவதற்கான வழிமுறைகளை தெளிவாக வகுத்துக்கொள்ள வேண்டும்.

வறுமை என்பது தீர்க்க முடியாத ஒரு பிரச்சினையன்று. இஸ்லாமிய வரலாற்றில் அது இரண்டுமுறை ஒழிக்கப்பட்டது. உமர் (ரழி) அவர்களின் காலத்தில் யெமனிலும், உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) காலத்தில் வட ஆபிரிக்காவிலும் இது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக ஸகாத்தை பெறுவதற்கு தகுதியான நபர்கள் காணப்படாத சூழல் உருவானது.

ஸகாத்துக்கு இரண்டு பிரதான நோக்கங்கள் காணப்படுவதாக இமாம் தபரி (ரஹ்) குறிப்பிடுகிறார். முஸ்லிம்களின் தேவைகளை நிறைவேற்றுவதும் இஸ்லாத்தை பலப்படுத்துவதும்தான் அவையாகும். ஒன்று ஆட்களுடன் தொடர்புபட மற்றது விடயதானத்துடன் தொடர்புபடுகிறது. பரம ஏழை, சாதாரண ஏழை, கடன்காரர்கள், அடிமை விடுதலை, வழிப்போக்கன் போன்ற ஸகாத் பெற தகுதியானவர்கள் முதலாவது இலக்குடனும் உள்ளங்களை ஒன்றிணைத்தல், முஸ்லிம் சமூகத்துக்கு உள்ளேயான சீர்திருத்த முயற்சிகள் போன்றவை இரண்டாவது இலக்குடனும் தொடர்பு படுகின்றது.

இந்த நோக்கங்களை அடைவதற்காக ஸகாத் நிறுவனம் பல வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஸகாத் பற்றிய பரந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் ஸகாத்தோடு சேர்த்து ஸதகா நிதியத்தையும் ஆரம்பிக்க வேண்டும். பிரசார பிரிவொன்றின் அவசியம் இங்கு உணரப்படுகிறது. அத்தோடு ஊரின் பொருளாதார ஏற்றத்தாழ்வு நிலமைகளை சரியாக கணிப்பிட்டு, அவற்றை தீர்ப்பதற்கான திட்டமிடல் பிரிவொன்றும் காணப்படல் வேண்டும். ஆய்வு, திட்டமிடல், கணிப்பீடுகள், மதிப்பீடுகளின் அடிப்படையிலேயே ஸகாத் விநியோகிக்கப்பட வேண்டும்.

இந்த அடிப்படையில் ஸகாத்தை நிறைவேற்றி நாட்டின் பொருளாதார பிரச்சினை என்ற சுமையின் ஒரு பகுதியை நீக்கிடவும் வறுமையை குறைக்கவும் நீக்கவும் பங்களிப்போம்.

அஷ் ஷெய்க்
யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

# தவக்கால சிந்தனை



# புனித வாரம் – குருத்தோலை ஞாயிறு

குருத்தோலை ஞாயிறின் ஊடாக இறை நம்பிக்கையாளர்கள் இன்று புனித வாரத்தினுள் நுழைகின்றார்கள்.

இன்றைய நாளில் ஆலயங்களில் குருத்தோலைகள் ஆசீர்வதிக்கப்பட்டு இயேசு இஸ்ராயேல் மக்களால் ஓசன்னா பாடி எருசலேம் வீதிகளில் கழுதையின் மேலமர்த்தி ஆடம்பரமாக அழைத்துச் செல்லப்பட்டதை நினைகூரும் விதமாக நற்சேய்தி வாசிக்கப்பட்டு? அதன் பின் அந்த பவனி அடையாள முறையில் நிறைவேற்றப்படுவதைக் காணலாம்.

பவனியின் இறுதியில் ஆலயத்தில் ஆரவாரம் ஏதுமின்றி இறைவார்த்தைகள் வாசிக்கப்படும். இன்றைய நாளில் வாசிக்கப்படுகின்ற இறைவார்த்தைகள் யாவும் இயேசுவின் பாடுகள், மரணத்தை நினைகூ படுத்துவதாக அமைகிறது. ஒரு நாணயத்திற்கு இரு பக்கம் போன்று இந்நாளுக்கும் இரண்டு பக்கங்கள்.

ஒன்று ஆடிப்பாடி குருத்தோலைகள் (பாலஸ்தீனாவில் ஒலிவக் கிளைகள்) ஏந்திய மகிழ்வான பவனி.

மறுபக்கம் இயேசுவின் பாடுகள்,மரணத்தை நினைகூருகின்ற திருப்பாடுகள் நிறைந்த பக்கம். அதனாற்தான் இந்நாளை திரு அவை குருத்தோலை ஞாயிறு என்றும் திருப்பாடுகளின் ஞாயிறு என்றும் அ்ழைக்கின்றது. திருப்பாடுகளின் ஞாயிறுடன் கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களின் புனித வாரப் பயணம் ஆரம்பமாகின்றது.

புனித வாரப் பயணமானது இயேசுவின் திருப்பாடுகளுடன் நெருக்கமாகப் பயணிக்க நம்பிக்கையாளர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது.

இந்நாளுக்கான நற்செய்தி இறைவார்த்தையானது புனித மத்தேயு எழுதிய நற்செய்தியின் மூலம் இயேசுவின் பாடுகள், மரணத்தை தியானிக்க அழைக்கின்றது.

அந்த நற்செய்தியில் இயேசுவின் பாடுகளில் பங்கேற்க முடியாது தத்தளித்த திருத்தூதர்களின் நிலையினைக் காண்கிறோம். யூதாஸ் முப்பது வெள்ளிக்காசுகளுக்காக மனுமகனைக் காட்டிக் கொடுக்கின்றான். இயேசுவின் நெருக்கமான சீடர்கள் இயேசுவுடன் ஒரு மணித்தியாலம் கூட கெத்சமெனி தோட்டத்தில் விழித்திருக்க முடியாமல் தத்தளிக்கின்றனர்.

ஏனைய சீடர்கள் அவர் கைது செய்யப்பட்டபோது அவரை விட்டுவிட்டு ஓட்டம் எடுத்தனர்.. தலைமை திருத்தூதர் பேதுரு தலைமைக்குருவின் இல்ல முற்றத்தில் இயேசுவை மும்முறை மறுதலிக்கின்றார். இவ்வாறு துரோகத்திற்கு மேல் துரோகம் அவரோடு கூடவே இருந்தவர்களால் அவருக்கெதிராக நடைபெறுகிறது.

மறுபக்கத்தில் யூதத் தலைமைகளும் மக்களும் சிலுவையில் அறையும் என்று கோஷமிட்டு பாவமற்றவரைக் கொலைகாரனாக சிலுவைப் பீடத்திற்கு ஒப்புக்கொடுக்கின்றார்கள். இவற்றையெல்லாம் தாங்க முடியாத இயேசு அதுவே இறைசித்தமென ஏற்று தம்மையே முழுமையாக அத்திட்டத்திற்கு கையளிக்கின்றார்.

இயேசுவின் அ்ழைப்பு இப்புனித வாரத்தில் நம்பிக்கையாளர்கள் அனைவரையும் நோக்கி வருகிறது. இறைவனின் திட்டத்தை அறிந்து செயற்படுத்த முன்வாருங்கள் என்பதே அவ்வழைப்பாகும்.

இறைசித்தம் உணர்ந்து நாம் புனித வாரத்தினுள் நுழைவோம். அதனையே வாழ்வாக்குவோம்.

அருட்தந்தை நவாஜி...

## செயன்முறை தொடர்பிலான...

ஜனாதிபதி நியமித்துள்ளார். இந்தக் குழு எவ்வாறு செயற்படும் என்பது தொடர்பான யோசனையை ஜனாதிபதி அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அதற்கான அனுமதி எதிர்காலத்தில் அந்தக் குழுவுக்கு வழங்கப்படும்.

சம்பந்தப்பட்ட குழு IMF செயல்முறையை அடிக்கடி பின்பற்ற வேண்டும் மற்றும் வரி கொள்கைகள், வரி சதவீதங்களில் மாற்றங்கள், மறைமுக வரிகளை குறைக்கும் போது நேரடி வரிகளை அதிகரிப்பது போன்றவற்றை தொடர்ந்து கவனித்து தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

இது தவிர, IMF நிபந்தனைகளை அமல்படுத்துவது குறித்தும் இந்தக் குழு ஆராய வேண்டும். இந்தக் குழுவுக்கு ஜனாதிபதி வழங்கிய அறிவுறுத்தல்களில், ஊழல் தடுப்புச் சட்டம் போன்ற ஏனைய சட்டங்களை ஆராய்ந்து இந்த குழு மாதம் ஒரு முறை அமைச்சரவைக்கு அறிவிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெடுக்குநாறி ஆலய...

கைது செய்யப்பட வேண்டுமெனவும், அதற்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமெனவும் கோரினர்.

சட்டத்தரணிகளின் கோரிக்கையை ஏற்ற வவுனியா நீதவான் நீதிமன்ற நீதிபதி சுபாசினி தேவராசா உடனடியாக விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பில் வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகளை மேற்கொண்டு, கடந்த மாதம் 30 திகதி நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் குற்றவாளிகளை கைது செய்யுமாறும் உத்தரவிட்டிருந்தார்.

இதன்படி 30 ஆம் திகதி நீதிமன்றத்தில் தோன்றிய பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடைபெறுவதாகவும், தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், வெடுக்குநாறிப் பகுதி தொலைபேசி அலைவரிசை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் பொலிஸார் அனுமதி கோரினர்.

இதனையடுத்து வழக்கு விசாரணை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு வவுனியா நீதவான் நீதிமன்றால் திகதி குறிப்பிடப்பட்டு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# எங்கள் கருத்து

# இலவசங்கள், மானியங்களை நம்பி வாழ்வதல்ல நிம்மதி!

அரசுக்கு பெரும் சுமையென்பது பலருக்குப் புரிவதில்லை. அச்சுமையை ஈடுகட்டுவதற்காகவே வருமானம் கூடியோரிடமிருந்து வரிகள் அறவிடப்படுகின்றன.

மேற்குநாடுகளிலும் இலவசங்களும் மானியங்களும் நடைமுறையில் உள்ளன. முதியோர், இளையோர் நலத்திட்டங்களும் அமுலில் உள்ளன. ஆனால் அங்கு அரசினால் வருமானவரி கட்டாயமாக அறவிடப்படுகின்றது. வருமானவரியில் எவரும் ஏய்ப்பு செய்ய முடியாது.

ஆனால் மானியங்களும் இலவசங்களும் மக்களை சோம்பேறிகளாக்குகின்றன என்றொரு கருத்து பரவலாக நிலவுகின்றது. அதாவது உழைப்பின்றியே காலம் கடத்துகின்ற சமுதாயமொன்று வளர்கின்றது.

இவ்வாறான கருத்துகளை வைத்துப் பார்க்கின்ற போது, தொற்றா நோய்கள் சுகாதாரப் பணியக சமூக விசேட வைத்திய நிபுணர் டொக்டர் ஷெரின் பாலசிங்கம் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்துள்ள விடயமொன்று கவனத்தை ஈர்க்கின்றது.

இலங்கையில் வசிக்கும் ஒவ்வொரு மூன்று பேரில் ஒருவர் சோம்பேறியாக உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்கிறது அத்தகவல்.

மடிக்கணினி பாவனை, தொலைக்காட்சி பார்க்கும் பழக்கம், கைத்தொலைபேசிக்கு அடிமையாதல் போன்ற காரணங்களால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக டொக்டர் ஷெரின் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

உடலுழைப்பு இல்லாததன் காரணமாக இதய நோய், நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்றவை ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

எனவே நிம்மதியான வாழ்வென்பது சோம்பேறியாக வாழ்வதல்ல. உடலுழைப்பு மிகுந்த வாழ்வே ஆரோக்கியமும் நிம்மதியும் தருவதாகும்.

## இலட்சக்கணக்கான....

2023 ஜனவரி மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 3,39,000 மாணவர்கள் தோற்றியிருந்தனர். இந்த விடைத்தாள்களை திருத்தம் செய்வதற்கு 06 வாரங்கள் செல்லும். இந்த நடவடிக்கைகளுக்கு 19,000 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். கடந்த ஆண்டு முதல் விண்ணப்பங்கள் கோரப்பட்டாலும், இதுவரை 13,000 விண்ணப்பங்கள் மட்டுமே கிடைத்துள்ளன, அதுவும் உறுதியானதாக கொள்ள முடியவில்லை. மேலும் 6,000 பேர் தேவையாக உள்ளனர்.

இதன் காரணமாக, இணைந்த கணிதம், அறிவியல், இராசயனவியல் மற்றும் பௌதிகவியல், உயிரியல் போன்ற பாடங்கள் தொடர்பான விடைத்தாள்களின் திருத்தம் எந்த வகையிலும் ஆரம்பிக்க முடியாத சூழ்நிலை உள்ளது. ஒரு விடைத்தாள் திருத்தம் செய்வதற்கு 1,50,175 ரூபாவுக்கு இடைப்பட்ட தொகை செலுத்தப்படுகிறது, இதற்கு மேலதிகமாக ஆசிரியர் மற்றும் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும் 1,450 ரூபா நாளொன்றுக்கு 2,000/ ஆக அதிகரிக்க விசேட அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது.

இந்தச் சிக்கல் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு மாத்திரமே ஏற்பட்டுள்ளதோடு தமிழ் மொழி ஆசிரியர்களினால் எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லையென்பதுடன் அவர்கள் இணக்கப்பாட்டுடன் தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

ருஹுனு பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் வரை உயர்தர விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட மாட்டோமென பல்கலைக்கழக பேராசிரியர்களின் சங்கம் தெரிவித்திருந்த போதிலும் தற்போது அரசாங்கத்தின் வரிக் கொள்கை காரணமாக அதனைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இதன்படி, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் இலங்கை ஆசிரியர் சங்கமும் முரண்பாடான மற்றும் அடிப்படையற்ற காரணங்களை முன்னிலைப்படுத்துவதை அங்கீகரிக்க முடியாது, மேலும் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலக் கல்வியை கருத்திற்கொண்டு விடைத்தாள்களை திருத்தும் நடவடிக்கைகளில் பங்கு பற்றுமாறு பலகலைக்கழக பேராசிரியர் சங்கம் மற்றும் ஆசிரியர்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு பெற்றோர்கள் முன்வர வேண்டியது இன்றைய கட்டாயமாகும்.


## நாட்டில் சட்டம், ஒழுங்கை....

தடுத்தமைக்காக நான் இந்த சந்தர்ப்பத்தில் பொலிஸ் மற்றும் முப்படையினருக்கும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

முப்படையினரும் பொலிஸாரும் இணைந்து ஸ்திரத்தன்மையான நாடாக உருவாக்கிய பின்னர் நாம் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பில் சிந்திக்க முடிந்தது. இல்லையேல் நாடு பெரும் அராஜகத்துக்குள் தள்ளப்பட்டிருக்கும். சர்வதேச ரீதியில் எமக்கு உதவிகள் வழங்கக்கூடாதென்றும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இருப்பினும் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி தற்போது ஸ்திரத்தன்மையை எட்டியிருக்கிறோம். அடுத்தடுத்து உலக நாடுகளுடன் பேச்சு நடத்தி அடுத்த கட்ட நகர்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவை அனைத்தும் உங்களால் சாத்தியமானதென்பதையும் கூற விரும்புகிறேன் என்றார்.

எமக்கு சில வேளைகளில் கடினமான தீர்மானங்களை எடுக் வேண்டியிருந்தது. பொருட்களின் விலை அதிகரித்தது. வரி அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்வற்றுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. அனைத்து மக்களுக்கும் இதன் பாதிப்பு ஏற்பட்டது. இவ்வாறான கடினமான தீர்மானங்களை எடுத்ததன் காரணமாக இன்று இந்த நிலைமையை அடைந்திருக்கிறோம் என்றார்.

# பிராந்தியத்தில் பசுமைப் பொருளாதாரத்தில் இணையும் முதல் நாடாக இலங்கை



சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதி இந்நாட்டிற்கு கிடைத்த போதிலும் நெருக்கடிகள் முடிந்து விடவில்லை. கடன் மறுசீரமைப்புக்கான நிவாரணங்கள் கிடைத்த போதிலும் நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பல செயற்பாடுகள் மீதமுள்ளன. ஜனாதிபதி ரணில் பாடுபடுவது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கேயாகும். அது இருளில் நடப்பதைப் போன்றதாகும்.

ஜனாதிபதி ரணில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹோமாகம தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டுத் மைதானத்திற்குச் சென்றது 2016 ஆம் ஆண்டு தான் பிரதமராக இருந்த போது முன்வைத்த பிரேரணையினை மனதில் கொண்டேயாகும். விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, அமைச்சர் பந்துல குணவர்தன, ஜனாதிபதியின் பணிக்குழு பிரதானி சாகல ரத்நாயக்க, முன்னாள் கிரிக்கட் தலைவர் அர்ஜுன ரணதுங்க மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரின் ஆலோசகர் சுதத் சந்திரசேகர ஆகியோரும் அந்த இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

விளையாட்டு மைதான வளாகத்தைப் பார்வையிட செல்வதற்கு முன்னர், விளையாட்டு வளாக கலந்துரையாடல் மண்டபத்தில் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டார். இதன் போது விளையாட்டுத் துறை பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பது தொடர்பில் அதிகாரி ஒருவர் விடயங்களை விபரித்தார். அது தொடர்பான திட்ட முன்மொழிவையும் அவர் முன்வைத்தார்.

அவர் கூறிய விடயங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பிய போது அது திடீரெனத் தயாரிக்கப்பட்ட அறிக்கை என்பதை ஜனாதிபதி உணர்ந்து கொண்டார். தனக்கு முன்னால் அவர் பொய் நாடகம் ஆடுவதை உணர்ந்து கொண்ட ஜனாதிபதி, அவரது உரையை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார். எனினும் அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவித்துக் கொண்டிருந்ததால் ஜனாதிபதியால் உரத்த குரலில் உரையை நிறுத்துமாறு கூற வேண்டி ஏற்பட்டது.

"2016ம் ஆண்டின் பின்னர் நான் முன்வைத்த இந்த விளையாட்டுத் துறை பல்கலைக்கழக யோசனையைப் பற்றி யாரும் திரும்பியும் பார்த்திருக்கவில்லை. தற்போது அது பற்றி பொய்க் கதைகளைக் கூற வேண்டாம். நாம் செலவிடும் ஒரு சதத்திற்கும் நாம் பொறுப்புக் கூறவேண்டும்" என ஆக்ரோசமாக ஜனாதிபதி கூறினார்.

கிரிக்கட் விளையாட்டைப் பற்றி அர்ஜுன ரணதுங்கவும் கருத்துக்களைத் தெரிவித்ததோடு, தனக்கு அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் போனதாக பின்னர் ஜனாதிபதி அவரிடம் தெரிவித்தார். தன்னாலும் அவரை உடனடியாக அடையாளம் கண்டு கொள்ள முடியாது போனதாக ஜனாதிபதி பணிக்குழு பிரதானி சாகல ரத்நாயக்கவும் கூறினார்.

அதன் பின்னர் குழுவினர் விளையாட்டு வளாகத்தைப் பார்வையிடுவதற்காகச் சென்றனர். அங்கு பேஸ் போல் விளையாட்டில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு அருகில் ஜனாதிபதி சென்றார்.

"சேர், நாம் பேஸ்போல் விளையாடுகின்றோம். இலங்கையில் பேஸ்போல் விளையாட்டில் ஈடுபடும் ஒரே குழு நாம்தான். இதனை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்கு உதவி செய்யுங்கள்" என அங்கிருந்தவர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டனர்.

உடனடியாக இது தொடர்பில் ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிர்வாகத்தினருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். அங்கிருந்த ஒரு விளையாட்டு வீரர் ஜனாதிபதியிடம் பேஸ்போல் பந்தினைக் காட்டி அதன் பெறுமதியினைக் கூறிய போது, "நாம் இந்த பந்தினை எதிர்க்கட்சியை நோக்கி அனுப்புவோம்" என்றார் ஜனாதிபதி. ஜனாதிபதியின் இந்த பதிலைக் கேட்டு அங்கிருந்தவர்களின் சிரிப்பை அடக்க முடியாது போனது.

திங்கட்கிழமை ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக அரிசி விநியோகம் செய்யும் வேலைத்திட்டத்தில் ஜனாதிபதி பணிக்குழு பிரதானி சாகல ரத்நாயக்கா கலந்து கொண்டார். திங்கட்கிழமை மாலை அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றதோடு, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குரிய எரிபொருள் நிரப்பு நிலையங்களின் ஒரு பகுதியை மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கும் பிரேரணை அமைச்சரவைக் கூட்டத்தின் போது நிறைவேற்றப்பட்டது.

பொலிஸ்மா அதிபர் சீ.டி. விக்ரமரத்னவுக்கு மூன்று மாதகால சேவை நீடிப்பு வழங்குவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டதோடு, அதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தது. விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதான குற்றவாளியான ஹரக் கட்டா தொடர்பிலும் இங்கு பேசப்பட்டது.

"ஹரக் கட்டாவுக்காக நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு எந்த ஒரு சட்டத்தரத்தரணிக்கும் உரிமை உள்ளது. ஆனால் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அவருக்காக ஆஜராகிறார் என்பது நாட்டுக்கும், உலகிற்கும் தவறான ஒரு செய்தியே" என்றார் பந்துல குணவர்தன.

"போராட்ட (அரகல) நேரத்தில் போராட்டக்காரர்கள் சட்டத்தரணிகள் சங்கத் தலைவரை பதில் ஜனாதிபதியாகுமாறு கூறினார்களே. எனக்கெனில் அன்றிலிருந்து இது தொடர்பில் ஒரு சந்தேகம் இருந்தது. இப்போது அந்த சந்தேகம் உண்மையாகியிருக்கின்றது. போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த அனேகமான இளைஞர்கள் போதையில் இருந்தார்கள் என்பது இப்போது உறுதியாகியிருக்கின்றது" என்றார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க.

"அனேக லத்தீன் அமெரிக்கா நாடுகளில் ஆட்சியில் இருப்பது போதைப் பொருள் மாபியாவினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதிகளும், பிரதமர்களுமாகும். இலங்கையிலும் அதனைச் செய்ய முயன்றிருப்பது இப்போது தெளிவாகியிருக்கின்றது" என்றார் அமைச்சர் கஞ்சன. இலங்கை பசுமை எரிசக்தி உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த முதலீட்டாளர்கள் அன்றைய தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணிலை சந்தித்தனர். பசுமைப் பொருளாதாரத்தில் இணைந்து கொள்ளும் பிராந்தியத்தின் முதல் நாடாக இலங்கையை ஆக்கப் போவதாக இதன் போது ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் அதிகாரிகள் குழுவும் அன்றைய தினம் ஜனாதிபதியைச் சந்தித்தனர். எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீமும் இதன்போது சமூகமளித்திருந்தார். பசுமை எரிசக்தி மாநாடு திங்கட்கிழமை காலை இடம்பெற்றதோடு, இதில் காலநிலை மாற்றம் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தனவும் கலந்து கொண்டிருந்தார்.

கட்டுமானத் துறையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி பணிக்குழு பிரதானி சாகல ரத்நாயக்கா தலைமையில் இடம்பெற்றது. இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பில் கலந்துரையாடல் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் இடம்பெற்றது. இதன் முக்கிய பணியை ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஏற்பாடு செய்திருந்தார்.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி கொழும்பு ஆனந்தா கல்லூரிக்கு விஜயம் செய்தார். அங்கு இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளுமாறு கிடைத்த அழைப்பை ஏற்றே அவர் அங்கு சென்றார். இதற்கு முன்னர் ஜனாதிபதி ரணில் ஆனந்தா கல்லூரியில் பரிசளிப்பு விழா ஒன்றில் கலந்து கொண்டது பல வருடங்களுக்கு முன்னர் அதிபர் வீ. எஸ். குடலிகமகேவின் காலத்திலாகும்.

ஆனந்தா கல்லூரியின் மாணவர் ஒருவர் பிரதம அதிதியின் உரையினை ஆங்கிலத்தில் நிகழ்த்துமாறு ஜனாதிபதியிடம் ஆங்கிலத்திலேயே அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை ஏற்று உரையாற்ற வந்த ஜனாதிபதி "அதிகமானோர் ஆங்கிலத்தில் உரையாற்றுமாறு என்னிடம் கேட்கின்றனர். எனினும் ஆனந்தா கல்லூரியின் சம்பிரதாயம் சிங்கள மொழியில் உரையாற்றுவதாகும்" என சிரித்தவாறு கூறிய ஜனாதிபதி சிங்கள மொழியிலேயே தனது உரையினைத் தொடர்ந்தார்.

கல்லூரியின் கடந்த காலத்தைப் பற்றியும், தற்போதை காலத்தைப் பற்றியும் பேசிய ஜனாதிபதி, எதிர்கால தொழில்நுட்பம் தொடர்பில் பேசும் போது வருகை தந்திருந்த அனைவரும் ஜனாதிபதிக்கு இருக்கும் புதிய தொழில்நுட்ப அறிவைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். அவர் பேஸ்புக், டிக்டொக்கைப் போல ஏ. ஐ தொழில்நுட்பத்தைப் பற்றியும் பேசினார். பின்னர் ஆனந்தா கல்லூரியின் மாணவர் நிர்வாகக் குழுவினரால் ஜனாதிபதி தேனீர் உபசரிப்புக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

ஜனாதிபதி தேனீர் அருந்திக் கொண்டிருந்த போது அவருக்கு அருகில் வந்த ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவரான அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்ன "டிக் டொக், பேஸ்புக், வட்ஸப் பற்றி என்றால் கொஞ்சம் தெரியும். ஆனால் இந்த புதிய செட் ஜீ. பீ. டி. பற்றி தெரியாது" என்றார்.

"நான் ஒவ்வொரு நாளும் புதிய தொழில்நுட்பங்களைப் பற்றித் தேடிப்பார்க்கின்றேன். நாம் எப்போதும் புதிய உலகுடன் எம்மை இற்றைப்படுத்திக்கொள்ள வேண்டும் தகவல் பணிப்பாளரே" என சிரித்தவாறு ஜனாதிபதி அவருக்கு பதிலளித்தார்.

மாணவர்கள் ஜனாதிபதியுடன் செல்பி புகைப்படம் எடுத்துக்கொள்ள முண்டியடித்தது, வயதில் மூத்தவராக இருந்தாலும் கருத்துக்களில் அவர்களோடு சம மட்டத்தில் இருந்ததனாலாகும். இரண்டு மணி நேரம் அங்கு இருப்பதற்காக வந்திருந்தாலும் அவர் ஆனந்தா கல்லூரியிருந்து வெளியேறிச் செல்லும் போது மூன்று மணி நேரத்திற்கும் அதிக நேரம் கடந்திருந்தது. அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடன் ஜனாதிபதி பணிக்குழு பிரதானி சாகல ரத்நாயக்காவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

அரசியல்வாதியான பிலிப் குணவர்தனவின் 51வது நினைவு தின நிகழ்விலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குரிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை வழங்குவதற்கு அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்திற்கு எதிராக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் ஆரம்பித்த உண்ணாவிரதம் பணி பகிஷ்கரிப்பாக மாறி இருப்பதாக ஜனாதிபதி அறிந்து கொண்ட உடனேயே அவர் ஜனாதிபதி பணிக்குழு பிரதானி சாகல ரத்நாயக்காவுடன் தொடர்பு கொண்டு இது பற்றி ஆராய்ந்து பார்க்குமாறு கேட்டுக் கொண்டார்.

பணிக்குழு பிரதானி உடனே எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவைத் தொடர்பு கொண்டு பேசினார். "நாம் இது தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் தொழிற்சங்கங்களைச் சந்தித்துப் பேசினோம் தானே?" என சாகல அமைச்சரிடம் கேட்டார்.

"ஆம் நாம் மூன்று நான்கு தடவைகள் இது பற்றி பேசினோம். எனினும் அவர்கள் மூன்று நிறுவனங்களுக்கு புதிதாக 50 ஷெட்கள் வீதம் 150 ஷெட்களை அமைப்பதற்கு வழங்கும் பிரேரணைக்கு இணங்கவில்லை. இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துங்கள்" என அமைச்சர் கஞ்சன ஜனாதிபதி பணிக்குழு பிரதானியிடம் கூறினார்.

"நீங்கள் சரியான விடயத்தைச் செய்யுங்கள். ஜனாதிபதி உங்களோடு இருக்கின்றார். அது பற்றி சந்தேகம் கொள்ள வேண்டாம்" பணிக்குழு பிரதானி அமைச்சருக்கு கூறினார். மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு புதிதாக 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைப்பதற்கு அனுமதியினை வழங்கும் ஒப்பந்தங்கள் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் கைச்சாத்திடப்படவுள்ளன. ஜனாதிபதி பணிக்குழு பிரதானி சாகல ரத்நாயக்கா உள்ளிட்ட தரப்பினர் கடந்த வாரத்தில் இந்திய உயர் ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற இரவு விருந்துபசார நிகழ்வில் கலந்து கொண்டனர். இதன் போது இலங்கை அரசாங்கம் மற்றும் ஜனாதிபதியுடன் தொடர்ந்தும் இணைந்து பணியாற்ற ஆயத்தமாக இருப்பதாக இந்திய பிரதிநிதிகள் பணிக்குழு பிரதானியிடம் தெரிவித்தனர். ஜனாதிபதி ரணிலின் பழைய பாராளுமன்ற நண்பரும், முன்னாள் சபாநாயருமான ஜோசப் மைக்கல் பெரேராவின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக கடந்த வியாழக்கிழமை காலை ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்தார். கட்சியில் தனது நண்பருக்காக தனது சோகத்தை வெளிப்படுத்தி ஜனாதிபதி சிறிது நேரம் அங்கு இருந்து விட்டு அங்கிருந்து வெளியேறினார். பாராளுமன்ற வளாகத்திலிருந்து வெளியேறிய அவர் நேராகச் சென்றது "ஐ. எம். எப் மற்றும் அதற்கு அப்பால்" என்ற தலைப்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முக்கிய உரையாற்றுவதற்காகவாகும். வியாபாரிகளும், தொழில்துறையினரும் இந்த கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்ட ஜனாதிபதி, இது தொடர்பில் நிலவும் பிரச்சினைகளுக்கு பதில் வழங்கவும் மறந்து விடவில்லை.

ஜனாதிபதி ரணில் வார இறுதியில் புதிய அரிசி விழாவில் கலந்து கொள்வதற்காக அனுராதபுரத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

**எம். எஸ். முஸப்பிர்**

---







# அழியாத அன்பின் அதிசயம்!

அவளது பெயர் குமாரசுவாமி யோகேஸ்வரியாகும். அவரது பெயர் கோபால் செல்வரத்தினமாகும். யோகேஸ்வரிக்கு தற்போது 70 வயதாகின்றது. செல்வரத்தினத்திற்கு வயது 78. அவர்கள் திருகோணமலை நிலாவெளி பெரியகுளம் பகுதியில் வசித்து வருகின்றனர். அது முப்பது வருட யுத்தம் நிலவிய காலமாகும். யுத்தத்தின் மோசமான அனுபவங்களை தொடர்ச்சியாக அனுபவித்த தமிழ் கிராமம் அது. செல்வராணி, கவிதா, லதா என்ற பெயர்களில் மூன்று பெண் பிள்ளைகளும், செல்வகுமார், செல்வமாறன், செல்வராஜன் என்ற பெயர்களில் மூன்று ஆண் மகன்களுமாக ஆறு பிள்ளைகளைக் கொண்ட இந்தக் குடும்பத்தில் புதிய அங்கத்தவர் ஒருவரும் இணைய இருந்தார். அப்போது யோகேஸ்வரி நான்கு மாதக் கர்ப்பிணியாக இருந்தார். இற்றைக்கு 33 வருடங்களுக்கு முன்னர் அதாவது யுத்தத்தின் கொடூரமான காலகட்டத்தில் அவர்களால் மகிழ்ச்சியாக வீட்டில் வாழ்வதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. கடுமையான மோட்டர் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் போது இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கால் போன போக்கில் திக்குத் தெரியாமல் ஓடத் தொடங்கினர். அந்நேரம் மூத்த மகளான செல்வராணிக்கு 15 வயதாகியிருந்தது. தமது ஓலைக் குடிசையிலிருந்து தமது தாய் தந்தை பிள்ளைகளோடு புல்மோட்டைப் பகுதிக்கு தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தப்பி ஓடினர். மூத்த மகளான செல்வராணியின் கைகளில் இருந்தது ஒன்றரை வயதுடைய கடைசி மகனான செல்வராஜனாகும். கொஞ்சம் பிடிவாத குணத்தைக் கொண்ட யோகேஸ்வரிக்கு இவ்வாறு தப்பி ஓடுவது பிடிக்கவில்லை. தன் எதிர்ப்பை வெளிப்படுத்தி தன் கணவரின் கையை உதறிவிட்டாள். உயிரைக் காப்பாற்றிக் கொள்ள சிக்கிச் சிதறி ஓடிய மக்களுக்கு மத்தியில் முல்லைத்தீவு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கான மக்களுடன் தந்தையும் பிள்ளைகளும் படகுகளில் ஏற்றப்பட்ட போதிலும் அந்தப் பயணத்தில் யோகேஸ்வரி இணைந்து கொள்ளவில்லை. அவள் கூட்டத்தில் காணாமல் போனாள். முல்லைத்தீவு பாதுகாப்பு முகாமில் இருந்த சொல்வரத்தினம் அன்றிலிருந்து தனது கர்ப்பிணியான மனைவியைத் தேடத் தொடங்கினார். அவளைப் பற்றிய தகவல்களைச் சேகரித்தவாறு மனைவியைத் தேடிக் கொண்டிருந்தார்.

போரினால் பொதுமக்கள் உயிரிழந்த போது, பல வருடங்களாகக் தனது மனைவியைப் பற்றிய எவ்வித தகவல்களும் இல்லாத நிலையில் தனது மனைவி இறந்துவிட்டா ள் என்று எண்ணி அவள் மீதான நம்பிக்கையைக் கைவிட்டார். 30 வருட யுத்தம் நிறைவடைந்து 14 வருடங்கள் கடந்து விட்டது. செல்வரத்தினம் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் மீண்டும் தனது சொந்த ஊருக்குச் சென்று கல் வீடொன்றையும் கட்டியிருந்தார். தற்போது செல்வரத்தினத்துடன் இருந்த பிள்ளைகள் தாதி, மேசன், குடும்ப சுகாதார உத்தியோகத்தர், ஆடைத் தொழிற்சாலை மேர்பார்வையாளர் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். செல்வரத்தினத்தின் பேரப்பிள்ளைகள் தலைக்கு மேல் வளர்ந்து கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு தமது பாட்டியைப் பற்றி எதுவுமே தெரியாது.

இது செல்வரத்தினத்தின் கடந்த கால பழைய கதையாகும். புதிய கதையின் தனியான பக்கம் கொழும்பு வைத்தியசாலையில் ஆரம்பிக்கின்றது. கொழும்பு வைத்தியசாலையின் திடீர் விபத்துப் பிரிவின் 4ம் வாயிலுக்கு அருகில் உள்ள வீதியில் பல தினங்களாக பிச்சை எடுத்துக் கொண்டிருந்த பெண் ஒருவர் அன்றைய தினத்தில் உண்பதற்காக எதையாவது கேட்டு மக்களிடம் யாசகம் கேட்டுக் கொண்டிருந்தாள். தமிழ் பெண்ணான அவள் சில தினங்களாகவே பல்வேறு நோய்களால் அவதிப்படுவதை அந்த வீதியில் அடிக்கடி உலாவும் வைத்தியர்கள் அவதானித்தார்கள். கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் றுக்ஷான் பெல்லன இந்தப் பெண்ணின் சுகயீன நிலை தொடர்பில் கவனம் செலுத்தியதோடு, அப்பெண்ணை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு அவர் 1990 அம்புலன்ஸ் சேவைக்கு ஆலோசனை வழங்கினார்.

அவர் கொழும்பு வைத்தியசாலையின் 56B வார்டில் இவ்வாறுதான் அனுமதிக்கப்பட்டார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போதே அவர் மிகவும் அசுத்தமான நிலையில் இருந்துள்ளதோடு, கண்பார்வை குறைந்த நிலையுடனும், காலில் கடும் வலியுடனும் காணப்பட்டார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இந்த பெண்ணை செவிலியர்கள் எந்தவித தயக்கமும் இன்றி சுத்தம் செய்தனர். அவள் உடுத்துவதற்கு ஆடைகள் மட்டுமின்றி உணவுப் பொருட்களையும் இவர்களது வீடுகளில் இருந்து கொண்டு வந்து கொடுப்பதில் கருணை காட்டினார்கள். அவள் வைத்தியசாலைக்கு வந்த ஓரிரு நாட்களுக்குப் பிறகு அமைதியானாள். எனினும் வார்டுக்குப் பொறுப்பான தாதியச் சகோதரி ஜி. கே. அஜந்தி பெரேரா மற்றும் ஏனைய தாதியச் சகோதரிகள் அவளை தொடர்ந்து கவனித்து, மனநல சிகிச்சைக்கு அனுப்பவும் ஆயத்தமானார்கள்.

எந்தத் துணையுமில்லாத இந்தப் பெண்ணைப் பற்றி தாதியச் சகோதரிகள் தொடர்ந்தும் கவனம் செலுத்திக் கொண்டிருந்தமைக்கு காரணம் சிகிச்சைக்குப் பின்னர் அவளை யாரிடம் ஒப்படைப்பது என்ற சிக்கலான பிரச்சினைக்கு அவர்கள் முகங்கொடுத்துக் கொண்டிருந்ததேயாகும். பொதுவாக இவ்வாறானவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும்போது அவர்கள் மீண்டும் வீதிக்குச் செல்வதற்கு வார்ட் இடமளிப்பதில்லை. அனேகமாக அவர்கள் மீண்டும் அனுப்பப்படுவது வைத்தியசாலையுடன் தொடர்புடைய பராமரிப்புச் சேவை இல்லங்களுக்கேயாகும். எனினும் தற்போது அந்த பராமரிப்புச் சேவை இல்லம் நிரம்பிப் போயிருந்தது.



அவளது பொறுப்பினை ஏற்றுக் கொண்ட வார்டுக்குப் பொறுப்பான தாதியச் சகோதரியான ஜீ. கே. அஜந்தி பெரேரா இதற்குரிய பதிலைத் தேடத் தொடங்கினார். யார் இந்தப் பெண்? இனி இந்தக் கதையினை அவளது குரலிலேயே கேட்போம்.

"கடந்த 16ம் திகதி கொழும்பு பொது வைத்தியசாலையின் 56B வார்டில் அனுமதிக்கப்பட்ட யோகேஸ்வரியால் சிங்களம் பேச முடியாது. தமிழ் மாத்திரமே தெரியும். அவளது பெயரைக் கூறத் தெரியுது. அதே போன்று எப்போதும் செல்வராணி, கவிதா என்ற இரு பெயர்களையும் கூறுவாள். அது அவளது உறவினர்கள் இருவரது பெயர்களாக இருக்கக் கூடும் என நாம் நினைத்தோம். அதைத் தவிர எமக்கு அவளைப் பற்றிய வேறு எந்தத் தகவல்களையும் பெற்றுக் கொள்வதற்கான தடயங்கள் கிடைக்கவில்லை. எனவே நாம் தினம் தினம் அவளது நினைவைப் புதுப்பிப்பதற்காக முயற்சித்தோம். டாக்டர் உமாசங்கர் இந்த தாயுடன் தமிழ் மொழியில் அடிக்கடி பேசுவார். இவ்வாறு பேசியதில் அந்த தாயின் ஊரைப் பற்றிய சிறு தகவலை அறிந்து கொள்ள முடிந்தது. சண்முகா வித்தியாலயம், சாம்பல்தீவு ஆகிய இவ்விரு பெயர்களை மாத்திரமே அத்தாயிடமிருந்து எம்மால் பெற முடிந்தது. இந்த இரண்டு பெயர்களை வைத்துக் கொண்டு இரண்டு மூன்று தினங்களுக்குள் மிகத் தொலையில் அமைந்துள்ள இந்த தாயின் வீட்டை எவ்வாறு தேடிக் கொள்வது என்று நான் இந்த இரண்டு பெயர்களையும் கையில் வைத்துக் கொண்டு பலநூறு தடவைகள் யோசித்தேன். சண்முகா வித்தியாலயம் என்பது பாடசாலை என்பதை நான் அறிந்து கொண்டேன். எனவே அதற்கருகில்தான் வீடு இருக்க வேண்டும் என அனுமானித்தேன்.

சாம்பல்தீவு பற்றி நான் அறிந்திருக்கவில்லை. எனினும் சாம்பூர் பற்றி கேள்விப் பட்டிருந்ததால் நான் சாம்பூர் பொலிஸ் நிலையத்தின் ஓ.ஐ.சியின் தொலைபேசி இலக்கத்தைத் தேடிப் பெற்று அவரிடம் இந்தத் தகவல்களை வழங்கி, இவ்வாறான பாடசாலைக்கு அருகில் செல்வராணி, கவிதா என யாராவது இருக்கிறார்களா எனத் தேடிப் பார்க்குமாறு கூறினேன். சிஸ்டர், இரண்டு நாட்கள் தாருங்கள், தேடிப் பார்த்துக் கூறுகின்றேன் என அவர் கூறினார். மீண்டும் இரண்டு நாட்களில் அவர் எனக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து, சிஸ்டர் இது எனது பொலிஸ் நிலைய எல்லைக்குள் உள்ள இடமல்ல, நிலாவெளி பொலிஸ் நிலையத்திற்கு உரிய பிரதேசம் எனக் கூறி அந்த பொலிஸ் நிலைய ஓ. ஐ. சியின் இலக்கத்தை வழங்கினார். நான் அந்த பொலிஸ் நிலையத்தில் எனது கோரிக்கையினை வழங்கினேன். எனது கோரிக்கைக்கு அவர்கள் மிகவும் சாதகமாகச் செயற்பட்டார்கள். டீ. சீ. டீ. லக்மால் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் என்னோடு பேசினார். அவர் தேடிப் பார்த்துவிட்டு, நீங்கள் கூறுவதைப் போன்று எவரும் அங்கில்லை. நாம் எல்லா இடத்திலும் தேடினோம். கிராம உத்தியோகத்தரிடமும் விசாரித்துப் பார்த்தோம். அவரும் அவ்வாறு எவரும் இல்லை எனக் கூறிவிட்டார் என்றார். இந்த பதிலால் நான் மிகவும் வேதனையடைந்தேன்...."

வார்டுக்குப் பொறுப்பான தாதிய சகோதரி அஜந்திக்கு இரண்டு நாட்களின் பின்னர் அதாவது 24ம் திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் நிலாவெளி பொலிஸ் நிலைய டீ.சீ.டீ.லக்மாலின் தொலைபேசியிலிருந்து அழைப்பு ஒன்று வந்துள்ளது. அவர்கள் இந்த தாதிய சகோதரியின் நேர்மையான கோரிக்கையினை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என பாடுபட்டுள்ளார்கள். என்றாலும் அந்த முயற்சி நினைக்குமளவுக்கு இலகுவான ஒன்றாக இருக்கவில்லை.

"நிலாவெளி பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் உத்தியோகத்தர் லக்மாலின் இரண்டாவது தொலைபேசி அழைப்பு வந்த போது நான் பணி முடிந்து வீடு நோக்கி வந்து கொண்டிருந்தேன். சிறிய சந்தேகம் ஒன்றுள்ளது என அவர் என்னிடம் கூறினார். எனினும் அது தவறாகவும் இருக்கக் கூடும். கவிதா, செல்வராணி என்ற பெயர்களில் இருவர் இருக்கின்றார்கள். எனினும் அவர்களின் தாய் மரணித்து விட்டார். நாம் பொலிஸ் நிலையத்திற்கு வரச் சொன்னோம். அவர்கள் இப்போது இங்குதான் இருக்கின்றார்கள் என்றார். அந்நேரமே நான் வைத்தியசாலை தாதி சகோதரியோடு தொடர்பு கொண்டு பொலிஸ் நிலையத்தில் இருப்பவர்களுக்கு வட்சப் அழைப்பை எடுத்து அந்த தாயையும், அவர்களையும் பேசச் செய்தேன். அத்தாய்க்கு கண் தெரியாத போதும் அவள் தனது பிள்ளைகளை இனங்கண்டு கொண்டார்.

மிகவும் உணர்வு பூர்வமான அத்தருணம், தாய் மரணித்து விட்டார் என நினைத்திருந்த பிள்ளைகள் 33 வருடங்களுக்குப் பின்னர் தமது தாய் உயிருடன் இருப்பதை இனங்கண்டு கொண்டார்கள். அந்தச் சந்திப்பு மிகவும் உணர்வுபூர்வமானது. தாயைப் பார்க்க நாம் மறுநாளே கொழும்பு வருகிறோம் என அவர்கள் கூறினார்கள். அவர்கள் அங்கிருந்து இரவே புறப்பட்டு அதிகாலையாகும் போது அவர்கள் வைத்தியசாலைக்கு வந்துவிட்டார்கள். எமக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அதிகாலையாகும் போது கணவரும், பிள்ளைகளும் கட்டிலைச் சுற்றி இருந்தார்கள். மகள் கவிதா, பேரப் பிள்ளைகள் அனைவரும் தாயையும், பாட்டியையும் பார்ப்பதற்கு 33 வருடங்களின் பின்னர் வந்திருக்கின்றார்கள். 33 வருடங்களாக இவர்கள் தமது தாய் மரணித்துவிட்டார் என எண்ணிக் கொண்டு இருந்திருக்கின்றார். கணவரிடமிருந்து மனைவி பிரிந்து சென்று 33 வருடங்களாகிவிட்டது. அவளுடன் சென்ற இரண்டு பிள்ளைகள் வேறு இடங்களில். அவர்களும் பிரிந்து 33 வருடங்களாகச் சந்தித்துக் கொள்ளவில்லை. அந்தத் தாய் அந்தப் பிள்ளைகளைப் பற்றிய தகவல்களையும் கூறினார். பின்னர் எமது விருந்தினையும் சாப்பிட்டு விட்டு அவர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டார்கள்"

யோகேஸ்வரி மீண்டும் தனது பிள்ளைகளோடு வாழ்கிறாள். எனினும் அவளுக்கு அதிகமான விடயங்கள் நினைவில் இல்லை. கர்ப்பிணியாக இருந்து தனக்கு கிடைத்த பிள்ளையைப் பற்றிக் கூறுவதற்கு அவளால் முடியவில்லை. சில நேரம் மேசன் வேலை செய்யும் மகன் இருந்தார் எனக் கூறினாலும் அவரைப் பற்றிய சரியான தகவல்கள் எதுவுமில்லை.

பல வருடங்களாக வீதிகளில் வாழ்வைக் கடத்திய அவளால் இன்னமும் குடும்பத்தோடு ஒன்றிப் போக முடியவில்லை. சில நேரம் அவள் வன்முறையாக நடந்து கொள்கிறாள். தனது கணவரான செல்வரத்தினம் அனைத்தையும் கவலையோடு பார்த்துக் கொண்டிருப்பார். காரணம் இன்னமும் யோகேஸ்வரி மீது அவர் வைத்திருக்கும் பாசத்தினாலாகும். பிள்ளைகளுக்கு மீண்டும் அவர்களது தாய் கிடைத்த மகிழ்ச்சி அவருக்கு உயிர் வாழும் வரைக்கும் போதுமானதாகும். அதனால்தான் இந்த மனிதாபிமானப் பணிக்கு அவர் இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்.

**சுபாஷினி ஜயரத்ன**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

# ராகுலுக்கு எதிரான மோடி அஸ்திரம் பிரம்மாஸ்திரமா, புஸ்வாணமா?

அருள் சத்தியநாதன்

ராஜிவ் காந்தியின் மகன் ராகுல் காந்திக்கு இரண்டு ஆண்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டமை: அதையடுத்து பாராளுமன்றத்தில் அவரது உறுப்புரிமை நீக்கப்பட்டு ஆறு ஆண்டு தேர்தலில் போட்டியிடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை என்பன சாதாரண விஷயங்கள் அல்ல. சாதாரண ஒரு மனிதன் சிறை செல்வதற்கும் ஒரு அரசியல்வாதி சிறைத் தண்டனை பெறுவதற்கும் இடையே மடுவுக்கும் மலைக்குமான வித்தியாசம் உள்ளது.

அரசியலில் எவருக்கும் நிரந்தர உயர்ச்சியும் நீடித்த வீழ்ச்சியும் அமைவதில்லை. 2009இல் ராஜபக்ஷ அரசு யுத்த வெற்றியை ஈட்டியபோது அரசும் அரசை சூழ்ந்திருந்தவர்களும் தமது அரசுக்கு கண்ணுக்கெட்டிய தூரத்தில் வீழ்ச்சியே கிடையாது என இறுமாந்திருந்தனர். அப்படித்தான் தோன்றவும் செய்தது. ஆனால் அடுத்த சில வருடங்களில் அரசியல் சூழல் எப்படி தலைகீழ் மாற்றம் அடைந்தது என்பதை நாம் அவதானித்தோம்.

1977 தேர்தலில் இந்திராகாந்தியை அவரது தொகுதியில் தோற்கடித்த புதிதாக தோற்றுவிக்கப்பட்ட ஜனதா கட்சி, காங்கிரசை படுதோல்வியடையச் செய்து ஆட்சியைக் கைப்பற்றியது. காங்கிரசின் கதை முடிந்தது என்றுதான் பலரும் நம்பினார்கள். ஜனதா கட்சி ஆட்சி பீடமேறியதும் இந்திரா காந்திக்கு பல தொல்லைகளைக் கொடுத்தது. அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது. 1978 இல் சிக்மகளூர் பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அவரது எம்.பி. பதவியை ஜனதா அரசு பறித்தது. திஹார் சிறையில் அடைத்தது. பின்னர் 1980 ஜனவரியில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் இந்திராவின் காங்கிரஸ் பெரு வெற்றிபெற்றது. இந்திரா இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டு இரண்டிலும் வெற்றியீட்டினார். ஆட்சி அமைத்தார். ஜனதா காணாமல் போனது.

அரசியலில் நிரந்தர வெற்றியோ, தோல்வியோ கிடையாது என்பதற்கு ஜெயலலிதா மற்றொரு உதாரணம். அவர் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார் என்பது சட்ட ரீதியாக நிரூபணமான பின்னரும் கூட ஜெயலலிதாவின் மக்கள் அபிமானத்தில் எந்தச் சரிவும் ஏற்படவில்லை. அவரால் ஆர்.கே.நகர்த் தொகுதியில் வெற்றியீட்டி முதல்வராகவும் முடிந்தது.

இந்த வகையில் பார்ப்போமானால் ராகுல் காந்திக்கு இது வெறும் தற்காலிக பின்னடைவு மட்டுமே. கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை அவர் மேற்கொண்ட நடை பயணத்தில் அவருக்கும் கட்சிக்கும் கிடைத்திருக்கும் உயர்ச்சியை விட, அவருக்கு சிறைத் தண்டனை வாங்கித் தந்ததன் மூலம் பா.ஜ.க. அதிக புகழையும் மக்கள் அபிமானத்தையும் அவருக்கு பெற்றுத் தந்திருக்கிறது என்பதே சரியான பார்வையாகும். 1977 இல் இந்திரா காந்தியை பழிவாங்கியதன் மூலம் அவருக்கு மக்கள் மனதில் ஜனதா கட்சி சிம்மாசனம் போட்டுக் கொடுத்தது. அதைத்தான் மோடியும் இப்போது செய்திருக்கிறார்!

சரி, ராகுல் காந்திக்கு ஏன் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது?

இந்தியாவின் மோடி வகுப்பைச் சார்ந்த மக்களை ராகுல்காந்தி 'திருடர்கள்' என்று அழைத்ததன் மூலம் அந்த வகுப்பினரையே இழிவுபடுத்திவிட்டார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து குஜராத்தைச் சேர்ந்த ஒரு பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் சூரத் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பிரகாரம் சாதியை சொல்லி இழிவுபடுத்துவது குற்றம். சிவாஜி கணேசன் நடித்த பச்சை விளக்கு திரைப்படத்தில் 'கேள்வி பிறந்தது அன்று' என்ற ஒரு பாடல் வரும். அதில் 'இன்று எவரும் பேதம் சொன்னால் இரண்டு வருடம் ஜெயில் உண்டு' என்று வரிகள் வரும். ராகுல் காந்தி மீதான இவ்வழக்கை விசாரித்த சூரத் நீதிமன்றம், அவர் குற்றவாளி எனத் தீர்ப்பளித்து இரண்டு வருட சிறைத் தண்டனையையும் அளித்தது. மேலும் மேன்



முறையீடு செய்ய 30 நாள் அவகாசம் அளித்து சிறைத்தண்டனையை ஒத்தி வைத்ததால் அவர் உடனடியாகக் கைது செய்யப்படவில்லை. இத்தீர்ப்பு வெளியானதுமே, சிறைத் தண்டனை பெற்ற ஒரு எம்.பி. பாராளுமன்றத்தில் பதவி வகிக்க முடியாது என்ற சட்டத்தைப் பயன்படுத்தி சபாநாயகர் ராகுலை தகுதி நீக்கமும் செய்தார். இன்று இந்தியாவெங்கும் காங்கிரஸ் கட்சி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருவதற்கான காரணம் இதுதான்.

ராகுல்காந்தி மோடி இனத்தோரை இழிவுபடுத்தினாரா என்பதைப் பார்ப்போம். 2019ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் பிரசாரத்தின்போது கர்நாடக மாநிலத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த ராகுல்காந்தி 'கோலார்' என்ற இடத்தில் பேசும்போது நரேந்திரமோடியும் சரி அவரது கூட்டாளிகளும் சரி திருடர்களே என்பதை சொல்வதற்காக, 'இந்திய வங்கிகளுக்கு பலகோடி ரூபா கடன் பளுவை வைத்துவிட்டு நாட்டை விட்டு தப்பியோடியவர்கள் நீரவ் மோடி, லலித் மோடி என்ற பெயர்களைக் கொண்டிருக்கிறார்களே, எப்படி திருடர்களுக்கு மோடி என்ற பெயர் பொதுவானதாக அமைந்து விடுகிறது' என்ற கேள்வியை எழுப்பினார். இதைப் பயன்படுத்திக் கொண்ட பூனேஷ்

## 'இந்திரா வசீகரம்' கொண்ட பிரியங்கா மாற்றாக களமிறக்கப்படுவாரா?

மோடி என்பவர் தொடுத்த வழக்கில்தான் இத்தண்டனையும் தகுதி நீக்கமும் கிடைத்திருக்கிறது.

இது தொடர்பாக விளக்கம் அளித்திருக்கும் ராகுலின் வழக்கறிஞர் கிரிட் பன்பாலா, தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுவது இயல்பு என்றும், ராகுலின் கூற்றில் எண்பது சதவீதம் நரேந்திர மோடியை குறிப்பதாகவே உள்ளது என்றும், அந்த உரையை நிகழ்த்திய போது மோடி என்ற ஒரு சாதி இருப்பதை ராகுல் அறிந்திருக்க வாய்ப்பே இல்லை என்றும் கூறியுள்ளார்.

ஒரு குறிப்பிட்ட நபரைப் பற்றி ஒருவர் தவறாகப் பேசியிருந்தால் அவர்தான் புகார் அளிக்க வேண்டும். இங்கே நரேந்திர மோடிக்கு பதிலாக பூனேஷ் மோடியே வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். வழக்கை விசாரித்த நீதிபதியை மாற்றிவிட்டு பா.ஜ.க. ஆதரவாளராக இருக்கக் கூடிய ஒருவரையே நீதிபதியாக நியமித்து வழக்கு நடைபெற்றது. மோடியைத் தொடர்ந்து கடுமையாக விமர்சனம் செய்துவரும் ராகுல் காந்தியை பாராளுமன்றத்தில் இருந்து நீக்க வேண்டும் என்பதற்காக விரிவான தளத்தில் நடைபெற்ற சதியே இது என்பது இவரது கூற்றாக உள்ளது.

மேலும் இவர், இந்தியாவில் 13 கோடி மோடி இனத்தவர் வாழ்வதாகவும் இவர்களை ராகுல் 'திருடர்கள்' என அழைத்து இழிவுபடுத்தி இருக்கிறார் என்பதுதான் வழக்கின் ஆதாரபுள்ளி. ஆனால் சட்டப்படி இந்த மோடி சாதியை இனம்காண முடியவில்லை என்றும் மொத்வானிக், மொத்காஞ்சி போன்ற சமூகங்கள் தொடர்பான தகவல்கள் இருக்கின்றபோதும் மோடி என்ற சமூகம் குறித்த எந்தக் குறிப்பும் கிடையாது; அப்படி ஒரு சாதி அமைப்பே இல்லை என்றும் கூறியிருக்கிறார்.

பாராளுமன்றத்தில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ள ராகுல் காந்தி தீர்ப்பை மேன்முறையீடு செய்யப்போவதில்லையாம். அனேகமான எல்லா இந்திய அரசியல் கட்சிகளும் இத்தீர்ப்புக்கு கண்டனம் தெரிவித்துள்ளன. விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன், இது அளிக்கப்பட்ட தீர்ப்பு அல்ல; 'வாங்கப்பட்ட' தீர்ப்பு எனச் சரியாகச் சொல்லியிருக்கிறார்.

இந்தியாவில் காங்கிரஸ் தற்போது பலவீனமான நிலையிலேயே உள்ளது. ராகுலின் வாயை பாராளுமன்றத்தில் மூடுவதன் மூலம் காங்கிரசை மேலும் பலவீனமடையச் செய்து அடுத்த வருடம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் மூன்றாவது தடவையும் பெரு வெற்றி பெறலாம் என்ற பா.ஜ.க.வின் திட்டத்தின் ஒரு பகுதியே தற்போது நிறைவேறி இருப்பதாகவே கருத வேண்டியிருக்கிறது.

குற்றவாளிகள் நாடாளுமன்றத்துக்கு வரக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட சட்டமே இது. இச்சட்டத்தை எவரும் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதை முன்வைத்து ஒரு அவசர திருத்த மசோதாவை 2014ம் ஆண்டு மன்மோகன் சிங் கொண்டுவர முனைந்தார். எனினும் ராகுல்காந்தி இந்த யோசனையை மூர்க்கமாக எதிர்த்தார். இது காட்டுமிராண்டித்தனம் இம் மசோதாவைக் கிழித்து குப்பைக் கூடையில் எறிய வேண்டும் என அவர் ஆவேசமாகப் பேச, மன்மோகன்சிங் பின்வாங்கினார். பின்னர் தன் வார்த்தைகளுக்காக மன்மோகனிடம் மன்னிப்பும் கோரினார் ராகுல்.

இந்த மோடி வழக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்ட வழக்கு. வழக்கு தொடுத்த பூனேஷ் மோடி வழக்கில் இருந்து வாபஸ் வாங்கிக் கொண்டார். ராகுல், பா.ஜ.கவையும் மோடியையும் கடுமையாக தாக்கிப் பேசத் தொடங்கியதுமே வழக்கை மீண்டும் உயிர்ப்பித்து விசாரணை நடைபெறத் தொடங்கியது என்பது கவனிக்கத்தக்கது. பா.ஜ.க. ஆட்சியை விமர்சிப்பதை விட, நரேந்திரமோடி பணக்காரர்களின் கையாள், பெருந் திருடர்களின் பக்கம் நிற்பவர் என்பதைத் திரும்பத் திரும்ப ராகுல் காந்தி மேடைகளிலும் பாராளுமன்றத்திலும் சொல்வதைத் தான் மோடியால் சகித்துக்கொள்ள முடியவில்லை போலும். சமீபத்தில் மோடிக்கும் அதானிக்கும் இடையிலான உறவு குறித்து ராகுல் பேசியவை பா.ஜ.கவுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக இருந்தது.

இப்போது தீர்ப்பு வந்துவிட்டது. மேன்முறையீடு செய்ய காங்கிரஸ் விரும்பினாலும் ராகுல் உடன்பட மறுத்துவிட்டார். தனக்கு ஏற்பட்ட பின்னடைவை மோடிக்கு எதிராகத் திருப்பி விடுவதிலேயே அவர் குறியாக இருக்கிறார். அவர் இரண்டு ஆண்டுகள் சிறை செய்யத்தயார். ஆறு ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட முடியாது என்பதை எதிர்கொள்ளவும் தயார்.

"சிறை சென்றாலும், போட்டியிட முடியாத நிலையிலும் மோடிக்கு எதிராக பேசுவதை நான் நிறுத்தப் போவதில்லை. என் வாயை மோடியால் மூட முடியாது.



அதானி நிறுவனங்களின் பங்குகள் சரிவை சந்தித்த பின்னரும் எப்படி மக்களின் காப்புறுதிப் பணத்தை அதானி நிறுவனங்களில் முதலீடு செய்ய முடியும்?" என்று இப்போதும் கேள்வி எழுப்புகிறார் ராகுல்.

மன்னிப்பு கேட்பதற்கு நான் ஒன்றும் சாவர்க்கார் அல்ல. நான் காந்தி. காந்தி மன்னிப்பு கேட்க மாட்டார் என்று சில தினங்களுக்கு முன்னர் ராகுல் கூறியிருந்தார். சவர்க்கரே இந்துத்துவா கொள்கையை உருவாக்கியவர். இந்து மகா சபையில் தோற்றத்துக்கு காரணமானவர். பா.ஜ.கவின் தாய் அமைப்பான ராஷ்டிரிய சுயம் சேவக்சங்கின் (ஆர்.எஸ்.எஸ்) தோற்றத்துக்கு பின்புலமாக இருந்தவர். ஐம்பது ஆண்டு சிறைத் தண்டனையின் கீழ் அந்தமான் சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் இந்திய பிரிட்டிஷ் நிர்வாகத்துக்கு மன்னிப்புக் கடிதங்களை எழுதி மன்னிப்பு பெற்றவர். இதைத்தான் ராகுல் குறிப்பிட்டு, தீவிர இந்துத்துவவாதிகளின் எரிச்சலை சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்!

அடுத்த வருட பொதுத் தேர்தலில் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும் என்பது ராகுலின் எதிர்பார்ப்பு. சிறை செல்வதன் மூலம் காங்கிரஸ் மீதான அபிமானம் மேலும் அதிகரிக்கும் என்று அவர் நம்புகிறார். காங்கிரஸ் ஆட்சி அமைக்குமானால் ராகுல் மீதான எல்லாத் தடைகளும் நீங்கிவிடும். தண்டனை வழங்கப்படுமானால் நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்தாகிவிடும் என்ற சட்டம் தவறாகப் பாவிக்கப்படுவதால் அச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என காங்கிரஸ் ஏற்கனவே நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே, தன் மீதான தண்டனைகள் மாற்றத்துக்குரியவை என்பதை ராகுல் காந்தி அறிவார். இத் தண்டனைகள் மோடி அரசுக்கு எதிராக தேர்தல் காலத்தில் வேலை செய்யும் என்றும் நம்புகிறார். அதே சமயம் தான் சிறையில் இருக்கும்போது தனக்கு பதிலாக இந்திரா காந்தியை ஒத்த முக வசீகரம் கொண்ட பிரியங்காகாந்தி தேர்தலில் வேட்பாளராகவும் பிரசார களத்திலும் இறங்கினால் வட மாநிலங்களில் பா.ஜ.கவை வெற்றி கொள்ளலாம் என்பது ராகுலின் கணக்கு.

இந்திரா காந்தி முக வசீகரம் இந்தத் தலைமுறை வாக்காளர் மத்தியில் எடுபடாது என்ற ஒரு கருத்து இருந்தாலும், ராஜஸ்தான், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பீஹார் போன்ற பெரிய மாநிலங்களில் வாழும் ஏழை எளியவர் மத்தியில் 'இந்திராகாந்தி வசீகரம்' செல்லுபடியாகும் என்று காங்கிரஸ் நம்புகிறது. சமூக ரீதியாக முன்னேற்றம் கண்டிருக்கும் தமிழகத்தில் இன்றைக்கும் எம்.ஜி.ஆர். மந்திரம் வேலை செய்வதைப் போல, ஊழல் மோசடி குற்றவாளியாக மறைந்த ஜெயலலிதா மோகத்தில் இருந்து மக்கள் மீளாதிருக்கும் போது, இந்திராகாந்தி வசீகரம் வேலை செய்யாது என்று சொல்வதற்கில்லை.

பிரியங்காவை காங்கிரஸ் பிரம்மாஸ்திரமாகப் பார்க்கிறது. அடுத்த பாராளுமன்றத் தேர்தலின் பின்னரேயே பிரியங்கா பிரம்மாஸ்திரமா அல்லது சும்மா அஸ்திரமா என்பது புலப்படும்.

கூட்டிக் கழித்து பார்த்தால், சும்மா கிடந்த சங்கை மோடி ஊதிக் கெடுத்துவிட்ட மாதிரியே தோன்றுகிறது. அரசியல் கட்சிகளையும் அரசியல் தலைவர்களையும் அடக்கி ஒடுக்க மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முயற்சியும் அவர்கள் இழந்த செல்வாக்கைத் திரும்பப் பெற்று பீறிட்டுக் கிளம்பவே உதவியிருக்கிறது என்பதற்கான உதாரணங்களை ஏற்கனவே பார்த்தோம். ராகுல் காந்தி மீதான நடவடிக்கைகள் மோடிக்கு சாதகமாக அல்ல, பாதகமாகவே அமையப் போகின்றன.

காங்கிரசுக்கு மோடி விரித்த முள்பாதை காந்திகளுக்கு பட்டுப் பாதையாக அமைவதற்கான வாய்ப்புகளே அதிகம்!

மேன்முறையீட்டில் வழக்கு காந்திக்கு சார்பாக அமைந்தாலும் பாராளுமன்றில் ராகுலை மீளவும் நியமனம் செய்யாமல் இழுத்தடிக்கக் கூடிய வாய்ப்பு பா.ஜ.க.வுக்கு இருக்கிறது. கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர்வரை ராகுல் பாதயாத்திரை செய்ததன் மூலம் காங்கிரசுக்கு ஒரு புத்துயிர் கிடைத்தது. ராகுல் மீதான சிறைத்தண்டனைத் தீர்ப்பும், தகுதி நீக்கமும் காங்கிரசுக்கு மேலும் செல்வாக்கை அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. அடுத்த தேர்தல்வரை இந்த 'சூடு' ஆறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது காங்கிரசின் பொறுப்பு.

மேலும் தேர்தலில் பா.ஜ.காவை வீழ்த்த ஒரு மெகா கூட்டணியை அமைக்க வேண்டியதன் அவசியமும் தற்போது எழுந்திருப்பதாகவே கருதுகிறோம்.

# இளையோருக்கு பாதகமாக மாறிவரும் சூழல்

கருணாகரன்

இன்றைய இளைய தலைமுறைய ஆற்றுப்படுத்துவது எப்படி? அவர்களைக் கையாள்வது எவ்வாறு? அவர்களுடைய எதிர்காலத்தைப் பாதுகாப்பது எங்ஙனம்? என்ற கேள்விகள் இன்று பலரிடத்திலும் உண்டு. காரணம், நாட்டில் வேலைவாய்ப்பின்மையும் பொருளாதார நெருக்கடியும் இளையோரை அதிகமாகப் பாதிக்கிறது. அதை விடப் பிரச்சினை, சூழல் பாதமாக மாறியிருப்பது. பாடசாலைப் பருவத்திலேயே போதைப் பொருள் பழக்கத்துக்குள்ளாகும் அபாய நிலை உருவாகியுள்ளது. போதைப் பொருள் பாவனையினால் பாதிக்கப்பட்டோரைப் பராமரிக்கிற – அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கிற மையங்கள் உருவாகியுள்ளன. பெண்களுக்கு இன்னொரு பிரச்சினை. இளவயதிலேயே முறையற்ற பாலியல் தொடர்புகளால் அவர்கள் கர்ப்பமாகி விடுகின்றனர். அவர்களைப் பராமரிப்பதற்காக மாவட்டந்தோறும் பராமரிப்பு நிலையங்களை அரசாங்கமே உருவாக்கி வைத்துள்ளது.

இதைவிட இன்னொரு பெரும் பிரச்சினை, இளையோரிடத்திலே காணப்படுகிற வன்முறைகள். ஆவா குறூப் தொடக்கம் பல ஆயுதக் குழுக்கள் அடிதடி, வாள் வெட்டு, கொலைமுயற்சி என்று நம் கண்முன்னாலேயே இயங்கிக் கொண்டிருப்பது. இதனால் பெற்றோர் நிம்மதியற்றிருக்கின்றனர். நம்முடைய பிள்ளையும் இப்படி ஏதாவது ஒன்றில் சிக்கிவிடுமோ என்ற கலக்கம். இதனால் சமூக அக்கறையுடையோர் தலையைப் பிய்த்துக் கொள்கிறார்கள். பொலிஸ் மற்றும் நீதித்துறையினர் கலங்கிப் போயிருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம், இளையோரை ஆற்றுப்படுத்தும், வழிப்படுத்தும் செயற்பாடுகளும் கட்டமைப்புகளும் இன்று இல்லாமற் போயிருப்பது. அல்லது அவை தளர்ந்திருப்பதாகும்.

முன்னர் கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்களோ முன்னேற்றச் சங்கங்களோ இருக்கும். அல்லது விளையாட்டுக் கழகங்கள் இருக்கும். அல்லது மதம் சார்பான மன்றங்கள் இருக்கும். அல்லது இலக்கிய அமைப்புகள், நாடக மன்றங்கள் இயங்கிக் கொண்டிருக்கும். இந்த அமைப்புகள் அல்லது மன்றங்களின் பெயரிலேயே இளையோரின் துடிப்பைக் காண முடியும். புதியன விளைதலைப் பார்க்க முடியும். பாரதி சனசமூக நிலையம். மறுமலர்ச்சி மன்றம், காந்தி வாசிகசாலை, வாலிப முன்னேற்றச் சங்கம். அண்ணா படிப்பகம், கிராம அபிவிருத்திச் சங்கம், இப்படிப் பல பெயர்களில்.

இவற்றில் ஏதோ ஒன்றில் இளைய தலைமுறையினர் நிச்சயமாகத் தொடர்பு பட்டிருப்பர். இவை அவர்களை ஆற்றுப்படுத்தும். வழிப்படுத்தும். இதனால் கலை, இலக்கியம், விளையாட்டு, பொதுப்பணிகள், ஊர் முன்னேற்றத்துக்கான செயற்பாடுகளில் இளைய தலைமுறை உற்சாகமாக ஈடுபடும். அல்லது அரசியல் இயக்கங்களும் செயற்பாட்டு மையங்களும் அன்று சிறப்பான முறையில் இருந்தன. அவை இளையோரை சமூகப் பிரக்ஞை உள்ளோராக வளர்த்தெடுத்தன. சாதியொழிப்பு, சமூக நீதி, குடிநீர்ப்பிரச்சினை என சமூகப் பிரச்சினைகளிலும் சமூகத் தேவைகளிலும் முன்னின்று செயற்பட வைத்தன. ஒரு காலத்தில் விடுதலை இயக்கங்களுக்குச் சென்றவர்களில் பெரும்பாலானோர் வாசிகசாலை அல்லது சனசமூக நிலையங்களைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர்.

இன்று இந்தச் சூழலே இல்லாமற் போய் விட்டது. யுத்தமும் பிற நிலவரங்களும் இதை மாற்றி விட்டன. மூத்த தலைமுறைக்கும் இளைய தலைமுறைக்கும் இடையிலான வெளி அதிகரித்து விட்டது. உலகமயமாதலில் இன்றைய தொழில் நுட்பமும் ஊடகக் கலாசாரமும் இதற்கொரு வலுவான காரணமாக இருந்தாலும் அதையும் கடந்து, இளைய தலைமுறையை ஆற்றுப்படுத்தும் – வழிப்படுத்தும் செயற்பாட்டு மையங்கள் தளர்வடைந்துள்ளமையே பிரதான காரணமாகும். எல்லாவற்றையும் வணிகமாகப் பார்க்கின்ற நிலை வளர்ந்துள்ளது. பெற்றோரே பிள்ளைகளை போட்டி உலகத்துக்குத் தயார்ப்படுத்துகின்ற – அதற்குள் தள்ளி விடுகின்ற அவலச் சூழல் உருவாகியுள்ளது. நான்கு, ஐந்து வயதிலிருந்தே பிள்ளைகளை படிப்புப் படிப்பு என்று ஓய்வின்றி ஓட வைக்கின்ற நிலை வளர்ந்துள்ளது. அவர்களை நெருக்கடிக்குள்ளாக்குகின்ற போக்கு உருவாகியுள்ளது. இதனால் பிள்ளைகளுக்கான இயல்புச் சூழல் மறுதலிக்கப்படுகிறது. அவர்கள் பதின்பருவத்தை எட்டும்போது – அவர்களுடைய சுயாதீன நிலைக்குரிய வயதை அடையும் போது இந்த நெருக்கடியிலிருந்து விடுபட விரும்புகிறார்கள். அதற்கான வாய்ப்பு வீட்டிலும் சமூகத்திலும் இல்லாதநிலையில் அவர்கள் திமிறிக் கொண்டு வன்முறையில் ஈடுபடுகிறார்கள். அல்லது தேவையில்லாத பிரச்சினைகளில் சிக்கி விடுகிறார்கள். இதொரு கையறு நிலையே.



இன்றைய இளைய தலைமுறையினரைக் குறித்த ஆய்வுகளில் இந்தக் காரணங்களே கண்டறியப்பட்டுள்ளன. அப்படியென்றால் இதை எப்படி மாற்றி அமைப்பது? இளையோரை எப்படிப் பாதுகாப்பது? அவர்களை எப்படி ஆற்றுப்படுத்துவது? என்ற கேள்விகள் எழுகின்றன.

இன்றைய இளைய தலைமுறையின் தேவை என்ன? அவர்களுடைய ஈடுபாடுகள் எப்படியானவை? அவர்களுடைய உலகம் எப்படியானது? என்பதைக் குறித்த ஆழமான புரிதல் நமக்குத் தேவை. இதற்கு உலகளாவிய ரீதியில் உருவாகியிருக்கின்ற வளர்ச்சியும் பண்பாட்டுப் போக்கும் எப்படி உள்ளது என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும். இந்த அறிதலின் மூலம் பெறுகின்ற விடயங்களை நம்முடைய சமூகச் சூழலுக்கு ஏற்ற மாதிரி பொருத்திக் கொள்ள வேண்டும். அல்லது இவைளை அடிப்படையாகக் கொண்டு புதியவைகளை உருவாக்க வேண்டும். இது காலத்தின் நிபந்தனையாகும்.

"அப்படியென்றால், எங்களுடைய சமூகத்திலே எல்லாமே அழிந்து விட்டனவா?" என்ற கேள்வியைச் சிலர் கேட்கக் கூடும். "அப்படியென்றால், எப்படி இவ்வளவு வன்முறையும் சீரழிவும் உருவானது? இளைய தலைமுறையைக் குறித்த உங்களுடைய பதட்டம் ஏன்?" என்ற பதில் கேள்விகளைத்தான் நாம் கேட்க முடியும்.

இன்றும் சமூகத்திலே விளையாட்டுக் கழகங்களும் கிராம முன்னேற்றச் சங்கங்களும் உள்ளனதான். அங்கங்கே ஒரு சில வாசிகசாலைகள் இயங்கிக் கொண்டுதானுள்ளன. சில இடங்களில் கலைச் செயற்பாடுகள் நடக்கின்றன. அன்றைய நாடக மன்றங்களின் இடத்தை இன்று யுடியூப்பும் குறும்படங்களும் எடுத்துள்ளன. இதற்கான நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் ஒரு தரப்பு உருவாகியுள்ளது. அப்படியான இடங்களில் – சூழலில் பிரச்சினைகளும் குறைவு. அல்லது இல்லை எனலாம். ஏனென்றால் அங்கே இளையோர் ஆற்றுப்படுத்தப்படுகின்றனர்.

இதில்லாத இடங்களில் கொந்தளிப்பும் பிரச்சினையுமே. இந்தச் சூழலில்தான் நாம் பண்டத்தரிப்பிலுள்ள மறுமலர்ச்சி மன்றம், கொக்குவிலில் உள்ள வளர்மதி முன்னேற்றச் சங்கம் போன்றவற்றைப் பற்றி ஆழமாகக் கவனிக்க வேண்டும். பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றம் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. கொக்குவில் வளர்மதி முன்னேற்றச் சங்கம் அறுபதாவது ஆண்டில் கால் வைக்கிறது. இரண்டும் இன்றும் புத்திளமையோடு இயங்குகின்றன.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு மறுமலர்ச்சி மன்றம் பெரிய அளவில் கலை, இலக்கிய, விளையாட்டுத்துறைகளுக்கான போட்டிகளை நடத்தியது. மிகப் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன. வெற்றிபெற்ற சிறுகதை ஒன்றுக்கு ஐம்பது ஆயிரம் ரூபாய் என்ற கணக்கில் இந்தப் பரிசுகள் அமைந்திருந்தன. பரிசு பெற்ற கதைகளைத் தொகுத்து மறுமலர்ச்சிக் கதைகள் என்ற பேரில் சிறுகதைத் தொகுதி ஒன்றும் வெளியிடப்பட்டது. பெரிய அளவில் ஆண்டு நிறைவு விழாவும் நடந்தது. மன்றத்தை உள்ளூரில் உள்ளவர்களும் புலம் பெயர்ந்திருக்கும் உறவுகளும் வளப்படுத்தி வருவதே இதற்குக் காரணமாகும். இன்னொரு காரணம், மறுமலர்ச்சி மன்றம் 1980 களிலிருந்தே "காலைக் கதிர்" என்றொரு சஞ்சிகையை வெளியிட்டு வந்தது. யுத்தத்தின் காரணமாக அது இடை நின்று போனாலும் அதன் செயற்பாட்டு முனைப்பு தொடர்ந்து கொண்டேயிருந்தது. அதன் விளைவே இதுவாகும்.

இதைப்போல இப்பொழுது கொக்குவில் வளர்மதி மன்றமும் மிகப் பெரிய அளவிலான போட்டிகளை கலை, இலக்கியம், விளையாட்டுத் துறைகளில் நடத்துகிறது. இதற்காக அது ஏறக்குறைய 20 இலட்சம் ரூபாய் அளவில் செலவு செய்கிறது. தலா ஒரு இலட்சம் ரூபாய் பரிசை ஒவ்வொரு துறையிலும் வெற்றியீட்டுவோருக்கு வழங்குகிறது. எல்லாப் போட்டிகளும் இளைய தலைமுறையினருக்காகவே நடத்தப்படுகின்றன. அவர்களை வழிப்படுத்தவும் மேம்படுத்தவுமே சிந்திக்கிறது வளர்மதி. இதனால்தான் இதை இங்கே சிறப்பாகக் குறிப்பிடவும் வேண்டியுள்ளது.

வளர்மதி முன்னேற்றச் சங்கமும் 1980 களில் "உள்ளம்" என்ற ஒரு இதழை வெளியிட்டது. இப்பொழுதும் அந்த இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. 1989 இலிருந்து இன்று வரையில் முப்பதற்கு மேற்பட்ட இதழ்கள் வெளிவந்திருக்கின்றன. இதழின் தொடர்ச்சியை யுத்தமும் அதன் விளைவான இடப்பெயர்வு, புலப்பெயர்வுகளும் தடைப்படுத்தின. இருந்தாலும் அதை மீள மீளக் கொண்டு வர வேண்டும் என்ற முனைப்புக் குறையவில்லை. அதனால்தான் இப்பொழுது உள்ளத்தின் மீள் வருகை சாத்தியமானது. இதற்குக் காரணம், சமூக அக்கறையே. அதிலும் இளைய தலைமுறையினரைக் குறித்த கரிசனையே.

கலை, இலக்கியம், அறிவியல் துறைகளை மையப்படுத்திய இதழ் உள்ளம். உள்ளம் இதழே இப்பொழுது மிகப் பெரிய அளவிலான பண்பாட்டு நிகழ்ச்சியையும் நடத்துகிறது. எதிர்வரும் 09.04.2023 அன்று வவுனியாவில் நடக்கவுள்ள இந்தப் பண்பாட்டுப் பெருவிழாவில் இந்தியாவிலிருந்து கதை சொல்லியும் எழுத்தாளருமான பவா செல்லத்துரை சிறப்பாளராகக் கலந்து கொள்கிறார். இங்கேதான் போட்டிகளில் வெற்றியீட்டிய விளையாட்டுக் கழகங்களுக்கும் வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இதை விட நாடகம், இசை நிகழ்ச்சிகள், பங்களிப்புகளுக்கான விருதுகள் எனப் பலவும் நிகழவுள்ளன.

இந்தப் பண்பாட்டுப் பெருவிழா இளைய தலைமுறையின் உள்ளத்திலும் நடத்தைகளிலும் வாழ்விலும் பண்பாட்டை உருவாக்கும் நிகழ்வாகவே வடிவமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இளையோரைக் குறித்து கவலைப்படுவதை விடுத்து, அவர்களைக் கண்டனம் செய்வதையும் முகம் சுளிப்பதையும் விட்டு விட்டு அவர்களுடைய எதிர்காலத்தை எப்படி வடிவமைக்கலாம். அல்லது அதற்கு எப்படித் தூண்டலாகவும் பக்கபலமாகவும் இருக்கலாம் என்பதற்கு இந்த நிகழ்வு சான்று. அவர்களை இந்தத் துறைகளில் ஈடுபட வைப்பது, பங்கேற்பச் செய்வது என்பவற்றின் மூலமாக ஒரு நல்ல தொடர்புறுத்தலை உள்ளமும் வளர்மதி முன்னேற்றச் சங்கமும் செய்கின்றன. இப்படி ஊர்கள் தோறும் அமைப்புகளும் மன்றங்களும் சிந்தித்துச் செயற்பட்டால் மாற்றம் அதிக தொலைவில் இல்லை. இதில் இன்னொன்றையும் சேர்த்திருக்கலாம். இளைய சாதனையாளர்கள், தொழில் முயற்சிகளுக்கான மதிப்பளிப்பு. அது முன்னோடிகளை, முன்னுதாரணர்களை அறிமுகப்படுத்துவதாகவும் ஊக்கப்படுத்துவதாகவும் இருந்திருக்கும்.

ஊருக்கு நாலுபேர் நல்லவர்களா இருந்தால் ஊர் மட்டுமல்ல, இந்த உலகமும் உய்யும் என்பார்கள். அதை உள்ளம் உணர்ந்து செயற்படுகிறது. காலத்தை மாற்றியமைப்பது இப்படித்தான்.

# கடந்தகால அரசுகளால் சுயநலன் கருதி சீரழிக்கப்பட்ட அரசாங்க நிறுவனங்கள்!




சம்யுக்தன்

**அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனங்களின் பங்குகளைத் தனியாருக்கு விற்பனை செய்வது அல்லது அவற்றைத் தனியார்மயப்படுத்துவது தொடர்பில் அமைச்சரவை எடுத்த தீர்மானம் குறித்த செய்திகளுக்கு ஊடகங்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தன.**

குறிப்பாக இலங்கையில் எரிபொருள் சில்லறை சந்தையில் நுழைவதற்கு மூன்று உலகளாவிய எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்ட விடயம் அதிகம் பேசுபொருளாகியுள்ளது. சீனாவின் சினோபெக், அவுஸ்திரேலியாவின் யுனைடெட் பெட்ரோலியம் மற்றும் அமெரிக்காவின் ஆர்.எம் பார்க்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கும், ஷெல் பி.எல்.சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் செயற்பட அனுமதி வழங்கவும் அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அறுபதுகளில் செயற்பட்டுக் கொண்டிருந்த ஷெல் நிறுவனம் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தின் தேசியமயமாக்கலினால் வெளியேறியிருந்தாலும், பின்னர் அவரது புதல்வி சந்திரிகா குமாரதுங்க அவர்களின் ஆட்சிக்காலத்தில்



திரவப் பெற்றோலிய வாயு நடவடிக்கைகளுக்கு மீண்டும் அழைக்கப்பட்டிருந்தது. இந்நிறுவனம் தொடர்ச்சியாக செயற்பட்டிருந்தால் சில மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட கடுமையான எரிபொருள் நெருக்கடியை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்காது என்பது பெரும்பாலானோரின் கருத்தாக அமைகிறது.

அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் உள்ள தலா 150 விநியோகிஸ்தர்களால் இயக்கப்படும் எரிபொருள் நிலையங்கள் இந்த மூன்று நிறுவனங்களுக்கும் ஒதுக்கப்படும். இலங்கையில் பெட்ரோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்வதற்கும், சேமித்து வைப்பதற்கும், விநியோகிப்பதற்கும் மற்றும் விற்பனை செய்வதற்கும் 20 வருடங்கள் இயங்குவதற்கான உரிமத்தை இவர்கள் பெற்றுக் கொள்வார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் நீடித்த நிதியுதவித் திட்டத்தையடுத்து முன்னெடுக்கப்படும் நடவடிக்கையாகவும், நஷ்டமடைந்துவரும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் சுமையைக் குறைப்பது என்ற நிபந்தனைக்கு ஏற்றதாகவும் இது காணப்படுகிறது. அரசாங்கம் வணிகம் செய்வதிலிருந்து விலகியிருப்பதுடன், வணிகச் செயற்பாடுகள் தனியார் துறையினரிடம் வழங்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உறுதியான நம்பிக்கையும் இதன் பின்னணியில் உள்ளது.

'தேசத்தின் தந்தை' என வர்ணிக்கப்படும் டி.எஸ்.சேனநாயக்கவின் 71 ஆவது நினைவு தினத்தில் உரையாற்றியிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுகையில், "டி.எஸ்.சேனநாயக்கவின் பொருளாதாரக் கொள்கையை அன்று சிங்கப்பூர் பின்பற்றியிருந்தது. எனினும், 1956 ஆம் ஆண்டு தேசியமயமாக்கல் என்ற அடிப்படையில் அரசாங்கம் வணிகம் செய்யத் தீர்மானித்ததிலிருந்து நாடு பின்னோக்கிச் செல்லத் தொடங்கியது. எனவே, வணிகம் செய்தல் என்ற பக்கத்தை தனியார் துறையினரிடம் விட்டுவிடுதல் என்ற டி.எஸ்.சேனநாயக்கவின் கொள்கையை நாம் புதிய பொருளாதாரப் பாடமாகப் பின்பற்ற வேண்டியுள்ளது" என்றார்.

ஜனாதிபதி கூறிய இந்தக் கருத்து தற்போதைய நிலைமைக்கு மிகவும் பொருத்தமாக உள்ளது. இலாபமீட்டும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அரசாங்க நிறுவனங்கள் பெரும்பாலும் பல கோடி நஷ்டம் ஈட்டும் நிலையிலேயே காணப்படுகின்றன.

உதாரணமாகக் கூறுவதாயின் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சாரசபை, ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் போன்ற பல்வேறு நிறுவனங்களைக் குறிப்பிட முடியும். மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. உறுதியான கொள்கைகளைப் பின்பற்றாதது, அவ்வப்போது ஆட்சியிலிருக்கும் அரசாங்கங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களினால் எடுக்கப்படும் குறுகியகால நோக்கத்தின் அடிப்படையிலான கொள்கைகள் பின்பற்றப்பட்டமையே இந்த நிலைமைக்குக் காரணம்.

**பெருநஷ்டத்தில் இயங்கிவருகின்ற நிறுவனங்களை, அதலபாதாளத்திலிருந்து மீட்டெடுப்பதாயின் தனியார்மயமாக்கல் தவிர்க்க முடியாதது!**

அது மாத்திரமன்றி, இவ்வாறான அரசாங்க நிறுவனங்களின் தலைமைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் துறைசார்ந்த அறிவைக் கொண்டிருப்பதற்கு அப்பால் அந்தந்தக் காலப்பகுதியில் ஆட்சியில் உள்ள அரசாங்கத்திற்கு நெருக்கமானவர்களாகவே இருந்து வந்துள்ளனர்.

அதற்கும் அப்பால் தமது அரசியல் இருப்புக்களை உறுதி செய்வதற்கு அரசாங்கங்கள் தொழில் வாய்ப்புகளை வழங்க இதுபோன்ற அரசாங்க நிறுவனங்களைப் பயன்படுத்தியமையால் தேவைக்கும் அதிகமானவர்கள் தொழில்களில் இணைக்கப்பட்டு செலவினங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.



பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை எடுத்துக் கொண்டால், இதில் 5000 இற்கும் அதிகமானவர்கள் பணியாற்றுகின்றனர். இதுபோன்று ஏனைய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களிலும் தேவைக்கு அதிகமானவர்கள் அரசியல் நோக்கத்துக்காக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இலாபகரமாக இருந்த அரசு முயற்சிகளை அதிகப்படியான பணியாளர்கள் மூலம் நிதியச் சீரழிவுக்கு மாற்றியதற்கு இரண்டு பெரிய அரசியல் கட்சிகளும் பொறுப்பேற்க வேண்டும்.

**சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி உத்தரவாதத்தையடுத்து டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி திடீரென உயர்வு; எரிபொருள் விலைகள் திடீரெனக் குறைப்பு!**

இரண்டு பிரதான கட்சிகளும் அதிகாரத்தில் இருந்துகொண்டு தமக்கு விருப்பமானதைச் செய்த நல்லாட்சி அரசாங்கத்தின் போதான செயற்பாடுகள் உச்சத்தை எட்டியிருந்தன. இரு கட்சிகளும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தங்கள் ஆதரவாளர்களுடன் இணைந்து தமக்கு விருப்பமானதை நிறைவேற்றச் சென்று இதன் கட்டமைப்பை சீரழித்து விட்டனர். இதுபோன்ற செயற்பாடுகள் இனியாவது முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். இதற்குக் காணப்படும் ஒரே வழி தனியார்மயமாக்கல் மட்டுமே.

தனியார் மயமாக்கல் என்றால் தனியார் நிறுவனங்கள் தமக்குத் தேவையான வகையில் செயற்பட அரசாங்கம் இடம் அளிப்பதாக அர்த்தப்படாது. குறிப்பிட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தனியார் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படுமாயின், அவை குறித்து அரசாங்கம் கண்காணிப்புக்களை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் அதேநேரம், மக்களுக்கு நன்மையான விடயங்களை குறித்த நிறுவனங்களின் ஊடாகப் பெற்றுக் கொடுப்பதற்கான வசதிகளை அரசு செய்து கொடுக்க வேண்டும்.

**தனியார் மயமாக்கல் என்றால் தனியார் நிறுவனங்கள் தமக்குத் தேவையான வகையில் செயற்பட அரசாங்கம் இடமளிப்பதாக அர்த்தமில்லை! நிறுவனமொன்றின் குறிப்பிட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தனியார் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படுமாயின், அச்செயற்பாடுகள் குறித்து அரசாங்கம் கண்காணிப்புக்களை மேற்கொள்ளும். அதேநேரம், மக்களுக்கு நன்மையான விடயங்களை குறித்த நிறுவனங்களின் ஊடாகப் பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்**

தனியார் மயமாக்கலின் ஊடாகப் போட்டித் தன்மையில் நுகர்வோர் தமக்கான தெரிவைப் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருப்பர். உதாரணமாகக் கூறுவதாயின் பெற்றோலியஉற்பத்திகளைவிநியோகிக்க பல நிறுவனங்கள் இருந்தால் அவற்றுக்கிடையில் காணப்படும் போட்டியின் காரணமாக விலைகளில் மாறுபாடுகள் ஏற்படலாம். எனவே நுகர்வோர் தமக்கு சாதகமான நிறுவனத்தில் தமக்கான தேவையை நிறைவேற்றிக் கொள்வார்கள். அதேநேரம், நுகர்வோரைப் பாதிக்கும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெறாமல் இருப்பதற்கான சட்ட ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட வேண்டும்.

அதேநேரம், நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் அரசியல் பின்புலத்தைக் கொண்ட தொழிற்சங்கங்களால் சீர்குலைக்கப்பட இடமளிக்க முடியாது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறித்து அமைச்சரவை எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்கங்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தன. இதனால் எரிபொருள் விநியோகத்தில் தடைகள் ஏற்பட்டன. இருந்தபோதும் அரசாங்கம் திறமையாகச் செற்பட்டு ஒரே நாளில் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்தது.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாட்டை மீட்டு எடுப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு அரசாங்கம் மாத்திரமன்றி தொழிற்சங்கங்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இல்லையெனில் நாடு மீண்டும் அதலபாதாளத்துக்குச் செல்வதை எவராலும் தடுக்க முடியாமல் சென்றுவிடும்.

**பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாட்டை மீட்டெடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு அரசாங்கம் மாத்திரமன்றி, தொழிற்சங்கங்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இல்லையெனில் நாடு மீண்டும் அதலபாதாளத்துக்குச் செல்வதை எவராலும் தடுக்க முடியாமல் சென்றுவிடும்!**

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைத்திருக்கும் நேரத்தில் நாட்டின் அரசாங்கத் துறையை சரியான பாதையில் பயணிக்கச் செய்வதற்கான வாய்ப்பும் கிடைத்துள்ளது. இதற்குத் தேவையான மறுசீரமைப்புக்களை அரசாங்கம் மேற்கொள்வதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

அது மாத்திரமன்றி, இந்தக் கடன் உதவியின் நன்மைகள் படிப்படியாக மக்களைச் சென்றடைய ஆரம்பித்துள்ளன என்றே கூற வேண்டும். கடந்த சில நாட்களுக்கு முன்னர் அரசாங்கம் எரிபொருள்களின் விலையைக் குறைத்திருந்தது. 92 ஒக்டேன் பெற்றோல் 60 ரூபாவினாலும், 95 ஒக்டேன் பெற்றோல் 135 ரூபாவினாலும், ஓட்டோ டீசல் 80 ரூபாவினாலும், சுப்பர் டீசல் 45 ரூபாவினாலும், மண்ணெண்ணெய் 10 ரூபாவினாலும் குறைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பஸ் கட்டணம் 12.9 வீதத்தினால் குறைக்கப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைத்தமையே இந்த விலைக்குறைப்புக்களை சாத்தியமாக்குவதற்குக் காரணமாக அமைந்தது. அரசாங்கம் மக்களுக்கு வழங்கிவரும் இதுபோன்ற நிவாரணங்கள் நேரடியாக அவர்களைச் சென்றடையவும் வழி ஏற்படுத்தப்பட வேண்டும்.

இது மாத்திரமன்றி, சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியைத் தொடர்ந்து இலங்கைக்கு வரும் டொலரின் பெறுமதியும் அதிகரித்திருப்பதால் கடந்த காலத்தில் டொலர் அதிகரிப்பைக் காரணம் காட்டி கூட்டப்பட்ட நுகர்வோர் பொருட்களுக்கான விலையைக் குறைப்பதில் வணிகர்களும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் நன்மைகள் நேரடியாக மக்களைச் சென்றடையாதுவிட்டால் பயனில்லை. இதற்கான பொறுப்பு வணிகர்களுக்கும் உள்ளது.

**நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் அரசியல் பின்புலத்தைக் கொண்ட தொழிற்சங்கங்களால் சீர்குலைக்கப்பட இடமளிக்க முடியாது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறித்து அமைச்சரவை எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்கங்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தன. இதனால் எரிபொருள் விநியோகத்தில் தடை ஏற்பட்டது. இருந்தபோதும் அரசாங்கம் திறமையாகச் செற்பட்டு ஒரே நாளில் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்தது**






# வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067


## KADUWELA
AT VIHARA MAWATHA

34.8 perch land very close to Katunayake Express way with water, Electricity, Telephone facilities for IMMEDIATE SALE

VERY CLOSE TO SLIIT AND CINEC UNIVERSITIES

Call : 0777 300 688

ආයුබෝවන් NEGOMBO
EastStar Handlooms

You are Invited to
GRAND OPENING

Tuesday April 4,2023 @10.30AM
No.181,Main Street,Negombo.

Enjoy 20% Discount on your purchase during the event

eshandlooms.com
00 94 77 8834 786







## NAVIN AUTO MART

வாகன பரிமாற்றம் வழங்கப்படும்.


No. 73, Subhadrarama Road, Gangodawila, Nugegoda.

077 7 315 656
071 8 560 328

ஒரே நாள் லீசிங் வசதியுண்டு.

### MERCEDES C200 DIESEL 2018 AMG

CBH-XXX, Non Hybrid, Silver Exterior கறுப்பு தோலினான மின்சார ஆசனங்கள். Flat bottom AMG steering with M/Function and Cruise Control, Climate Air condition with rear A/C Centre pad control, Parktronics with camera assist. AMG body styling with 18" AMG wheels. 30000km, சிறந்த நிலையில் டிமோ கார் கம்பனியால் பராமரிக்கப்பட்டது.



### FORD RANGER DOUBLE CAB 2017

முகவரால் இறக்குமதி செய்யப்பட்டது 28000 கி.மீ. பீகே xxxxx Full option 2200CC, Common rail turbocharged , Diesel, Manual transmission, Power shutter, Power mirrors, Original Ford wheel arches and active air intake, snorkel, Android car play with sound system, Brand new alloys மற்றும் டன்லப் டயர்கள். முகவர்களினால் பராமரிக்கப்பட்டது.




### UNREGISTERED REXTON DOUBLE CAB 2019 LIMITED EDITION

டீசல் அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. புத்தம் புதிய, 0 தூரம் ஓடியது, 4WD, Grey exterior with black leather interior Driver and Passenger electric seats with lumbar support. All seats with heaters and cooler. Sunroof 08 air bags, M/function steering with cruise control. Automatic transmission with triptonic. 360 camera, lane departure, Blind sport assist, 20" chrome alloys. Highest spec double cab in the Island.



### Benz E200 - 2011

8100 km Avenguard Demo imported. Silver exterior, Black leather electric seats with memory, Herman car cound system, rear electric lights with windscreen, புத்தம் புதிய டயர்கள். டிமொவினால் முழுமையாக பராமரிக்கப்பட்டது.



### MERCEDES BENZ E200 W211 2004 KC-XXXX

Cuprite silver exterior. Beige interior with memory package, wooden interior trims. Automatic transmission with triptronic. Sports and comfort mode. Dual multifunction with cruise control. Rear electric blind. Rear window blind. 61000km. டிமொவினால் முழுமையான பராமரிக்கப்பட்டது. ஆகக் குறைந்தளவு பயணம் செய்த கார்.



### BMW X5 2016 M-SPORT CAT-XXXX

Carbonite blue exterior with Saddle brown leather interior with memory package. Automatic transmission with paddle shift. Comfort and sport mode. Night vision rear entertainment. Power tail gate, 20" M-Sport wheels, panaromic roof, கதவுகளை மெதுவாக மூடல். Height control spec. 41000km, முதலாம் உரிமையாளர்.



### Audi A6 Diesel 2013

Audi A6 dark blue exterior with beige leather electric seats memory package auto transmission with trip tonic முகவரினால் இறக்குமதி செய்யப்பட்டு பராமரிக்கப்படுகின்றது, முதலாம் உரிமையாளர்.



### AUDI A4 CABRIOLET 1998 GC-3XXX

Audi A4 Cabriolet Black top convertiable, Agent imported, Metalic Blue, exterior Black leather interior 87000km, full option, Manual transmission, 1800cc. Factory fitted alloys with Pirelli tyres.



### AUDI A6 BLACK 2017

Audit A6 petrol 2017 facelifted version (matrix head lamps), agents import 8000km on the clock, black exterior with brown leather interior, முழுமையான மின்சார ஆசனங்கள் மற்றும் மெமொரி பக்கேஜ், automatic transmission triptronic and paddle shift, bose sound system with Audi multimedia, dual zone, climate control air conditioning sunroof 1 ஆம் உரிமையாளர், முகவர்களினால் முழுமையாக பராமரிக்கப்பட்டது.



### PEUGEOT 508 ALLURE PETROL 2017 CAZ-XXXX

Non hybrid, Crystal white exterior with black Happa leather electric seats, 46000km, Automatic transmission with paddle shift and sport mode, M/function steering with cruise control, Head up display, touch screen multimedia package, Parktronic with reverse camera assist, keyless go, push button start, 19" alloys. முகவர்களினால் முழுமையாக பராமரிக்கப்பட்டது.



### TOYOTA PRADO 1998 - 65-XXXX

முதலாம் உரிமையாளர். Red two tone. டொயாட்டா லங்காவினால் இறக்குமதி செய்யப்பட்டது. 1KZ engine, grey leather electric seats, Sun roof, manual 7 seater, 4x4, TV DVD R/Camera, Headlight washer – புத்தம் புதிய டொயொ டயர்கள், டொயாட்டா லங்காவினால் முழுமையாக பராமரிக்கப்பட்டது.



### BMW MINI COOPER 2014

முகவரால் இறக்குமதி செய்யப்பட்டது. 1500 சிசி. Turbo charge, Automatic transmission with Triptronic, CAF-XXXX 50000km. முகவர்களினால் முழுமையாக பராமரிக்கப்பட்டது.



### BMW MINI COOPER

2004 இல் முகவரால் இறக்குமதி செய்யப்பட்டது, ஓடிய தூரம் 44000 கிமீ, 2 ஆம் உரிமையாளர். அனைத்து வசதிகளுமுண்டு. Automatic transmission, Tiptronic, multi function steering with cruise control, முகவர்களினால் முழுமையாக பராமரிக்கப்பட்டது.




ஆஹா!!

## SOAN PAPDI BOMBAI MITTAI

நல்லா சாப்பிடுங்க!! நல்லதை சாப்பிடுங்க!!

'ஆஹா' இனிப்பு பண்டங்களுடன் பண்டிகையை கொண்டாடுவோம்



மொத்த விற்பனையாளர்களுக்கு விசேட கழிவு

சோன் பபடி 250 கி. ஆகக்கூடிய சில்லறை விலை 450/-

பம்பாய் மிட்டாய் 150 கி. ஆகக்கூடிய சில்லறை விலை. 300/-

MARKETED BY:
SUPER SWEETS
NO. 141, ISLAND LODGE BUILDING,
SRI KATHIRESAN STREET, COLOMBO - 11.
TEL : 011 2328 125 MOB : 077 3643 146


DWARAKA

Manufactured by :
DWARAKA INDUSTRIES INDIA PVT LTD.
No 42 6th Lane, Colombo - 13, Sri Lanka.
Email : Dwarakalnduslanka@gmail.com
Web : Dwarakaindia.com
Contact No :- +94 777 427 942


Sunday Observer adz
Daily News
දිනමිණ
வாரமஞ்சரி
தினகரன்

Save your precious time,
Walk in to our nearest
Branch Office
and hand over the
Classified/ Matrimonial/ Obituaries
Advertisements

Anuradhapura - Harischandra Mawatha, Anuradhapura.
TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411
Kandy - No. 99, D. S. Senanayake Veediya, Kandy.
TEL : 081 22 34 200 FAX : 081 22 34 200
Kataragama - Pussadewa Mawatha, Kataragama.
TEL : 047 22 35 291
Maradana - D. R. Wijewardena Mawatha, Colombo 10.
TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - No. 29, Bus Stand Shopping Complex, Matara.
TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728
Nugegoda - No. 802, 4th Floor, Sausiri Building, Highlevel Road, Nugegoda.
TEL : 011 2 828 114 FAX : 011 2 828 114
Jaffna - No. 6, Srimbiyadi Lane, Off-Stanley Road, Jaffna.
TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361
LAKE HOUSE No. 35, D.R.Wijewardene Mawatha, Colombo 10.



வாரமஞ்சரி BUDGET adz



# வாரமஞ்சரி BUDGET adz


It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067





LAND WITH WAREHOUSE FOR SALE IN WELLAMPITIYA



20 perches, High roof, Three phase current
Double gate, Perfect square block
20ft Container access available. No brokers
Rs. 65 Million Negotiable
Contact: 0777391863

## மொறட்டுவ உயண
முதலாம் ஒழுங்கை
### உடன் விற்பனைக்கு
மொறட்டுவவில் 35.7 பேர்ச்சுக்கள் காணிஅல்லது 4 அறைகளுள்ள பழைய வீடு மொறட்டுவ புறநகரில் காலி வீதியிலிருந்து ஏறத்தாழ 200 மீற்றர்கள் தொலைவில் உடனடியாக விற்பனைக்கு
வீட்டின் விலையானது எதிர்பார்க்கப்படவில்லை
ஆனால் அது 15 இலிருந்து 20 வருடங்கள் வரையும் வாழக்கூடிய வீடாகும்.
வாரநாட்களில் மாத்திரமே பரீட்சிக்கலாம்.
கொள்வனவுக்காரர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும் | தரகர் தேவையில்லை
077 306 0448 / 0716 629 555

## இராஜகிரிய
இராஜகிரியவின் மத்தியில், மெதவெலிக்கட-கமத்தவத்த வீதியில்
13.75 பேர்ச் காணித்துண்டொன்று உடன் விற்பனைக்கு, நகரத்திற்கு 250 மீற்றர்கள். நீர் மற்றும் மூன்று வழி மின்சாரம் உண்டு.
பேர்ச்சொன்று 13.5 மில்லியன் (பேசித் தீர்க்கலாம்)
077 306 0448 / 0716 629 555

வாரமஞ்சரி
## சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 250/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

## கறையான்களை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு
FREE INSPECTION
Solution to Get rid of Termites
Pre & Post Construction treatments For Termites
RODENT CONTROL To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean
COCKROACHES, FLIES
MOSQUITOES, ANTS
BED BUGS, WOOD BORES
Hotline: 074 031 5517
Licence No - RP/PCR/WP/100, Approved by Registrar of Pesticides
Leemaka Industries (Pvt)Ltd.
No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

## COMMERCIAL PROPERTY FOR SALE
## IN PANNIPITIYA
WITH 1/2 A MILLION INCOME PER MONTH
- 11.7 Perches 5 Storied Building
- 11000 sq.ft.
- 10 Vehicle Parking
- 10 Washrooms
- 4 Water Meters
- 3 Phase and 2 Single Phase Electricity
- 70 Feet Frontage to the Kottawa - Borella Main Road

150 MILLION

3.5 km to Kottawa Highway Entrance 3km to Battaramulla Sethsiripaya and Parliament Area
Suitable for Pharmacies, Channelling Centres, Companies, Banks, NGO, Offices, Spare Part Stores and other Suitable Businesses
FOR IMMEDIATE SALE PRICE NEGOTIABLE
AS THE OWNER IS MIGRATING
0773 060 448/ 0716 629 555

## INVESTMENT OPPORTUNITY
IN A WELL REPUTED MOTORCYCLE AGENCY
BEST INVESTMENT OPPORTUNITY IN THRIVING TOURISM BUSINESS AND WORLD RENOWNED TWO WHEELER AGENCY.
Welcoming investors capable to invest and has the interest on this particular field.
Interested parties can email
motoinvestlk@gmail.com
for initial discussion on or before
10th April 2023.
LOCATED IN GALLE ROAD, COLOMBO 06, SRI LANKA.
0112 766 306

## MINUWANGODA
8 ACRES OF COCONUT
CONTAINING A HOLIDAY RESORT AND FARM WITH COOPS LIKE VEGETABLE, FRUITS, COCONUTS, FOR SALE
Turmeric, Ginger, Cabage, Beet, Chillie, Brinjals, Carrot, Banana, Pineapple, Durian, Rambutan, Mangoes, Jak, Cashew, Olives, Teak, Mahogany



15 MINUTES FROM KATUNAYAKE
BANK APPROVED LOAN FACILITIES
CLEAR DEED
SURROUNDED BY ROADS
Contact : 0777 775 022


## Advertise Here
வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

## ARIYARATHNE CONSTRUCTIONS
අමානෝ වහල
කාප්ප වහල
වීදුරු වහල
විනිවිද වහල
සත කැනපි
සියලුම ඇලුමිනියම් වැඩ
Warehouse Construction
අත්තිවාරමේ සිට සියලුම නිවාස ඉදිකිරීම්
Polycarbonate
අමානෝ ෂීට් 0.47 (mm)
නවීන විලාසිතාවේ ග්‍රිල්, ගේට්ටු, අත්වැල්
0777 24 23 19 / 0711 24 23 19
ariyarathneconstruction@yahoo.com
www.ariyarathneconstruction.com
www.facebook.com/ariyarathneconstruction


## இடவசதி தேவை
கொழும்பு 5,6 நாவல, நாராஹேன்பிட்டிய, ராஜகிரிய
900 சதுர அடி பரப்பளவுடைய கலந்துரையாடல் பயன்பாட்டுக்கேற்ற கட்டிடம் ஐந்து வாகனங்களுக்கான பாதுகாப்பான தரிப்பிட வசதியுடன் தேவை
ஆர்வமுள்ள தகுதியான விலைமனுதாரர்கள் 15/5, விக்டோரியா பிளேஸ், கொழும்பு 08 இல் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.
03-04.2023 ஆந் திகதி முதல் 15-04-2023 ஆந் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். முடிவுத் திகதி: 17-04-2023 மு.ப. 10.00 மணி

வாரமஞ்சரி
## திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 / பியுமி - 011 2 429 383 /
ரமணி - 011 2 129 347 / கயனி - 011 2 429 342



EXCELLO
the way you imagine
inquiry@excello.lk



4 படுக்கை அறைகள் | 4 குளியலறைகள்
077 022 2000
* பணியாளர்களுக்கான தங்கும் இடவசதியுண்டு

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# அழுக்குப்போகத் தேய்த்துக் குளிப்பாட்ட வேண்டிய வெள்ளை யானைகள்

## தனியார்மயப்படுத்தல் கமிஷனுக்காகவோ தனிப்பட்ட சுகநலனுக்காகவோ அமைதல் கூடாது

இலங்கையில் உள்ள அரச தொழில் முயற்சிகளை (State own enterprises) மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக அரசுதுறை வணிகங்களான சிறிலங்கன் விமான நிறுவனம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலங்கை மின்சார சபை ஆகிய மூன்று நிறுவனங்களும் கடந்த காலங்களில் மிகப் பெரிய நட்டத்தை எதிர் கொண்டு வரவு செலவுத் திட்டத்தில் கணிசமான நிதியை விரயம் செய்து கொண்டுள்ளன. தொடர்ச்சியாக நட்டமடையும் அரச வணிக முயற்சிகளைத் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகள் கடந்த காலங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

குறிப்பாக 2005 ஆம் ஆண்டிற்கு முன்னர் பதவியில் இருந்த அரசாங்கங்கள் அத்தகைய முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தன. குறிப்பாக வருடாந்த பாதீட்டு நிதிப்படுத்தலில் அரச துறை நிறுவனங்களை தனியார்படுத்தல் செயன்முறை மூலம் பெறப்படும் நிதியும் ஒரு கூறாக இருந்தது. 2005இல் பதவிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அந்தச் செயன்முறையினை முற்றாக நிறுத்தியது. அத்துடன் ஏற்கெனவே தனியார் மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களையும் மீளப் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுத்தது. அது மட்டுமன்றி புதிதாக அரசதுறை தொழில் முயற்சிகளை விஸ்தரிக்கவும் நடவடிக்கை எடுத்தது. உதாரணமாக ஏற்கெனவே சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் பாரிய நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த அதேவேளை மிஹின் லங்கா என்றொரு புதிய விமான சேவை நிறுவனத்தை ஆரம்பித்தது. இந்த நிறுவனமும் தொடர்ச்சியாக நட்டத்திலேயே இயங்கி வந்தது. சுதந்திரத்தின் பின்னர் இலங்கை எயார் லங்கா விமான சேவையை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளை இலங்கைக்கு விஜயம் செய்த சிங்கப்பூரின் சிற்பி லீக்குவானிடம் இது பற்றிக் கூறிப் பெருமைப்பட்ட வேளை இலங்கைக்கு அந்தச் சூழ்நிலையில் தேசிய விமான சேவை நிறுவனம் அத்தியாவசியமானதாக தான் கருதியிருக்கவில்லை என்று பின்னர் அவர் குறிப்பிட்டிருந்தார். சிங்கப்பூர் ஒரு விமானசேவையை உடனடியாக ஆரம்பிக்கவில்லை.

நாட்டின் வளர்ச்சி விமான சேவையின் தேவையை ஏற்படுத்திய பின்னரே அதனை ஆரம்பித்தது. இன்று சிங்கப்பூர் விமானசேவை உலகின் தலைசிறந்த விமான சேவையாக ஏற்றம் பெறுவதற்கு நாட்டில் தூரநோக்குள்ள சிறந்த தலைமைத்துவமும் ஊழலற்ற ஆட்சிமுறையும் பிரதான காரணங்களாக அமைந்தன. ஆகவே இலங்கை ஆரம்பத்திலேயே தனது விரலுக்கு மிஞ்சி வீங்க முற்பட்டதாலேயே விமான சேவை நட்டத்தில் இயங்கியதாகக் கொள்ளலாம். அதுமட்டுமன்றி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்திலும் ஒரு தடவை சிறிலங்கன் விமான நிறுவனம் எமிரேட்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. பின்னர் அது இலாபம் பெறும் நிறுவனமாக மாற்றப்பட்டது. ஆனால் அரசாங்கத்தின் பயணமொன்றிற்கு விமான வசதியை வழங்க மறுத்த சம்பவமொன்றின் அடிப்படையில் மீண்டும் அது அரசுடைமையாக்கப் பட்டதாக செய்திப்பத்திரிகைகள் எழுதின. அரச உடைமையாக இருக்கும் போது நட்டமடையும் விமானசேவை தனியார் மயப்படுத்திய பின்னர் இலாபத்தில் இயங்கமுடியுமென்றால் தேசிய சொத்து என்று கண்மூடித்தனமாக நம்பி அதனை தொடர்ந்தும் நட்டத்தில் இயங்க அனுமதிப்பது நாட்டின் நிதிவளத்தை விரயம் செய்யும் முட்டாள்தனமாகவே இருக்கும். அது மட்டுமன்றி பிராந்திய வல்லரசான இந்தியா தனது விமான சேவையினைத் தனியார் மயப்படுத்த எடுத்த முடிவினையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தம். அதேபோலத்தான்



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் தொடர்ச்சியாகவே நட்டத்திலேயே இயங்கி வந்துள்ளது.

இலங்கையின் பெற்றோலிய வளத்துறை சுதந்திரத்திற்கு முன்னரும் சுதந்திரத்தின் பின்னர் 1961ஆம் ஆண்டு வரையிலும் தனியார் துறை முயற்சியாகவே இலாபகரமாக இயங்கிவந்துள்ளது. ஐரோப்பிய மற்றும் அமெரிக்கக் கம்பனிகள் இலங்கையில் பெற்றோலிய இறக்குமதி மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தன. 1961 இல் சிறிமா அம்மையாரின் அரசாங்கம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை ஆரம்பித்து பெற்றோலிய இறக்குமதி சுத்திகரிப்பு மற்றும் விநியோக நடவடிக்கைகளின் தனியுரிமையினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியது. இதனால் வெளிநாட்டு நிறுவனங்கள் நாட்டைவிட்டு வெளியேற நேர்ந்தது. அந்த வெளியேற்றம் சிங்கப்பூரின் பெற்றோலியத் துறையின் வளர்ச்சிக்கு பாரிய உந்துதலாக இருந்ததாக குறிப்பிடப்படுகிறது. சிங்கப்பூரில் எண்ணெய்க் குதங்களை அமைத்து விநியோக நடவடிக்கைகளை முக்கிய பெற்றோலிய நிறுவனங்கள் எடுத்தன. ஒரு துளி பெற்றோலியம் அங்கு உற்பத்தி செய்யப்படாத போதிலும் பெற்றோலிய ஏற்றுமதியில் சிங்கப்பூர் ஊடாகவே கணிசமான வர்த்தகம் இடம் பெறுகிறது. தேசிய சொத்தைக் கட்டியெழுப்புதல் என்ற கருத்துருவின் அடிப்படையில் ரஷ்யாவின் கயிற்றினை விழுங்கி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை நிறுவிய இலங்கையால் அதனை ஒரு போதும் இலாபத்தில் இயங்கச்செய்ய இயலவில்லை.

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வரவேற்பளித்த சிங்கப்பூர் இன்று பொருளாதார வளர்ச்சியில் நிமிர்ந்து நிற்கிறது. இதன் மூலம் அந்த நாட்டின் தேசிய இறைமைக்கோ ஆட்புல ஒருமைப்பாட்டிற்கோ எந்தப் பங்கமும் ஏற்படவில்லை. தேசிய சொத்து இறைமைக்குப் பங்கம், பல்தேசியக் கம்பனிகளால் ஆட்புல ஒருமைப்பாட்டிற்குப் பங்கம் போன்ற சுலோகங்களை கூறிக்கொண்டு குடும்பம் நடத்துவதிலேயே இலங்கை காலம் கடத்தியிருக்கிறது. இன்று இலங்கையின் பொருளாதாரக் கொள்கையை சர்வதேச நாணய நிதியமே தீர்மானிக்கிறது. அவ்வாறாயின் இலங்கையின் பொருளாதார இறைமை இல்லாமல் போய்விட்டதாகவே அர்த்தப்படும். ஆகவே மேற்படி சுலோகங்கள் அர்த்தமற்ற பைத்தியக்காரத்தனம் என்பது தெளிவாகத் தெரிகிறது. நடைமுறைச் சாத்தியமான தீர்மானங்களை எடுப்பதன் மூலம் நட்டத்தில் இயங்கும் இந்த வெள்ளை யானையை அழுக்குப்போகத் தேய்த்துக் குளிப்பாட்டி நகம் வெட்டி பாரம் தூக்கப்பயன்படுத்த வேண்டும். இலங்கையில் இந்தியன் ஒயில் கம்பனி வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும் வரையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றோலிய வர்த்தகத்தில் தனியுரிமையை வைத்துக்கொண்டு அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட நிதியிலேயே தொடர்ந்தும் தங்கியிருந்துள்ளது.

அண்மைக்காலத்திலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் நட்டத்தை எதிர்கொண்ட வேளை இந்தியக் கம்பனி கணிசமானளவு இலாபத்தைப் பதிவு செய்தது.

ஆகவே நிருவாக ரீதியான சீர்திருத்தங்களை மேற்கொள்ளாமல் விலைகளை மாத்திரம் அதிகரிப்பதன் மூலம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை இலாபகரமாக இயக்க முடியாது. புதிய தனியார் பெற்றோலியக்கம்பனிகளின் உள்வருகை இலங்கையின் பெற்றோலியத்துறையில் நேர்க்கணியமான மாற்றங்களை ஏற்படுத்தும் என பிற நாடுகளின் அனுபவங்களை வைத்துக் கூறமுடியும். ஆனால் இத்தகைய தொழில் முயற்சிகளை மறுசீரமைக்கும் போதோ அல்லது தனியார் மயப்படுத்தும் போதோ வெளிப்படைத்தன்மையுடனும் சர்வதேச நியமங்களின் படியும் அதனைச் செய்ய வேண்டும். அரசாங்கம் ஒரு ஒழுங்குறுத்துவர் என்ற அடிப்படையில் திறமையான இயங்கத்தேவையான கட்டமைப்புகளை விருத்தி செய்ய வேண்டும். அவ்வாறில்லாமல் கமிஷனுக்காகவும் ஆட்சியாளரின் தனிப்பட்ட சுகநலன்களுக்காகவும் இவை தனியார்மயப்படுத்தப்படுமாயின் அது நாட்டிற்கு மிப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். அழுக்குப்போகத் தேய்த்துக் குளிப்பாட்ட வேண்டிய வெள்ளை யானைகள் தனியார்மயப்படுத்தல் கமிஷனுக்காகவோ தனிப்பட்ட சுகநலனுக்காகவோ அமைதல் கூடாது.



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# யூதர்களின் போராட்டம் ஆட்சி மாற்றத்துக்கானதா? நீதிக்கானதா?

உலகம் முழுவதும் மக்கள் போராட்டங்கள் அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன. அதிலும் ஐரோப்பிய நாடுகளில் ஆட்சிகளுக்கும் அவற்றின் கொள்கைகளுக்கும் எதிராக மக்கள் வீதியில் இறங்கி போராடுகின்றனர். அவ்வாறே கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்ட நிலத்தை ஆளும் அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் போராட்டங்கள் தொடர்கின்றன. யூதர்கள் அரசமைத்த போது எழுச்சி பெற்ற மக்கள், மீளவும் தமது அரசுக்கு எதிராகவே நியாயம் கோரி வீதியில் இறங்கிப் போராடும் ஜனநாயக மரபுகளையும் யூதர்கள் கொண்டுள்ளனர். இது யூதர்களின் வரலாற்றில் ஏற்பட்டுள்ள புதிய அத்தியாயமாகவே தெரிகிறது. ஐரோப்பிய மக்களும் ஏனைய கண்டங்களில் உள்ள மக்களும் அரசுகளின் பொருளாதாரக் கொள்கைகளுக்காக போராடும் போது யூதர்கள் நீதிப் பொறிமுறையினை பாதுகாப்பதற்காக போராடத் தொடங்கியுள்ளனர். இக்கட்டுரையும் யூதர்களின் எழுச்சிகரமான போராட்டத்தின் விளைவுகளைத் தேடுவதாக அமையவுள்ளது.

இஸ்ரேலிய அரசாங்கம் நீதித்துறையில் ஏற்படுத்தவுள்ள சீர்திருத்தத்துக்கு எதிராகவே மக்கள் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். இஸ்ரேலிய பிரதமர் தனது நலனுக்குஅமைவாக நீதித்துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள முயல்வதாகவும் போராட்டக்காரர்கள் குற்றம்சாட்டிவருகின்றனர். புதிதாக அமைந்த அரசாங்கத்தின் நீதித்துறை அமைச்சர் உயர்நீதிமன்றத்திற்கான அதிகாரங்களை மட்டுப்படுத்தியதுடன் நீதித்துறையின் அதிகாரங்களை குறைப்பதற்கான சீர்திருத்தத்தினை அறிவித்துள்ளார். நீதித்துறையின் அதிகாரங்களை நாடாளுமன்றத்திற்கு வழங்கியிருப்பதுடன் பிரதமர் நெதன்யாகுவின் ஊழல் விடயங்களை விசாரிக்கும் நீதித்துறையின் நடவடிக்கைகளை தடுக்கும் விதத்தில் இத்தகைய சீர்திருத்தங்கள் முன்வைக்கப்படுவதாக எதிர்க்கட்சிகளும் ஆர்ப்பாட்டக்காரரும் குற்றம்சாட்டிவருகின்றனர். டெல் அவிவை மையப்படுத்தி ஆரம்பமான மக்கள் போராட்டம் படிப்படியாக விஸ்தரிக்கப்படுவதுடன் வாரம் தோறும் போராட்டம் வலுவடைவதனையும் காணக்கூடியதாக உள்ளது. கடந்த ஜனவரி 7இல் இருபதாயிரம் பேருடன் தொடங்கிய போராட்டம் படிப்படியாக அதிகரித்து ஒரு இலட்சத்தை தாண்டியதுடன் ஏனைய நகரங்களையும் நோக்கி போராட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

யூதர்களிடையே ஆட்சித்துறைக்கு எதிரான போராட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவியேயே நிகழ்வதுண்டு. ஆனால் பலஸ்தீனர்களுக்கு எதிரான அணுகுமுறையில் ஆட்சித்துறை விடும் தவறுகளுக்கு எதிரான போராட்டங்கள் பெரியளவில் நிகழ்த்தப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. அவற்றைவிட யூத ஆட்சியாளரின் ஊழலுக்கு எதிரான போராட்டங்கள் பெரியளவில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காரணம் அரசாங்கமும் யூத இன மக்களும் ஒன்றிணைந்தே அரசாங்கத்தையும் ஆட்சியையும் நிகழ்த்திவருவதுடன் அரசறிவியலின் நியமங்களை கடைப்பிடிக்கும் ஆட்சித்துறையாக இஸ்ரேலிய அரசாங்கங்கள் காணப்படுகின்றன. எதிர்க்கட்சி கூட ஆளும் கட்சிக்கு எதிரான தீர்மானங்களை எடுப்பதைவிட மக்களுக்கான நலனையும் பாதுகாப்பையுமே முதன்மையாக கருதுகின்றது. இஸ்ரேல் அராபியர்களிடமிருந்தும் பலஸ்தீனரிடமிருந்தும் பாதுகாக்கப்படுவதையே கவனத்தில் கொள்ளும் எதிர்க்கட்சிகளாக இஸ்ரேலிய எதிர்க்கட்சிகள் காணப்படுகின்றன. அத்தகைய பண்புள்ள எதிர்க்கட்சிகள் தற்போது யூதர்கள் நிகழ்த்தும் போராட்டங்களில் போராட்டக்காரருடன் ஒன்றிணைந்து போராடுவதைக் காணமுடிகிறது.

உலகளாவிய ஆட்சித்துறைகளில் நீதித்துறை வலுவானது. சட்டத்துறை, நிறைவேற்றுத்துறையை அடுத்து தனித்துவமானதாக அடையாளப்படுத்தப்படுவது நீதித்துறையாகும். ஒருநாட்டின் நீதித்துறை தோல்வியடையுமாயின் ஜனநாயகம் சட்டத்தின் ஆட்சி உரிமைகள் சுதந்திரம் சமத்துவம் கூடிய நியாயாதிக்கம் காணாமல் போகும். அது பொருளாதார சமூக மற்றும் அரசியல் நியமங்களை அழிவுக்கு இட்டுச் செல்ல வழிவகுக்கும். சுதந்திரமானதாக நீதித்துறை கட்டமைக்கப்படுவதுடன் பக்கச்சார்பற்றதாகவும் இயங்க வேண்டும். அரசியல் இலாபங்களுக்காக நீதித்துறை இயங்குவது ஒட்டுமொத்த ஆட்சியையும் நாட்டையும் பலவீனப்படுத்தும். அத்தகைய நீதியின் முக்கியத்துவத்தை மீளவும் சட்டத்துறையிடம் ஒப்படைப்பதென்பது ஆட்சியமைப்புக்கே முரணானதாகும். அதிகார வேறாக்கம் எனும் கோட்பாடானது ஆட்சித்துறையின் அலகுகளை தலைமீடின்றி சமநிலையாக மேற்கொள்வதுடன், அதுவே ஆட்சித்துறையின் சிறப்புக்கும் சுதந்திரமான செயல்பாட்டுக்கும் வழிவகுக்கும். அதுவே அரசறிவியல் கோட்பாடுகளின் ஆட்சித்துறை சார்ந்த நியமமாக கருதப்படுகிறது. முடியாட்சி முறைமைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து போராடிய ஐரோப்பியர்கள் மீளமைத்த ஆட்சியானது சட்டவலுவுடையதாகவும் நீதியின் பாற்பட்டதாகவும் காணப்பட அதிகார வேறாக்கமே காரணமாக அமைந்திருந்தது. இத்தகைய கோட்பாட்டு நியதியை யூதர்கள் ஏற்படுத்துவதற்கே வீதியில் இறங்கி போராட ஆரம்பித்துள்ளனர். இஸ்ரேலிய ஆட்சித்துறையானது எழுதப்பட்ட விதிகளை விட எழுதப்படாத ஆனால் மரபார்ந்த விடயங்களை கொண்டுள்ள அரசியலமைப்புடைய நாடாகவுள்ளது. இஸ்ரேல் ஒரு நாடாக மட்டுமல்ல அது ஒரு தேசிய இனத்தைக் கொண்ட தேசிய அரசாகவும் காணப்படுகிறது. பொருளாதார அர்த்தத்திலும் விஞ்ஞானதொழில்நுட்பத்திலும் தேசமாக இயங்க முனைப்புக் கொண்டுள்ள அரசாகவுள்ளது. மொத்தத்தில் இஸ்ரேல் உலகளாவிய ரீதியில் வலுவான தேசிய அரசாகவுள்ளது. ஆனால் அராபியர்களுக்கு எதிரான அதன் எழுச்சியான ஆட்சித்துறையில் இராணுவ இயந்திரத்திற்கே முதன்மை என்ற நிலையை உருவாக்கியுள்ளது. அத்தகைய நியதிக்குள்ளால் உருவான இஸ்ரேல் ஆட்சித்துறையால் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் அவர்களது நலனுக்கானதாகவே உள்ளது. மாறாக ஆட்சித்துறையின் நலனுக்கானதாக அமையவில்லை என்பதை மக்களும் எதிர்க்கட்சியினரும் உணரத் தொடங்கியுள்ளனர். இதன் விளைவுகள் இஸ்ரேலிய ஆட்சித்துறையின் புதிய அத்தியாயத்தை தோற்றுவிக்கக் கூடியதாக அமையுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அதனை புரிந்து கொள்வது அவசியமானது.

ஒன்று, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனது கருத்திற்கு எதிர்வினையாற்றியுள்ள இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு குறிப்பிட்ட கருத்து கவனத்திற்குரியதாகும். அதாவது ஜோ பைடன் போராட்டக்காரருடன் இஸ்ரேலிய அரசாங்கம் சமரசத்திற்கு செல்ல வேண்டும் என குறிப்பிட்ட கருத்திற்கு இஸ்ரேல் இறைமையுடைய அரசு வேறு எந்த நாட்டினதும் எண்ணங்களை திணிக்க முடியாது எனவும் சுயமாக இஸ்ரேல் முடிபுகளை எடுக்குமெனவும் நெதன்யாகு தெரிவித்திருந்தார். இதே நேரம் 75 வது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை எதிர்கொண்டுள்ளதுடன் பாஸ்கா விடுமுறையையும் கருத்தில் கொண்டும் நெதன்யாகு நீதித்துறை மீதான சீர்திருத்தத்தினை இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளார். ஆனால் இத்தகைய அறிவிப்பினை எதிர்க்கட்சிகள் எச்சரிக்கையுடன் ஏற்றுக்கொள்ளும் அதேவேளை இவ்விடயம் கைவிடப்படும் வரை போராட்டம் தொடருமென போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். அமைதியான போராட்டத்திற்கு எதிரான அரசாங்கத்தின் நடவடிக்கைகளே போராட்டத்தை தீவிரப்படுத்தியதாகவும் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலட்ன் பதவி நீக்கம் அதிக குழப்பத்தை ஆட்சியிலுள்ள அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிகிறது.




மேலும் போராட்டத்திற்கு ஆதரவாக எழுச்சி பெற்றுள்ள முன்னாள் இராணுவத்தினரும் புலனாய்வுத்துறையினரும் அரசாங்கத்தை அதிகம் நெருக்கடிக்கு தள்ளியுள்ளனர். ஈரான், உக்ரையின் நெருக்கடியில் சிக்கியுள்ள இஸ்ரேலுக்கு தற்போதைய போராட்டங்கள் ஆபத்தானதாக அமையுமென முன்னாள் புலனாய்வுத் துறையினர் மற்றும் இராணுவத்தினர் எச்சரித்துள்ளனர். நெதன்யாகுவின் பின்வாங்கல் தற்காலிகமானதாகவே தெரிகிறது. அவரது தீவிர மதவாத வலதுசாரியினரது ஒத்துழைப்பு மட்டுமல்லாது பிரதமர் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் நீதித்துறை மீதான பாராளுமன்றத்தின் கட்டுப்பாடுகளாகவே சீர்திருத்தம் நோக்கப்படுகிறது. சுதந்திர தினக்கொண்டாட்டத்திற்கு பின்னர் பாராளுமன்றம் கூடும் போது போராட்டக்காரருடன் பேசப்போவதாகவும் நெதன்யாகு அறிவித்துள்ளமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

இரண்டு, அராபியர் மத்தியில் இஸ்ரேலியப் போராட்டங்களை ஆதரித்தாலும் அத்தகைய போராட்டத்தை திசைதிருப்பும் வழிமுறைகளை அவதானமாக கையாள முனைவதாகவே தெரிகிறது. ஈரான், சவூதி அரேபியா கட்டார், துருக்கி, சிரியா ஆகிய இஸ்லாமிய நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மற்றும் ஒத்துழைப்புகள், இஸ்ரேலியரை அதிகம் குழப்பத்திற்கு தள்ளியுள்ளது. அத்தகைய ஒத்துழைப்பு அமெரிக்க நலன்களையும் பாதித்துள்ளதாகவே தெரிகிறது. அதனால் தீவிர அணுகுமுறையுடைய அரசாங்கத்தைவிட மிதமான கொள்கையுடைய அரசாங்கத்தின் அவசியப்பாடு உணரப்படுகிறது. ஏற்கனவே ஒரே ஆண்டில் பல தேர்தல்களைச் சந்தித்துள்ள யூதர்கள் மீண்டும் ஒரு ஆட்சிமாற்றத்தை நோக்கி நகர்வதாகவே தெரிகிறது. எனவே இத்தகைய போராட்டங்களின் நோக்கம் புதிய ஆட்சி ஒன்றுக்கான அடிப்படையைத் தோற்றுவிப்பதாகவே தெரிகிறது. உலகளாவிய மாற்றத்திற்கு அமைவாக இஸ்ரேலிய ஆட்சித்துறையை மாற்றியமைப்பதென்பது அதன் ஜனநாயகம் மீதான பலப்படுத்தலாக அமையாது. மாறாக நெருக்கடி நிலையை தற்காத்துக் கொள்வதற்கான உத்தியாகவே அமையும். அதனை நோக்கியே இஸ்ரேலிய மக்களது போராட்டம் அமைந்துள்ளது. எனவே மேற்காசியாவிலும் உலக அரசியல் ஒழுங்கிலும் ஏற்பட்டுவரும் மாற்றங்களை கையாளும் உத்தியாகவே தற்போதைய போராட்டங்களது நகர்வுகள் அமைந்துள்ளன. மக்களின் எழுச்சிகள் நீதித்துறையின் பாற்பட்டதாக அமைந்தாலும் அதனை வழிநடத்தும் தரப்புக்கள் புதிய தேர்தலுக்குள் நாட்டை கொண்டு செல்வதுடன் நெதன்யாகுவை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கான செய்முறையாகவே அமைய அதிக வாய்ப்புள்ளது. இந்த அரசாங்கம் மீது எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல மக்களும் நம்பிக்கை இழந்துள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளம் தலைமுறையினர் கருத்துத் தெரிவித்துள்ளனர். அதாவது இந்த அரசாங்கத்தை அகற்றுவதற்கான அணுகுமுறையாக போராட்டத்தின் உத்திகள் அமைந்துள்ளன.

# ஒன்பது தசாப்த கால ஞாபகங்களை மீட்ட இனிமையான தருணம்

## සිළුමිණ சிலுமின தனது 93 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடியது

பத்திரிகையின் தாய் வீடான லேக் ஹவுஸ் நிறுவனத்தில் 1930ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சிலுமின பத்திரிகையின் 93 வது நிறைவு நாள் கடந்த மார்ச் 30ம் திகதியாகும். அதன் நிமித்தம் கடந்த 29ஆம் திகதி லேக்ஹவுஸ் நிறுவன கேட்போர் கூடத்தில் மிகவும் எளிமையாக ஆனால் பெருமைமிக்க விழாவொன்று நடத்தப்பட்டது. விழாவில் சிலுமின பத்திரிகையில் பணியாற்றி இவ்வுலகை விட்டு மறைந்த ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை நினைவூட்டும் விதமாக ஒரு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

லேக் ஹவுஸ் நிறுவனத் தலைவர் அனுஷ பெல்பிட்ட தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் விசேட அதிதியாக சிலுமின பத்திரிகையின் மூன்றாவது ஆசிரியரான ஸ்ரீ லால் ஹிக்கடுவயின் மகன் சிரேஷ்ட சட்டத்தரணி தீப்தி லியனகே மற்றும் ஸ்ரீ லாலின் கொள்ளுப்பேரன் தினுல்கத சில்வா ஆகியோர் கலந்து கொண்டார்கள். 1944ஆம் ஆண்டு தொடக்கம் 1953 வரை சிலுமின பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய ஸ்ரீ லால் ஹிக்கடுவ லியனகே 1988 செப்டெம்பர் 30 ஆம் திகதி காலமானார்.

இங்கு கருத்து தெரிவித்த சிரேஷ்ட சட்டத்தரணி தீப்தி லியனகே இற்றைக்கு 70 ஆண்டுகளுக்கு முன்னர் சிலுமின ஆசிரியராக இருந்தபோது தனது தந்தை பத்திரிகையை மக்களிடம் கொண்டு செல்ல அர்ப்





பணிப்புடன் செயல்பட்ட விதம் குறித்து தெரிவித்தார். அத்துடன் கடந்த காலங்களில் இடம்பெற்ற மறக்கமுடியாத சம்பவங்கள் குறித்தும் அவர் நினைவுபடுத்தினார். லியனகேயின் கொள்ளுப்பேரன் 12 வயதான தினுக, தன்னுடைய கொள்ளுத் தாத்தா மிகவும் கௌரவமானவர் என்றும் அவரைப் பற்றிய நூல் ஒன்றையும் தான் உருவாக்கி வருவதாகவும் கூறினார்.

லேக்ஹவுஸ் ஆசிரியர் பீடப் பணிப்பாளர் பிரபல ஊடகவியலாளர் சிசிர பரணதந்திரி விழாவில் உரையாற்றுகையில், சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சிலுமின மற்றும் ஏனைய லேக் ஹவுஸ் பத்திரிகைகள் மேற்கொண்ட சரித்திர பூர்வமான நடவடிக்கைகள் மிகவும் சிறப்பானவை. அத்துடன் நாடு சுதந்திரம் பெற்ற வேளையில் மக்களின் மனதை வெல்வதற்காக மேற்கொண்ட போராட்டங்கள் போன்று தற்போது தாய்நாடு நெருக்கடியை சந்தித்துள்ள இவ்வேளையில் அதிலிருந்து அதனை மீட்க மக்களை தெளிவுபடுத்த வேண்டிய பாரிய பொறுப்பு சிலுமின பத்திரிக்கைக்கு உள்ளதென தெரிவித்தார்.

அன்று பியசேனநிஸ்ஸங்க முதலாவது ஆசிரியராக சிலுமினவை ஆரம்பித்தது நாட்டு மக்களுக்கு மிகவும் பெறுமதி வாய்ந்த பலவற்றை வழங்கும் நோக்கத்துடனாகும். சிலுமினவின் பாரம்பரியத் தொகுப்பு முதலாவது பத்திரிகை தொடக்கமே வாசகர்களுக்கு அறிவுத் தேடலுக்கான பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது. அதுவே சிலுமின பத்திரிகை 'பத்து சத பல்கலைக்கழகம்' என கூறப்படுவதற்கு காரணமாக அமைந்தது. இப் பத்திரிகை ஆரம்பித்த முதல் நான்கு வருடங்கள் பியசேன நிஸ்ஸங்க ஆசிரியராக பணியாற்றியுள்ளார். அதன் பின்னர் மார்ட்டின் விக்ரமசிங்க 1934ஆம் ஆண்டு தொடக்கம் 1944ஆம் ஆண்டு வரை ஆசிரியராக கடமை புரிந்துள்ளார். அதன் பின்னர் ஸ்ரீலால் ஹிக்கடுவ ஒன்பது வருடங்கள் ஆசிரியராக பணிபுரிந்துள்ளார் . அவரது காலத்தில் தான் இந்த நாடு சுதந்திரம் பெற்றது. இந்த நாட்டின் சுதந்திர தேசிய போராட்டத்துக்கு பாரிய பணியை நான்கு வருட காலம் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் சிலுமின பத்திரிகை உள்ளிட்ட பத்திரிகைகள் முன்னெடுத்து சென்று வெற்றியின் விதையை விதைத்து அடிப்படையை உருவாக்கின. இன்றும் அந்த தேசிய பணியை நாட்டு மக்கள் சிலுமின பத்திரிகையிடமிருந்து எதிர்பார்க்கும் தருணம் இதுவாகும்." என லேக் ஹவுஸ் ஆசிரியர் பீட பணிப்பாளர் தெரிவித்தார்.





கடந்த 93 வருட காலத்திற்குள் 26 ஆசிரியர்கள் சிலுமின பத்திரிகையின் ஆசிரியர்களாக பணிபுரிந்துள்ளார்கள். அவர்களில் 18 பேர் தற்போது இவ்வுலகை விட்டு பிரிந்துள்ளார்கள். சிலுமின பத்திரிகை ஆசிரியர் பிரபல ஊடகவியலாளர் தர்மன் விக்ரமரத்ன கூறியதாவது, "சிலுமின பத்திரிகையை வாசகர்களிடையே பிரபலமடைய செய்வதற்கு பல புதிய அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளன. கொரோனா தொற்று, அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மூன்று வருட காலத்துக்குள் பல மோசமான சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது எனவும் அவர் ஞாபகமூட்டினார்.

நவீன உலகத்துடன் முன்னோக்கிச் செல்ல வேண்டுமென்றால் நாம் புதியவற்றை சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு மேற்கொள்ள வேண்டுமென்பதால், பத்திரிகையில் சில பரிசோதனைகளை மேற்கொள்கின்றோம். அதன்படி பத்திரிகையை புதிய தோற்றத்தில் வெளியிட நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். எல்லா இடங்களிலும் புதிய கொள்கைகளே முன்னிலை வகிக்கின்றன அதன்படி நாமும் முன்னோக்கி செல்வது அவசியமாகும்" என அவர் தெரிவித்தார்.

படங்கள்
நிஸ்ஸங்க விஜேரத்ன, வாசிக பட்டபெந்தி
தமிழில் வீ. ஆர். வயலட்

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய இரதோற்சவம்

மானிப்பாய் அருள் மிக மருதடி விநாயகர் ஆலயம் இலங்கையில் மட்டுமன்றி அண்டை நாடான இந்தியாவிலும் புகழ் பரவிய ஓர் ஆலயமாகும். கழியும் வருஷத்தையும் பிறக்கும் வருஷத்தையும் இணைத்து விழா எடுப்பது மருதடி விநாயகர் தான் என்பது பெருமையாகும். பேர் பெற்ற தமிழ் அரசரெல்லாம் யாழ்ப்பாணத்தை 1500 வருஷத்திற்கு மேல் ஆண்டார்கள். இக்காலத்தில் ஒரு தவசிரேஷ்டரானவர் மருதடி விநாயகர் ஆலயத்தில் இருந்து சமாதி ஆகிவிட்டார். மேற்படி மகான் சமாதி அடைந்த காலத்தில் பறங்கியர் மருதடி விநாயகர் ஆலயத்தை இடித்து சவக்காலையாக்கி விட்டனர்.

மகான் சமாதியடைந்த இடமும் இப்பொழுது மூலஸ்தானத்திற்கு கிழக்கில் இருப்பதுமாகிய மருத மரத்தின் கீழ் இராக்காலங்களிலும் பறங்கியர் கண்களுக்குப் புலப்படாத நேரங்களிலும் பக்தர்கள் பொங்கலிட்டு கற்பூரமெரித்து விநாயகரை வழிபட்டு வந்தார்கள். இவ்வாறாக பல இக்கட்டான நிலைகளைக் கடந்துவரும் காலகட்டத்தில் பல வருடங்களின் பின்னர் பறங்கியரின் அரசு ஒல்லாந்தர் கைக்குமாறியது.

ஒல்லாந்தர் அரசு காலத்தில் பொங்கல் வணக்கங்கள் மருதடியில் விசேடமாகவும் பகிரங்கமாகவும் நடந்து வந்தன. இக்காலத்தில் தொண்டை மண்டலத்தில் இருந்து வந்த தியாகராசக் குருக்கள் நவாலி தூக்கிணி கோவிலடியில் தங்கினார். தூக்கிணி வைரவர் கோவிலடியில் இருந்து சிவபூசை வணக்கம் செய்து வரும் நாட்களில் அங்கு வேள்வி நடைபெற ஆயத்தமாகியது.

இக்கோவிலில் பெருந்தொகையான ஆடுகள் வெட்டப்படுமென்று பெரியவர் கேள்விப் பட்டார். உடனே அவ்விடத்தை விட்டு அகன்று மானிப்பாய் நகரிலுள்ள மருதஞ்சோலையை அடைந்தார். அங்கு



எமது கொப்பாட்டன் சுவாமிநாத முதலியாரின் உதவியை நாடி நிலம் பெற்று சிறு வீடு கட்டியிருந்தார். அவ்விடத்தில் மக்கள் பொங்கல் வணக்கம் செய்து வந்தமை கண்டு ஒரு விநாயகர் சிலை வைத்து பூசைக் கிரமங்கள் செய்துவந்தார். பின்னர் சுவாமிநாத முதலியாரின் உதவியுடன் மருதமரத்தின் மேற்குத் திசையை நோக்கி கர்ப்பக்கிரகமும் அர்த்த மண்டபமும் கட்டிமுடிந்து பங்குனி மாதத்தில் மகோற்சவத்தை ஆரம்பித்து சித்திரை முதலாம் திகதியில் வருஷம் ஆரம்பமாகும் வேளையில் இரதோற்சவமும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடத்தி வந்தார். பின்னர் ஒல்லாந்தரின் அரசு முடிந்து ஆங்கிலேயரின் அரசு உதயமானது.

ஆங்கிலேயர் காலத்தில் கோயில் திருப்பணி வேலைகள் பல பெரியார்களால் செய்யப்பட்டது. இத்திருப்பணி வேலைகளை பெரியவர்கள் ஒவ்வொரு காரணம் பற்றிக் கூறிச் செய்வித்தார்கள். உதாரணமாக இருகுநாத முதலியார் சின்னத்தம்பி ஒருமுறை கொடிய விஷம் தீண்டப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வந்தபோது அவர் விநாயகருக்கு இரதம் செய்து வைப்பதாக பிரார்த்தனை செய்ததாகவும் அதனால் அக் கொடிய விஷம் நீங்கி அவர் சுகம் பெற்றதாகவும் அறியக் கூடியதாக உள்ளது. புதுவருடம் ஆரம்பமாகும் நேரத்தில் விநாயகப் பெருமான் விசித்திர அலங்காரம் செய்யப்பட்ட இரதத்தில் ஏறி வலம் வருகின்ற காட்சியை எல்லோரும் கண்டு இன்புறுகின்றனர். மேற்படி இரதம் திருவாலங்காட்டில் வாழ்ந்த பிரம்மஸ்ரீ சச்சிதானந்த ராஜயோகீஸ்வரர் சங்கர சுப்பையா சுவாமியினால் நன்கு மதிக்கப்பெற்று அவரை இலங்கைக்கு தரிசனம் கொடுக்கச் செய்தது. இத்தகைய சிறப்புவாய்ந்த மருதடியில் பங்குனி 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி வருடப்பிறப்பன்று இரதோற்சவம் நடைபெறுகிறது. அதைத் தொடர்ந்து இரண்டாம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது.

தர்மசீலன் சுவாமிநாதன் JP





# ஈழத்தின் சிறுவர் இலக்கிய முன்னோடி:

# வானொலிமாமா மாஸ்டர் சிவலிங்கம்

மட்டக்களப்பின் பொக்கிஷமாக கருதப்படும், மாஸ்டர் சிவலிங்கத்தின் 90வது பிறந்த தினம் மார்ச் மாதம் 28ஆம் திகதியாகும். இலங்கையில் சிறுவர்களுக்கென தனிப்பாணியில் கதை கூறுவதில் வல்லவரும் மட்டக்களப்பின் பொக்கிஷமாகவும் கருதப்படும் மாஸ்டர் சிவலிங்கம் கடந்த வருடம் காலமானார்.

கல்லடியை சேர்ந்த இவர் சிறுவர்களுக்கு கதைகள் கூறுவதில் பிரபல்யம் பெற்றவராகவும் கலைஞராகவும் எழுத்தாளராகவும் பல்திறமைக் கலைஞராகவும் திகழ்ந்தவர்.



நவீன இலத்திரனியல் சாதனங்களின் வருகைக்குமுன் வானொலி ஒன்றே மிகப்பெரிய ஜனரஞ்சக ஊடகமாக இருந்த காலத்தில் மாஸ்டர் சிவலிங்கம் ஈழத்தின் சிறுவர் இலக்கியத்தில் ஆற்றிய பங்கு அளப்பரியது. அவரின் கதை சொல்லும் திறன் இக்காலச் சிறுவர்களால் அவ்வளவு இலகுவாக உணர்ந்துகொள்ள முடியாதது என்பதும் உண்மையே.

மாஸ்டர் சிவலிங்கம் சிறுவர் இலக்கிய எழுத்தாளரும், பேச்சாளரும் ஆவார். கவிதை, சிறுவர் கதை, சிறுவர் பாடல்கள், வில்லுப் பாட்டு, நகைச்சுவைப் பேச்சு, நாடகம் எனப் பல துறைகளிலும் சிறப்புப் பெற்றவர். மற்றும் இலங்கை வானொலி மற்றும் தொலைக்காட்சியில் (ரூபவாஹினி, வண்ணச்சோலை) சிறுவர் நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கினார்.



பல தசாப்த காலமாக ஈழத்தின் சிறுவர் இலக்கியத்தின் அடையாளமாகவும், முன்னோடியாகவும் திகழ்ந்த வானொலிமாமா மாஸ்டர் சிவலிங்கம் தனது 89வது அகவையில் மட்டக்களப்பில் 2022 மே 11 அன்று காலமானார்.

அவரது கதை சொல்லும் பாணி அனைவரையும் மிகவும் ஈர்க்கக் கூடியது. நகைச்சுவையுடன் கதை சொல்லும் போது வெவ்வேறு பாத்திரங்களில் பேசுவது அவருடைய திறமையாகும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவை சிறுவர் நிகழ்ச்சியில் வானொலி மாமாவின் நிகழ்ச்சி நீண்ட காலமாக ஒலிபரப்பப்பட்டது. அக்காலத்தில் இன்றைய புதிய வானொலிகள் எதுவும் இல்லை. அக்காலங்களில் நானும் சிறுவனாக வானொலி மாமா நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகும் கவிதைகள், கதைகள் மற்றும் நாடகங்களைக் கேட்டு மகிழ்ந்துள்ளேன். அதை விட எனக்கு திருப்தியாக இருப்பது மாஸ்ரர் சிவலிங்கத்தின் கதை சொல்லும் பாணி தான் அனைவரையும் கவரச் செய்யும்.

மாஸ்டர் சிவலிங்கத்திற்கு இலங்கை முழுவதும் ரசிகர்கள் இருந்தனர். உயரதிகாரிகள் முதல் சாதாரண மனிதர்கள் வரை அவரது ரசிகர்கள் பலர். அது மட்டுமின்றி தாத்தா, குழந்தை, பேரன் என மூன்று தலைமுறைகளை சேர்ந்தவர்கள்.

சிவலிங்கத்தின் கதை சொல்லும் பாணியால் அனைவராலும் மிகக் கவரப்பட்டார்.

இலங்கை, இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் வானொலி, தொலைக்காட்சிகளில் 50 வருடக் கதைசொல்லல் அனுபவம் கொண்டவர். சிறுவர் எழுத்தாளர், 144 மேடைகள் கண்ட மிகச் சிறந்த வில்லுப் பாட்டுக் கலைஞர், நகைச்சுவைப் பேச்சாளர், ஆன்மிகச் சொற்பொழிவாளர், சிறந்த நடிகர், ஓவியர், பத்திரிகையாளர், எனப் பல்வேறு திறன்களைப் பெற்றவர் மறைந்த மாஸ்டர் சிவலிங்கம்.

கிருபானந்தவாரியாரால் "அருட் கலைத் திலகம்" எனவும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையினால் "நகைச்சுவைக் குமரன்" எனவும் பண்டிதர் வீ.சி.கந்தையாவினால் "வில்லிசைச் செல்வன்" எனவும், அமைச்சர் செ.இராசதுரையினால் "வில்லிசைச் செல்வர்" எனவும் காத்தான்குடிப் பொதுமக்களால் "கனித் தமிழ்க் கதைஞன்" எனவும் மட்டக்களப்பு இந்து சயம அபிவிருத்திச் சங்கத்தினால்; "கலைக்குரிசில்" எனவும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தினால் "சிறுவர் இலக்கியச் செம்மல்" எனவும் புகழாரம் பெற்றவர்.



இங்கிலாந்தில் இயங்கும் BUDS எனும் அமைப்பினால் பொன்முடிச்சுக் கொடுத்து "கலைமாமணி" எனவும் கிழக்குப் பல்கலைக் கழகத்தினால் "இலக்கிய முதுமாணி" எனவும் பற்பல பட்டங்கள் பெற்றவரும், 1984 – 1991ஆம் ஆண்டுகளில் சிறுவர் இலக்கியத்துக்கான வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு, மற்றும் 2013 இல் "அன்பு தந்த பரிசு" எனும் சிறுவர் படைப்புக்காக மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் "தமிழியல் விருது", இலங்கை அரசின் உயர்விருதுகளில் ஒன்றான 'கலாபூசணம்" விருது என்பவற்றைத் தனதாக்கிக் கொண்டவரே மறைந்த மாஸ்டர் சிவலிங்கம்.

ஈழத்தின் தலை சிறந்த சிறுவர் இலக்கிய முன்னோடியான வானொலிமாமா என அன்பாக அழைக்கப்படும் மாஸ்டர் சிவலிங்கத்தின் இலக்கியப் பங்களிப்பு மிக காத்திரமானதாக வரலாற்றின் பக்கங்களில் என்றும் நிலைத்திருக்கும்.

அத்துடன் வானொலி மாமா மாஸ்டர் சிவலிங்கம் பயங்கர இரவு, அன்பு தந்த பரிசு, உறைபனித் தாத்தா, சிறுவர் கதை மலர் ஆகிய நூல்களையும் ஈழத்தின் சிறுவர் இலக்கியத்திற்காக எழுதியுள்ளார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா






## நீ.. வருக.. என் தேசம்....

மக்கொனையூராள்

அல்குர்ஆனின் வாசம்
அகிலமெங்கும் வீசும்
அல்லாஹ்வின் பாசம்
அளவில்லாத நேசம்
அழுது தொழுது பேசும்
அழகிய ரமழானே...
நீ வருக என் தேசம்..

பசியிலே கழியும் பகற் பொழுதுகள்
இறைவணக்கத்தில் கழியும் இராப் பொழுதுகள்
இதயத்தில் இல்லை வீண் பழுதுகள்
இவை யாவும் சுவனத்திற்கான வைர விழுதுகள்.

பண்ணிய பாவமெல்லாம் பறந்தோட
புண்ணியம் அருளாக நிறைந்தாட
சைத்தானியம் விலங்குகளுக்குள் மறைந்தோட
ஈமானியம் இதயமெங்கும் இழைந்தோட....
அழகிய ரமழானே...
நீ.. வருக என் தேசம்

ஈகையின் கதவுகள் விரிய
பசியின் கொடுமையினை யாவரும் அறிய
நோன்பிருந்து மஃரிபில் கல்புகள் நிறைய
ரய்யான் எனும் வாசலாலே சுவர்க்கம் நுழைய

அழகிய ரமழானே நீ .. வருக... என் தேசம்



## மாண்புமிகு நோன்பே வருக..!

ஏரூர் கவிமாமணி
எம்.ரி.எம்.அன்ஸார்

பிறையைக் காணவே
குழுமுகிறோம் இங்கே
இறையை நெருங்குகிறோம்
துன்பமும் நீங்க
நிறைவான வாழ்வினில்
நோன்பே தாங்க
குறைகளைத் துறக்கிறோம்
என்றும் நாங்கள்

அழகாக சுவர்க்கமும்
அலங்கரித்தேத் தீட்டப்படும்
நலமாக வாழவே
நரகமும் பூட்டப்படும்
வளமான வாழ்வுக்கு
வசந்தமும் சூட்டப்படும்
துன்பமான வாழ்வும்
நன்மையால் ஓட்டப்படும்

மறைவான இரவொன்றில்
"லைலத்துல்கத்ர்" வரும்
கறைகளைக் களைந்தே
நன்மையள்ளித் தரும்
மறையும் இறங்கியது
இம்மாதத்திலேயே பாரும்
கரைகாணா பக்திக்கு
இம்மாதமென கூறும்

பசியையும் தாகத்தையும்
உணர்த்திடும் நோன்பு
ருசியைத் தந்தே
ஓங்கிடும் மாண்பு
கசியும் கண்ணீரில்
பாவமன்னிப்பாகும் பண்பு
நேசியேப் பகிர்ந்திடு
ஏழைகள்மேல் அன்பு

சேர்த்திட்ட செல்வத்திற்கெல்லாம்
ஏழைவரியைக் கொடுத்திடு
உயர்த்தியே வாழவைக்கும்
உன்னையும் நம்பிடு
வியர்வை சிந்திடும்
தொழிலாளிக்கும் பங்குண்டு
துயரைத் துடைத்திடவே
நீயும் எழுந்திடு

புனிதமிக்க ரமழானில்
புண்ணியம் செய்திடுவோம்
மனிதம் வாழவே
இருப்பதைப் பகிர்ந்திடுவோம்
கணிவாய்ப் பழகியே
ஐக்கியத்தை வளர்த்திடுவோம்
பணிவாய் நடந்தே
நோன்பை அடைந்திடுவோம்..!



## இலக்கு

குருமண்வெளி ரவி

உன் இலக்கை நிர்ணயி!
நீ பயணத்தை
தொடங்குமுன்
உன் இலக்கை நிர்ணயி!
எதிரில் வரும் தடைகளை
துணிவு கொண்டு
தகர்த்தெறி
தோல்வி வந்தாலும்
துவண்டு விடாதே!
மீண்டும் எழு
உன் வேகம் அதிகரிக்கும்
இதை நீ அறிவாய்
உன்னையே நீ நம்பு
இன்னோர் உதவியை
நாடாதே
மனதில் உறுதிகொள்
நினைவில் உன் இலக்கு
இருக்கட்டும்
நீ போகுமிடம் தூரமில்லை
உன் இலக்கை நீ
இலகுவாக அடைந்திடுவாய்

## இரண்டாம் தாய்

அருட்கவி அக்கரையூர் அப்துல் குத்தூஸ்

புத்தகமே
என்
நித்திரையை நீ பறித்த
நிமிடத்துளி ஒவ்வொன்றுக்கும்
நீண்டு கொண்டிருக்கிறது வரலாறு
அதை
நினைத்தாலே நெஞ்சுக்குள் தேனாறு


பக்குவமாய் நானும் உன்
பக்கங்களைப் படிக்கையிலே
சொர்க்கத்தை தரிசித்த
சுகம் எனக்கு

நீ
பத்திரப் படுத்தி வைத்த
பசுமையான அத்தியாயங்கள்
சித்திரமாய் என் மனதில்
முத்திரை குத்திவிட்டன

உலகத்தைப் பற்றி
ஒவ்வொன்றாய் அறியவைத்தாய்
கலகத்துக்கான
காரணங்கள் தெளியவைத்தாய்

அரசியல் பொருளியல் ஆத்மீகம்
அறிவியல் மருத்துவம் விளையாட்டு
உளவியல் வனவியல் வானியல் என
ஒவ்வொன்றாய் எனக்கு போதித்தாய்

மடைமையைத் தூர
எறியவைத்தாய்
மாயைகள் அனைத்தையுமே



உடைமையில் நீ முதலென
அறியவைத்தாய்
உலகத்தின் இருள்தனை
விலகவைத்தாய்

இலக்கியத்தால் இன்பம்
சொரியவைத்தாய்
இன்றுவரை கற்பனையை
விரியவைத்தாய்

இலக்கணத்தால் மொழியை
விளக்கி வைத்தாய்
இசைக்கரத்துள் எம்மை
இணைத்து வைத்தாய்

இவைகளால் நீ ஆகிவிட்டாய்
என்னொரு தாய்
சபைகளிலும் சொல்வேன் நீ
இன்னொரு தாய்
ஆம்.... நீ
இன்னொரு தாய்
என்னொரு தாய்!



## கடதாசிப் பூவாய்

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி

வாழ்தல் மீதான
பெரு விருப்புடன் தான்
மணவாழ்வுக்குள்
மங்களமாய் நுழைந்தாள்
அவள்

தாலி யேந்தித்
தாரமாகி
மழலை ஈந்து
தாய்மை பெற்று
தரணியில்
தனக்கான துணையேற்றுத்
தகைமை கொண்டாள்
இல்லத்தரசியாய்

அகால மரணம் எனும்
அகோரத்தால்..
காதல் கணவனைக்
காவு கொண்டது
இயற்கை

தாலி பெருகிற்றென்று
மங்கலப் படுத்தினார்கள்
வண்ண முலாம் பூசி
வார்த்தைகளில் மட்டும்
வரிசைப் படுத்தினார்கள்

கணவனை இழந்தது
காரிகை குற்றமோ?

சுப மங்களங்களில்
சேற்றை வாரி இறைத்து
மூளியென்றும்
மூதேவியென்றும்
மூலைக்குள் ஒதுக்கி வைக்கிறது
மூடர் கூட்டம்

பாவம் அவள்
பாதுகாப்பின்றி
பயந்து பயந்து வாழ்கிறாள்
மேய முனையும் சில
கால்நடைகளிலிருந்து
தன்னைக் காத்திட

பொருளாதார நெருக்கடி
நெரிக்கிறது அவள் கழுத்தை.
பசிப்பிணி போக்கி
பிள்ளைகளை வளர்க்க
பெரும்பாடு பட்டு
ஓடாகத் தேய்கிறாள்

யார் மீது குற்றம் சொல்வாள்?
தனக்கான வாழ்வை
எப்போதும் வாழ்வதில்லை
அவள்

கணவனுக்காகவென்றும்
குழந்தைகளுக்காக வென்றும்
பெற்றோருக்காக வென்றும்
மற்றோருக்காக வென்றும்
யாராருக்காகவோ தன்
ஆயுளை அழி(ளி)க்கிறாள்

ஆனால்
சமூகத்திலுள்ளோர்
அத்தனை பேரும்
அவள் ஆன்மாவை
மிதிக்கிறார்கள்

கைம்பெண்ணென்று
கையறு நிலையில்
கசங்கிக் கிடக்கிறாள்
கடதாசிப் பூவாய்



## நல்லூர் மண்ணில் நண்பனோடு

ரதிதேவி, மானிப்பாய்

நல்லூர் மண்ணில்
நண்பனோடு உரையாடல்
விண்மீன்கள் பல்லுத் தெரிய சிரிக்க
கோபுரத்தில் நேரம் பறக்க
கச்சான் கடிபட
கல் விழுந்த குளமாக
சம்பாசனைகள் தொடர்ந்தன

சுற்றித் திரியும் நாயும்
சூழ்ந்துள்ள இருளும்
பற்றி எரியும் பந்தங்கள்போல்
மின்விளக்குகளும்
பற்றுத் தீர்த்து விழும்
பச்சிலைகளின் சத்தமும்
யோகன் செல்லப்பனைச் சந்தித்த
இத்தலத்திலே
நாமும் கந்தனை
வேண்டிக் காத்திருந்தோம்

மணிமுட்கள் நகர்ந்தன
மனமும் நகர்ந்தது
மணலில் சிறு அலைகளைத்
தென்றல் சீவி விட்டுச் சென்றது

சிறுவயதில் நாம் கட்டி விட்டுச் சென்ற
மண் வீட்டிற்குள்
இன்று குடிபுகுந்த உணர்வு

இன்னும் சில மணி நேரங்களில்
இந்த பூமிப் பானை
புதுவருடத்தின் வெள்ளொளியால்
பொங்கப்போகிறது
"ஓம் முருகா" என்று சொல்லி
சந்நிதானத்தை விட்டு
விடைபெற்றோம்
விபூதி வாசம்
வரும் வழி எங்கும்
காற்றோடு கலந்தது

## சுமை

கவிச்சுடர் சிவரமணி

சிறகுகளின் இடுக்கில்
செருகப்பட்ட மரக்கட்டைகள்
பறக்கவும் முடியவில்லை
பாரம் இழுக்கவும் முடியவில்லை

கொடுக்குகள் இன்றியே
உறவென பலர்
தீண்டாமல் தீண்டும்
விசக்கங்குகள்

பிடித்தமென நிலவு
எட்டிப்பார்க்கும் நேரம்
வரிசைக்கட்டி நிற்கும்
கணக்குப்பட்டியல்

நவக்கிரகமென உடன் பிறப்புகள்
ஒப்பேற்றும் வரை நடந்த நாடகம்
பாசத்திற்கு அவர்கள்
பழு தூக்க கழுதையா நானும்



## அப்போதிருந்த எல்லாம்...

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

அப்போதிருந்த குதூகலம்
இப்போது இல்லை
அப்போது இருந்து படபடப்பு
இப்போது இல்லை
அப்போது இருந்த உற்சாகம்
இப்போது இல்லை
அப்போது இருந்த குறும்புத்தனம்
இப்போது இல்லை
வாழ்க்கை எவ்வளவு விடயங்களை
மாற்றிப்போட்டு விடுகிறது
எத்தனையோ வசந்தங்களைப்
புரட்டி வீசிவிடுகிறது
வெறுமைக்குள் விரல்களை
நீட்டி வெட்டியாய் தேடிக்கொண்டிருக்கிறாய்
சூனியத்திற்குள் முடிவின்மையாய் முகம்
புதைத்திருக்க
முனிகளுடன் தத்துவம்
விவாதிக்கத் தலைப்படுகிறாய்
அந்தரங்க அரங்கில்
உதடு கடித்துப் பொறுத்திருக்கிறாய்
அப்போதிருந்த எல்லாம்
இப்போதும் இருக்கிறது
ஆனால்
பரிணாமம் வளர்ந்து விட்டது என்ற
முனங்கலுக்குள்
ஒளிந்து கிடக்கிறது உன்
சிறுபராயத் தொன்மம்



## சிரிப்பு

முஸம்மில் கமர்தீன்
கொழும்பு

சிரிப்பு இதழ்களால்
மறைக்கப்பட்ட சொர்க்கம்!
இதயம் சிந்திய
உணர்வுகள்
உதட்டின் சிரிப்பு!

சிரித்துப்பார் நீ!
துன்பம் மறைந்துப்போகும்
சிரிப்பாலே!
சிலையும் பேசும்
சிறுமழலையின் சிரிப்பில்!

சிரித்துப் பழகு
சிறு புன்னகையும்
சிறந்த தர்மமாகும்!

சிரிக்கத் தெரிந்தவன்
சினத்தையும்
சிறையாக்குவான் சிரிப்பாலே!

சிரித்து மகிழு
சிகரம் தொடும் துன்பமும்
சிறுமணலாக சிதறும்!
சிரிக்கவிடு இதயத்தை
சிறைப்படுத்தாதே துன்பத்தை!

சிந்தை செய் மனமே
சிரிப்பு ஒன்றே
சிறந்த மருந்தாகும்!
சினம் மறந்த வாழ்வே
சிறந்த வாழ்வாகும்!



## கவிஞனின் பேனா!

காத்தான்குடி கலைமதி றபாய்தீன்

கவிதை எழுதும்
கவிஞனின் பேனா
எண்ணும் எண்ணத்தை
எண்ணப்'பா' எழுதும்!
உண்ணும் உணவாய்
உணர்வுப்'பா' படைக்கும்!
தன்னினது தன்மைகளை
தத்துவமாய் செதுக்கும்!
பெண்ணினது பெருமைகளை
பெருங்கவியாய் பொறிக்கும்!

கவிஞனின் பேனா
சொற்களைக் கொண்டு
சொற்சுவை ஊட்டும்!
சொல்லாடல்கள் அமைத்து
பொருட்சுவை காட்டும்!
கருத்துக்களை
காத்திரமாய் விதைக்கும்!
காலங்கடந்தாலும்
பேனாக்கவிதைகள் நிலைக்கும்!

ஆறாம் விரலாய்
அந்தக் கவிஞன் பேனா
ஆறாம் அறிவுக்கு
விருந்துகள் படைக்கும்!
மனதிற்கு கவிதை
மருந்தாக இருக்கும்!
நேராக இருந்து
நீதியைச் சொல்லும்!
கூராக அமைந்து
தீயதைக் கொல்லும்!

கவிஞனின் பேனா
பேராயுதமாகும்!
பேனா முனையாலே
பொல்லாப்பை பொசுக்கும்!
நல்லாப்பை வளர்க்கும்!
எல்லாவற்றையும்
எதார்த்தமாய் எழுதும்!
காலத்தால் அழியாதது
கவிதைகள் படைத்து
பேனாவாலே இப்புவியில்
பெருங்கவிஞனாய்
புகழுடன் வாழ்வோம்!

# அரசின் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பின் பலன்கள் பெருந்தோட்ட மக்களை சென்றடையுமா?

கே.சுந்தரலிங்கம்

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதா நெருக்கடி காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரிக்கப்பட்டுள்ளன. அத்தோடு சேவைகளுக்கான கட்டணங்களும் பல மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளன. நாட்டில் அனைத்து மக்களும் வாழ்வதற்கான ஏதோ ஒரு சவாலுக்கு உள்ளாகியுள்ளனர்.**

**பொருட்களின் மற்றும் சேவைகளின் விலையேற்றம் மலையக பகுதியை சேர்ந்த மக்களை மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு முட்டிய நிலைக்கு தள்ளியுள்ளது. இதற்கு பெரும் பலமான காரணமாக அமைவது அவர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காமையே.**



தோட்டப்புறங்களில் வாழும் மக்களுக்கு குறைந்த வருமானமும் உறுதி காணிகள் அற்ற காரணத்தால் அவர்களுக்கு தேவையான உணவினை தாங்களே உற்பத்தி செய்து கொள்வதற்கான வசதி இல்லை. இதனால் ஏனைய பிரதேசங்களில் பெரும்பான்மை மக்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பம் இவர்களுக்கு கிடைப்பதில்லை. குறிப்பாக ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்கள் பலா,தென்னை, நெல், பழங்கள் உள்ளிட்ட போசாக்கான உணவுகள் ஓரளவாவது பெற்றுக்கொள்ளக் கூடிய நிலை காணப்படுகின்றது. ஆனால் மலையகப்பகுதியில் 10 சதவீதமானவருக்கு இந்த வாய்ப்பு காணப்படுகின்றன. ஏனைய 90% சதவீதமான மக்கள் இந்த நெருக்கடியிலிருந்து மீள முடியாதவர்களாகவே உள்ளனர்.

ஏற்கனவே குறைந்த வருமானம் பெற்று மந்த போசனத்தில் வாழும் மக்கள் இன்று மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் எதிர்காலத்தில் கல்வி, சுகாதார, பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களில் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றன.

பாதிப்பால் இருந்து மீளவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இதற்கு உதாரணமாக அரசாங்கம் இன்று அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்து வருகின்றது.



இந்த விலை குறைப்பானது மலையக மக்களை சென்றடையுமா? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் தோன்றுவது சாதாரணமே, குறிப்பாக இன்று 10 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை சிறிய அளவில் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளன. ஆனால் இந்த விலை குறைப்பு மலையகத்தில் தோட்டப்புறங்களில் வாழும் மக்களை சென்றடையுமா?ஏனென்றால் குறித்த விலை குறைந்த பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு சதொச நிலையங்களுக்கு செல்ல வேண்டும். ஆனால் மலையகத்தில் எத்தனை சதொச நிலையங்கள் காணப்படுகின்றன.

இந்த சதொச நிலையங்கள் நகர்புறங்களில் மாத்திரம் தான் காணப்படுகின்றன. நகர்புற மக்கள் கொள்வனவு செய்தாலே சதொச விற்பனை நிலையத்தில் இருக்கும் பொருட்கள் தீர்ந்து விடுகின்றன. இந்நிலையில் தோட்ட மக்களால் விலை குறைப்பின் பலன்களை அனுபவிக்க முடியாமல் பேய்விடுகிறது. தூர பிரதேசங்களில் சிறிய அளவில் குறைக்கப்பட்ட பொருட்களை பெறுவதற்கு அதிக போக்குவரத்து செலவு செய்தே வர வேண்டும் இதனால் அதிகமான மக்களுக்கு இந்த குறைக்கப்பட்ட பொருட்களை பெற்றுக்கொள்வது குதிரை கொம்பாகவே உள்ளன.

எனவே அரசாங்கம் ஒரு திட்டத்தினை அமுல்படுத்தும் போது அனைத்து மக்களும் நன்மை பெறுவதற்கு வகை செய்ய வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்ப்பார்ப்பு.

இதே நேரம் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படும் போதும் குறைக்கும் போதும் வர்த்தகர்கள் விலைகளை தாங்கள் விரும்பிய படி தன்னிச்சையாகவே அதிகரிக்கின்றனர்.அதே வேளை அதிக இலாபத்தையும் பெற்றுக் கொள்கின்றனர்.

ஆனால் குறைக்கும் போது அவ்வாறான நிலை காணப்படுவதில்லை. எமது நாட்டில் நுகவோர் அதிகார சபை, விலை கட்டுப்பாட்டு திணைக்களங்கள், அதிகாரிகள் இருந்தாலும் இவர்களால் எந்த அளவுக்கு மக்களுக்கு நியாயமான விலையில் பொருட்களின் பெற்றுக்கொடுக்கலாம் என்ற உறுதிப்பாட்டினை வழங்க முடியாதுள்ளது. உலகின் டொலரின் பெறுமதி உயரும் போதும் அல்லது குறையும் போதும் அதற்கேற்ற வகையில் விலைக் குறைப்போ அதிகரிப்போ இடம்பெறுவதில்லை என்பதே கண்கூடான நிதர்சனம்.

இது குறித்த மலையகத்தில் வாழும் பொது மக்கள் கருத்து தெரிவிக்கையில்

அத்தியாவசிய பொருட்களான அரசி, மா, பருப்பு சீனி, தேங்காய், கோதுமை மா உள்ளிட்ட பல பொருட்களின் விலைகள் மக்களால் ஈடு செய்ய முடியாத அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனால் வீடுகளில் இன்று ஒரு நேர உணவினை தான் அதிகமான குடும்பங்கள் உண்டு வருகின்றனர்.

நாங்கள் இன்று தோட்டத்தில் உள்ள கடைகளில் தான் பொருட்களை கொள்வனவு செய்கிறோம், அந்த கடைகளில் குறைக்கப்பட்ட பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாது. அவர்கள் மொத்த கடைகளில் அதிக விலைக்கு வாங்கி தான் கொடுக்கின்றனர். இதனால் குறைந்த பொருட்களின் சலுகையினை பெற முடியாதவர்களாக மலையக மக்கள் காணப்படுகின்றனர். ஆகவே குறைக்கப்பட்ட பொருட்கள் மேலும் குறைத்து மக்கள் நன்மையடையும் வகையில் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றார்.






பொருட்களின் விலைகள் நூறு சதவீதத்தில் அதிகரிக்கப்பட்டு 10 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளன. இதனால் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை. அது மாத்திரமன்று இந்த பொருட்களை சதொச நிலையத்தில் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதால் சதொச நிலையங்களை தேடி செல்வதற்கான போக்குவரத்து செலவு அதிகமாக உள்ளது. தோட்டங்களில் சதொச நிலையங்களை திறக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

அரசின் திட்டங்களை பொருந்தோட்ட மக்களிடம் கொண்டு சேர்ப்பது அம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாட்டில் தங்கியுள்ளது. அரசியல் இன்றி எம்மால் எதையும் செய்து விட முடியாது. ஏன்னென்றால் சட்டம், அரசியலை சார்ந்தே இருக்கிறது.திட்டங்களை தீட்டுவதும் நடைமுறைப்படுத்துவதும் அரசாங்கமே. மக்களின் சில பிரச்சினைகளையாவது உணர்ந்து நிவர்த்திப்பது பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பாகும். அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பின் பயன்களை மலையக மக்களும் அனுபவிக்க வேண்டும். இது மானுட நீதியாகும்.

# கல்வியுடன் கலைத்துறையில் பிராகாசித்த கண்டி இஸ்லாமியச் செல்வி அரபா

இக்பால் அலி

## தினகரன், இலங்கை வானொலி, மலையக சேவை என தொடரும் அவரின் ஆக்கங்கள்

**கண்டியில் சிறு வயது மு தல் இலக்கிய பணியாற்றி வரும் இஸ்லாமியச் செல்வி அரபா கவிதை சிறுகதை, சிறுவர் பாடல்கள் என நீண்ட காலம் இலக்கிய ஆளுமையைக் கொண்ட ஒருவர். அவர் கண்டி பதியுதீன் முஹ்மூத் மகளிர் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.கலைத்–துறையில் பல விருதுகளை பெற்ற அரபா வாரமஞ்சரிக்கு வழங்கிய செவ்வி;**

**? உங்களின் ஆரம்ப இலக்கியப் பங்களிப்பு?**

என்னுடைய முதலாம் வகுப்பில் இருந்தே கலை இலக்கியத்தில் ஆர்வம் உடையவனாக இருந்தேன். வாசிப்பு, பாடல், கற்பனைக் கதை கூறல் என்று எனது முதலாம் தர ஆசிரியரால் ஊக்கப்படுத்தப்பட்டு தரம் 2 முதல் 12 வகுப்பு வரை மேடை நாடகங்கள் தயாரித்து நடித்தல், சிறுகதைகள் எழுதி வாசித்தல், இவ்வாறு தொடர்ந்து பாடசாலையின் “இளங்கதிர்” சஞ்சிகையின் பத்திரிகை ஆசிரியராக இருந்து செயற்பட்டு வந்தேன். அதன் பின்பு 1982 முதல் 1986 களில் தேசியப் பத்திரிகையான தினகரனிலும் இலங்கை வானொலிக்கும் ஆக்கங்கள் எழுத ஆரம்பித்தேன். தினகரனில் “தொழிலொன்று துணையாகிறது” என்ற கட்டுரை பிரசுமாகியது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மாதர் மஜ்லிஸ் பகுதிக்கு பிரதி எழுதுபவராக, குரல் கொடுப்பவராக முஸ்லிம் சேவையின் கலைஞராக பிரபல்யம் பெற்றேன்.

அதன் பின்பு கண்டி மலையக சேவையில் பகுதிநேர அறிவிப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெற்றேன். ஆசிரியர் சேவையில் முழுநேர வேலைப் பளுவால் இடையிடையே வானொலி நிகழ்வுகளில் குரல் பதிவு செய்வேன்.

1989 இல் ஆசிரியர் நியமனத்தை பெற்றுக் கொண்டேன். 1999 இல் கட்டுகஸ்தோட்டை சாஹிராக் கல்லூரியிலும் 2003 இல் இருந்து கம்பளை முஸ்லிம் மகா வித்தியாலயம் பின்னர் இற்றவரை கண்டி பதியுதீன் முஹ்மூத் கல்லூரியில் பணியாற்றினேன்.

**? நீங்கள் ஒரு ஆசிரியராகவும் இலக்கியவாதியாக பாடசாலை மட்டத்தில் உங்கள் பங்களிப்பு,......**

எனது மாணவர் மாணவிகளை கலை இலக்கியத் துறையில் ஊக்கப்படுத்தி இலக்கியப் போட்டிகளில் பங்கு கொள்ள வைத்தேன்.நாடகம் தயாரித்தல், நடப்பில் மாணவரை ஊக்கப்படுத்தியுள்ளேன்.

**? நீங்கள் ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர்?**

@கற்பித்தல் பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும் ஏனைய துறைகளிலிருந்து ஓய்வு கொள்வது அல்ல. மூச்சுக் காற்று முடியும் வரை எம்மை சார்ந்துள்ள எத்தனையோ பணிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும். இலக்கியச் சொற்பொழிவுகள், வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள், பாடசாலை கீதங்கள், கட்டுரை, கவிதை, சிறுகதை என பல்துறை சார்ந்த பயணங்கள் தொடரும்.



பிரதேச கலை இலக்கிய வட்டம், நூலக அபிவிருத்திக் குழு என்பனவற்றிலும் அங்கம் வகித்து வருகின்றேன். எனது பாடசாலையில் மாணவிகளுடைய நூல்களை வெளிக்கொணரும் வேலைத் திட்டத்தின் கீழ் 150 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதில் என்னுடைய நூலும் வெளிக்கொணரப்பட்டுள்ளது. மாணவிகளை நூல்களை வெளியிடவும் எழுத்தாளர்களாகவும் உருவாக்க முடிந்தது.

**? நீங்கள் எழுதி வெளியிட்ட நூல்கள்?**

'பாடுபாப்பா கதை கேளு பாப்பா', 'வரலாற்று ராணி, பெற்றார் சொல்லமுதம்', 'மிக்கி நரிமாமா' பல சிறுவர் இலக்கிய நூல்களை எழுதியுள்ளேன். வெகுவிரைவில் சிறுகதைகளின் தொகுப்பு அச்சில் வர உள்ளது. மனிதம் கண்டேன் எனும் கவிதை நூலும் வெளிவரவுள்ளன.

**? உங்கள் குடும்பம் தொடர்பில்,...**

என்னுடைய தந்தை லேகம் பலா கெதர அலி உதுமான்லெப்பை. இவர் சிறந்த வரைபடக்கலைஞர். இவரால் எழுதப்பட்ட பெயர்ப்பலகைகள் பல. கண்டி தேசிய வைத்தியசாலை, கண்டி ஹனபி ஜும்ஆப் பள்ளிவாசல், மடிகே மிதியாலை அரபுக் கல்லூரி என நாடு முழுவதிலும் இவரது எழுத்துக்கலை காட்சிப் படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். அரபு எழுத்தணிக் கலைஞர். புனித குர்ஆனை கைப்பட எழுதியவர். தாயார் சார உம்மா. எனது கணவர் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. எம். எம். மன்சூர்.





# திருப்பாடுகளின் பரிசுத்த வாரம்

# இருப்பதைப் பகிர்ந்து இல்லாதோரை மகிழ்விப்போம்

தவக்காலத்தின் பரிசுத்த வாரம் இன்று ஆரம்பமாகின்றது. இன்றைய தினம் குருத்தோலை ஞாயிறு தினமாக கத்தோலிக்க திருச்சபையினால் அனுஷ்டிக்கப்படுவதுடன் உலகெங்குமுள்ள கத்தோலிக்க மக்கள் குருத்தோலைகளை கையில் ஏந்தி ஆண்டவருக்கு ஓசன்னா பாடி வாழ்த்தொலி முழங்க திருப்பலிகளில் கலந்து கொள்ளும் சிறப்பான ஞாயிறு இது. அந்த வகையில் தவக்காலத்தின் இறுதியில் பரிசுத்த வாரத்தை ஆரம்பிக்கும் முதல் தினமாக குருத்தோலை ஞாயிறு உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்களால் அனுஷ்டிக்கப்படுகிறது.

நம் ஆண்டவர் இயேசு எருசலேம் நகருக்குள் வெற்றி ஆர்ப்பரிப்புடன் பிரவேசித்த நிகழ்வையே கிறிஸ்தவர்கள் ஆண்டுதோறும் குருத்தோலை ஞாயிறாக நினைவு கூருகின்றனர். இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்த காலத்தில் யூதர்கள் எல்லோரும் எருசலேம் நகரில் ஒன்று கூடி பாஸ்கா விழாவை கொண்டாடுவது வழக்கம். இந்த பஸ்கா விழாவை கொண்டாட இயேசுவும் வருகிறார். அவர் கழுதையின் மீது ஏறி யூதேயா தேசத்தின் தலைநகரான எருசலேம் நகருக்குள் பிரவேசித்தார்.

அப்போது அங்கு குழுமியிருந்த மக்கள் அவருக்கு வரவேற்பளிக்கும் விதமாக ஒலிவ் குருத்திலைகளை தங்கள் கைகளில் ஏந்தி "ஆண்டவர் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர். உன்னதங்களிலே ஓசன்னா"என வாழ்த்தி ஆர்ப்பரித்தார்கள்.

இதன்போது இயேசுவை கல்லெறிந்து கொல்ல வேண்டும் என நினைத்தவர்களும் மனம்திருந்தி குருத்தோலைகளை கையில் ஏந்தி அவரை வரவேற்றமை சிறப்பம்சமாகும்.

மக்கள் குருத்தோலைகளை கையில் ஏந்தி "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா. ஆண்டவரின் பெயரால் வருகின்றவர் ஆசிபெற்றவர். உன்னதங்களிலே ஓசன்னா."என புகழ் பாடி வழிநெடுகிலும் வரவேற்பளித்தனர்.

அந்த மக்களே இன்னும் சில நாட்களில் "இவரை சிலுவையில் அறையுங்கள் என்று சொல்லப்போவதை இயேசு தெரிந்தும் அவர்கள் அளித்த வரவேற்பை ஏற்றுக்கொண்டார்.

யூதர்கள் இயேசுவை சிலுவையில் அறைவதற்கு திட்டமிட்டனர். எனவே தான் குருத்தோலை ஞாயிறுக்குப்பின் வரும் 7 நாட்களையும் திருப்பாடுகளின் பரிசுத்த வாரமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

அந்த வகையில் தவக்காலத்தின் முக்கிய பகுதியான பரிசுத்த வாரம் தவக்காலத்தின் மிக முக்கியமான ஏழு தினங்களாகும்.

இயேசு கிறிஸ்துவை ஓசன்னா பாடி வரவேற்கும் குருத்தோலை ஞாயிறு, இயேசுநாதர் தம் சீடர்களின் பாதங்களை கழுவும் திருச்சடங்கு தினமான புனித வியாழன், நம் ஆண்டவர் இயேசு கல்வாரி மலையில் சிலுவை மரத்தில் அறையப்பட்டு உயிர் விட்ட பெரிய வெள்ளி, பாஸ்கா ஒளியின் தினமான அல்லேலூயா சனி மற்றும் ஆண்டவர் இயேசு மரித்து மீண்டும் உயிர்த்தெழுந்த உயிர்த்த ஞாயிறு ஈஸ்டர் பண்டிகை ஆகியதினங்கள் இந்த பரிசுத்த வாரத்தில் உள்ளடங்குகின்றன.







இவையெல்லாம் இயேசு சிலுவைப் பாடுகளை அனுபவிப்பதற்கு முதல் வாரம் நடைபெறுகிறது.

அந்த நாட்களில் எருசலேம் மக்கள் ஒலிவ் மரத்தின் குருத்து இலைகளை கையில் ஏந்தி இயேசுவை வரவேற்றது போல, இன்று குருத்தோலை ஞாயிறு தினத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் குருத்து ஓலைகளை கைகளில் ஏந்தியபடி, அவரை புகழ்ந்து பாடல்களை பாடிக்கொண்டு பவனியாக சென்று திருப்பலியில் கலந்து கொள்வர். இது தவக்காலத்தில் ஒவ்வொரு வருடத்திலும் நடக்கின்ற வழக்கமான நிகழ்வுகளாகும்.

இந்த குருத்தோலை ஞாயிறு தினத்திலேயே வருடத்தின் 52வாரங்களில் இந்த வாரத்தை மட்டும் ஏன் புனிதவாரம் என்றழைக்கவேண்டும் என எம்மில் கேள்வி எழலாம். இயேசு இவ்வுலகில் வாழ்ந்த இறுதி நாட்களே இந்த புனித வாரம்.

வருடந்தோறும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் 40 நாட்களை கத்தோலிக்கத் திருச்சபை ஆண்டவரின் திருப்பாடுகளை தியானிக்கும் தவக்காலமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

இக்காலங்களில் மக்கள் பல்வேறு ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொண்டு செப தபங்களில் ஈடுபடுவதுடன் சிலுவைப் பாதை யாத்திரைகளையும் மேற்கொள்வர்.

இக்காலத்தில் 14 நிலைகளைக் கொண்ட சிலுவைப் பாதைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

ஆலயங்களிலும், கல்வாரி யாத்திரை ஸ்தலங்களிலும் இந்த 14 நிலைகளும் தியானிக்கப்பட்டு சிலுவைப்பாதை தியானம் முன்னெடுக்கப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை குறிப்பாக தெற்கில் காலி மாவட்டத்தில் ஹினிதும, மக்கோன, கண்டி, ராகமை தேவத்தை, மாத்தளை மாவட்டத்தில் வஹக் கோட்டை மற்றும் வடக்கு, கிழக்கில் பல்வேறு கல்வாரி புனித ஸ்தலங்கள் காணப்படுகின்றன.

இந்த தவக்காலத்தில் மக்கள் அங்கு யாத்திரையாக சென்று சிலுவைப் பாதை தியானங்களை மேற்கொள்வது வழக்கம்.

தவக்காலத்தில் உபவாசம் மற்றும் விரதங்களை அனுஷ்டித்து ஆண்டவரின் திருப்பாடுகளை மக்கள் தியானிப்பதுடன் தமது பாவ வாழ்விலிருந்து மனமாற்றம் அடைந்து தூய வாழ்வுக்கு தம்மை உட்படுத்திக் கொள்வதற்காகவும் மக்கள் இத்தகைய ஒறுத்தல்களை மேற்கொள்கின்றனர்.

அதேபோன்று ஏழை, எளியவர்களில் கூடுதல் கவனம் செலுத்தி தான, தர்மங்களை செய்வதற்கும் இந்தக் காலம் உபயோகப்படுகின்றது.

உபவாசம் மற்றும் விரதங்களை மேற்கொள்வோர் அதற்காகதாம் ஏனைய காலங்களில் செலவிடும் பணத்தை மீதப்படுத்தி அதனை அவ்வாறு ஏழை எளியவர்களுக்கு வழங்குவதையும் இக்காலங்களில் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

"உன்னை நீ நேசிப்பது போல உன் அயலானையும் நேசிப்பாயாக" என்ற ஆண்டவர் இயேசுவின் கட்டளைகளுக்கு இணங்க பிறர் மீது அன்பு செலுத்தவும் நாம் மனத்தாங்கல் கொண்டவர்களிடம் மன்னிப்புக் கொடுத்து மன்னிப்பை பெற்று அவர்களை முழு மனதுடன் ஏற்றுக் கொள்வதும் இக்காலங்களில் இடம் பெற்று வருகின்றது.

தம் பாவங்களுக்காக மனம் வருந்தி நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்து திவ்விய நற்கருணையை உட்கொள்வது பரிசுத்த வாரத்தில் இடம்பெறும் முக்கிய அம்சமாகும். அதற்காக ஆலயங்களில் விசேட தினங்கள் ஒதுக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இறைவனின் படைப்பான மக்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வு கிடையாது. அனைவருமே சமம் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் நம் ஆண்டவர் இயேசு புனித வியாழன் அன்று தமது சீடர்களின் பாதங்களைக் கழுவி தனது அன்பை வெளிப்படுத்தினார்.

அதன் மூலம் எஜமான் ஊழியர், உயர்ந்தோர் தாழ்ந்தோர், ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு இருக்க முடியாது என்பதை அவர் அந்த செயற்பாட்டின் மூலம் உணர்த்துகின்றார். அவர் அதனை செய்து காட்டி, நீங்களும் ஒருவருக்கொருவர் அதனைப் பின்பற்றுங்கள் என்றும் நமக்கு கற்பிக்கின்றார்.

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து இந்த உலகில் வாழ்ந்த 33 வருட காலத்தில் வாழ்க்கைக்கான சிறந்த போதனைகளை வழங்கியுள்ளார். வெறும் வார்த்தைகளால் மட்டுமின்றி தமது வாழ்க்கையின் மூலம் அதனை செய்து காட்டியுமுள்ளார்.

பெரிய வெள்ளிக்கிழமையன்று கடும் சித்திரவதைகளுக்கு மத்தியில் சிலுவையைச் சுமந்து கல்வாரி மலைவரை அவர் கொண்டு செல்லப்பட்டு சிலுவையில் அறையப்படும் நாள் கிறிஸ்தவ மக்களின் வாழ்வில் மிக முக்கியமான நாளான புனித வெள்ளியாகும்.

இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறுதி மூச்சை விடும் தறுவாயிலும் தன்னை சிலுவையிலறைந்து கொடுமைப்படுத்தி கொலை செய்த பாதகர்களுக்காக இறை தந்தையிடம் மன்றாடுகின்றார்."தந்தையே இவர்கள் அறியாமல் செய்கின்றார்கள். இவர்களை மன்னியும்" என்பதாக அந்த மன்றாட்டு அமைகிறது.


நம் ஆண்டவர் இயேசு மரித்து மீண்டும் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உலகில் பிறந்த எவரும் மரித்த பின் உயிர்த்ததில்லை. இயேசு அடக்கம் செய்யப்பட்ட மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அவர் மரணத்தையும் உலகத்தையும் வெற்றிகொண்டார்.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த போது பல்வேறு புதுமைகளையும் அற்புதங்களையும் செய்தார். அதன் போது மரித்துப்போன சிலரையும் அவர் உயிர்ப்பித்த சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. சத்திய வேதம் தெரிவித்த தன்படி அவர் மரணித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

நாமும் நமது பாவங்களில் மரித்து அவருடன் உயிர்த்தெழுவதற்காக இந்த பரிசுத்த வாரத்தில் மனம் வருந்தி பாவமன்னிப்பு பெற்று புதிய வாழ்க்கையை பெற்றுக் கொள்வோம். அத்துடன் எம் மத்தியில் வாழும் இல்லாதோருக்கு இருப்பதைக் கொடுத்து உதவுவோம். அவர்களின் மகிழ்ச்சியில் இயேசுவின் உயிர்ப்பை காண்போம். அதுதான் பரிசுத்த வாரத்தை பொருளுள்ளதாக்கும்.

**லோரன்ஸ் செல்வநாயகம்**

---




# இணைய மோசடிகளுக்காக விற்கப்பட்ட இலங்கையர்கள் !

வளமான எதிர்காலத்தை தேடிச் சென்று இறுதியில் சீன இணையவழி மோசடிக்காரர்களிடம் சிக்கிக்கொண்ட இலங்கையைச் சேர்ந்த இளைஞர் குழுவொன்று ஏமாற்றத்துடன் அண்மையில் இலங்கைக்கு திரும்பியது.

தாய்லாந்தில் கணனித்துறையில் அதிக சம்பளத்துடன் வேலை வாங்கித் தருவதாக கூறி இறுதியில் லாவோஸில் சிறைவைக்கப்பட்டு பல்வேறு இன்னல்களை அனுபவித்த சுமார் 24 இளைஞர்களே இவ்வாறு கடந்த வாரம் இலங்கையை வந்தடைந்தனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவினரும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் வர்த்தகம், கடத்தல் விசாரணை மற்றும் சமுத்திர குற்றவியல் தடுப்பு பிரிவினரும் இணைந்து மேற்கொண்ட விசாரணைகளின் ஊடாக இச்சம்பவத்தின் பின்னால் சீனப் பிரஜைகள் குழுவொன்று இருப்பது தெரியவந்துள்ளது.

இணைய வழி ஊடாக மிக பரந்தளவில் இளைஞர் யுவதிகளை இலக்குவைத்து சீனப்பிரஜைகள் குழுவொன்றினால் மனித வியாபாரம் போன்ற மோசடி இடம்பெற்றுவருவதாக தெரியவந்துள்ளது.

போலி வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்டு நிர்க்கதியாகியுள்ளவர்கள் இலங்கையைச் சேர்ந்த அப்பாவி இளைஞர், யுவதிகள். இவர்கள் 20, 26 வயதுக்குட்பட்டவர்கள். தாய்லாந்தில் கணனித் துறையில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். சட்டவிரோதமான முறையில் ஆபத்தான எல்லைப்பிரதேசங்களின் ஊடாகவே இவர்கள் மோசடிக்காரர்களால் லாவோஸ் நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அதன்பின்னர் லாவோஸ் நாட்டில் போக்கியோவிலுள்ள (BOKIO) சீன நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள கட்டடமொன்றில் இவர்கள் சிறைவைக்கப்பட்டுள்ளனர். இந்தப் பகுதி 'தங்க முக்கோணம்' என்ற பகுதியை சேர்ந்ததாக கூறப்படுகின்றது.

லாவோஸ் நில எல்லைகளால் சூழப்பட்ட தென்கிழக்கு ஆசியாவிலுள்ள ஒரு நாடாகும். இது வடமேற்கில் பர்மா மற்றும் சீனாவை எல்லைகளாகவும் கிழக்கே வியட்நாமும் தெற்கிலும் மேற்கிலும் கம்போடியா மற்றும் தாய்லாந்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

லாவோஸின் வடக்குப் பகுதியில் போக்கியோ என்ற இடம் அமைந்துள்ளது. 6196 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் பரந்து விரிந்து கிடக்கும் இப்பகுதி, மக்கள் தொகை குறைந்த பகுதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இங்கிருந்து செல்லும் இளைஞர், யுவதிகளை தாய்லாந்தின் எல்லைப்பகுதிகளிலுள்ள மைக்கோ என்ற ஆபத்தான ஆற்றைக் கடந்து அழைத்துச் செல்வதாகக் கூறப்படுகிறது.

போதைப்பொருள் கடத்தல், மனிதக் கடத்தல், விலங்குகள் கடத்தல் போன்ற சட்டவிரோத கடத்தல்கள் நிறைந்த பகுதியாகவே இது ஆரம்பகாலம் முதல் கருதப்படுகிறது. இங்கு சீனாவின் சித்திரவதை முகாம் இருப்பதாக கூறப்படுகின்றது. தங்க முக்கோணத்தில் அமைந்துள்ள சீன சித்திரவதை முகாமுக்கு இந்நாட்டிலிருந்து இளைஞர்களை அழைத்துச் சென்றதன் பின்னணியில் முக்கிய புள்ளியாக சீனப் பிரஜையொருவர் உள்ளார். அதிவேகநெடுஞ்சாலைகள் அபிவிருத்தி திட்டத்துக்காக சீனப் பிரஜை 2019ஆம் ஆண்டு இலங்கை வந்துள்ளார். பம்பலப்பிட்டிப் பகுதியில் வாடகைக்கு பெற்ற கட்டடமொன்றில் இவரது அலுவலகம் உள்ளது. இதில் இருந்துகொண்டே பல்வேறு மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்துள்ளார்.

இவருக்கு பலமாக அம்பலாந்தோட்டை பகுதியைச் சேர்ந்த ஆங்கில தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவரும் இருக்கின்றார்.

அம்பலாந்தோட்டை நோனாகம பிரதேசத்தில் வசிக்கும் இவர் சீன மோசடிக்குழுவினருடன் நீண்டகாலம் தொடர்புகளை பேணிவந்தவர் என தெரியவந்துள்ளது. தற்போது அவருக்கு நீதிமன்றம் பிணை அனுமதி வழங்காமையால் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவரது உதவியாளராக அனுர சமரநாயக்க என்பவரும் செயற்பட்டு வருகின்றார். அம்பலாந்தோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட இவர் எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நிர்மாண நடவடிக்கைகளின் போதே ஆசிரியருக்கு சீன நாட்டு பிரஜையின் அறிமுகம் கிடைக்கின்றது. இவருடன் மிக நெருங்கிய நட்பை வளர்த்துக் கொண்ட சீன நாட்டுப் பிரஜை, தாய்லாந்தில் சீன நிறுவனங்களால் நடத்தப்படும் கணனி நிறுவனங்களில் படித்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகள் இருப்பதாக கூறியுள்ளார். அவருக்குத் தெரிந்த இளைஞர்கள் யாரேனும் இருந்தால், அந்த வேலைகளுக்கு அவர்களைப் பரிந்துரைக்கலாம் எனவும் சீனநாட்டு பிரஜை கூறியுள்ளார்.

அதிக சம்பளத்துடன் கூடிய வேலை என்றே சொல்லப்பட்டது. ஆங்கில மொழி அறிவும் கணனியைப் பயன்படுத்தும் திறன் மட்டுமே தொழில் தகமைகள் என சீன நாட்டு பிரஜை கூறியுள்ளார். ருவன் பத்திரனவை அவரது ஆங்கில வகுப்புக்கு வரும் இளைஞர்கள் சிலரே முதன்முதலில் சீனநாட்டு பிரஜைக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளனர். இந்த இளைஞர்கள் அம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்களில் வசிப்பவர்கள்.

இரண்டு, மூன்று இலட்சம் சம்பளம் கிடைக்கும் என்ற வாக்குறுதிகளால் ஏமாற்றப்படும் அப்பாவி இளைஞர் யுவதிகளை கடவுச்சீட்டு பெறுவதற்கு ருவன் பத்திரனவே ஊக்கப்படுத்துவார். கொழும்புக்கு அழைத்துவந்து பம்பலப்பிட்டிலுள்ள சீனநாட்டு பிரஜையின் அலுவலகத்தில் நேர்முக பரீட்சைக்கும் ருவன் பத்திரன இளைஞர்களை தயார்ப்படுத்துவார். குற்றப் புலனாய்வுத் திணைக்களம், வர்த்தகம், கடத்தல் புலனாய்வு மற்றும் சமுத்திரவியல் குற்றப்பிரிவு ஆகியவற்றின் விசாரணைகளில் தாய்லாந்தில் கணனி துறையில் பணிகளுக்கு நேர்காணல் செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு பேரைக் கொண்ட குழு முதல் குழு 2019 ஆம் ஆண்டு தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. அவர்களில் மூன்று இளம் பெண்களும் இருந்ததாக தகவல் கிடைத்துள்ளது. இவர்கள் ஆறு பேரும் சுற்றுலா விசா மூலமே தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். எனினும் இதுதொடர்பில் அந்த இளம்பெண்களுக்கு எந்த புரிதலும் இருக்கவில்லை. தாய்லாந்தில் வேலை செய்து கிடைக்கும் பணத்தைப் பற்றி மட்டுமே அவர்கள் சிந்தித்தனர். அதற்குக் காரணம் அவர்கள் ஆங்கில ஆசிரியரான ருவன் பத்திரன மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். தாய்லாந்தின் பாங்கொக் வந்திறங்கிய 6 பேர் கொண்ட இந்த குழுவினரை வரவேற்பதற்காக இரண்டு சீன பிரஜைகள் விமான நிலையத்திற்கு வந்துள்ளனர்.

இவர்கள் இந்த ஆறு பேரையும் வேனில் ஏற்றிக் கொண்டுநீண்டதூரப்பயணமொன்றை மேற்கொண்டனர். சுமார் 08 மணி நேரப் பயணத்திற்குப் பிறகே , அவர்கள் ஆடைகளை மாற்றுவதற்கு அவகாசம் கிடைக்கிறது. அது ஒரு வெறிச்சோடிய ஆள் நடமாட்டமில்லாத பகுதியாகவிருந்தது.

இளைஞர்களுக்கு தாம் எங்கு அழைத்துச் செல்லப்படுகின்றோம் என்பது தொடர்பில் எதுவுமே தெரிந்திருக்கவில்லை. தாம் பணியாற்றப் போகும் இடத்துக்கு அழைத்து செல்கின்றார்கள் என்றே நினைத்திருந்தனர். ஆனால் உண்மையில் அவர்கள் மியன்மார் எல்லைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் ஒரு படகில் அழைத்துச் செல்லப்பட்டு மைக்கோ ஆற்றின் வழியாக லாவோஸிலுள்ள போக்கியோவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஆபத்தான சட்டவிரோத எல்லைகளை கடந்த பிறகு சீன நிறுவனமொன்றின் கட்டுப்பாட்டிலுள்ள கட்டடமொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அந்த கட்டடமே அவர்கள் பணிபுரியும் இடமாகவும் தங்குமிடமாகவும் இருந்தது. கட்டடத்துக்குள் நுழைந்தவுடனே, மேலாளர் என்று நினைக்கக்கூடிய சீனர் ஒருவர் இளைஞர்களின் பாஸ்போர்ட்டுகளை வாங்கிச் சென்றுள்ளார். அங்கு பல நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களும் இருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் சீனர்கள். எந்தகாரணத்திற்காகவும் கட்டடத்தை விட்டு வெளியேறக் கூடாது என முதல் நாளே அங்கிருந்த சீன ஆட்சியாளர் தடை விதித்தார்.

(17 ஆம் பக்கம் பார்க்க)



**வசந்தா அருள்ரட்ணம்**

## இந்தியாவின் ஐந்து... (04ஆம் பக்கத் தொடர்)

2008 ஆம் ஆண்டின் உலக பொருளாதார நிதி நெருக்கடி, சிரியா உள்நாட்டு போர், ஈரானின் அணுசக்தி திட்டம் மற்றும் கொரோனா பெருந்தொற்று வரை G20 மாநாட்டில் விவாதிக்கப்பட்டுள்ளன. இதுவரை ஊழல், பணமோசடி மற்றும் வரி ஏய்ப்பு, வேலை வாய்ப்பின்மை, பயங்கரவாதம், சுகாதார மேம்பாடு, வரி விதிப்பு, வருவாய் குறைவாக உள்ள நாடுகளில் வருமானத்தை பெருக்குவதற்கான முயற்சி என பல உலகளாவிய விவாதங்களை G20 குழு மாநாடு முன்னெடுத்துள்ளது. முக்கியமாக கொரோனா பெருந்தொற்று காலத்தில் வறிய நாடுகளின் கடன்களை ரத்து செய்தும், அந்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்திற்கான பொருளாதார ஊக்குவிப்புகளையும் இந்த குழு ஏற்படுத்தியுள்ளது. உலகளாவிய சுகாதார கட்டமைப்பு, டிஜிட்டல்மயம், நிலையான ஆற்றல் மாற்றம் மற்றும் உக்ரைன் ரஷ்ய போருக்கான கருத்துகளும் கடந்தமுறை மாநாட்டில் விவாதிக்கப்பட்டன. இந்நிலையில் 18 ஆவது ஜி20 மாநாடு இவ்வருடம் இந்தியாவில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இதற்கடுத்து, 19 ஆவது மாநாடு 2024 ஆம் ஆண்டில் பிரேசிலில் நடைபெறும். இவ்வருடத்தில் நடைபெறும் 18 ஆவது மாநாடு இந்தியாவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் எனவும், நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிதும் துணைபுரியும் எனவும் பொருளாதார வல்லுநர்களால் நம்பப்படுகிறது. உலகின் ஐந்தாவது மிகப்பெரிய பொருளாதார நாடாக விளங்கும் இந்தியாவின் ஐந்து ட்ரில்லியன் டொலர் பொருளாதாரம் (USD 5 Trillion Economy) என்ற கனவை அடைய உதவும் வகையிலும், உலகின் மிகப்பெரிய நுகர்வு சந்தையான இந்தியாவில் முதலீட்டை ஈர்க்கவும் இந்த மாநாடு உதவலாம்.

## இணைய மோசடிகளுக்காக... (16 ஆம் பக்கத் தொடர்)

நோய்களுக்கு சிகிச்சை அளிப்பது சீன மக்கள் தான். பலத்த பாதுகாப்பு இருந்ததால் கட்டடத்தை விட்டு வெளியே செல்வது அவ்வளவு எளிதல்ல என்பதை இளைஞர்கள் அப்போது தான் புரிந்துகொண்டனர். இந்த ஆறு பேருக்கும் ஐந்து கையடக்கதொலைபேசிகள் என பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த கையடக்க தொலைபேசிகளிலிருந்தே வேலை செய்ய நியமிக்கப்பட்டனர். அத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட கையடக்க தொலைபேசிகளுக்கு அழகான இளம் பெண்ணின் புகைப்படமும் அனுப்பப்பட்டுள்ளது. அந்த இளம் பெண் அமெரிக்க பணக்கார பெண் என்று சீனத் தலைவரால் இவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. தாய்லாந்தில் கம்யூட்டர் துறையில் பணிபுரியும் நம்பிக்கையுடன் இலங்கையை விட்டு வெளியேறிய இந்த அப்பாவி இளைஞர், யுவதிகள் லாவோஸ் போக்கியோவில் அமைந்துள்ள சீன நிறுவனக் கட்டடத்தில் கைதிகளாக மாற்றப்பட்டனர். அவர்கள் அந்த இளம் பெண்ணின் புகைப்படத்தை கொண்டு போலி பேஸ்புக் கணக்குகள், வாட்ஸ்அப் கணக்குகள், ட்விட்டர் கணக்குகள் போன்றவற்றை உருவாக்க வேண்டும். இதனூடாக அமெரிக்க பணக்காரர்களுடன் தொடர்புகளை பேணவேண்டும். இவ்வாறு அன்றிலிருந்து அமெரிக்காவிலுள்ள பணக்காரர்களின் தலா 50 தொலைபேசி இலக்கங்களை கொடுத்து, அமெரிக்க பெண்களின் பெயரில் போலி சமூக வலைதள கணக்குகளை உருவாக்கி பணக்காரர்களுடன் அரட்டைகள் (Chat )மூலம் தொடர்புகளை பேணவேண்டும் எனப் பணிக்கப்பட்டது. இவர்கள் லாவோஸ் நேரப்படி நள்ளிரவு 12.00 மணி முதல் வேலையைத் தொடங்க வேண்டும். அதற்குக் காரணம் லாவோஸில் நள்ளிரவு என்றால் அமெரிக்காவில் காலை வேலை தொடங்கும் நேரமாக அது இருக்கும். இதனால் இந்த இளைஞர்கள் தொடர்ந்து 12 மணி நேரம் தூங்காமல் உழைக்க வேண்டியிருந்தது. ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு அல்லது மூன்று அமெரிக்கர்களையாவது சமூக வலைத்தளங்களின் ஊடாக மடக்கிப் பிடிக்கவேண்டும் என்பதே அவர்களின் இலக்கு. அந்த இலக்குகளை அடையத் தவறியவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் தண்டிக்கப்பட்டனர். உள்ளங்கால்களை சிறிய கத்திகளால் வெட்டி காயப்படுத்தப்பட்டனர். இவ்வாறான தண்டனைகள் கிடைக்காவிட்டாலும் உணவு, தண்ணீர் இன்றி மணிக்கணக்கில் வெயிலில் வைத்து தண்டிக்கப்பட்டனர். அதுமட்டுமின்றி இளம் பெண்களை கைவிலங்கிட்டு இருட்டு அறையில் அடைத்து வைத்து சித்திரவதையும் செய்தனர். இவர்களுக்கு உறுதியளித்தபடி சம்பளம் வழங்கப்படவில்லை . பல மாதங்களாக கைதிகளாகவே நடத்தப்பட்டனர். அவர்களுக்கு எந்த சுதந்திரமும் கிடைக்கவில்லை. எனவே இறுதியில் அவர்களின் கைகளுக்கு வழங்கப்பட்டிருந்த கையடக்க தொலைபேசிகளின் ஊடாக இலங்கையிலுள்ள குடும்பத்தினருடன் தொடர்பை ஏற்படுத்தி தம்மை காப்பாற்றுமாறு கெஞ்சினர். குடும்பத்தினர் ஆங்கில ஆசிரியரிடம் முறையிட நிலைமை மேலும் சிக்கலானது.

அவர்கள் 6 பேரும் தாய்லாந்துக்கு சட்டவிரோதமாக அழைத்துவரப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டனர். பல நாட்களாக தாய்லாந்தில் சிக்கித் தவித்தவர்கள் தூதரகத்தின் உதவியை நாடினர். இதன்போது அருகிலுள்ள காவல் நிலையத்திற்குச் சென்று சரணடையுமாறு அறிவுறுத்தப்பட்டனர். அதன்படி, தாய்லாந்து காவல்துறையிடம் சென்ற போது விசா காலாவதியாகி விட்டமையால் சிக்கலில் மாட்டிக்கொள்கின்றனர். இதனைத் தொடர்ந்து பல்வேறு இன்னல்களை அனுபவித்த இவர்கள் கடந்த ஜனவரி மாதம் இலங்கையை வந்தடைந்தனர். இதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினரும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மனித கடத்தல், கடத்தல் மற்றும் சமுத்திரவியல் குற்றப் பிரிவினரும் இணைந்து இக் கடத்தல் தொடர்பில் விரிவான விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளனர். மற்றொரு தொகுதி இளைஞர், யுவதிகள் மோசடிக்காரர்களிடம் லாவோஸில் சிக்கியுள்ளமை தெரியவந்துள்ளது. அதில் 30க்கும் அதிகமானவர்கள் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் மோசடிக்காரர்களால் பாதிக்கப்பட்ட இதேபோன்ற 24 பேர் இலங்கையை வந்தடைந்தனர். இவர்களும் சீனர்களால் இணைய மோசடிகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளனர். இலக்கை அடைய முடியாதவர்களை, மின்சாரம் தாக்கியும் சீனர்கள் தண்டித்ததாக கூறுகின்றனர். இவர்கள் பதிவுசெய்யப்பட்ட ஏஜென்சிகளால் வெளிநாடு செல்லவில்லை. இது முற்றிலும் சட்டவிரோதமானது.

அவர்களுக்கு சேவை ஒப்பந்தம் கூட வழங்கப்படவில்லை. அவர்கள் சுற்றுலா விசாவில் தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு லாவோஸ் நாட்டுக்கு இணையமோசடிகளுக்காக விற்கப்பட்டுள்ளனர்.

### பெயர் மாற்ற அறிவித்தல்

கொழும்பு மாவட்டத்தின் கொட்டாஞ்சேனை பிரதேச செயலகப் பிரிவில் கொட்டாஞ்சேனை கிராம அதிகாரிப் பிரிவில் இல. 12, 11ம் ஒழுங்கை கொட்டாஞ்சேனை, கொழும்பு-13 என்ற வீட்டில் வசிக்கும் வினோத்ராஜ் ரத்னராஜ் (Vinothraj Ratnaraj), ரத்னராஜ் வினோத்ராஜ் (Ratnaraj Vinothraj), வினோராஜ் ரத்னராஜ் (Vinoraj Ratnaraj), ஆகிய பெயர்களில் அறியப்படும் நான் இதன் பிறகு வினோத்ராஜ் ரத்னராஜ் (Vinothraj Ratnaraj) என பாவிப்பதாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

**- வினோத்ராஜ் ரத்னராஜ் (Vinothraj Ratnaraj)**

### அவசரம்

**குருதிவகை O இனைக் கொண்ட ஆரோக்கியமான சிறுநீரகத்தை வழங்கக்கூடிய ஓர் கொடையாளி அவசரமாக தேவை**

**ஓர் உயிரைக் காப்பாற்றுங்கள்**

நீங்கள் அவ்வாறு வழங்க விரும்பினால் தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள்

**0715455710/ 0773990881/ 0715872078**

### ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board

வியாழக்கிழமை 2023.03.30 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5075 | ரூ. 27,551,575.00 | L | 2 3 6 2 6 6 |
| கொவிசெத (Govisetha) | 3317 | ரூ. 92,239,409.84 | O | 15 30 48 77 |
| மெகா பவர் | 1423 | ரூ. 311,501,474.00 | P (சுப்பர் இலக்கம் 10) | 21 33 46 56 |
| ஜாதிக சம்பத | 1530 | ரூ. 11,478,778.40 | மேஷம் | 6 3 2 3 9 1 |
| தன நிதானய | 1105 | ரூ. 83,983,185.20 | H | 09 18 33 63 |
| ராசி சுப பலன் (Handahana) | 384 | ரூ. 2,693,615.40 | மீனம் (விசேட இலக்கினம்: மீனம்) | 03 40 47 58 |

மெகா பவர்: அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

### இலங்கையின் முன்னணி பல்தேசிய கம்பனியில்
## விற்பனை பிரதிநிதிகள் வெற்றிடம்

**விற்பனைத் துறையில் ஒரு வருட அனுபவம் கவனத்தில் கொள்ளப்படும்.**

**குறைந்தபட்ச தகைமைகள்**

- ஆங்கில மொழி மற்றும் கணிதத்துடன் க.பொ.த. சா.த. சித்தியடைந்திருத்தல்
- 18 - 35 வயதிற்கிடைப்பட்டிருத்தல்.
- மிக வேகமாக விற்பனையாகும் பாவனைப் பொருட்கள் (FMCG) பற்றிய ஒரு வருட கட்டாய அனுபவம்.

**மாதாந்த முழுமையான ஈட்டல் ரூ. 95,000/-**
**மாதாந்த அடிப்படை சம்பளம் ரூ. 35,000/-**

* நிறுவனத்தின் தேவையைப் பொருத்து நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றல் வேண்டும்.
* மோட்டார் சைக்கிள் ஓட்டும் ஆற்றல் மற்றும் அதற்கான அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்.

குறித்த பிரதேசங்கள்
தலவாக்கலை, இங்கிரிய, அம்பலன்தொட்ட, எம்பிலிபிட்டிய, அக்குரெஸ்ஸ, களுத்துறை, பிட்டிகல, சிலாபம், நாத்தாண்டிய, அம்பாறை, ஏறாவூர், வாழைச்சேனை, யாழ்ப்பாணம், கெக்கிராவ, பாணந்துறை, பிலியந்தலை, கம்பளை, அனுராதபுரம்

Australian Talent Network

**ATN Services (PVT) Ltd.**
10, Kandy Road, Wedamulla, Kelaniya
Contact Details: Nethmi - 0704200200, Nethma - 0704024580

### பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
## தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள கீழே குறிப்பிட்டுள்ள பதவி தொடர்பாக சிறந்த அனுபவமும் தேவையான தகைமைகளையும் கொண்டுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

**பதவி: பணிப்பாளர் (செயலாக்க அபிவிருத்தி)**

**சேவை வகுதி – சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் - (HM 1-1)**

**சம்பள அளவுத்திட்டம்: 80,295,/=15x2,270/=Rs.114,345/- HM 1-1 2016) (மாதாந்தம்) +**
**அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள்**

**கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விஞ்ஞான துறையில் பெற்ற இளமாணிப் பட்டமொன்று (உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், விவசாயம், உணவு விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடனானது) அல்லது பொறியியல்/ தொழில்நுட்பவியல் ஆகியவற்றில் முதலாம் பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

   அத்துடன்

   உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின் பெற்ற தகைமைப்பட்டமொன்று (Masters') அல்லது பதவியின் பாடப்பரப்பிற்கு உரித்தான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் இணை அங்கத்துவம்

   மற்றும்

   அரசாங்க, அரச கூட்டுத்தாபன, நியதிச்சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்தான துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவம்.

   அல்லது

2. பதவிக்கான தொடர்புடைய துறையொன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் முழுமையான அங்கத்துவம்.

   மற்றும்

   அரசாங்க, அரச கூட்டுத்தாபன, நியதிச்சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்தான துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது**

மேலே குறிப்பிட்டவாறு வெளிவாரி விண்ணப்பதாரிகளினால் தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.

அல்லது

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 1ஆம் தரத்தில் முகாமைத்துவ மட்டத்தில் (MM 1-1) தொடர்புடைய துறையில் 05 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**
விண்ணப்பங்களை முடிவுறுத்தப்படும் திகதியன்று விண்ணப்பதாரிகள் 35 வயதிற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தர சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

தெரிவு செய்யும் முறைமை: கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமாக தெரிவு மேற்கொள்ளப்படும்.

**ஏனையவை:**

i. இலங்கை பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. மிகச் சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**அனுகூலங்கள்:**

1. 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க சட்டத்தின் கீழான பணிக்கொடை.
2. அலுவலர்களுக்கான மருத்துவ காப்புறுதி திட்டம் மற்றும் தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம்.
3. ஊழியர் சேமலாப நிதியம் - ஊழியர் 10%, தொழில் வழங்குநர் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் - தொழில் வழங்குநரினால் 3% பங்களிப்பு.
4. அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான ஏனைய மேலதிக அனுகூலங்கள்.
5. பொது தொழில்முயற்சி சுற்றறிக்கைகளின் பிரகாரம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.

விண்ணப்பதாரியின் தற்போதய தொழில், சம்பள விபரங்கள், காலப்பகுதியுடனான முன்னைய பதவிகள் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் விண்ணப்பதாரியின் ஏனைய அனைத்து விபரங்கள் அத்துடன் பிறப்பு சான்றிதழ், கல்விசார், தொழில்சார் மற்றும் சேவை சான்றிதழ்கள் 2023.04.21ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியானது குறிப்பிடப்படல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள்/ மாகாண அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டுமென்பதுடன் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் நிரந்தரமாக ஏற்கனவே இருப்பவர்கள் அவர்களின் விண்ணப்பங்களை அதிகாரசபையின் உரித்தான பிரிவு தலைமைகளூடாகவே சமர்ப்பித்தல் வேண்டும்.

மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் அல்லது திணைக்களங்களின் /நிறுவனங்களின் தலைமையூடாக அனுப்பப்படாதவைகள் நிராகரிக்கப்படும்.

2023-03-05ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் ஏற்கனவே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை.

இந்த விளம்பரமானது தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் **www.cda.gov.lk** என்ற இணையதளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

**தலைவர்,
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை,
இல.: 54, நாவல வீதி,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு-05.**

### வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி

## LECO பாவனையாளர் சேவை நிலையத்திற்காக வாடகைக்கு அல்லது குத்தகைக்கு கட்டிடமொன்று தேவை - வத்தளை

**விலைமனு இல.: LECO/23/NCB/PR4/065**

உடன் குடிபுகுதலுக்காக 20 அடி அகலத்திற்கு குறையாத அணுகு வழிகளும் கொண்ட 2000 ச.அடிக்கு குறையாத இடப்பரப்புள்ளதும் பாவனையாளர் சேவை நிலையமாக பாவிப்பதற்காக வத்தளை பிரதேசத்தில், நீர்கொழும்பு வீதியில் (பேலியகொடவிலிருந்து மாபோலயிலுள்ள அதிவேக நெடுஞ்சாலைக்கு) அல்லது நீர்கொழும்பு பழைய வீதி அல்லது ஹுணுப்பிட்டிய வீதி (ஹெந்தள சந்தியிலிருந்து புகையிரத கேட் வரையும்) பிரதான வீதிக்கு முகப்பாக அல்லது அருகாமையில் அல்லது அவிரிவத்த வீதியூடாக அல்லது ஹேக்கித்த வீதி அல்லது ஸ்ரீ விக்ரம வீதி அல்லது தெலங்கபாத்த வீதி அல்லது அல்விஸ் வீதி ஆகிய அமைவிடங்களில் கட்டிடமொன்று தேவை. இந்த இடப்பரப்பில் மின்சாரம், தொலைபேசி, நீர் மற்றும் வடிகாலமைப்பு வசதிகள் இருத்தல் வேண்டும். இந்த ஆதனமானது ஏறத்தாழ 40 பேர்ச்சுக்கள் விஸ்தீரணமுடையதாகவிருப்பதுடன் சுற்று வட்டச் சுவர் விரும்பத்தக்கது.

வாடகைக்கு அல்லது குத்தகைக்கான கால எல்லையானது 02 வருடங்களாகும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2023.04.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படுமென்பதுடன் விலைமனுக்களை மூடிய பின்னர் அவைகள் விரைவாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் முன்வைப்புக்களை இந்த பெறுகைக்கு உரித்தான விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள பணிப்புரைகளின் பிரகாரம் விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்கள் பின்வரும் முழுமையான விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- விலைமனு ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டவாறான அனைத்து விபரங்கள்.
- எதிர்பார்க்கப்படும் வாடகை / குத்தகை தொகை.
- உரித்துறுதி, கட்டிடத்தின் விபரங்கள் மற்றும் அளவை வரைபட பிரதிகளுடனான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்.

இந்த பெறுகைக்கான விலைமனுக்கோரல் ஆவணத்தை **www.leco.lk** ("Tender Notice" Section) என்ற இணையதளத்தை அல்லது **www.promise.lk** என்பதனை பார்வையிடுவதன் மூலம், அல்லது 011-2371637 என்பதன் வழியாக LECO பெறுகைப் பிரிவை தொடர்பு கொள்வதன் மூலம் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

முன்வைப்புக்கள் பதிவுத் தபாலில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படலாம் (விலைமனுக்களை மூடும் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னராக லங்கா மின்சார கம்பனியில் அவைகள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்) அல்லது விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னராக கம்பனியின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

இடப்பரப்புக்களின் உரிமையாளர்கள் மாத்திரமே அவர்களின் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை மற்றும் விலைமனுவின் தலைப்பு குறிப்பிடப்படல் வேண்டும்.

எந்தவொரு தெளிவுறுத்தல்களுக்கும், தயவு செய்து மனித வளங்கள் மற்றும் நிருவாகத்திற்கான மேலதிக பொது முகாமையாளருடன் 011-2371600 என்ற இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்
வரையறுக்கப்பட்ட (தனியார்)
லங்கா மின்சார கம்பனி
ஈ.ஏச். குரே கட்டிடம்
411, காலி வீதி,
கொழும்பு-03.**

**பெறுகை அறிவித்தல்**
**www.leco.lk**

### இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்

## பெறுகை அறிவித்தல்

### கொழும்பு-04, பம்பலப்பிட்டியில் குத்தகைக்கு / வாடகைக்கு கட்டிடமொன்றை பெற்றுக் கொள்ளல்

**Tender Reference: AD/1/BLG/COL04/19/2023**

**2023 ஏப்ரல் 25 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு மூடப்படும்**

கொழும்பு-04, பம்பலப்பிட்டியில் வாடகை/ குத்தகைக்கு இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனத்தினால் ராஜ்ய ஒசுசலவின் கிளையை மீளமைப்பதற்காக கட்டிடமொன்றை பெற்றுக் கொள்வதற்காக கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

**உத்தேசிக்கப்பட்டுள்ள அமைவிடங்களுக்காக எதிர்பார்க்கப்படும் தகவுத்திறன்கள் பின்வருமாறு:**

- கட்டிடமானது 2000-2500 சதுர அடி பிரதேசமுள்ள தரை மாடியொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- வர்த்தக பிரதேசமொன்றில் அல்லது அதனைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் அமைந்திருத்தல் வேண்டும் **(பிரதேசத்தின் மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்) (கொழும்பு-04,05 மற்றும் 06 ஆகியன விருப்பத்திற்குரியன)**
- பொதுமக்களுக்கான சிறப்பான அணுகுவாசலிருத்தல் வேண்டும்.
- சிறந்த முன்தோற்றமிருத்தல் வேண்டும்.
- மூன்று கட்ட மின்சாரம், நீர், தொலைபேசி, வாகன நிறுத்துமிட வசதிகள் மற்றும் கழிவறைவசதிகள் அத்துடன் wash basin or sink.
- தரைப் பிரதேசத்தில் ஓடு பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- உள்ளக வெப்பநிலையை 25° C இற்கு பேணக்கூடிய வளிசீராக்கப்பட்ட கட்டிடமொன்று சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**முத்திரையிடப்பட்ட முன்வைப்புக்கள் பின்வரும் விபரங்களை கொண்டிருத்தல் வேண்டும்.**

- பெயர்:
- உரிமையாளரின் முகவரி
- அமைவிட முகவரி
- தொடர்பு இல. (செயற்படுத்துதலின் போது)
- ச.அடியின் எண்ணிக்கை
- எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை
- எதிர்பார்க்கப்படின் பாதுகாப்பு வைப்பு

அமைவிட வரைபடம், கட்டிட வரைபடம், உறுதியின் பிரதியொன்று, பிரித்தெடுப்பு ஆகியன ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு'', என முகவரியிடப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2023 ஏப்ரல் 25 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் வழங்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

**கேள்விதாரர் பின்வரும் நிபந்தனைகளுக்கு கண்டிப்பாக அமைந்தொழுகல் வேண்டுமென்பதுடன் கேள்விகள் கட்டிடத்தின் உரிமையாளரினால் மாத்திரமே முன்வைக்கப்படல் வேண்டும்.**

1. முன்வைப்புக்கள் இரு பிரதிகளில் தெளிவாகவும் தனித்தனியாகவும் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல் பிரதியென'' அடையாளமிடப்பட்டு இரு தனித்தனியான தபாலுறைகளில் உள்ளடக்கப்படல் வேண்டும் (Staple Pins பாவிக்கப்படக்கூடாது)
2. **''கேள்வி இலக்கம், மூடும் திகதி மற்றும் நேரம்'' ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்துரைக்கப்படல் வேண்டும்.**
3. மாற்றுவழியான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

கேள்விகள் அவைகளை மூடிய பின் உடனடியாகவே திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியானவர் கேள்விகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்,
''மெஹெவர பியச'', 16 ஆம் மாடி, இல. 41,
கிருள வீதி, கொழும்பு-05.
தொலைபேசி: 0112 320 356 – 9**

# களனி பிரதேச சபை

## பெறுகை அறிவித்தல்

களனி பிரதேச சபையின் தலைவரினால் பின்வரும் வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக CIDA தகைமைகளைக் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | செயற்றிட்டம் | செயற்றிட்டக் காலப்பகுதி | வேலையின் மதிப்பீட்டுப் பெறுமதி (வெட் சகிதம்) ரூபா | மீளளிக்கப் படும் விலைமனுப் பிணை முறி ரூபா | CIDA பதிவு | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | நாஹேன பல்காரிய கட்டிடத்தின் மீதமாகவுள்ள பகுதியை நிறைவு செய்தல் | 03 மாதங்கள் | 10,000,000.00 | 100,000.00 | C 7 அல்லது C 6 | 5,000.00 |

01. விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும்போது மேற்குறிப்பிடப்பட்ட வகையில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். மீளளிக்கப்படும் விலைமனுப் பிணையை ரொக்கப் பணத்தில் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி, காப்புறுதி நிறுவனத்தின் ஊடாகப் பெற்றுக்கொண்ட இரத்துச் செய்ய முடியாத, நிபந்தனைகள் அற்ற விலைமனுப் பிணை முறியை 2023-06-01ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் மற்றும் அப்பெறுமதிக்கான விலைமனுப் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. கைச்சாத்திடுகையில் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையை ரொக்கப் பணத்தில் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி, காப்புறுதி நிறுவனத்தின் ஊடாகப் பெற்றுக்கொண்ட இரத்துச் செய்ய முடியாத, நிபந்தனைகள் அற்ற உடன்படிக்கை காலத்திற்குப் புறம்பாக மேலும் 02 மாத காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் மற்றும் அப்பெறுமதிக்கான செயலாற்றுகை பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. உரிய கட்டணங்களைச் செலுத்தி கைத்தொழில் பிரிவிலிருந்து 2023-04-02ஆம் திகதி முதல் 2023-04-24ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து இரு உறைகளையும் ஒரு உறையிலிட்டு முத்திரைக் குறி பொறித்து சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் செயலாளர், களனி பிரதேச சபை, களனி எனும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து அலுவலகத்தின் செயலாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் 2023-04-25ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவைகள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் குறித்த விலைமனுவைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்த நிறுவனம் அல்லது அவரது எழுத்து மூல அனுமதி வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம் என்பதுடன் விலைக்கோரல் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை களனி பிரதேச சபையின் கேள்விக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

பின்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
011-2914110

**தலைவர்,**
**களனி பிரதேச சபை.**
**2023.03.29**

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் – கமத்தொழில் அமைச்சு**

**IDA Credit No.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

### மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு கடினப்படுத்தப்பட்ட திசு வளர்ப்பு (Hardened Tissue Culture) அன்னாசிக் கன்றுகளை (வகை MD2) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு கடினப்படுத்தப்பட்ட திசு வளர்ப்பு (Hardened Tissue Culture) அன்னாசிக் கன்றுகளை (வகை MD2) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.

2. மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு கடினப்படுத்தப்பட்ட திசு வளர்ப்பு (Hardened Tissue Culture) அன்னாசிக் கன்றுகளை (வகை MD2) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | எண்ணிக்கை | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு கடினப்படுத்தப்பட்ட திசு வளர்ப்பு அன்னாசிக் கன்றுகளை (வகை MD2) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | LK-MOA- PMU-315512-GO-RFB | 2,400,000 | 2,592,000.00 | 20,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக 2023-04-03ஆம் திகதியிலிருந்து 2023-04-24ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. 2022-04-24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2022-04-24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ''மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு கடினப்படுத்தப்பட்ட திசு வளர்ப்பு அன்னாசிக் கன்றுகளை (வகை MD2) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிபிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**
**திகதி: 2023-04-02.**

# புளு டயமன்ட்ஸ் ஜுவலரி வேர்ல்ட்வைட் பிஎல்சி (PQ 94) இன் பங்குதாரர்களுக்கான அறிவித்தல்

736,504,455 சாதாரண வாக்குப் பங்குகளில் தற்காலிக ஒதுக்கீடு மற்றும் 486,584,058 சாதாரண வாக்குரிமையற்ற பங்குகள் தொடர்பில் கருத்தில்கொள்வது மற்றும் பொருத்தமாயின் சாதாரண தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக 2023 ஏப்ரல் 21ஆம் திகதி முறையே மு.ப. 10.00 மணிக்கும் 10.15 மணிக்கும் புளு டயமன்ட்ஸ் ஜுவலரி வேர்ல்ட்வைட் பிஎல்சி இன் அதிவிசேட பொதுக் கூட்டம் (EGM) மெய்நிகர் கூட்டம் ஒன்றாக நடத்தப்படவுள்ளது.

இந்த EGM இல் பங்கேற்பதற்கு விரும்பும் பங்குதாரர்கள் 2023 ஏப்ரல் 19ஆம் திகதி பி.ப. 4.00 மணிக்கு முன்னர் https://www.bluediamondsplc.com/egm-2023-registration என்ற முகவரி ஊடாக தமது விபரங்களை பதிவு செய்ய கோரப்படுகின்றனர்.

இந்த சந்திப்பின் அறிவித்தல் மற்றும் பிரதிநிதியின் வடிவத்தை கொண்ட பங்குதாரர்களின் சுற்றுநிருபம் கொழும்பு பங்குச் சந்தை இணையதளம் (www.cse.lk) மற்றும் நிறுவனத்தின் இணையதளத்தில் (www.bluediamondsplc.com) கிடைக்கப்பெறும்.

**ஜனஷக்தி கோர்பரேட் சேர்விசஸ் லிமிடெட்**
**செயலாளர்கள்**

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

# காதி நீதிபதிகளை நியமித்தல் - 2023

## நீதிச்சேவை ஆணைக்குழு

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் பின்வரும் அட்டவணையில் உள்ள பிரதேசங்களுக்கான 'காதி' பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. பேருவளை | 2. போறா சமூகம் | 3. ஹட்டன் | 4. கொழும்பு வடக்கு |
| 5. கொழும்பு தெற்கு | 6. ஹொரணை | 7. மாத்தறை | 8. பாணந்துறை |
| 9. வவுனியா | 10. யாழ்ப்பாணம் | | |

**அடிப்படைத் தகைமைகள்**

- இஸ்லாம் சமயத்தைச் சார்ந்த 40 வயதுக்கு மேற்பட்ட விவாகமான ஆணாக இருத்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக இருத்தல். அல்லது
- முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக இருத்தல் அல்லது
- கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக இருத்தல், அல்லது
- சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்கு சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக இருத்தல், அல்லது
- ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான அரச உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

**ஏனைய தகைமைகள்**
விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக இஸ்லாமிய சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும், மதிப்பும் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற காலப்பகுதிக்காக நியமனம் செய்யப்படுவார்.

காதியாக நியமிக்கப்படுபவர் தான் நியமனம் பெறும் பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசித்தலானது சட்டரீதியான தேவைப்பாடாக கருதப்படும்.

**கொடுப்பனவுகள்**
மாதாந்தக் கொடுப்பனவாக ரூபா 7,500/- மற்றும் உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் ரூபா 6,250/- கொடுப்பனவொன்றுமாகச் சேர்த்து மொத்தமாக ரூபா 13,750/- வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதி**
2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி

**விண்ணப்பிக்கும் முறை மற்றும் மேலதிக விபரங்கள்**
2023.03.31ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியை பார்க்கவும்.

அரச வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

**சிரேஷ்ட உதவிச்செயலாளர்,**
**காதிப் பிரிவு,**
**நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,**
**த.பெ.இல. -573, கொழும்பு-12**
**0112433119/ 0112451159**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

பாதுகாப்பு அமைச்சு
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## விலைமனுக்கோரல்

### ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் அரங்க கட்டிடத்திற்காக முன்மொழியப்பட்ட சூரிய விளக்குகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல்

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
ஒப்பந்த இலக்கம் : **KDU/PRO/RP&SERVICE(AUD)/ 14/2022**

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக அரங்க கட்டிடத்திற்காக முன்மொழியப்பட்ட சூரிய விளக்குகளை வழங்க மற்றும் நிறுவுவதற்காக தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் 2023.04.03 ஆம் திகதியிலிருந்து 2023.04.26 ஆம் திகதி வரை மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.15.00 மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத ரூ.12,500/- கட்டணத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொருளாளரிடம் செலுத்தி பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

3. மனு ஆவணங்களை மேற்குறிப்பட்டுள்ள முகவரியில் 2023.04.03 முதல் 2023.04.26 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப.09.00 மணி முதல் பி.ப.15.00 மணி வரை சரிபார்க்கலாம் (தொலைபேசி 0710219449 தொலைநகல் 011-2632430)

4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.

5. 2023.04.27 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.

6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி-**0710219449 / 011-2632430** தொலைநகல் 011-2632430, **directorlogistics@kdu.ac.lk / ocrepair@kdu.ac.lk** மற்றும் **www.kdu.ac.lk/ocls/tender-notices** பார்வையிடலாம் விலைமனுக்கோரல்)

தவிசாளர்
திணைக்களத்தின் பெறுகைக் குழு,
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,
இரத்மலானை, இலங்கை.

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to. classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 | 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service

SPMC

# பதவி வெற்றிடங்கள்

## அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

## சுகாதார அமைச்சு

பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுள்ள துடிப்பான, சுயமாக சிந்தித்து செயலாற்றக் கூடிய, தொழிலில் சாதனை படைக்கக் கூடிய SPMC உடன் இணைய ஆர்வமுள்ளவர்களை நாம் அழைக்கின்றோம்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும்:

i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்

ii. பதவியின் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கான உடல், உள ஆரோக்கியமும் தீவின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கான தகுதியும் இருத்தல் வேண்டும்.

iii. சிறந்த குணநலன்களை உடையவராக இருத்தல் வேண்டும்

### 1. பொறியியல் முகாமையாளர் - மின்னியல்

**(MANAGER ENGINEERING-ELECTRICAL) (MM-1-1 தரம் II)**

**தகைமைகள்: வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(அ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட மின்னியல் விடயம் அடங்கலாக பொறியியல் விஞ்ஞானமாணிப் (Bsc) பட்டம்

**அல்லது**

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / நிறுவனமொன்றில் பெறப்பட்ட பொறியியல் இளமாணிப் பட்டத்திற்குச் சமமான வேறு தகைமை

**அத்துடன்**

(iii) கீர்த்திபெற்ற வர்த்தக நிறுவனம் அல்லது மருந்தாக்கல் / உணவு / கூட்டுத்தாபனம் / சபை / நியாயாதிக்க சபையில் மின்னியல் பொறியியல் சம்பந்தப்பட்ட துறையில் தகைமைக்குப் பின்னரான 03 வருட அனுபவம்

**அல்லது**

(iv) NDT சான்றிதழ் (மின்னியல்) அல்லது பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (NDES)

**மற்றும்**

(v) நியாயாதிக்கச் சபை / சபை / கூட்டுத்தாபனம் / அரச துறையில் எட்டு (08) வருட மின்னியல் பொறிமுறை வேலையில் அனுபவம் அல்லது கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் மேற்பார்வை தரத்தில் 03 வருட அனுபவம்

**மற்றும்**

(ஆ) கணனி அறிவு

### 2. தரக் கட்டுப்பாட்டு முகாமையாளர்

**(MANAGER QUALITY CONTROL) (MM-1-1 தரம் II)**

**தகைமைகள்: வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(அ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட இயற்கை விஞ்ஞானத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) பட்டம் அல்லது இரசாயனவியலில் விசேடப் பட்டம்

**அத்துடன்**

(ii) கீர்த்திபெற்ற வர்த்தக நிறுவனம் அல்லது அரச / கூட்டுத்தாபனம் / சபை / நியாயாதிக்க சபையில் மருந்தாக்கல் தர உறுதி / இரசாயனவியல் பகுப்பாய்வு தொடர்பான துறையில் தகைமைக்குப் பின்னரான 03 வருட அனுபவம்

**அல்லது**

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இரசாயவியலை உள்ளடக்கிய விஞ்ஞான இளமானிப் (Bsc) பொதுப் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமை

**அத்துடன்**

(iv) கீர்த்திபெற்ற வர்த்தக நிறுவனம் அல்லது அரச / கூட்டுத்தாபனம் / சபை / நியாயாதிக்க சபையில் மருந்தாக்கல் தர உறுதி / இரசாயனவியல் பகுப்பாய்வு தொடர்பான துறையில் தகைமைக்குப் பின்னரான 05 வருட அனுபவம்

(ஆ) கணனி அறிவு

**தகைமைகள்: உள்வாரி விண்ணப்பதாரிகள் (1) மற்றும் (2)ஆம் பதவிகளுக்கு**

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளைப் பெற்றிருத்தல்
2. இயைபுடைய பதவிக்கான விடயப் பரப்பில் கனிஷ்ட முகாமைத்துவ (JM 1-1) வகுதிப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 5 வருட கால திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை** : 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறைமை** : போட்டி ரீதியிலான எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

### 3. சட்ட அதிகாரி (LEGAL OFFICER) (MM-1-1 தரம் II)

**தகைமைகள்: வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்ட இளமாணிப் பட்டம் (LLB) சகிதம் ஒரு சட்டத்தரணி

**மற்றும்**

கீர்த்திபெற்ற வர்த்தக நிறுவனம் அல்லது அரச / கூட்டுத்தாபனம் / சபை / நியாயாதிக்க சபையில் சட்டம் சம்பந்தப்பட்ட துறையில் தகைமைக்குப் பின்னரான குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவம்

**மேற்கூறப்பட்ட பதவிக்கான உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளைப் பெற்றிருத்தல்.

மேற்கூறப்பட்ட (1), (02) மற்றும் (03)ஆம் பதவிகளுக்குப் பொதுவானவை.

- **சம்பள அளவு** : MM 1- 1 ரூபா **53,175/= - 10 x 1,375/= - 15 x 1,910/= - 95,575/=**
  மேற்படி சம்பளத்திற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- **வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.
- **ஆட்சேர்க்கும் முறை** : எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்

### 4. தரக் கட்டுப்பாட்டு உதவியாளர் பதவி

**(QUALITY CONTROL ASSISTANT) (MA-2-1 தரம் III)**

**தகைமைகள்: வெளிவாரி அபேட்சகர்கள்**

(அ) **கல்வி/ தொழில்சார்**

(i) கபொத (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் எண்கணிதம் உட்பட்ட பாடங்களில் 04 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

(ii) கபொத (உ/த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) இரசாயனவியலில் திறமைச் சித்தி உட்பட (பொது வினாத்தாள் நீங்கலாக) விஞ்ஞானப் பாடங்களில் 02 திறமைச் சித்திகள் சகிதம் 03 பாடங்களில் சித்தி.

**அல்லது**

கபொத (உ/த) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) விஞ்ஞானப் பாடங்களில் 02 திறமைச் சித்திகள் உட்பட 03 பாடங்களில் சித்தி

**அத்துடன்**

(iii) கணனி அறிவாற்றல் மேலதிகத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**அத்துடன்**

(iv) கீர்த்திவாய்ந்த மருந்தாக்கற் உற்பத்தி நிறுவனமொன்றில் 02 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) **பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்தல் -** மேற்படி **(i)** மற்றும் **(ii)** சகிதம் பயிலுநர்களை ஆட்சேர்த்தல்

அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் பயிலுநர் தரக் கட்டுப்பாட்டு உதவியாளராக 1 1/2 வருட காலப்பகுதியைக் கொண்ட (NVQ 5ஆம் மட்டத்திற்குச் சமமான) உள்ளக பயிற்சியினை பூர்த்திசெய்தல் வேண்டும். தரக் கட்டுப்பாட்டு உதவியாளராக நிரந்தர சேவையில் உள்ளீர்ப்பதற்கான முன்தேவைப்பாடாக எழுத்து மூலமான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) பயிற்சிக் காலத்தின்போது பயிலுநர்களுக்கு கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

### 5. களஞ்சியக் காப்பாளர் பதவி

**(STORE KEEPER) (MA-2-1 தரம் III)**

**தகைமைகள்: வெளிவாரி அபேட்சகர்கள்**

(அ) **கல்விசார்ந்தது**

(i) கபொத (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட்ட பாடங்களில் 04 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி.

**அத்துடன்**

(ii) கபொத (உ/த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) பொது வினாத்தாள் நீங்கலாக விஞ்ஞானத்துறையில் 02 பாடங்களில் சித்தி.

**அல்லது**

கபொத (உ/த) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) விஞ்ஞானத்துறையில் 02 பாடங்களில் சித்தி

**அத்துடன்**

(iii) கணனி அறிவு

**அத்துடன்**

(ஆ) அரசாங்க கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு வருட பட்டப்பின் தகைமை அனுபவம்.

**அத்துடன்**

(இ) **தொழில்சார்ந்தது:** தேசிய வாழ்தொழில் தகைமை (NVQ) 5ஆம் மட்டத்திற்கு குறையாத வகையில் கொள்வனவு செய்தல் அல்லது பொருட்பதிவேட்டு முகாமைத்துவத்தில் டிப்ளோமா.

**தகைமைகள் : (4) மற்றும் (5) வரையான பதவிகளுக்கான உள்ளக விண்ணப்பதாரிகள்**

ஆரம்ப மட்ட திறனற்ற ஓரளவு திறனுள்ள, திறனுள்ள வகுதிகளில் SPMC இன் ஊழியரொருவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களம் / தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் க. பொ. த. சா/த பரீட்சையில் சித்தி மற்றும் தொழிற் பயிற்சி தகைமைகள், உரித்தான அனுபவத்தை பெறும் வகையில் நிரந்தர பதவியில் 05 வருட திருப்திகரமான தொடர்ச்சியான சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### 6. பராமரிப்பு தொழில்நுட்பவியலாளர் பதவி

**(மின்சாரம்/ இலத்திரனியல்/ பொறிமுறை/ வளிச்சீராக்கம்) (MA-2-1 தரம் III)**

**MAINTENANCE TECHNICIAN - (Electrical/Electronic/Mechanical & Aircondition)**

**தகைமைகள்: வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(அ) **கல்வி / தொழில் சார்ந்தது**

(i) இயைபான துறையில் தொழில்நுட்ப கல்லூரிகளினால் நடாத்தப்படும் பொறிமுறையியல் டிப்ளோமா கற்கைநெறி (NVQ - 5ஆம் மட்டத்திற்கு நிகரானது)

**அத்துடன்**

அரசாங்க கூட்டுத்தாபனம், சபை அல்லது கீர்த்திவாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு (01) வருட பட்டத்திற்கு பின்னரான அனுபவம்

**அல்லது**

(ii) இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தினால் இயைபான துறையில் நடாத்தப்படும் நான்கு வருட (04) கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

**அத்துடன்**

அரசாங்க கூட்டுத்தாபனம் சபை அல்லது கீர்த்திவாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட பட்டத்திற்கு பின்னரான தகைமைப் பட்ட அனுபவம்

**தகைமைகள்: மேற்படி பதவிக்கான உள்ளக விண்ணப்பதாரிகள்**

ஆரம்ப மட்ட திறனற்ற ஓரளவு திறனுள்ள, திறனுள்ள வகுதிகளில் SPMC இன் ஊழியரொருவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களம் / தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் க. பொ. த. சா/த பரீட்சையில் சித்தி மற்றும் தொழிற் பயிற்சி தகைமைகள், உரித்தான அனுபவத்தை பெறும் வகையில் நிரந்தர பதவியில் 5 வருட திருப்திகரமான தொடர்ச்சியான சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**(4), (5) மற்றும் (06) பதவிகளுக்கான பொதுவானவை:**

- **சம்பள அளவுத் திட்டம்** : MA 2.1-2016 : ரூபா 30,310/= – 10x300 – 7x350 – 4x495 -20x660 – 50,940/=
- **வயதெல்லை** : 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.
- **ஆட்சேர்க்கும் முறை** : எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்

**மேலதிக அனுகூலங்கள்:**

- வருகைப் பதிவு மற்றும் செயற்பாட்டு ஊக்குவிப்பு பணம்
- பாவிக்கப்படாத வருடாந்த மற்றும் சுகவீன விடுமுறைக்கான மீளப்பெறல் கொடுப்பனவுகள்
- மருத்துவ காப்புறுதி திட்டம் மற்றும் மருத்துவ மீளப்பெறல் வழங்கல் திட்டம்
- EPF இற்கு கூட்டுத்தாபனம் சம்பளத்தின் 15% ஐ பங்களிப்புச் செய்யும் அதே வேளை ஊழியர் 10% ஐ பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
- சம்பளத்தின் 3%ஐ யும் கூட்டுத்தாபனம் ETF இற்கு பங்களிப்புச் செய்யும்
- 1983இன் 12ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பணிக்கொடை சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடை வழங்கப்படும்.
- ஏனைய பக்க நலன்கள்

**பொதுவான அறிவுரைகள்:**

- பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்தி உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர், முகவரி மற்றும் தொடர்புகொள்ளக்கூடிய விபரங்களுடன் சகல கல்விச் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் http://www.spmc.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணைய தளத்திலிருந்து விண்ணப்பப் படிவங்களை தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் நியதிகள் சட்டச்சபை ஊழியர்களின் விண்ணப்பங்கள் உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அவர் தெரிவு செய்யப்பட்டால் நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விடுவிக்கப்படுவார் என சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
- மேற்குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவள எஸ்டேட்,**
**இரத்மலான.**

SPC

## பெறுகை அறிவித்தல்
## இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்

கீழே குறிப்பிட்டுள்ள வகுதிகளுக்கு நாராஹேன்பிட்ட, அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்களை அழைக்கின்றார். மேலும், வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் நாராஹேன்பிட்ட, கிருள வீதி, 41 ஆம் இலக்கத்தின் 16 ஆம் மாடியிலுள்ள ''மெஹெவர பியச'', அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபன வரவேற்பு கருமபீடத்தில் கேள்வி ஆவணமானது இலவசமாக பரீட்சிக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்படலாம்.

| தொ. இல. | அம்சம்/ விளக்கம் | கேள்வி இலக்கம் | மூடும் திகதி | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபாவில்) | கேள்வி ஆவணம் வழங்கும் காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| 01. | காகிதாதி அம்சங்களை வழங்குவதற்கான கேள்வி | AD/2/ STATIONERY ITEMS/20/2023 | 2023.04.26 ஆம் திகதியன்று | 3,000 மற்றும் பெசே வரி | 2023.04.03 ஆம் திகதியிலிருந்து 2023.04.25 ஆம் திகதி வரையும் |
| 02. | நிழற்பட பிரதியாக்கல் தாள்களை வழங்குவதற்கான கேள்வி - 2023 | AD/2/PP/21/2023 | 2023.04.26 ஆம் திகதியன்று | 3,000 மற்றும் பெசே வரி | 2023.04.03 ஆம் திகதியிலிருந்து 2023.04.25 ஆம் திகதி வரையும் |

உங்கள் விலைமனுக்கோரலானது ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம், ''மெஹெவர பியச'', 16 ஆம் மாடி, இல. 41, கிருள வீதி, நாராஹேன்பிட்ட'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது கேள்வியின் மேலே வழங்கப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்தின் பிரகாரம் நிருவாக திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படலாம்.

தாமதமான விலைமனுக்கள ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்காக அனுமதிக்கப்படுவர்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்,**
**''மெஹெவர பியச'', 16 ஆம் மாடி,**
**இல. 41, கிருள வீதி, நாராஹேன்பிட்ட.**
**தொலைபேசி: 2 320356 - 9**

# பிரத்தியேக ஆலோசகர்களைத் தெரிவு செய்தல்

**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP)**

SAPP

## கமத்தொழில் அமைச்சு

கமத்தொழில் அமைச்சின் கீழ் சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) நடைமுறைப்படுத்தப்படுகிறது மற்றும் இதற்கு இலங்கை அரசாங்கத்தினாலும் சர்வதேச விவசாய அபிவிருத்திக்கான நிதியத்தினாலும் (IFAD) கூட்டாக நிதியளிக்கப்பட்டுள்ளது. போட்டித்திறன். வணிக ரீதியிலான உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அமைப்புகளில் ஈடுபட்டுள்ள 57,500 சிறு பங்குடைமை குடும்பங்களின் வருமானம் மற்றும் உணவின் தரத்தை நிலையாக உயர்த்துவதே திட்ட வளர்ச்சியின் நோக்கமாகும். பொது, தனியார், உற்பத்தியாளர் கூட்டாண்மைகள் (4Ps) மூலம் கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய கொள்கை கட்டமைப்பின் கீழ் இலங்கை அரசாங்கம் (GOSL) முன்னுரிமைகளை அடைய சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) கருவியாக உள்ளது.

பின்வரும் பதவிகளுக்கான சிறந்த வேட்பாளர்கள் மிகவும் லட்சியம் கொண்டவர்களாகவும், நிரூபிக்கப்பட்ட தலைமை மற்றும் பேச்சுவார்த்தை திறன்கள், விதிவிலக்கான குழு முகாமைத்துவத் திறன்கள் மற்றும் சிறந்த தனிப்பட்ட திறன்களுடன் பெறுபேறுகளைக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

### 1. சிரேஷ்ட ஆலோசகர் (கமத்தொழில் வியாபார அமுலாக்கம்) - (முழு நேர அடிப்படையில்) - 01 பதவி

**தகுதி மற்றும் அனுபவம்**

கமத்தொழில், கமத்தொழில் பொருளாதாரம், வியாபார முகாமைத்துவம், அபிவிருத்தி ஆய்வுகள், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டம் (Master Degree) பெற்றிருத்தல் அத்துடன் கமத்தொழில் வியாபாரம் மற்றும் செயற்றிட்ட அபிவிருத்தி பரப்பில் குறைந்தபட்சம் 12 வருடகால சிரேஷ்ட முகாமைத்துவ அனுபத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(i) கமத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதில் அனுபவம்
(ii) வியாபார முன்மொழிவுகளை அபிவிருத்தி செய்தல், வர்த்தக அபிவிருத்தி மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விவசாய அமைப்புகளின் திறன் மேம்பாடு குறித்த பயிற்சிகளை வடிவமைத்தல் மற்றும் வழங்குதல் ஆகியவற்றில் அனுபவம்
(iii) நன்கொடையாளர் நிதியுதவி திட்டங்களில் இதே போன்ற பணிகளில் அனுபவம் இருந்தால் ஒரு நன்மை இருக்கும்
(iv) வலுவான நிறுவன திறன்கள் மற்றும் குழு சார்ந்த, மாறும் மற்றும் மாறுபட்ட சூழலில் பணிபுரியும் திறன்

### 2. ஆலோசகர் - வியாபார அபிவிருத்தி - 01 பதவி (முழு நேர அடிப்படையில்) - 01 பதவி

**தகுதிகள் மற்றும் அனுபவம்**

கமத்தொழில், கமத்தொழில் பொருளாதாரம், வியாபார முகாமைத்துவம், அபிவிருத்தி ஆய்வுகள், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டம் (Master Degree) பெற்றிருத்தல் அத்துடன் கமத்தொழில் வியாபாரம் மற்றும் செயற்றிட்ட அபிவிருத்தி பரப்பில் குறைந்தபட்சம் 10 வருடகால தொழில்சார் அனுபத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

i) கமத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதில் அனுபவம்
ii) வியாபார முன்மொழிவுகளை அபிவிருத்தி செய்தல், வர்த்தக அபிவிருத்தி மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விவசாய அமைப்புகளின் திறன் மேம்பாடு குறித்த பயிற்சிகளை வடிவமைத்தல் மற்றும் வழங்குதல் ஆகியவற்றில் அனுபவம்
iii) நன்கொடையாளர் நிதியுதவி திட்டங்களில் இதே போன்ற பணிகளில் அனுபவம் இருந்தால் ஒரு நன்மை இருக்கும்
iv) ஆங்கிலத்தில் பேசும் மற்றும் எழுதும் அறிவு மற்றும் Microsoft Office Package களில் சுயாதீனமாக வேலை செய்யும் திறன்

### 3. ஆலோசகர் (கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு -தரவு பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல்)- (பகுதி நேர அடிப்படையில்) - 01 பதவி

i) வியாபாரம் அல்லது பொது நிர்வாகம், புள்ளிவிபரவியல், பொருளாதாரம், கிராமிய அபிவிருத்தி, அரசறிவியல், திட்ட முகாமைத்துவம் அல்லது தொடர்புடைய துறைகளில் முதுமாணிப் பட்டம் (Master Degree) அல்லது உயர் பட்டம் (அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளமாணிப் பட்டம் பெற்றதன் பின்)
ii) ICT தொடர்பான கல்வி சாதகமாக கவனத்திற் கொள்ளப்படும்
iii) திட்ட முகாமைத்துவம்/ கண்காணிப்பில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் தொடர்புடைய அனுபவம் மற்றும் உள்நாடு அல்லது சர்வதேச அளவில், முன்னுரிமை விவசாய மற்றும் கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களில் முகாமைத்துவ திறனில் மதிப்பீடு.
iv) IFAD முடிவுகள் மற்றும் தாக்க முகாமைத்துவ அமைப்பு போன்ற நன்கொடை நிறுவன அறிக்கையிடலில் அனுபவம் மேலதிக நன்மையாக இருக்கும்.

### 4. ஆலோசகர் - வியாபார அபிவிருத்தி (கமத்தொழில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி) (பகுதி நேர அடிப்படையில்) - 01 பதவி

**தேவைப்படும் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

(i) சிவில் அல்லது இயந்திரவியல் துறைகளில் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்தில் குறைந்தபட்சம் ஒரு பட்டப்படிப்பு அடிப்படைத் தகுதிகளைக் கொண்ட பொறியியலாளர், கிராமிய திட்ட அபிவிருத்தித் துறையில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.
(ii) நிர்மாண சேவைகள் மற்றும் நீர்ப்பாசனம் (விவசாய வீதிகள், கால்வாய் புனரமைப்பு போன்றவை) இயந்திரங்கள்/ உபகரணங்கள் மற்றும் சிவில் வேலைகள் தொடர்பான மதிப்பீடுகள்/ BOQ/ வரைபடங்களை தயாரிப்பதில் குறைந்தது 2 வருட கால அனுபவம்.
(iii) விவசாயம் மற்றும் கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதில் அனுபவம்.
(iv) விவசாயம்/ இயந்திரவியல்/ நீர்ப்பாசனம் போன்ற பல்வேறு துறைகளில் வல்லுநர்கள்/ அதிகாரிகளுடன் பணிபுரிந்த அனுபவம் கூடுதல் நன்மையாக இருக்கும்.

**மேற்கூறப்பட்ட சகல பதவிகளுக்குமான ஏனைய தேவைப்பாடுகள்**

- அதிக உத்வேகம், அர்ப்பணிப்பு மற்றும் விரிவான பயணத்திற்கு தயாராகவிருத்தல்.
- ஆங்கிலத்தில் பேசும் மற்றும் எழுதும் அறிவு மற்றும் Microsoft Office Package களில் சுயாதீனமாக வேலை செய்யும் திறன்
- ஏனைய உள்நாட்டு மொழிகளில் பணிபுரியும் திறன் மேலதிக் தகுதியாக கவனத்திற் கொள்ளப்படும்.
- அதிக சுதந்திரம், நெகிழ்வுத்தன்மை மற்றும் கடுமையான காலக்கெடுவை சந்திக்கும் திறன்.

**கொடுப்பனவுகள்:** முழு நேர அடிப்படையில் - மாதாந்தக் கொடுப்பனவு (பேச்சுவார்த்தை) ஆலோசகரால் முன்மொழிவுகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

பகுதி நேர அடிப்படையில் - மணி நேரக் கொடுப்பனவு (பேச்சுவார்த்தை) ஆலோசகரால் முன்மொழிவுகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

தேர்வு முறை - QCBS (தரத்திற்கு 70% விலைக்கு 30%)

அமைவிடம்: கொழும்பு

இதில் ஆர்வமுள்ளவர்கள் எமது எனும் இணையதளத்திலிருந்து குறிப்பு விதிமுறைகளை (TOR) தரவிறக்கம் செய்துகொள்ளலாம். (இயைபுடைய குறிப்பு விதிமுறைகளை தரவிறக்கம் செய்கையில் **"DOWNLOAD"** தலைப்பாகவும் மற்றும் **"PROCUREMENT"** உபதலைப்பு எனவும் கவனத்திற் கொள்ளவும்.)

உங்களது முன்மொழிவுகளை (குறிப்பு விதிமுறைகளின் (TOR) பிரகாரம் இயைபுடைய விபரங்களுடனான முழுமையான விண்ணப்பம்) 2023 ஏப்ரல் 18ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் தபால் மூலம்/ நேரடியாக பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும் அல்லது மின்னஞ்சலின் விடயத் தலைப்பில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு உங்கள் சுய தரவை procurement@sapp.lk எனும் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யலாம்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயத் தலைப்பில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிப்பிடவும்.

**தலைவர்,**
**ஆலோசகர் பெறுகைக் குழு - செயற்றிட்டங்கள் (CPCP)**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP)**
**இல. 212/A, நாவல வீதி, இராஜகிரிய.**
குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே தொடர்புகொள்ளப்படுவார்கள்.

# அமெரிக்க தூதரகம், கொழும்பு

## பராமரிப்பாளர் [பெண் / ஆண்]

**கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் தமது வசதியளிப்பு முகாமைத்துவ அலுவலகத்திற்கு பராமரிப்பாளர் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.**

**இந்த பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், திருமண உறவு என்பனவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது.**

இந்த பதவியை வகிப்பவர் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின்படி, தூதரக வளாகத்திலும், அமெரிக்க அரசாங்கத்திற்கு சொந்தமான குடியிருப்பு அல்லது குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களிலும் பல்வேறு துப்புரவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**பதவி நிலைக்கான வேலை நேரம் - முழு நேரம் - வாரத்திற்கு 40 மணித்தியாலங்கள்**
**பதவி நிலைக்கான மாதாந்த மொத்த சம்பளம் 278.66 அமெரிக்க டொலர்கள்**

காரியாலய குழுவின் ஊதியம் அமெரிக்க டொலர் நாணய பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஊதியம் வழங்கப்படும் காலவரையறையில் காணப்படும் நாணய மாற்று விகிதத்திற்கமைய இலங்கை ரூபாவில் ஊதிய கொடுப்பனவுகள் செலுத்தப்படும். 2023 மார்ச் 28 அளவில் நாணய மாற்று விகிதம் அமெரிக்க டொலர் 1 = ரூபா. 320.00 ஆகும். இது தூதரக காரியாலயத்தின் தற்காலிக மறுசீரமைப்பு என்பதுடன் கட்டாய உரிமையாக கருதப்படமாட்டாது.

**தேவையான தகுதிகள்:**

1. **கல்வி:** ஆரம்பக் கல்வியை முடித்திருக்க வேண்டும். (க.பொ.த. சாதாரண தரத்தில் அத்தியாவசியப் பாடங்களில் அனைத்து அல்லது குறைந்தது பாதி (50%) பாடங்களில் தோன்றுவது அவசியம்) **(கல்வித் தகைமைச் சான்றிதழ் இணைக்கப்படுவது அவசியம்)**
2. **வேலை முன் அனுபவம்:** பராமரிப்பாளர் அல்லது வீட்டுப் பணியாளர் பதவியில் குறைந்தது ஆறு மாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும். **(தொழில் சார்ந்த அல்லது முன் அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் அவசியம்)**.
3. **மொழித் திறன்:** மட்டம் I (அடிப்படை அறிவு) ஆங்கிலம் வாசித்தல் மற்றும் பேசுதல் அவசியம். **(இவை பரிசோதிக்கப்படும்).** மட்டம் II (வரம்புக்குட்பட்ட அறிவு) சிங்களம் மற்றும் / அல்லது தமிழ் மொழி வாசித்தல் மற்றும் பேசுதல் அவசியம்.
4. **திறன்கள் மற்றும் ஆற்றல்கள்:** அடிப்படை கையேடு பணிகளைச் செய்வதற்கான உடல் திறன், சுய மற்றும் பிறரின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு துப்புரவு உபகரணங்களைப் பயன்படுத்தும் திறன் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். **(வாகனம் செலுத்தும் முறை பரிசோதனை செய்யப்படும்)**.

**விண்ணப்பிக்கும் முறை:**

மேலதிக விபரங்களுக்கு **https://lk.usembassy.gov/embassy/jobs/** என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாக மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு **[ERA]** மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை **மின்னணு பிரதிகளுடன் இலத்திரனியல் ஆட்சேர்ப்பு விண்ணப்பப் பத்திரம் மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.** அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- பிரஜாவுரிமையை சான்றுப்படுத்தும் ஆவணங்கள். (அடையாள அட்டை /கடவுச்சீட்டு மற்றும் /அல்லது வேலை அனுமதி ஆவணங்கள்).
- கல்வி சான்றிதழ்கள்.
- சேவைகால அனுபவ சான்றிதழ்.

**நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

உங்கள் விண்ணப்பம் **2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 14** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எங்களுக்குக்கிடைக்கப்பெற வேண்டும்.
தயவு செய்து கவனிக்கவும் - தகுதியானவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளப்படுவார்கள்.

# அமெரிக்க தூதரகம், கொழும்பு

## பராமரிப்பு மெக்கானிக் / ஜெனரேட்டர் டெக்னீஷியன் (குடியிருப்பு) [பெண் / ஆண்]

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் தமது வசதியளிப்பு முகாமைத்துவ அலுவலகத்திற்கு பராமரிப்பு மெக்கானிக் / ஜெனரேட்டர் டெக்னீஷியன் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

**இந்த பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், திருமண உறவு என்பனவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது.**

நியமனம் பெறுபவர் குடியிருப்பு வசதிகள் பொறியியலாளரின் கீழ் கடமையாற்ற வேண்டும். கடமையேற்கும் ஊழியர் தூதரகத்தில் சொந்த/குத்தகை கட்டடங்களிலுமுள்ள பிரதான மற்றும் தயார் நிலை ஜெனரேட்டர்களுக்கு திறமையான பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்டதாயினும் எந்தவொரு உலகளாவிய பராமரிப்பு முகாமைத்துவ அமைப்பிலும் (GMMS) தடுப்புப் பராமரிப்புப் பணி ஒழுங்கினை பொறுப்புடன் மேற்கொள்ள வேண்டும்.

**பதவி நிலைக்கான வேலை நேரம் - முழு நேரம் - வாரத்திற்கு 40 மணித்தியாலங்கள்**
**பதவி நிலைக்கான மாதாந்த மொத்த சம்பளம் 464 அமெரிக்க டொலர்கள்**

காரியாலய குழுவின் ஊதியம் அமெரிக்க டொலர் நாணய பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஊதியம் வழங்கப்படும் காலவரையறையில் காணப்படும் நாணய மாற்று விகிதத்திற்கமைய இலங்கை ரூபாவில் ஊதிய கொடுப்பனவுகள் செலுத்தப்படும். 2023 மார்ச் 22 அளவில் நாணய மாற்று விகிதம் அமெரிக்க டொலர் 1 = ரூபா. 319.50 ஆகும். இது தூதரக காரியாலயத்தின் தற்காலிக மறுசீரமைப்பு என்பதுடன் கட்டாய உரிமையாக கருதப்படமாட்டாது.

**தேவையான தகுதிகள்:**

1. **கல்வி:** இடைநிலைக் கல்வியை முடித்திருக்க வேண்டும். (க.பொ.த. சாதாரண தரம் - விண்ணப்பதாரி கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் 3 பாடங்களில் திறமைச்சித்தியேனும் (C) உயர் திறமைச்சித்தியேனும் (D) பெற்றிருத்தல் வேண்டும்.) அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியில் சக்தி உற்பத்தி டீசல் இன்ஜின் மெக்கானிக்காகப் பயிற்சி பெற்றிருத்தல். **(கல்வித் தகைமைச் சான்றிதழ் இணைக்கப்படுவது அவசியம்)**
2. **வேலை முன் அனுபவம்:** வைத்தியசாலை அல்லது பல்கலைக்கழகம் போன்ற வர்த்தக நிறுவனங்களில் பிரதான, தயார்நிலை ஜெனரேட்டர் இயக்கல் ,பராமரிப்பில் குறைந்த பட்சம் 3 வருட அனுபவம். அல்லது உள்ளூர் நிறுவனங்களில் பாரிய ஜெனரேட்டர்கள் இயக்குதல், பராமரிப்பு அனுபவம். 45 KVA அல்லது பாரிய ஜெனரேட்டர்களில் இயக்கம், பராமரிப்பு, திருத்த வேலையில் ஒரு வருட அனுபவம். **(தொழில் சார்ந்த அல்லது முன் அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் அவசியம்)**.
3. **மொழித் திறன்:** மட்டம் II (ஆகக்குறைந்த அறிவு) ஆங்கிலம் வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல் அவசியம். **(இவை பரிசோதிக்கப்படும்).** மட்டம் III (சிறந்த தொழில் அறிவு) சிங்களம் மற்றும் / அல்லது தமிழ் மொழி வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல் அவசியம்.
4. **திறன்கள் மற்றும் ஆற்றல்கள்:** ஏற்றுக்கொள்ளப்பட்ட "B" (இதற்கு முன்னர் C, C1) விண்ணப்பங்களில் குறிப்பிட்ட வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் அனுபவம் **(வாகனம் செலுத்தும் முறை பரிசோதனை செய்யப்படும்)**.

**விண்ணப்பிக்கும் முறை:**

மேலதிக விபரங்களுக்கு **https://lk.usembassy.gov/embassy/jobs/** என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாக மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு **[ERA]** மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை **மின்னணு பிரதிகளுடன் இலத்திரனியல் ஆட்சேர்ப்பு விண்ணப்பப் பத்திரம் மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.** அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- பிரஜாவுரிமையை சான்றுப்படுத்தும் ஆவணங்கள். (அடையாள அட்டை /கடவுச்சீட்டு /வேறு ஆவணங்கள்).
- வாகன அனுமதிப் பத்திரம் (இரு பக்கங்களும்)
- கல்விச்சான்றிழ்.
- சேவைகால அனுபவ சான்றிதழ்.

**நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

உங்கள் விண்ணப்பம் **2023ஆம் ஆண்டு ஏப்ரல் 14** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எங்களுக்குக்கிடைக்கப்பெற வேண்டும்.
தயவு செய்து கவனிக்கவும். தகுதியானவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளப்படுவார்கள்.

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 201 வியாபார வாய்ப்புகள்

வியாபார ஹோட்டல் ஆதனம் விற்பனைக்கு சிலாப நகர மத்தியில் புத்தளம் (3 பாடசாலைகள், 2 நீதி மன்றங்கள், 2 வங்கிகள் சுற்றிவ ர உள்ளன) சி த்திகரமான ஹோட்டல் (ரெஸ்டூரண்ட் இவ்விடத்தில் நல்லெண்ணத்துடன் நடைபெறுகின்றன. பெறுநர் வியாபாரத்தை பொறுப்பேற்கலாம். அல்லது தற்போதய 3ஆம் சாராருக்கு மாதாந்தம் 80, 000 ரூபாவிற்கு குத்தகைக்கு வழங்கலாம். தெளிவான உறுதிகள் பதிவுகள், வியாபார இலக்கங்கள் 6.5 பேர்ச்சுக்கள் (5.5 மில்லியன் ஒரு பேர்ச்சிற்கு, தொடர்பிற்கு +64225840331, மின்னஞ்சல் hotelpropertysalechilaw@gmail.com தரகர்கள் என்னுடன் தொடர்பு கொள்ளலாம் அதற்கான கட்டணத்தைச் செலுத்தலாம். 020694

50g, 100g, 150g, மற்றும் 2 00g பெக்க ற்களில் தேயி லை விற்பனைக்கு. கொழும்பு மற்றும் க ம்பஹா மாவட்டங்களில் விநியோகத்தர்கள் தேவை. அழையுங்கள் 0771866880 020453

## வேலைவாய்ப்பு

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

வீட்டில் தங்கி முற்றத்தில் மற்றும் சமையல் வேலை செய்வதற்கு அப்பு ஒருவர் கொழும்பு வீட்டிற்கு 0777389410 020206

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கொழும்பிலுள்ள உணவக மொன்றிற்கு அனுபவ முள்ள பிரியாணி சமை யற்காரரொருவர் மற்றும் உதவியாளர்கள் இல ங்கையர் அல்லது இந் தியர் தேவை. சமையற்காரருக்கான சம்பளம் 60, 000/= ரூபா + தங்குமிடம் + உணவு + நன்மைகள். 0767330938 அல்லது 0767730938 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். 018302

### 325 தொழில்துறை பொது

அலுவலக உதவியாளர் பயிலுனர் பதவி வெற்றிடம் கொழும்பிலுள்ள ஏற்றுமதி கம்பனியொன்றின் நாம் அலுவலக உதவி ஆண் பயிலுனரொருவரை தேடுகின்றோம். ஆகக் குறைந்த தகைமை கபொத (சா/த), பாடசாலையிலிருந்து விலகியவர்களும் பரிசீலிக்கப்படுவார்கள். வெளிநகர் பகுதிகள், மலையக பிரதேசத்தவர்கள் விரும்பப்படுவார்கள். சம்பளம் பேசித் தீர்க்கப்படும். தயவு செய்து 0714937191 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் அல்லது chatoor@sltnet.lk என்ற மின்னஞ்சலுக்கு சுயதரவை அனுப்பவும். 020900

எமது மன்னார் மற்றும் ஆனையிறவு நிறுவனங்களில் உயர்ந்த சம்பளத்துடன் பாது காப்பு அதிகாரிகளாக பணி புரிவதற்கு வயது. 25 60 உட்பட்ட ஆட்கள் உடனடியாக தேவை. 0767885328, 0706993735 020468

தீவின் அனைத்து பாகங்களிலிருந்தும் 18 45 வயதிற்குட்பட்ட அழகான பெண்கள் ஆட்சேர்க்கப்படுகின்றனர். நிலையான சம்பளம் 100, 000 ரூபாவுடன் தங்குமிட வசதியுண்டு. வி லிஸ் இம்பீரியல் கிளப் அண்ட் ரெஸ்டூரண்ட் (பிவிடி) எல்டிடீ. 0727397664 020873

பெண் சுகாதார சுத்திகரிப்பாளருக்கான பதவி வெற்றிடம். அலுவலக சுத்திகரிப்பிற்காக ஏற்றுமதிக் கம்பனியொன்று பெண் சுத்திகரிப்பாளரொருவரை தேடுகின்றது. முன்னைய அனுபவம் தேவையில்லை. வயது 50 60 இற்கு இடைப்பட்டது, கொழும்பு பிரதே சத்திலிருந்து ஆற்றலுள்ள பெண்ணாகவிருத்தல் வேண்டும். சம்பளம் பேசித் தீர்க்கலாம். தயவு செய்து 0714937191 என்ற இலக்கத்தை அழைக்கவும். 020896

0718653781 பாதுகாப்பு வெற்றிடம் பாணந்துறை, கட்டுகுருந்த, கோனபொல, பண்டா ரகம, ஹம்பாந்தோட்ட, நுவரெலியா, கொழும்பு, தும்முல்ல, கொழும்பு களுஅக்கல, ரனால, பத்தரமுல்ல, வத்தளை, சீதுவ கட்டுநாயக்க, கொச்சிகடை மொரட்டுவ, நுகேகொட, பாணந்துறை 070454 5051 ஹொரண 0718379981, கொழும்பு 0718653780, ராஜகிரிய 0712125238, வத்தளை 0718653779, மொறட்டுவ 0706991637, அலுவலகம் 0718653778, 0760989122, 0706655331 020470

## பொது

### 431 நானாவிதப் பொருட்கள் விற்பனைக்கு

வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட புதிய மேசை, நாற்காலிகள் ரி பொலி, சிறிய கட்டில், வீட்டிற்கான மின்சார உபகரணங்கள் குரோக்கா ஸ்பீக்கள் FM ரேடியோ. பாடசாலை பைகள் இன்னும் பல பொருட்கள் குறைந்த விலைக்கு, இல. 103, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொ டையில் விற்பனைக்குண்டு. 071 4363232 020992

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

இராஜகிரிய புதிய கொலொன்னாவ வீதியில் மின்சாரம், நீர் ஆகிய வசதிகளுடன் 8.4 பேர்ச் காணி 18 மில்லியன் ரூபாவிற்கு. 07 77674231 020315

மருதானை 3 மாடி வீடொன்று விற்பனைக்கு உள்ளது. 3 மாடி வீடுகள் 3 உள்ளன. விலை 3 கோடி ரூபா, எல்பின்ஸ்டன் தியேட்டருக்கு அருகாமையில். 07 6 3053778. 020338

2 மேல் மாடி ஒரளவு சொகுசு வீடுகள் டிசொய்சாபுர, இரத்மலான 58 இலட்சங்கள் மற்றும் 68 இலட்சங்களுக்கு வீடும் ஆதனமும் தெஹிவளை குவாரி வீதியில் பேர்ச்சொன்று 43 இலட்சங்கள் தொடர்பெண் 011 2632916 020923

வத்தளை ஹுணுப்பிட்டிய வீடு மற்றும் காணி விற்பனைக்கு அல்லது கொள்வனவு விற்கு அழையுங்கள். 0763477168, 0777967859 020621

வத்தளை, கல்யாணி மாவத்தையில் வீடு விற்பனைக்கு. மண்டபம், அறைகள் இரண்டு, சமையலறை, பாத்ரூம் ஒன்று 5½ பேர்ச் இக்காணிக்கு வாகனங்களை உள்நுழைக்க முடியாது. 45 லட்சம் 07 7 7493955, 07 7 8065740 020279

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

இரு மாடி வீடு 5 படுக்கையறைகள் இரு குளியலறைகள், பணியாட்கள் கழிவறை, இரு வாகன நிறுத்திமிடங்கள். கிரிபத்கொட விற்கு அருகாமையில் மாதாந்தம் 100, 000 ரூபா தளபாடத்துடன் 0768132093 020321

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

0777282147 20 மில்லியன் முதல் அதற்கு மேல் 2030 வீடுகள் விற்பனைக்கு. அனிவத்த, தொடம்வல, வட்டாரந்தென்ன, மாவில்மட, அம்பிடிய, லேவல்ல, (City Limits) கொஹாகொட, பொல்கொல்ல, குண்டசாலை, ஹாரகம, கெலிஓய, அக்குரன, வத்தேகம, பிலிமத்தலாவ பிரதான பாதைக்கு முகப்பாக வியாபாரஸ்தலம் மற்றும் வெற்றுக் காணி த்துண்டுகளும் விற்பனைக்கு. சகல வசதிகளும் உண்டு. 0777438169019304

### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

பிரமிக்க வைக்கும் காட்சிகள் நிறைந்த குளிரான மலைநாட்டின் அழகை அனுபவிப்பதற்கு விருப்பமான உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக, பெறுமதியான வியாபார மற்றும் வதிவிட 100 காணித் துண்டுகள். ஒரு பேர்ச் ரூபா 245, 000/ தொடக்கம். விஷேட கழிவுடன் வட்டியில்லாத இலகுக் கொடுப்பனவு முறை. தொடர்பு கொள்ளவும். சிரிபொல லேண்டஸ். 0702484848 020965

ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக 10 பேர்ச் கொண்ட பெறுமதியான 100 காணித் துண்டுகள் மூன்று பேஸ் மின்சாரம் கொண்டது. ஒரு பேர்ச் ரூபா 245, 000/ தொடக்கம். இலகு கொடுப்பனவு முறை மற்றும் விஷேட கழி வொன்று ச கிதம் உங்கள் காணியை இன்றே ஒதுக்கிக் கொள்வதற்கு தொடர்பு கொள்ளுங்கள். சிரிபெல லேண்ட்ஸ் 0702484848 020970

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

தெஹிவளை கௌடான மேல் மாடி வீடு (முதலாவது மாடி) 3 படுக்கையறை 2 AC அறைகள், 2 குளியலறை வாடகை 60,000/ 6 மாத முற்பணம் 0718024374, 071 53066 99 021024

## மணமகன்

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த மிக கௌரவமான முஸ்லிம் குடும்பத்தினர் தமது ஆங்கிலத்தில் உயர் கல்வி கற்ற அழகான மணமகளுக்கு பொருத்தமான 30 35 வயதுக்குட்பட்ட மணமகனை எதிர்பார்க்கின்றோம். இன்ஷா அல்லாஹ்! officeal42@gmail.com G196754

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 300/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
பியுமி - 077 7 278 948 - 011 2 429 383
கயனி - 011 2 429 347 - 011 2 429 342/343

Visit - www.adz.lk
Sunday Observer adz it's what you want

உங்களின் விலைமதிப்பற்ற நேரத்தை சேமியுங்கள்
எமது கிளை அலுவலகத்திற்கு வருகைதந்து
சமயாசமய/ திருமணங்கள்/ மரணஅறிவித்தல்கள்
ஆகிய விளம்பரங்களை ஒப்படையுங்கள்.
அநுராதபுரம் - ஹரிஸ்சந்திர மாவத்தை, அநுராதபுரம். TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411
கண்டி - இல. 99, டி.எஸ் சேனாநாயக்க வீதி, கண்டி. TEL : 081 22 34 200 FAX : 081 22 34 200
கதிர்காமம் - புஸ்ஸதேவ மாவத்தை, கதிர்காமம் TEL : 047 22 35 291
மருதானை - டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10. TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
மாத்தறை - இல. 29, பஸ் நிலைய கடைத்தொகுதி, மாத்தறை. TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728
நுகேகொட - இல. 802, 4 ஆம் மாடி, சௌவ்சிரி கட்டிடம், ஹைலெவல் வீதி, நுகேகொட. TEL : 011 2 828 114 FAX : 011 2 828 114
யாழ்ப்பாணம் - இல. 6, சிராம்பியடி ஒழுங்கை, ஸ்டான்லி வீதிக்கப்பால், யாழ்ப்பாணம். TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361
LAKE HOUSE No. 35, D.R.Wijewardene Mawatha, Colombo 10.

# வாரமஞ்சரி BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்

**TOYOTA REGISTERED**



Toyota Landcruiser Prado TX 150 G frontier, Petrol, fully loaded, 2017/2018 first owner, Toyota Lanka maintained, tan leather electric seats,sunroof, 4 way camera, live sound system, electric foot step, climate control Dual AC, etc done only 15300km
077 9 232 207 kus-04



Toyota KDH TRH 200v 2017 Engine capacity 1990 cc petrol Efi Alto Triptonic transmission Silver colour 12 air bages, Mileage 47790 km Price - Rs. 18,000,000/- Negotiable Contact No.
0753 944 872 kuk/01



Viva Elite 2013, Silver, Sale or Exchange, No. 36 B, Hospital Junction, Kalubowila.
0772 298 899 / 0777 880 800 tvm-620

**TOYOTA REGISTERED**



Toyota Carina TI Diesel, year of manufacture 1997, year of Registration 2000, mileage 157,000Km, maintenance Records and emission test reports are available, registered owner, A/C, Power steering, DVD, Reverse Camera, Automatic oil and Engine oil transmission, filters newly changed, full option, Reverse camera, New Tyres, New shockabsober, new alloy wheels, updated revenue licence for year 2024, new leasing facilities can be arranged. Price negotiable only after inspection.
0779 109 614 kut-01



Vitz 2016, Orage, , Sale or Exchange, No. 36 B, Hospital Junction, Kalubowila.
0772 298 899 / 0777 880 800 tvm-619

**MITSUBISHI REGISTERED**



Mitsubishi Montero sport wp KT. 2012 Diesel, beige interior, 7 seater, Dual AC, fully agents maintained, first owner
077 7 840 141 kus-08

DON'T TXT & DRIVE



Mitsubishi Pejero 32- 6 xxx, year of manufacture 88/89, in mint condition, "Palath Shaba" Jeep for immediate sale due to an urgent financial requirement, price negotiable after inspection of the vehicle. (Gampaha)
070 29 18 161 kuc-01




**LAND ROVER REGISTERED**



Land-Rover Discovery 4 GS 3.0SDV6 diesel 2011 model registered 2013 full option, Tiptronic transmission with pedal shift, 20" alloys, Black leather interior, Harmon kardon audio, android multimedia with 3 way camera, Airmatic suspension, done 65000 Climate control dual ac, multi function steering, cruise control etc, immaculate condition Put as Land-Rover Discovery 4 GS 3.0SDV6 diesel
077 9 232 207 kus-02



Land Rover Range Sport HSE 2018 used SUV/ 4x4, Engine Capacity 2000cc ,country of origin UK,Grey - Wrapped with white colour – leather Electric memory seats-triptronic Diesel Mileage 93000 km Price Rs. 60, 000, 000/-Negotiable
0753 944 872 kuk/02

**AUDI REGISTERED**



Audi A4 2017/2018 1400cc TFSi full option, black leather interior, 18" alloys, 7 speed tiptronic transmission, led head lamps etc
077 7 840 141 kus-11



Audi Q5 Quattro 2011 Brand new imported through agents, 1990cc Turbo petrol, 7 speed tiptronic transmission with Pedal shift, black leather interior with electric seats, B & 0 sound system, 18" alloys with new Dunlop tyres, Dual Zone climate control AC with Rear vents, Head lamp washers, 8 airbags, TCS, multi function steering, park sensors etc carefully used immaculate condition, exchange considered
077 9 232 207 kus-01

**BMW REGISTERED**



BMW X3 2011/2012 Petrol, 3000cc, Tiptronic transmission, beige leather interior with electric seats, 18" alloys, multi function steering, Dual zone climate control AC, xenon head lamps, premium audio, 8 airbags, 4wd, with full service records, carefully used, done 65000. Rs 12.9 million
077 9 232 207 kus-06

DON'T TXT & DRIVE



BMW 520D year 2012 used triptronic Diesel,Engine Capacity,1995 cc, mileage 251000 km, AC, PS, Cruise control, Beige Leather interior Price - Rs 13,000,000/-Negotiable. Contact
0753 944 872 kuk/03

**BMW REGISTERED**



BMW E34 518i 1993 brand new imported, full option, 1800cc 4 cylinder petrol, manual transmission, 17" alloys, mint condition.
077 9 232 207 kus-09



BMW X1, 2012, Blue, Sale or Exchange, No. 36 B, Hospital Junction, Kalubowila.
0772 298 899 / 0777 880 800 tvm-618

**KIA REGISTERED**



Kia Sorento 2011 Diesel Tiptronic transmission, beige leather interior, 5 seater, 2nd owner Rs 7950000.
077 7 840 141 kus-07

**OTHERS REGISTERED**



Mercedes Benz S350 2011 registered. Black leather interior with electric memory seats, brand 19" Maybach alloys & tyres, climate control Dual AC, sunroof, airmatic suspension, etc done only 83000km RS 18.5 million exchange considered
077 9 232 207 kus-05



MG ZS 2018, First Owner, Full Option, Cruise Control, Company Warrantee, Service Maintenance, Apple Sound System, Car for sale.
0777 331 283 kug-01



Mahindra Bolero wp LD 2006. Original 4wd, 2500cc Diesel, modified for safari purpose, rear 8 seater, matt finish paint mint condition
077 7 840 141 kus-10

**OTHERS REGISTERED**



Jaguar S type 2005 face lift version, brand new imported, agent maintained, 2500cc V6 petrol, Tiptronic transmission, beige leather interior with electric seats, 8 air bags, Dual zone climate control AC, multi function steering, Premium audio system, 17" alloys with new tyres, done only 63000km, carefully used, immaculate condition. Exchange considered. Rs. 7450000
077 9 232 207 kus-03

DON'T TXT & DRIVE



Tata Xenon Double Cab 2015 4wd, first owner, 2200cc common rail turbo Diesel, alloy wheels, manual transmission, rear canopy etc
077 7 840 141 kus-12




# படித்ததும் பகர்வதும் 137



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

**தவிர்க்க வேண்டிய தற்கொலைகள்!**




உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையொன்றின் அடிப்படையில் உலக அளவில் ஆண்டுதோறும் 8 லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்கின்றார்கள் என்பதை அறிய முடிகிறது. அந்த வகையில் ஒவ்வொரு 40 விநாடிகளுக்கு ஒருவர் தற்கொலை செய்து கொள்வதை கணக்கிட முடியுமாகிறது.

இலங்கையில் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கையும் கவலையளிப்பதாக உள்ளது. காதல் தோல்வி, பரீட்சையில் சித்தியடையாமை, தொழில் கிடைக்காமை, பிள்ளைகளைப் பராமரிக்க போதிய பணம் இல்லாமை, விவசாயத்தில் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காமை, கணவன் மனைவிகளுக்கிடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க இயலாமை, பெற்ற கடனை திருப்பிச் செலுத்த முடியாமை, போதைப் பொருள் பாவனை போன்றன தற்கொலைக்கான காரணங்களாக கூறப்படுகின்றன.

உண்மையில் இத்தகைய காரணங்கள் கூறப்பட்டாலும், 'தற்கொலை' என்ற செயலுக்கு இவை அடிப்படைகளாக இருக்க முடியாது என்பதே உண்மை நிலையாகும். தன்னம்பிக்கை இல்லாமையும், கோழைத்தனமுமே தற்கொலைகளுக்கு அடிப்படைகளாக இருப்பதாக உளவியலாளர்கள் கருத்துக் கூறியுள்ளனர். உண்மையில் எந்தவொரு காரணத்தையும் தற்கொலைக்கான விளக்கமாக எடுத்து இயம்ப முடியாது.

பரீட்சை ஒன்றில் சித்தியடைய தவறினால் அடுத்த முறை அதைவிட சிறப்பாக எழுதி சித்தி பெற முடியும். காதல் தோல்வி என்பது ஒரு வித மாயை என்றே கூறலாம். காதலனோ, காதலியோ கிடைக்காவிட்டால் இன்னொரு காதலனோ காதலியோ அல்லது சிறந்த கணவனோ, மனைவியோ நிச்சயமாக கிடைக்கவே செய்வர். இவ்வாறு புதிய ஜோடிகளாக இணைந்தோர்களின் எண்ணிக்கை உலகில் கோடிக்கணக்கில் இருக்கவே செய்கிறது.

'பிள்ளைகளை பராமரிக்க முடிய வில்லையே!' என தற்கொலை செய்து கொள்வோர் தமது இறப்பிற்கு பின் தம் பிள்ளைகள் அநாதைகளாகி அவலப்படுவார்கள் என்பதை சிந்திக்க வேண்டும். 'தொழில் கிடைக்க வில்லையே' என்பவர்கள் பரந்து விரிந்து கிடக்கின்ற உலகில் இருக்கின்ற எண்ணற்ற வாய்ப்புகளில் பொருத்தமானதை தேடிப்பிடிக்க முயல வேண்டும். விவசாயம், கடன் போன்றவையும் இவ்வாறே மாற்றுவழிகள் உள்ளவையே என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு நோக்கும் போது தற்கொலை என்ற செயலுக்கு எந்தவித அடிப்படையும் இருக்க முடியாது என்பது உண்மை நிலையாகும். இத்தகைய நிலைக்கு தள்ளப்படுவோர்கள் தம் பெற்றோர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், கற்றறிந்தோர், மூத்தவர்கள் என்போரை அணுகி தமது மனக்கிலேசங்களை மனம்விட்டு கலந்தாலோசித்து தெளிவு பெறுவதன் மூலம் தற்கொலைகளை தவிர்த்துக்கொள்ள முடியும்,

'ஒரு வாசல் அடைப்பட்டால் இன்னும் ஓராயிரம் வாசல்கள் திறந்திருக்கும்' என்பார்கள். அவற்றில் தமக்கென ஒரு வாசல் இருக்கத்தான் செய்யும். அதனைத் தேடிப் பிடிக்க முயல வேண்டும். அதுவே நேரிய சிந்தனை. அதுவே அவசியமான சிந்தனை. அதுவே காலத்தின் தேவை.

## நெஞ்சுக்கு நீதி

கோழைகள் எடுக்கும் கேவலமுடிவே தற்கொலை
நாளை வருகின்ற நல்லவை அறியாததன் விளை
ஏழை என்றாலும் கூடாததே என்றும் தற்கொலை
வேளை கூடிவந்தால் வெற்றிகள்உறுதியே நினை
பாரெங்கும் சந்தோசம் பரவிட வழி செய்திடுவோம்

## பிரிந்தார் பெருமை



**கவிஞர் ஆசுகவி அன்–புடீன்**

இலக்கியத் துறையில் பொன்விழா கண்ட கவிஞர் ஆசுகவி அன்புடீன் கடந்த மார்ச் 20ம் திகதியன்று (2023.03.20) காலமானார். பாலமுனையில் பிறந்த இவர் அட்டாளைச்சேனையை வசிப்பிடமாக கொண்டிருந்தார். ஆசுகவி அன்புடீனின் இயற்பெயர் பக்கீர் முகைடீன் கலந்தர் லெவ்வை என்பது பலரும் அறியாத விடயம்.

அஞ்சல் திணைக்களத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற உத்தியோகத்தரான இவர், முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபர் கவிஞர் எம்.எச்.எம். அஷ்ரபுடன் மிக நெருங்கியவராக திகழ்ந்ததோடு அதனாலேயே முஸ்லிம் காங்கிரஸ் அபிமானியாகவும் இருந்தார்.

இலக்கியத்தின் சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்திய இவர், கவிதை, சிறுகதை, நாடகம் என தனது பங்களிப்புகளை தாராளமாக வழங்கியுள்ளார். இவர் நாடகத்துறையில் கதை, வசனம், இயக்கம், நடிப்பு என பல்துறைகளிலும் வல்லவராக இருந்து சாதித்தவர்.

ஐந்து தூண்கள், முகங்கள், அக்கரைப்பற்று அன்னை மகிழ்கிறாள், நெருப்பு வாசல் என்பன இவர் வெளியிட்டுள்ள நூல்கள். கொக்குகள் வாடுகின்றன, மலர்ந்தும் மலராத, கரை காணத் துடிக்கும் படகுகள், கண்திறந்து போன்ற வானொலி நாடகங்களையும், படித்தது போதும் பெட்டியைக் கட்டு, நேர்மை தந்த புது வாழ்வு, உண்மைகள் உறங்குவதில்லை, சட்டத்தின் கரங்கள், ஒரே ஒரு குடையின் கீழ், கடன் கட்டினால் கல்யாணம், தரை மீன்கள் எனும் மேடை நாடகங்களையும் இவரது நாடகத்துறை பங்களிப்புக்கான சான்றுகளாகக் கூறலாம். இவற்றோடு 'மோகத்தைக் கொன்றுவிடு' எனும் வில்லுப்பாட்டையும் ஆசுகவி அன்புடீன் வெற்றிகரமாக அரங்கேற்றியுள்ளார்.

ஆசுகவி அன்புடீன் பெற்றுள்ள பட்டங்களும், விருதுகளும், பரிசில்களும் ஏராளம். 1999ல் கவித்தாரகை விருது, கல்முனை புதுமை கலை இலக்கிய வட்டத்தின் 'ஆசுகவி' பட்டம், 2000ல் கவி மாமணி விருது, 2002ல் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் சிரேஷ்ட கவிஞருக்கான விருது, 2004ல் தினச்சுடர் பத்திரிகையின் சிறந்த கவிஞருக்கான விருது, 2008ல் 'திகாமடுல்ல அபிமானி' விருது, 2009ல் இலங்கை அரசின் கலைஞர்களுக்கான உயர் கலாபூஷண விருது, 2009ல் 'கவிச்செம்மல்' பட்டம், 2012ல் கி'ழக்கு மாகாண முதலமைச்சர் விருது' என்பன அவற்றில் விசேடமாகக் குறிப்பிடத்தக்கவை.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை மாவட்டத் தலைவர், தென்கிழக்கு கலாச்சார பேரவையின் செயலாளர், கல்முனை புதிய பறவைகள் கவிதா மண்டல செயலாளர், எழுவான் வெளியீட்டு பணியகத் தவிசாளர், பூஞ்சோலை எழுத்தாளர் மன்ற ஸ்தாபகர், பாலமுனை முற்போக்கு கலா மன்ற ஸ்தாபகர், அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசார பேரவை உபதலைவர், 1997 தேசிய மீலாத் விழா கலாசார குழுத் தலைவர், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க உறுப்பினர் என பல கலை, கலாசார, சமூக சேவை அமைப்புகளில் பதவிகள் வகித்து அளப்பரிய சேவைகள் செய்து மக்கள் மனங்களில் இடம் பிடித்துள்ளவர் ஆசுகவி அன்புடீன்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் தேசிய தலைவராக நான் பணியாற்றிய காலத்திலும், முன்னணியினதும், முஸ்லிம் மீடியா போரத்தினதும் பணிகளுக்காக கிழக்குக்கு விஜயம் செய்த வேளைகளிலெல்லாம் இவரோடு நெருங்கிப் பழகிய பொழுதுகள் இன்றும் பசுமையானவை. இவரது இறப்பால் ஏற்பட்டுள்ள வெற்றிடம் இலகுவில் நிரப்ப முடியாததாகும்.

## நூலகத்துக்கு ஒரு நூல்

**"பிலால் காவியம்"**




மூத்த பன்னூலாசிரியர் அல் அஸூமத் தந்துள்ள காவிய நூல் "பிலால் காவியம்".

பிரபல ஆங்கில எழுத்தாளர் எச்.ஏ.எல். க்ரேய்க் எழுதிய ஜனரஞ்சகமான நூல் பிலால். அல் அஸூமத் 1988ம் ஆண்டு இந்த ஆங்கில நூலை உரைநடையில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இது வாசகர்களின் பேரபிமானத்தை பெற்று 1995, 2006, 2010, 2018 ம் ஆண்டுகளில் 05 பதிப்புகளை கண்டது. இந்த உரைநடை மொழிபெயர்ப்பை பற்றி அல் அஸூமத் குறிப்பிடுகையில் அந்த நூல் மூல நூலாசிரியரின் நூலோடு எண்பது வீதமளவில் (80%) தான் ஒத்து போகும் என்று தெரிவித்துள்ளார்.

இதே நூலை அதன் சிறப்பு கருதி அதனை அவரே ஓர் காவியமாக படைத்துள்ளார். உரைநடை நூலில் விடுபட்ட சில பகுதிகளும் இக்காவியத்தில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் மூல நூலாசிரியரின் நூலுக்கு ஏறக்குறைய தொன்னூற்று ஐந்து வீதம் (95%) நெருக்கமுடையதாக அமைந்துள்ளதாகவும் குறிப்பிடுகிறார்.

அடிமையாக இருந்து இஸ்லாத்தை தழுவிய பிலால் ரலி அவர்களின் முழுமையான வாழ்க்கை வரலாற்றை தனக்கே உரிய தனித்துவமான பாணியில் தந்துள்ள பிலால் காவியம் தமிழ் வாசகர்கள் அனைவரும் தவறாது வாசிக்க வேண்டிய ஒரு நூலென உறுதியாக கூறலாம்.

கவிதை, நெடுங்கதை, மொழிபெயர்ப்பு, சிறுகதை தொகுதிகள், கவிதைத் தொகுப்புகள், ஆய்வுக் கட்டுரைகள், வரலாறு, நாவல் என பல்வேறு துறைகளையும் சார்ந்து 17 நூல்களை வெளியிட்டுள்ள அல் அஸூமத் தந்திருக்கும் பிலால் காவியம் எல்லா நூலகங்களிலும் கட்டாயமாக இருக்க வேண்டிய ஒரு காவியமாகும்.

நூல்: பிலால் காவியம், ஆசிரியர்: கவிஞர் அல் அஸூமத், முதற்பதிப்பு: 2020 டிசம்பர், பக்கங்கள்: 239, விலை: ரூபா 600/=.

## சிந்தனை செய் மனமே

**நல்லதைச் செய்வோமே!**

அந்த கணவன் மனைவி இருவரும் ஷாப்பிங் முடித்து, ஹோட்டலில் சாப்பிட்ட பிறகு தமது கார் நோக்கி நடந்தனர்.



அப்போது ஒரு வயதான அம்மாள் அவர்களிடம் கையேந்தினாள். கணவன் சற்றும் தாமதியாது தனது பர்சிலிருந்து நூறு ரூபாய் எடுத்து அவளுக்குக் கொடுத்தான். அவள் நிறைய நன்றி சொல்லி, கடவுள் அருளுக்கு பிரார்த்தித்துவிட்டுப் போனாள்.

உடனே மனைவி, "எதற்கு அவளுக்கு நூறு ரூபா? அஞ்சோ பத்தோ கிழவிக்குப் போட்டிருக்க கூடாதா?" என்று சலித்துக் கொண்டாள்.

கணவன் சிரித்துக் கொண்டு சாகவாசமாக சொன்னான், "உனக்கு புடவை, நகைகள். எனக்கு துணிகள், செருப்பு. பசங்களுக்கு துணிகள். என்று கிட்டத்தட்ட சர்வ சாதாரணமாக லட்சத்தில் செலவு பண்ணினோம். ஆனால் அந்த வயசான அம்மா, வயிற்றுப் பசிக்கு சாப்பிட நம்மைத் தேடி வந்திருக்கா. நம்மாலே அந்தம்மா வயிறார சாப்பிடும்போது நம்மை மனசார நினைக்குமே. அதனாலே நமக்கு புண்ணியம் கிடைக்குமே. அதைவிட அந்தம்மாவோட பசி போகுதே"

"மனுஷனுக்கு மூன்று விஷயங்கள் எப்ப வரும்ன்னு யாருக்குமே தெரியாது. அது எப்ப வேணும்ன்னாலும் வரலாம். அது என்ன தெரியுமா? இயலாமை, நோய், இறப்பு.

நமக்கும் இந்த மூன்றும் எப்போது வேண்டுமானாலும் வரலாம். நம்மால் முடியும்போது, முடியாதவர்களுக்கு சிறு உதவி பண்றதாலே, கடவுள் நமக்கு அந்த மூன்றையும் தள்ளிப்போடலாம் தானே" என்றான்.

அதைக் கேட்டு மனைவி கண் கலங்கி நின்றாள். கணவனின் செயலை எண்ணி புளகாங்கிதம் கொண்டாள்.

இயலாமை, நோய், இறப்பு என்ற மூன்றும் நமக்கும் எப்போதும் வரலாம். அதுவரை நாமும் நம்மால் முடிந்த நல்லதைச் செய்வோமே!

## கவிக் 'கடி'கள்

அன்பு
உணர்வுகளின்
ஜீவன்
X
முயற்சி
உழைப்பின்
மூலதனம்
X
கோபம்
எதிரியின்
வாள்
X
சிரிப்பு
இளமையின்
மருந்து
X
பயம்
பலவீனத்தின்
ஏடு
X

சந்தோசம்
வாழ்வின்
அர்த்தமுள்ள
புத்தகம்
X
திருமணம்
உயிர்களின்
உணர்வு
சாம்ராஜ்யம்
X
வெற்றி
மகிழ்வில்
முடியாத
ஆரம்பம்
X
பிரிவு
பரிவை
புரியாத
உணர்வு

**எம்.எப் . கே. பஹ்மியா,**
**உடுதெனிய**

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207




## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



கே. பத்மானந்தன் 37

# முரண்பாடுகளைக் களைதல் (Conflict Resolution)



பல்வேறு அறிஞர்களாலும் காலத்திற்கு காலம் முன்வைக்கப்பட்ட விளக்கங்களின் அடிப்படையில் ஏதோ ஒரு செயல் , நிகழ்ச்சி, தேவை, விருப்பு, நம்பிக்கை, பண்பாடு,விழுமியம், நடத்தை, கொள்கை, நோக்கம் தொடர்பாக தனி நபர்களுக்கிடையே அல்லது குழு ஒன்றினுள்ளே அல்லது குழுக்களுக்கிடையே முறையான புரிந்து கொள்ளாத் தன்மை காரணமாக ஏற்படும் இணக்கமின்மையினை முரண்பாடு என்று வரைவிலக்கணப் படுத்திக்கொள்ளலாம். பொதுவாக நிறுவனம் ஒன்றில் முரண்பாட்டிற்கான காரணங்களாக வளப்பகிர்வு ,பொறுப்புகளில் தெளிவற்ற தன்மை, தொடர்பாடல் குறைபாடு, ஆளுமை மோதல், நோக்கத்தில் தெளிவின்மை, பதவி நிலை வெறுபாடுகள், மாறுபட்ட கருத்துக்கள் சிந்தனைகள் எண்ணங்கள், வேலைப்பளு போன்ற பல காரணிகள் அமையும்.

மேலே சொல்லப்பட்ட காரணிகளின் அல்லது வேறு காரணிகள் காரணமாக நிறுவனத்தில் உள்ள தொழிலாளர்களுக் கிடையே மோதல்கள் அல்லது முரண்பாடுகள் (Conflicts) ஏற்படல் சாத்தியமாகும். இத்தகைய மோதல்கள் அல்லது முரண்பாடுகள் எடுத்த வேலைகள் அல்லது திட்டமிடப்பட்ட வேலைகள் முடிவடையாமல் போவதற்கான பாதகமான சூழல்களை நிறுவனத்தில் ஏற்படுத்தும். எனவே முகாமைத்துவம் இவ்வாறான மோதல் களை அல்லது முரண்பாடுகளை தீர்க்க முற்பட வேண்டும். இதனையே முகாமைத்துவத்தில் முரண்பாடுகளில் களைதல் (Conflict Resolution) என்கிறோம் . ஏனெனில் தீர்க்கப்படாத மோதல்கள் அல்லது முரண்பாடுகள் நிச்சயமாக நிறுவனத்திற்கு எதிர் பாராத இழப்புகளை ஏற்படுத்தும். இக்கருத்துகளை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார்.

"வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்".
(குறள் 674)

அரை குறையாக அணைத்த நெருப்பு எவ்வாறு மீளவும் பற்றி எரிந்து தீங்கு விளை விக்குமோ அதுபோல் கொண்ட பகையை முறையாக முடிக்காமல் விட்டால் அல்லது முரண்பாடுகளை முறையாக தீர்க்காமல் விட்டால் அது தீங்கு விளைவிக்கும் என்கிறார் திருவள்ளுவர் . முறையாக அணைக்கப்படாத தீயினையே திருவள்ளுவர் தீயெச்சம் என்கிறார். எவ்வாறு இந்த தீயெச்சம் வளர்ந்து கெடுதியை விளைவிக்குமோ அவ்வாறேதான் முறையாகத் தீர்க்கப்படாத முரண்பாடுகள் நிறுவனத்தில் மேலும் மேலும் வளர்ந்து கெடுதல்களை ஏற்படுத்தும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

எனவே தொழிலாளர்களுக்கிடையே அல்லது நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளுக்கிடையே அல்லது அதிகாரிகளுக்கிடையே ஏற்படக்கூடிய முரண்பாடுகளை முற்றாகக்களைய முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு இந்த முரண்பாடுகளை முற்றாகக் களையாதுவிட்டால் எவ்வாறு முற்றாக அணைக்காத நெருப்பு மீண்டும் பற்றுமோ அதேபோல் இத்தகைய முற்றாகக் களையப்படாத முரண்பாடுகள் மீண்டும் தலைதூக்கி அக்குறித்த நிறுவனத்தினை நட்டத்தில் ஆழ்த்திவிடும் என்ற கருத்தினை திருவள்ளுவர் இங்கு வலியுறுத்துகின்றார்.

பொதுவாக வயல் ஒன்றில் முறையாகக் களை அகற்றாதபோது விடுபட்ட களைகள் மீண்டும் பெருகி வேளாண்மையையே இல்லாமல் செய்து விடும். அதேபோன்று குளக்கட்டுகளில் திருத்த வேலைகளைச் செய்யும்போது முறையாக கவனிக்காது விடுகின்ற சிறு கசிவுகள் சந்தர்ப்பம் ஏற்படும் போது அணைக்கட்டை உடைத்து வெள்ளப் பெருக்கினை ஏற்படுத்தி அழிவுகளை ஏற்படுத்தும். அதேபோலத்தான் திருவள்ளுவர் குறிப்பிடுவது போல முறையாகத் தீர்க்கப்படாத முரண்பாடுகள் பெருத்த நட்டத்தினை நிறுவனத்திற்கு ஏற்படுத்திவிடும். எனவே இத்தகைய முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு முகாமையாளர்கள் இயன்ற மட்டும் சாத்தியமான அத்தனை வழிகளையும் பயன்படுத்தி முரண்பாடுகளிற்கான காரணங்களை இனம் கண்டு தீர்க்க வேண்டும்.

எனவே நிறுவனத்தில் காணப்படும் முரண்பாடுகள் மற்றும் சாத்தியமான பிரச்சினைகளைக் களைந்து எடுத்த காரியங்களை வெற்றிகரமாக முடித்து நிறுவனத்தை நல்ல விதமாக இயங்கச் செய்வது முகாமைத்துவத்தின் கடமையாகும். ஆகவே முகாமைத்துவம் தொழிலாளர்களிடையே ஏற்படக்கூடிய முரண்பாடுகளைக் களைந்து எடுத்துக்கொண்ட வேலையை வெற்றிகரமாக முடிப்பதற்கான சிநேகபூர்வமான சூழ்நிலையை நிறுவனத்தில் உருவாக்க முயல வேண்டும். அதேபோல் தீர்க்கப்படாத மோதல்கள் அல்லது முரண்பாடுகள் நிச்சயமாக நிறுவனத்திற்கு இழப்பை ஏற்படுத்தும் என்பதையும் முகாமைத்துவம் உணரவேண்டும்.

மேலும் நிறுவனத்தில் நிலவும் சுமுகமான சூழ்நிலை வேலையில் ஏற்படுத்தும் தாக்கத்தைவிட தீர்க்கப்படாத மோதல்கள் அல்லது முரண்பாடுகள் வேலையில் ஏற்படுத்தும் தாக்கம் மிக அதிகம் என்பதை முகாமைத்துவம் உணரவேண்டும். எனவே வேலையிடத்தில் காணப்படும் முரண்பாடுகளைத் தீர்க்க முகாமைத்துவம் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதேபோல் முரண்படுவோருக்கும் சிறப்பாக வேலை செய்பவர்களுக்குமிடையில் ஒற்றுமை சாத்தியம் என்பதையும் முகாமைத்துவம் உணர வேண்டும். இக் கருத்துகளை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார் .

"நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்".
(குறள் 679)

நண்பர் ஒருவருக்கு தேவைப்படும் உதவிகளை அல்லது தேவையானவற்றைச் செய்வதை விட பகைவராயிருக்கும் ஒரு வரை தம்முடன் ஒத்துப்போகுமாறு சேர்த்துக் கொள்ளுதலே ஒருவர் விரைந்து செய்யத்தக்க செயலாகும் என்கிறார் திருவள்ளுவர். எனவே ஒரு நிறுவனத்தில் இருக்கின்ற முரண்படுபவர்களை இனம் கண்டு அவர்களை தம்மோடு ஒத்துழைக்கும் வண்ணம் மாற்றி நிறுவனத்திற்கு உழைப்பவர்களாக மாற்றி அந் நிறுவனத்தை வெற்றிகரமாக நடாத்துவதற்கு முகாமையாளர் முயல வேண்டும் என்ற கருத்தை இங்கு திருவள்ளுவர் வலியுறுத்துகிறார் .

உண்மையில் நிறுவனத்தில் தம்மோடு நட்பாக இருப்பவர்களுக்கு நன்மை செய்தல் என்பது முகாமையாளர்களுக்கு அவர்களுடனான தமது நட்பை மேம்படுத்தவும் அவர்களின் ஒத்துழைப்பை எப்போதும் பெறுவதற்கும் அவர்களுக்கு உதவும். ஆனால் அவர்களோடு ஒட்டாமல் விலகி இருப்போரை தமது நட்பு வட்டத்தில் கொண்டு வருவதன் மூலம் தமது நட்பு வட்டம் பெரிதாவதால் தமது வலிமை கூடும் என்பதை முகாமையாளர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். எனவே ஒட்டாமல் விலகி இருப்பவரை அவ்வாறு இருக்க விடமுடியாது ஏனெனில் அவர்கள் இந்தப்பக்கம் போகலாமா அல்லது அந்தப்பக்கம் போகலாமா என்று மதில்மேல் பூனையாக இருந்து சந்தர்ப்பம் ஏற்படும்போது போட்டி நிறுவனத்தின் பக்கம் போவதற்கான சாத்தியங்கள் இருக்கலாம். அவ்வாறு அவர்கள் சென்றால் அது நிறுவனத்திற்கு பலவிதங்களிலும் தீமையாகவே அமையும். எனவே அத்தகையவர்களுடனான முரண்பாடுகளை விரைந்து தீர்க்க முகாமையாளர்கள் முயல வேண்டும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும். இதனையே அவர் 'ஒட்டாரை ஒட்டிக் கொளல்' என்கிறார்.

ஒட்டார் என்பதன் மூலம் திருவள்ளுவர் இரண்டு விதமான கருத்துக்களை முன்வைக்கிறார். ஒருவர் நிறுவனத்தில் ஒத்துப்போகாது முரண்பட்டு விலகி நிற்பவர். இன்னொருவர் முரண்பட்டாலும் போட்டி நிறுவனத்தோடு ஒட்டாது விலகி நிற்பவர் அதாவது பகைவரோடு ஒட்டாமல் விலகி நிற்பவர்.

எனவே முகாமையாளர் இந்த இரு வேறுபட்ட நிலைமைகளையும் கருத்தில் கொண்டு முரண்பாடுகளைத் தீர்க்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் நிலைப்பாடாகும்.

திருவள்ளுவர் கூறும் நிறுவனமொன்றில் காணப்படும் முரண்பாடுகள் களையப்பட வேண்டும் என்ற முகாமைத்துவம் பற்றிய இக் கருத்துக்கள் முறையாகக் கையாளப்படும் முரண்பாடுகள் சாத்தியமான நல் விளைவுகளைத்தரும் (Properly managed conflict can improve group outcomes) என்ற அல்பேர்ட், ஒஸ்வல்டோ, ராஹீம், போனோமா, குன் மற்றும் பூலே (Alpert, Osvaldo, Rahim & Bonoma, Kuhn&Poole) போன்ற அறிஞர்களின் முகாமைத்துவ கருத்துக்களுடன் ஒத்துப்போவதைக் காணலாம்.

(தொடரும்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 57

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | 04 | |
| | 05 | 06 | 07 | 08 | |
| 09 | 10 | | | | 11 |
| 12 | 13 | 14 | 15 | | 16 |
| | 17 | | 18 | | 19 |
| | | 20 | | 21 | 22 |

பெயர் ........................................
வகுப்பு ........................................
தொலைபேசி இல ........................................
பாடசாலை பெயர் ........................................
வதிவிட முகவரி ........................................
........................................
............................ ........................................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) இது உறவுமுறைச் சொல். தாயாரின் சகோதரன் அல்லது தந்தையின் சகோதரியின் கணவனை இவ்வாறு உறவுமுறை சொல்லி அழைக்கலாம்.
(3) பெயராக வரும் போது 'உலகம்' என்ற பொருள் தரும் சொல். வினையாக வரும் போது 'காண்' என்ற அர்த்தம் தரும்.
(5) கைவிரல்களில் அணிந்து கொள்ளும் ஆபரணம். (தலைகீழான சொல்)
(9) போர்வீரர்களின் அல்லது இராணுவத்தினரின் தொகுதியைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(12) மனிதனின் வளர்ச்சிப் பருவங்களில் முதன் முதலாக ஆரம்பிக்கும் பருவம் இது. அம்மாவின் கைகளில் தவழும் சின்னஞ்சிறு பருவம் இது.
(21) நெருப்பு இருந்தால் இதுவும் வந்து விடும். சற்று நேரத்தில் கலைந்து சென்று விடும்.

**தலைகீழான சொல்**

(2) முக்கனியில் முதன்மையானது இது. உலகெங்கும் வாழ்கின்ற மக்களால் மிகவும் விரும்பி உண்ணப்படுகின்ற இனிமையான பழம்.
(3) எந்தவொரு பொருளானாலும், அதன் அரைப்பங்கைக் குறிக்கும் சொல்.
(4) தயிரைக் கடைந்து பெறப்படும் திரவ ஆகாரம். வெப்பமான காலங்களில் இப்பானத்தை விரும்பி அருந்துவர். (தலைகீழான சொல்)
(9) நாம் வீட்டை விட்டு எங்கேயாவது புறப்படும் போது இதனை மறக்காமல் எடுத்துச் செல்வது நல்லது. இல்லையேல் மழை அல்லது வெயில் காரணமாக சிரமப்பட நேரிடலாம். (தலைகீழான சொல்)
(11) எமது தாய்த்திருநாட்டின் பெயர்.
(15) நாவல், சினிமா, நாடகம், சிறுகதை போன்றவற்றில் பொதிந்திருப்பது இது. சிறார்களான உங்களுக்கு இதனைக் கேட்பது மிகவும் பிடிக்கும். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 56

### விடைகள்

**இடமிருந்து வலம்**
01. வைத்தியசாலை 09. வலை 11. கடுகதி 17. நாண் 19. மழலை 23. காடு 25. மிளகு

**மேலிருந்து கீழ்**
01. வையகம் 03. கத்தி 05. சாலை 06. கவலை 14. திண்மம் 19. காலை 22. குடை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 55

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.எம். அஜ்மல்**
தரம் 06, மா/ சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை.
இல. 37, கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

**2. கஜபரன் ஜெகன்**
தரம் 07, கல்/பாத்திமா தேசிய பாடசாலை,
அம்மன் கோவில் வீதி, கலமுனை - 02

**3. கு. துவாகரன்**
தரம் 05E, கமு/ கார்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சர்வோதய வீதி, பெரிய நீலாவணை - 01.

**4. ஏ.ஆர். பஹ்மா**
தரம் 09, பென்ஹில் கல்லூரி, கம்பளை.
இல. 12/22A, இளவதுறை, கம்பளை.

**5. தி. சயந்தவி,**
தரம் 05, மட்/ வின்சன் ம.உ.பாடசாலை,
இல. 07, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

**6. எம்.எச்.எம். ஸைட்**
தரம் 03B, அல்ஹிலால் மத்திய கல்லூரி,
இல. 44/1, ஜும்மா மஸ்ஜித் வீதி, நீர்கொழும்பு.


**7. எம்.ஏ.எப். அஸ்மா,**
தரம் 08B, க/பதியுதீன் மகளிர் வித்தியாலயம்,
இல. 98/A, சுஜாதா லேன், மடிகே, கலகெதர.

**8. அப்லல் அஹமத்**
தரம் 04, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய

**9. அனீஸ் பாத்திமா அப்லா**
தரம் 07, அல் - அமான் மு.ம.கல்லூரி,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 57
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**கல்லாமை: அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொளல்.**

**தெளிவுரை :**
நிறைந்த அறிவாற்றல் இல்லாமல் அவையில் பேசுவது ஆடுவதற்கான கட்டம் போட்டுக் கொள்ளாமலே சொக்கட்டான் விளையாடுவதைப் போன்றதாகும்.

## மதிப்பெண்

பேராசிரியர் ஒருவர் மூன்று கேள்விகளை மாணவர்களிடம் கொடுத்து பதில் எழுதித் தர சொன்னார். அதில் மிகவும் கடினமான கேள்விகளுக்கு 100 மதிப்பெண்களும் கொஞ்சம் கடினமான கேள்விகளுக்கு 60 மதிப்பெண்ணும் கொடுத்து இருந்தார். தேர்வு முடிந்ததும் மாணவர்களின் விடைத் தாள்களின் விடைகளை பார்க்காமல் மிகவும் கடினமான கேள்விகளைத் தேர்வு செய்தவர்களுக்கு முதல் நிலையும் அடுத்தவர்களுக்கு முறையே இரண்டாம், மூன்றாம் நிலையும் கொடுத்தார்.



மாணவர்களோ, 'பதில்களைப் பார்க்காமல் மதிப்பெண் தருகிறீர்களே'? என்று கேட்க, பேராசிரியரோ உங்கள் பதிலுக்காக நான் இந்த தேர்வை வைக்கவில்லை. உங்கள் இலக்கு என்ன என்று அறியவே இந்த தேர்வை வைத்தேன் என்றார்.

'கடினப்பட்டு உழைப்பவர்களே அனைத்திலும் முதல் நிலை அடைவார்கள்' என்று உங்களுக்கு உணர்த்தவே இந்த தேர்வு என்று சொல்லி முடித்தார். ஆம், விடா முயற்சியுடன், அயராத உழைப்பும் இருந்தால் மிகவும் கடினமான செயல்களை எளிதில் செய்யலாம்.

## இவ்வார மழலை




ஏ.எம். ஜசீம்/ ரிஹானா பாரூக்
குருநாகல்

## படித்ததில் வியந்தது

முதுகுத் தோலை உரிச்சிப் போடுவேன் படவா' என்று தவறு செய்தவர்களைப் பார்த்து சொல்லும் பழக்கம், நம் நாட்டில் பல பகுதிகளில் இன்றும் உண்டு... எப்படி முதுகுத் தோலை உரிக்க முடியுமா என்ன? இன்றைக்கு சும்மா இப்படி வெத்து மிரட்டல் விட்டாலும் தவறு செய்தவரின் முதுகுத் தோலை நிஜமாகவே உரிக்கும் தண்டனையும் ஒரு காலத்தில் வழக்கத்தில் இருந்திருக்கிறது என்றால் நம்புவீர்களா?

'தோலுரித்தல்'

தவறு செய்தவரைப் பிடித்து நையப் புடைத்து, உப்புத் தடவப்பட்ட புதிதாக உரித்த ஆட்டுத் தோலை அவன்மேல் சுற்றிக்கட்டி ஊர் பொது இடத்தில் உள்ள கல்தூணில் வெயிலில் துணியை காயவைப்பது போல் கட்டிவிடுவார்களாம். இரண்டொரு நாட்கள் வெயிலில் காய்ந்து, காற்றில் உலர்ந்த பின்னர், மேல் சுற்றப்பட்ட ஆட்டுத் தோல் அவன் முதுகில் இறுகியிருக்கும். அந்த ஆட்டு தோலை பிய்த்து எடுக்கும் பொழுது குற்றவாளியின் தோலும் பிய்ந்துகொண்டு வரும். இரத்தம் சொட்ட சொட்ட வலியில் உயிர் பிரியும்.

சில நேரங்களில் குற்றவாளியின் முதுகெலும்பும் பிய்த்துக்கொண்டு வருமாம். பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு இப்படியான கற்பனைக்கு எட்டாத கொடூர தண்டனைகளை தான் இந்திய மன்னர்கள் நிறைவேற்றி வந்துள்ளனர்.

## மரணத்தை தவிர்க்கும் நகரம்

நோர்வேயின் ஸ்வால்பார்ட் தீவுகளில் லாங்கியர்பைன் என்ற சிறிய நகரம் உள்ளது. இது மரணத்திற்கு தடைசெய்யப்பட்ட ஒரு விசித்திர நகரமாக அறியப்படுகிறது.

1950 முதல் இந்த ஊரில் யாரும் இறக்க அனுமதிக்கப்படவில்லை. யாராவது ஒருவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனால், அவர்கள் நிலப்பரப்பு பகுதிக்கு கொண்டு செல்லப்படுவார்கள்.

மேலும் அவர்கள் வாழ்வின் மீதமுள்ள காலத்தை அங்கேயே கழிக்க வேண்டும். திடீர் மரணம் ஏற்பட்டால், அந்த ஊரில் அல்லாமல், உடல் வேறு இடத்தில் புதைக்கப்படுகிறது. ஏன் அத்தகைய சட்டம்? Longyearbyen ஒரு குளிர் நகரம், தொடர்ந்து பனிபொழிந்துக் கொண்டே இருக்கும் இடமாகும்.

இந்த வானிலை காரணமாக இறந்தவர்களின் உடல்கள் அழுகாமல் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் விளைவாக, இறந்த உடலில் இருந்து கொடிய வைரஸ்கள் பரவும் அபாயம் இருந்தது. இது வாழும் மக்களை பாதிக்கலாம் என்ற அச்சம் நிலவியது.

இதனால் இறந்தவர்களை உள்ளூர் மயானங்களில் அடக்கம் செய்வதற்கு கூட உள்ளூர்வாசிகள் அனுமதிக்கவில்லை. இந்த ஊரில் பிறந்து வளர்ந்தாலும் அதே மண்ணில் அடக்கம் செய்ய முடியாது. 90 களில் புதைக்கப்பட்ட உடல்களை தோண்டி எடுத்து அவற்றில் உயிருள்ள வைரஸ்களைக் கண்டறிந்தனர் விஞ்ஞானிகள். இதையடுத்து, அடக்கம் செய்வது நிறுத்தப்பட்டது.

## நீர்
### ஆச்சரியமான உண்மைகள்

★ உலகில் உள்ள தண்ணீரில் 1 % மட்டுமே குடிநீராக பயன்படுத்தக் கூடியது.
★ உலகில் உள்ள நல்ல தண்ணீரில் 90% அண்டார்ட்டிக்காவில் தான் உள்ளது.
★ பூமியில் சூரியனின் வெப்பத்தால் தினசரி ஒரு ட்ரில்லியன் டன் நீர் ஆவியாகிறது.
★ குழாயில் 75 லீற்றர் வரை தண்ணீர் வீணாகலாம்.
★ சாதாரண தண்ணீரை விட பனியாக உறைந்துள்ள தண்ணீர் 9% லேசானது. அதனால் தான் பனிக்கட்டி மிதக்கிறது.

## விநோத வரலாறு

உலக புகழ்பெற்ற திகில் எழுத்தாளர்களில் ஒருவர் எட்கார் ஆலன் போ. அவர் 1838இல் *The Narative of Arthur Gordon Pym* உன்ற நாவலை வெளியிட்டார். அதில் கப்பல் ஒன்று நடுக்கடலில் புயலில் மாட்டி உடைந்துவிடுகிறது. உணவு இல்லாமல் அதில் உள்ளவர்கள் தவிக்கும்போது ரிச்சர்ட் பார்க்கர் என்பவரை கொன்று அந்த குழு சாப்பிடுகிறது.

இதே போன்ற ஒரு சம்பவம் 1884இல் உண்மையாகவே நடைபெறுகிறது. இங்கிலாந்தில் இருந்து ஆஸி. சென்ற *Mignonette* என்ற கப்பல் ஒன்று புயலில் பாதிப்படைந்துவிடுகிறது. உணவுக்காக அந்த கப்பலிலும் ஒருவர் கொலை செய்யப்படுகிறார். அவர் பெயரும் ரிச்சர்ட் பார்க்கர்.

## சிறுவர் சித்திரங்கள்



**எம். சித்தார்த்தன்**
கேம்பிரிஜ் பாடசாலை, கொழும்பு 15



**பி. ஹரிஹரசுதன்**
கேம்பிரிஜ் பாடசாலை, கொழும்பு 15

## வாரம் ஒரு பெரியார்

# டாக்டர் அம்பேத்கர்



பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர் என்றும் பாபாசாகேப் அம்பேத்கர் (பொருள்: தந்தை) என்றும் அழைக்கப்படுபவர். இந்திய விடுதலைக்குப் பின்னர் நாட்டின் முதலாவது சட்ட அமைச்சராக பதவியேற்றவர் ஆவார். உயர் கல்வி பெறுவதற்காக அமெரிக்கா சென்ற முதல் இந்தியர்.

பட்டியல் சாதி மக்களுக்கென கழகம் ஒன்றைத் தொடங்கியவர். பரோடா மன்னருடன் இணைந்து தீண்டாமை ஒழியப் போராடியவர். பொருளாதாரம், அரசியல், வரலாறு, தத்துவம், சட்டம் ஆகிய துறைகளில் தேர்ந்தவர், ஆசிரியராகவும், இதழாளராகவும், எழுத்தாளராகவும் சமூகநீதிப் புரட்சியாளராகவும் விளங்கியவர். 'நவ புத்தம்' என்ற பெயரில் பல ஆயிரக்கணக்கான பட்டியல் சாதி மக்களை புத்தசமயத்தைத் தழுவச்செய்தவர். இவை யாவற்றுக்கும் மேலாக இந்திய அரசியலமைப்புச் சாசனத்தை வரைவதற்கான குழுவின் தலைவராகவும் பொறுப்பேற்றவர். 2012 ஆம் ஆண்டில் வரலாற்றுத் தொலைக்காட்சியும், சி.என்.என்.ஐ.பி.என் தொலைக்காட்சியும் நடத்திய வாக்கெடுப்பில் மிகச்சிறந்த இந்தியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியாவின் மிகச்சிறந்த உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது இவரது இறப்புக்குப் பின் 1990இல் இவருக்கு வழங்கப்பட்டது.

அம்பேத்கர் பிரித்தானிய இந்தியாவில் மாவ் எனுமிடத்தில் (இப்போது மத்தியப் பிரதேசம் அம்பாவாதே என்னும் கிராமத்தில் 1891 ஏப்ரல் 14 அன்று ராம்ஜி மாலோஜி சக்பால் பீமாபாய் ஆகியோரின் 14வது குழந்தையாகப் பிறந்தார். அம்பேத்கரின் குடும்பப் பின்னணி தற்போதைய மகாராஷ்டிரா மாநிலம் ரத்னகிரி மாவட்டத்தில் அம்பேவாதே வட்டத்தைச் சேர்ந்த மராத்தியர் குடும்பத்தைச் சேர்ந்ததாகும்.

இராம்ஜி சக்பால் இராணுவப்பள்ளி ஒன்றின் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். இவர் 'சுபேதார் மேஜர்' என்ற தகுதி பெற்றவர். மகர் என்னும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த பீமாராவ் இராம்ஜி இளம் வயதில் பல்வேறு துன்பங்களை அனுபவித்தார். டாக்டர் அம்பேத்கர் தனது இளம் வயதில் ஒரு முறை மாட்டு வண்டியில் சகோதரருடன் பயணம் செய்து கொண்டிருந்தபொழுது, இவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை வண்டிக்காரன் அறிந்ததும் உடனே மாட்டை அவிழ்த்து விட்டு அச்சிறுவர்களை குப்பையைக் கொட்டுவது போலக் கொட்டிய கொடுமை நிகழ்ந்தது.

1900 ஆண்டில் சாதாராவில் உள்ள ஒரு பள்ளியில் தனது தொடக்கக் கல்வியைத் முடித்த அம்பேத்கர் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்து பயின்றார். அங்கு தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தனியே அமர்த்தப்பட்டனர். மற்ற மாணவர்களுடன் பேசவோ விளையாடவோ முடியாது. அவர்களின் குறிப்பேடுகளையும் புத்தகங்களையும் தொடமாட்டார்கள். கேள்விகள் கேட்பதும் கிடையாது. தண்ணீர் வேண்டுமென்றாலும் பிறர் ஊற்ற கையால் பருகவேண்டும். அமருவதற்கு இம்மாணவர்கள் ஒரு கோணிப்பையைத் தங்கள் வீட்டிலிருந்தே கொண்டு வர வேண்டும். வடமொழி கற்கவும் தடை இருந்தது. இக்கொடுமைகளைக் கண்ட அம்பேத்காரின் பிஞ்சுமனம் வெம்பியது.

1904 ஆம் ஆண்டு இவரது குடும்பம் மும்பைக்குச் சென்றது. அங்கு எல்பின்ஸ்டன் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்து தனது கல்வியைச் தொடர்ந்தார் அம்பேத்கர்.

1913ஆம் ஆண்டு ஜூன் 4 ஆம் திகதி அம்பேத்கர் அமெரிக்கா சென்றார். உயர்கல்வி பெறுவதற்காக அமெரிக்கா சென்ற முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல், தத்துவம் மற்றும் சமூகவியல் ஆகிய பாடங்களைப் படித்தார்.

இந்தியா விடுதலை பெற்றவுடன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட அம்பேத்கரை, காங்கிரசு அரசு சட்ட அமைச்சராக பதவியேற்றுக் கொள்ளும்படி அழைத்தது. அம்பேத்கர் அதை ஏற்று விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சரானார். ஆகஸ்ட் 29ஆம் திகதி அம்பேத்கர் இந்திய அரசியலமைப்பை உருவாக்கும் ஆணையத்திற்கு தலைவரானார்.

அம்பேத்கரால் முன்மொழியப்பட்ட இந்திய அரசியலமைப்பு மிகச்சிறந்த சமூக ஆவணம் என்று வரலாற்றுவியலாளரும் இந்திய அரசியலமைப்பை நன்கு அறிந்தவருமான கிரான்வில்லா ஆசுட்டின் கூறுகிறார்.

1948ல் இருந்து அம்பேத்கர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். 1955ம் ஆண்டில் இவரது உடல்நலம் மேலும் மோசமடைந்தது. புத்தரும் அவரின் தம்மாவும் என்ற புத்தகத்தை எழுதிய 3 நாட்களுக்கு பிறகு 1956 டிசம்பர் 6ஆம் திகதி டில்லியிலுள்ள இவரது வீட்டில் தூக்கத்தில் உயிர் பிரிந்தது.

# விளையாட்டு






இந்தியாவின் குஜராத்தில் இடம்பெற்ற சக்கரநாற்காலி கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது. இந்தியாவுடன் இறுதிப் போட்டியில் மோதி இலங்கை இரண்டாம் இடத்தைப் பெற்றது. இரண்டாம் இடத்தைப் பெற்ற இலங்கை அணிக்கு சன்மானமாக 51000 இந்திய ரூபா வழங்கப்பட்டது. பங்களாதேஷ், நேபாளம், இந்தியா ஆகிய நாடுகளின் அணிகள் போட்டியில் மோதின. (படம்: ஏ.எம் நவாஸ்)

# கயிற்றின் மேல் ஆட்டம்



> சிம்பாப்வேயில் நடைபெறும் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றுக்கு இலங்கையுடன் தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் ஆகிய மூன்று பலமான அணிகள் ஆடும். இரண்டு அணிகளே உலகக் கிண்ணத்திற்கு முன்னேற முடியும் என்ற நிலையில் இது இலங்கைக்கு பெரும் போராட்டமாக அமையும்.



இலங்கை கிரிக்கெட் அணி 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற பின்னரான வரலாற்றில் இன்று இதுவரை இல்லாத வீழ்ச்சிப் புள்ளியை சந்தித்திருக்கிறது. அடுத்த ஒருநாள் உலகக் கிண்ணம் இன்னும் ஆறு மாதங்களில் அண்டை நாடான இந்தியாவில் நடைபெறவிருக்கிறது. ஆனால் இலங்கை அணி அந்த உலகக் கிண்ணத்தில் ஆடுவது நிச்சயமில்லாததாக மாறிவிட்டது.

கிரிக்கெட் உலகக் கிண்ணம் அறிமுகமானது தொடக்கம் இலங்கை இதுவரை இப்படியான ஒரு நெருக்கடியை சந்தித்ததில்லை. ஆனால் கிரிக்கெட்டில் போட்டித் தன்மை அதிகரித்து பலம்வாய்ந்த அணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அதற்கு ஈடுகொடுக்காவிட்டால் இப்படியாக நெருக்கடியை சந்திக்க நேர்வது இயற்கையானது.

இந்தியாவில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணத்திற்கு மொத்தமாகவே பத்து அணிகளே பங்கேற்கவுள்ளன. உலகக் கிண்ண சுப்பர் லீக் புள்ளிப் பட்டியல் அடிப்படையிலேயே அணிகள் தேர்வு செய்யப்படுகின்றன.

அதன்படி இந்தப் புள்ளிப் பட்டியலில் முதல் எட்டு இடங்களை பிடிக்கும் அணிகளுக்கே உலகக் கிண்ணத்திற்கு நேரடித் தகுதி பெற முடியும். போட்டியை நடத்தும் இந்தியாவுடன் நியூசிலாந்து, இங்கிலாந்து, பங்களாதேஷ், பாகிஸ்தான், அவுஸ்திரேலியா மற்றும் ஆப்கானிஸ்தான் என ஏழு அணிகள் ஏற்கனவே நேரடித் தகுதி பெற்றுவிட்டன.

இதன் எட்டாவது இடத்திற்காக கடும் போட்டி இருந்தபோதே அதனை உறுதி செய்ய நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் இலங்கை அணி களமிறங்கியது. அதாவது நியூசிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை 3–0 என முழுமையாகக் கைப்பற்றினால் இலங்கைக்கு உலகக் கிண்ணத்திற்கு நேரடித் தகுதி பெற முடியும்.

ஆனால் முதல் போட்டியில் இலங்கை 198 ஓட்டங்களால் படுதோல்வியை சந்தித்ததோடு இரண்டாவது போட்டி மழையால் கைவிடப்பட்ட நிலையில் மூன்றாவது போட்டியிலும் 6 விக்கெட்டுகளால் தோல்வியையே சந்தித்தது.

அதாவது இனியும் இலங்கை அணியால் உலகக் கிண்ணத்திற்கு நேரடித் தகுதி பெற முடியாது. அந்த அணி சுப்பர் லீக் புள்ளிப் பட்டியலில் 81 புள்ளிகளையே பெற்றது. இந்தப் புள்ளிகளுடன் முதல் எட்டு இடங்களுக்கு முன்னேற முடியாது. எட்டாவது இடத்தில் இருக்கும் மேற்கிந்திய தீவுகள் அணி 88 புள்ளிகளுடன் உள்ளது.

அதாவது இந்த சுப்பர் லீக் பருவத்தில் இலங்கை அணி ஆடிய 24 போட்டிகளிலும் 7 இல் மாத்திரமே வெற்றிபெற்றது 14 போட்டிகளில் தோல்வியை சந்தித்தது. இது ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் அணிகளை விடவும் மோசமான பெறுபேறு. அதாவது உலகக் கிண்ணத்திற்கு இலங்கை முன்னேற இன்னும் தகுதியை நிரூபிக்க வேண்டும் என்பது இதன் அர்த்தமாகும்.

ஆனால் அதற்கான சவாலை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. கயிற்றின் மேல் நடக்கும் ஆட்டம் ஒன்றுக்கே இலங்கை அணி முகம்கொடுத்திருக்கிறது. சற்று சறுக்கினாலும் உலகக் கிண்ண வாய்ப்பே பறிபோய்விடும்.

அடுத்து இலங்கை அணி உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் ஆட வேண்டும். இந்தப் போட்டித் தொடர் வரும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் சிம்பாப்வேயில் நடைபெறவிருக்கிறது.

அதாவது சுப்பர் லீக் புள்ளிப் பட்டியலில் கடைசி ஐந்து இடங்களைப் பிடித்த அணிகள், உலகக் கிண்ண லீக் 2இல் முதல் மூன்று இடங்களைப் பிடித்த அணிகள், 2023 உலகக் கிண்ண தகுதிகாண் பிளே ஒப் சுற்றில் முதல் இரண்டு இடங்களை பிடித்த அணிகள் என மொத்தம் 10 அணிகள் இந்த தகுதிகாண் சுற்றில் ஆடும்.

இந்த பத்து அணிகளில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகளே அடுத்த உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறும். நேபாளம் போன்ற சில கத்துக்குட்டி அணிகள் பங்கேற்பதால் இலங்கையால் இலகுவாக முன்னேறி விட முடியும் என்று கருத முடியாது.

ஏனென்றால் சுப்பர் லீக் புள்ளிப்பட்டியலில் கடைசி ஐந்து இடங்களை பிடிக்கும் அணிக்குள் வேறு எந்த எந்த அணிகள் சேரப்போகின்றன என்பது தீர்க்கமாக இருக்கிறது. இதில் இலங்கையுடன் சிம்பாப்வே, நெதர்லாந்து அணிகள் நேரடித் தகுதியை இழந்து தகுதிகாண் சுற்றில் ஆடவுள்ளன.

தற்போது நேரடி தகுதி பெற ஓர் இடம் எஞ்சி இருக்கும் நிலையில் அந்த இடத்திற்காக மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா மற்றும் அயர்லாந்து அணிகள் போட்டியிடுகின்றன.

இதில் மேற்கிந்திய தீவுகளுக்கு சுப்பர் லீக் அட்டவணையில் மேலும் போட்டிகள் இல்லாத நிலையில் அதுவும் தகுதிகாண் சுற்றில் ஆட வேண்டி ஏற்படும். இந்நிலையில் தென்னாபிரிக்க அணி நெதர்லாந்துடன் இரண்டு ஒருநாள் போட்டிகளில் ஆடுவதோடு இந்த இரண்டு போட்டிகளிலும் வெற்றியீட்டினால் தென்னாபிரிக்கா நேரடித் தகுதிக்கான வாய்ப்பை நெருங்கும்.

ஆனால் இது போதாது. ஏனென்றால் சுப்பர் லீக் போட்டி அட்டவணையில் அயர்லாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகள் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடவுள்ளன. வரும் மே மாதம் அயர்லாந்தில் நடைபெறவிருக்கும் இந்த ஒருநாள் தொடரை அயர்லாந்து 3–0 என வென்றால் அந்த அணி தென்னாபிரிக்காவையும் பின்தள்ளி உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெற கணிசமான வாய்ப்பு உள்ளது.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிம்பாப்வேயில் நடைபெறும் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றுக்கு இலங்கையுடன் தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் ஆகிய மூன்று பலமான அணிகள் ஆடும். இரண்டு அணிகளே உலகக் கிண்ணத்திற்கு முன்னேற முடியும் என்ற நிலையில் இது இலங்கைக்கு பெரும் போராட்டமாக அமையும்.

இப்படியாக நெருக்கடியான சூழலில் இலங்கை ஒருநாள் அணி அதற்கு முகம்கொடுக்கும் தகுதியுடன் இருக்கிறதா? என்பதே பெரும் கேள்வியாக உள்ளது.

நடந்து முடிந்த நியூசிலாந்துடனான ஒருநாள் தொடரே இலங்கை அணியின் நிலைமையை காட்டுவதற்கு நல்ல உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். அணியில் திறமையான வீரர்கள் இருந்தபோதும் ஒருவரும் சோபித்ததாகத் தெரியவில்லை. துடுப்பாட்ட வரிசை முழுமையாக பலவீனப்பட்டிருப்பதோடு நியூசிலாந்து ஆடுகளத்திற்கு ஏற்ப பந்துவீசுவதற்கு இலங்கை பந்துவீச்சாளர்களுக்கு முடியாமல் போனது.

இது இலங்கை ஒருநாள் அணியின் தொடர்ச்சியான நிலையாக உள்ளது. அணியின் துடுப்பாட்ட வரிசை ஸ்திரமாக இல்லை. பத்தும் நிசங்கள் சிறந்த ஆரம்ப வீரர் என்றபோதும் அவரால் ஆட்டத்தை திசை திருப்பும் அளவில் மட்டையை சுழற்ற முடியாமல் உள்ளது.

அவிஷ்க பெர்னாண்டோ போன்றவர்கள் சோபிக்கத் தவற, குசல் ஜனித் பெரேரா போன்றவர்கள் காயத்தின் பின் மீளாத நிலையில் ஆரம்ப வரிசை தட்டுத் தடுமாறுகிறது. இந்த நிலையில் நவனிது பெர்னாண்டோ போன்ற புது முக வீரர்கள் திடுதிடுப்பென்று அணியை மீட்பார்கள் என்று தேர்வுக் குழு நம்பினால் அது மேலும் பின்னடைவையே தரும்.

குசல் மெண்டிஸ் அண்மைக் காலமாக சோபித்தபோதும் அவரது துடுப்பாட்டத்தில் தொடர்ச்சி ஒன்று இல்லாமல் உள்ளது. மறுமுனை வீரர்கள் சோபிக்காதபோது இதற்கு அவரை மாத்திரம் குறை கூற முடியாது.

மத்திய வரிசையை பலப்படுத்தவே அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸ் ஒருநாள் அணிக்கு நீண்ட இடைவேளைக்குப் பின்னர் அழைக்கப்பட்டார். ஆனால் அவரது ஆட்டம் சொல்லும்படியாக இல்லை. என்றாலும் அடுத்த உலகக் கிண்ணம் வரை அவரை நம்புவதைத் தவிர வேறு வழியில்லை போல் தெரிகிறது.

இலங்கை அணியில் ஸ்திரமான இடத்தை பிடித்த ஒரு வீரராக தனஞ்சய டி சில்வா இருந்தபோதும் அவரது ஒருநாள் ஆட்டம் ஸ்திரமானதாகத் தெரியவில்லை. அவரது துடுப்பாட்ட வரிசை குறித்து அண்மையில் சர்ச்சை கிளம்பியது அணிக்கு நல்லதாக இல்லை.

தம்மை ஏழாவது வரிசையில் துடுப்பெடுத்தாடச் சொன்னதற்கு தனஞ்சய எதிர்ப்பு வெளியிட்டதாக சமூக ஊடகங்கள் அண்மையில் கூறிய நிலையில் தனஞ்சய அதனை மறுத்திருந்தார். எப்படி இருந்தபோதும் தனஞ்சயவுக்கு துடுப்பாட்ட வரிசையில் ஸ்திரமான இடம் ஒன்று இல்லாதது கூட அவர் சோபிக்கத் தவறி வருவதற்கு காரணமாக இருக்கக் கூடும்.

சரித் அசலங்க பெரும் எதிர்பார்ப்புகள் கொண்ட இலங்கை அணியின் இளம் வீரராக இருந்தபோதும் அவரில் முழுமையாக நம்பிக்கை வைப்பது குறித்து தேர்வுக் குழு மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரம் வந்திருப்பதாக தெரிகிறது.

அணித் தலைவர் தசுன் ஷானக்க எப்போது வேண்டுமானாலும் ஆட்டத்தை திசை திருப்பக் கூடியவர். என்றாலும் ஓர் அணியாக ஆடினாலேயே அவருக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும்.

டி20 போட்டிகளில் சிறந்த பந்துவீச்சாளராக இருக்கும் சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்க ஒருநாள் போட்டிகளில் முழுமையாக சோபிக்கத் தவறி வருகிறார். அவரது பந்துமுவீச்சில் எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு எந்த நெருக்கடி இருப்பதாகவும் தெரியவில்லை.

நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரின் இரண்டு போட்டிகளிலும் ஹசரங்க எந்த ஒரு விக்கெட்டையும் வீழ்த்தவில்லை. ஹசரங்க சிறந்த முறையில் துடுப்பெடுத்தாடக்கூடியவர் என்றபோதும் ஒருநாள் போட்டிகளில் அவரது துடுப்பாட்டம் அண்மைக் காலமாக மோசமாகி வருகிறது.

இலங்கையின் வேகப்பந்து மற்றொரு குறையாக உள்ளது. கசுன் ராஜித்த, டில்ஷான் மதுஷ்க, லஹிரு குமார என்று எல்லோரும் ஒரு பொத்தாம்பொதுவான பந்துவீச்சையே வெளிப்படுத்துகிறார்கள். எதிரணியை சாய்த்து வெற்றி வாய்ப்பை அதிகரிப்பதற்கான நம்பிக்கையை தருவதாக இல்லை.

இந்நிலையில் இலங்கை அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீரவின் தேவை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அகதிமாக உள்ளது.

இலங்கை ஒருநாள் அணிக்கு எதிரே இருக்கும் சவால் சாதாரணமானதல்ல. அதற்கு அணியை தேர்வு செய்வது மாத்திரமல்ல, தயார் செய்வதும் தீர்க்கமானது. இலங்கை அணியின் திறமை பற்றி சந்தேகம் இல்லை, ஆனால் அதனை மைதானத்தில் பயன்படுத்துவதுதான் இப்போதிருக்கும் தேவையாகும்.

**எஸ்.பிர்தௌஸ்...**



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2023 ஏப்ரல் 2 ஞாயிற்றுக்கிழமை



# இன்றும் முறியடிக்கப்படாத ரூஸ்வெல்ட் சாதனை



1907 ஜனவரி 1ஆம் திகதி புத்தாண்டு தினத்தில் அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் காண்பவர்களுக்கு எல்லாம் கைலாகு கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தார். அவர் அன்றைய நாள் முழுவதும் மொத்தமாக 8513 பேருக்கு கைகொடுத்தார். இது அப்போது உலக சாதனையாக இருந்ததோடு 1977 ஆம் ஆண்டு 70 ஆண்டுகளின் பின்னரே முறியடிக்கப்பட்டது. எனினும் அரச தலைவராக அவரது சாதனை இன்றும் கூட முறியடிக்கப்படவில்லை. என்றாலும் 2012 ஜனவரி 12 ஆம் திகதி இந்தியாவின் ராஜ்கொட்டில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் நரேஷ் படேல் 48870 பேருக்கு கைலாகு கொடுத்ததே தற்போது உலக சாதனையாக இருக்கிறது.

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# ஸ்டார்லினுக்கு வந்த எச்சரிக்கைக் கடிதம்...



சோவிட் ஒன்றியத் தலைவர் ஜோசப் ஸ்டார்லினுக்கும் யுகோஸ்லாவியத் தலைவர் ஜோசிப் பிரோஸ் டிடோவுக்கு ஜென்மப் பகை. இரண்டாவது உலகப் போரின்போது அது உச்சம் பெற்றிருந்தது.

அதாவது இரண்டாவது உலகப் போரின்போது புரட்சியை தூண்டி சோவியட் செல்வாக்கில் இருந்து நாட்டை விடுவிக்க முயன்றார் என்பது டிடோவுக்கு எதிரான பரவலான குற்றச்சாட்டு. ஸ்டார்லினும் சும்மா இருக்கவில்லை. தனது வழக்கமான புத்தியை காண்பித்தார்.

ஒன்று இரண்டல்ல, டிடோவை படுகொலை செய்ய 22 தடவைகள் முயன்றார். டிடோவுக்கு இது பெரும் தொந்தரவாகப் போய்விட்டது. ஸ்டார்லினுக்கு கடைசியாக ஒரு எச்சரிக்கைக் கடிதத்தை அனுப்பினார்.

'என்னை கொல்ல ஆள் அனுப்புவதை நிறுத்துங்கள். நாங்கள் ஏற்கனவே ஐவரை பிடித்து வைத்திருக்கிறோம். அவர்களில் ஒருவரிடம் குண்டு ஒன்று இருந்தது மற்றவர்களிடம் துப்பாக்கிகள் இருந்தன.... கொலையாளிகளை இங்கே அனுப்புவதை நீங்கள் நிறுத்தாவிட்டால், நான் மொஸ்கோவுக்கு ஒருவரைத்தான் அனுப்புவேன், இரண்டாமவரை அனுப்பும் தேவை எனக்கு இருக்காது' என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதற்குப் பின்னர் இந்தக் கொலைப் படலத்துக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை.

ஆனால் 1953 மார்ச் 5ஆம் திகதி ஸ்டாலின் இறந்த பின், டிடோ எழுதிய அந்தக் கடிதம் ஸ்டார்லினின் அலுவலகத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

ஸ்டார்லினின் மரணம் பற்றி சில வரலாற்றாய்வாளர்களுக்கு இன்றும் சந்தேகம் இருக்கிறது.



அவர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டே உயிரிழந்ததாக கூறப்பட்டாலும் அவருக்கு நஞ்சூட்டப்பட்டிருக்கலாம் என்று சில தரப்பினர் நம்புகிறார்கள். அதுவும், இந்தக் கொலை டிடோவின் வேலையாக இருக்கலாம் என்று நம்புபவர்கள் கணிசமாக உள்ளனர்.

# தபாலில் அனுப்பப்பட்ட குழந்தைகள்







அமெரிக்க தபால் சேவை முதல் முறை பொதிச் சேவையை அறிமுகம் செய்தபோது யாரும் எதிர்பார்க்காத சம்பவம் நிகழ்ந்தது. அதாவது இதுவரை காலமும் 1.8 கிலோகிராம் எடை கொண்ட பொருட்களையே தபால் செய்ய முடியும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டு 23 கிலோகிராம் எடை அளவில் தபால் செய்ய 1913 இல் அனுமதி வந்தது.

ஆனால் மக்கள் இதனை வேறு மாதிரி பயன்படுத்தினார்கள். சிலர் தனது குழந்தைகளையே தபாலில் அனுப்ப ஆரம்பித்தனர்.

இதன்படி ஒஹியோவைச் சேர்ந்த ஒரு பெற்றோர் தனது குழந்தையை ஒரு மைல் தூரத்தில் இருக்கும் பாட்டியிடம் தபாலில் அனுப்பிய சம்பவமே இவ்வாறான முதல் நிகழ்வாக பதிவாகிறது. இதற்கு அவர் தபால் கட்டணமாக 15 சதங்களை செலுத்தினார். ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்தால் காப்புறுதியாக 50 டொலரும் விதிக்கப்பட்டது.

எனவே தமது குழந்தைகளை நம்பி தபாலில் அனுப்புவதற்கு பெற்றோர்கள் பழகிக் கொண்டனர். அமெரிக்காவில் இப்படியான சம்பவங்கள் வழக்கமாகின.

இதில் ஒரு சந்தர்ப்பத்தில் குழந்தை ஒன்று 73 மைல் தொலைவில் இருக்கும் தனது பாட்டியிடம் தபாலில் அனுப்பப்பட்டிருக்கிறது. 1915 ஆம் ஆண்டு வரையில் இந்த வழக்கம் அமெரிக்காவில் நடைமுறையில் இருந்திருக்கிறது.

# 50 ஆண்டு உணவு டப்பா



தகர டப்பாவில் அடைத்த முறையான வகையில் சேமித்து வைத்திருக்கும் உணவுகள் நீண்ட காலம் நிலைத்திருக்கும். அதற்கு நல்ல உதாரணம் பெரில் லிலி செய்த வேலை. லிலி 1956 ஆம் ஆண்டு தனது திருமண தினத்தில் தகர டப்பாவில் அடைக்கப்பட்ட கோலி இறைச்சி உணவை சேமித்து வைத்தார். ஒருநாள், இரண்டு நாள் அல்ல தனது 50 ஆவது திருமண நாள் வரை அது அப்படியே இருந்தது. சரியாக 2006 ஆம் ஆண்டு தனது ஐம்பதாவது திருமண நாளில் அந்த உணவை உடைத்து சாப்பிட்டார். அவருக்கு எந்த ஒரு நோயும் ஏற்படவில்லை.

# போலி நாணயம் அடிப்பது தப்பில்லை!



அமெரிக்காவின் பில்டோபியாவைச் சேர்ந்த வர்த்தகரான சாமுவேல் கேர்டிஸ் உபாம், 1862 மற்றும் 1863 ஆம் ஆண்டுக்கு இடையே 15 மில்லியன் டொலர் பெறுமதியான அமெரிக்க டொலர்களை அச்சடித்து வெளியிட்டிருக்கிறார். இந்த போலி நாணயங்கள் அமெரிக்க பொருளாதாரத்தையே பாதித்தது. அதற்காக உபாமை குற்றவாளியாக்க முடியவில்லை. ஏனென்றால் அமெரிக்க சட்டத்தின்படி போலி நாணயம் அடிப்பது அப்போது தப்பில்லை. பதிலாக போலி நாணயம் அமெரிக்காவில் அங்கீகரிக்கப்படாது என்று மாத்திரமே சட்டத்தில் கூறப்பட்டிருந்தது.



Prithvi Shankar




ஸ்ரீ அமிர்தன்
31.03.2023
ஸ்ரீகாந் - சரண்யா
22, ஹில் வீதி,
நாவலப்பிட்டி.



தனா

# செல்ஃபி உலா



Mohamed Mahroof



நிதியியல் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கும் ஊடகத் துறை சார்ந்தவர்களுக்கும் தெளிவூட்டும் வகையில் இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட செயலமர்வில்.......
*Kalavarshny Kanagaratnam*



Nadarajah Thamarai Selvi



யதுஷா-ரவித்தியாகராஜா



இ/எம்பி பரியோவான் ஆரம்ப வித்தியாலயம் இறக்குவானை
ஆர்.விஷ்மிதா ஆர். கனிஷிகா, டபிள்யூ. விதுர்ஷிகா





## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்தேறிய

# சங்கமிப்பு கூத்து-பரத சங்கமம்

## ஓர் நவரத்ன மாலை



கொழும்புத் தமிழ்ச்சங்க நிறுவனர் நினைவு நாளில் மட்டக்களப்பு அரங்க ஆய்வுக்கூடமும் கொழும்பு அபிநய சேத்ராவும் இணைந்து கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்குச் சூட்டிய நவரத்தின மணி மாலையே

சங்கமிப்பு (கூத்து பரத. நடன சங்கமம்

எனும் ஒரு மணி நேர ஆற்றுகையாகும்

நவரத்தின மாலை என நாம் இதற்கு நாமம் சூட்டியமைக்கு ஓர் அர்த்தம் இருக்கிறது அந்த அர்த்தமாவது நவமான, நவ(ஓன்பது) ஆற்றுகைகள் இந்நிகழ்வில் அடங்கி இருந்தன என்பதுவே

ஆற்றுகையின் நோக்கங்களாவன

1.. கூத்தும் பரதமும் ஈழத் தமிழரின் வலிமையும் செழுமையும் வாய்ந்த இரு பெரும் நடன மரபுகள்

2,கூத்தின் தாளக்கட்டுகளுக்கும் ஆட்ட முறைக ளுக்கும் பரதத்தின் ஜதிக் கோர்வைகளுக்கும் நடன அசைவுகளுக்கு மிடையே மிகுந்த ஒற் றுமைகள் உள்ளன

3. இந்த ஜதிகளும் ஆடல்களும் இணைகையில் புதிய ஆக்கங்கள் பிறக்க வாய்ப்புண்டு

4. ஓர் அழகியல் சங்கமமாக நாம் இதனை ஆக்குதல் மூலம் ஓர் புரிதலை ஏற்படுத்தலாம் என்பனவே

இதற்காக நாம் ஒன்பது நிகழ்வுகளைத் தெரிந்து ஒழுங்கமைத்தி ருந்தோம்

1,முதலாவது நிகழ்வு அறிமுகமும் திரை நோக்கமுமாகும்

இந்நிகழ்வில் பங்குகொள்ளும் அணி சேர் முது கலைஞர்க ளான மிருதங்கக் கலைஞர் வேணிலானும் வாய்ப்பாட்டிசைக்கலைஞி வாசுகியும் நானும் திவ்வி யாவும் மற்றும் இளம் கலைஞர்களான கர்நா டக இசைப் பாடகியான வைசாலியும் மத்தளம் வாசிக்கும் ஜக்சனும் வரி சையாக நாடகத் தில் அறிமுகமாவது போல நடந்து மேடைக்கு வந்து சபைக்கு அறிமுக மாகி வணக்கமுரைத்தோம்.

எங்கள் வணக்கத்தை சபை ஏற்றுக் கரகோசம் எழுப்பி ஆரம்பிக்கு மாறு ஊக்கம் தந்தது மண்டபத்தை நிறைத்திருந்த மலர்ந்த முகங் களைக் காண எமக்கும் உற்சாகம் பிறந்த்து \அதன் பின் அணிசேர் கலைஞரகள் அனைவரும் தத்தம் இருக்கைகளில் மேடையில் அமர்ந்து கொள்ள நான் மேடையில் இடது பக்க மூலையில் நின்று முதன் முதலில் கூத்துக் கலையை ஈழத்துத் தமிழரின் தனித்துவமான கலை எனப் பிரபல்யப் படுத்திய எனது குருநாதரான பேராசிரியர் வித் தியானந்தனுக்கு இப்படையலைச் சமர்ப்பித்தேன் அதன் பின்னர் ஈழத்தின் இரு பெரு நடன மரபுகளை யும் இரண்டிற்குமிடையே உள்ள தாளக்கட்டு ஒற்றுமை களையும் அறிமுகம் செய்தேன் அவ்வுரையில் இந்த ஒன்பது ஆற்றுகைகள் கோர்க் கப் பட்ட முறையினை ஒவ்வொன் றாக விளக் கினேன். இது குழப்பமின்றி பார்ப்போரை ஆற்றுகைக்குத் தயார்ப்படுத்த எடுத்த முயற்சியாகும்

நிகழப் போகும் கூத்து பரத உருப்படிகளை ஒவ்வொன்றாக விளக்கி அதில் கூத்து ஆடலும் பரத நடனமும் மாறி மாறி நடைபெற்று இறுதியில் அவை ஒன்றாக இணையும் பாங்கில் இந்த ஆற்றுகை வடிவமைக்கபட் டிருக்கிறது எனவும் விளக்கினேன் பரத ஜதிகளுக்கும் கூத்து தாளக்கட் டுகளுக்கு மிடையே உள்ள ஜதிகளை ஒப்பு நோக்கிய ஆய்வு அவசியம் எனவும் விளக்கினேன் அதன் பின்னர் மேடையின் இடது பக்க மூலையில் நின்ற திவ்வியா பரத ஆற்றுகைகள் பற்றிக் கூறி, கூத்துத் தாளக்கட்டுகள் தனக்கு அறிமுகமான முறையினையும் எப்படி இதில் இணைப்பைக் கொணர முயற்சித்தோம் என்பதனையும் இதன் ஆக்க முயற்சியையும் வி ள க் கி னார் நிகழ்வு ஆரம்பத்தை மென் மையான இனிமையான தனது குரல் இசையில் அறிமு கம் செய்தார் அணிசேர் கலைஞர்க ளில் ஒருவரான் வைசாலினி

அவர் பாடிய பாடல் இது

இருபெரும் மரபுகள் இணையும் இவ்வரங்கில்
வருகை தந்திருந்தவரே வணக்கம் வணக்கம்
கூத்தும் பரதமும் கூடும் இவ் விணைப்பில்
கூட வந்தவரே கும்பிட்டோம் வாழ்க

இந்தப் பாடல் முடிய மத்தளமும் மிருதங்கமும் கலந்து இசைக்கத் தொடங்கின அந்த தோல் வாத்திய தாளப் பின்னணியில் அழகான ஒர் சிறிய முன் திரையினால் தங்கள் உடலை மறைத்த படி கூத்துக் கலைஞனான தினேசும் பரத நடனக் கலைஞியான ரிசிகேசாவும் கூத்து தாளக்கட்டுகளுக்கு அசைந்தபடி மேடைப்பிரவேசம் செய்தனர். மேடையின் முன் பகுதிக்கு வந்த அவர்கள், தம்மை மறைத்துப் பிடித் திருந்த திரையை தாளத்திற்கு எற்ப மெல்ல மெல்லக் கீழிறக்கி வைத்து தமது ரூபதரிசனம் தந்து தாதாம் தெய் தெய்ய எனும் கூத்தர் பின்னுக் குச் செல்லும் தாளக்கட்டுக்கு ஏற்ப பின்னால் சென்று தமது இருக்கை யில் அமர்ந்துகொண்டனர். அதன் பின் இரண்டாம் நிகழ்வு ஆரம்பமா கியது

2. இராவணன் தோற்றம் வடமோடிக் கூத்து பாணியில்

அடுத்து தினேஸ் உடை வாள் இடையில் தொங்க தலையில் முடி ஒளிர இராவணனாகத் தோன்றினான் வடமோடி பாணியில் அந்த இரா வணன்

மும்மூர்த்திகளையோட்டி இம்மாநிலத்திலே
முரச றைந்தே இருந்தோன்
மூவுலகை ஆண்டவன் பாவுலகில் வாழ்பவன்
முடிபத்துத் தலை யணிந்தோன்

எனும் விருத்தம் கூறித் தன்னை அறிமுகம் செய்தான். இந்த விருத் தமும் தருவும் நான் எழுதிய இராவணேசனில் வரும் பாடல்களாகும் பின்னர் நான் வடமோடியில் அரசனுக்குரிய தாள்க்கட்டுகளைக் கூற அவன் வரவு ஆட்டம் ஆடினான்,

பின் தருப்பாடி ஆடினான்

ராஜ ராஜ ராஜர் போற்றும்
இராஜன் மஹா ராஜன் வந்தான்
ராஜ தீரன் கொலுவில் வந்தானே

எனும் அறிமுகத் தருப் பாடல்கள் பின் வந்தன

அவன் பாட பின் பாட்டினை நான் பாடினேன்,

பாடலின் இடையில் தாள்க்கட்டுகளை புகுத்தி அதனை நாம் ஒரு தாளக்கட்டும் பாடலும் கலந்த ஓர் உருப்படியாக புத்தாக்கம் செய்திருந் தோம் ஆடி முடித்து கம்பீரமாக இராவணகிய தினேஸ் இருக்கையில் அமர்ந்தான்

3 ஆண்டாள் அபிநயம் பரத பாணியில்

ஆண்டாள் எழுந்தாள் ஆண்டாளுக்கு அபிநயித்தவள் ரிசிகேசா ஆகும் பரத பாணியில் அவள் நடம்புரிந்தாள்

வில்லிநகர் திகழ் விந்தை சித்தர் மகளாக வந்த
திருஆடிப்பபூரநாள் துளசி வனம் தனில்
சுக்ர வாரம் அவதாரமாகியே
தக்கிடதகி தக்கிடதகி கிடதகி
சங்கம் ஏந்தியே
திக்கிடதகி திக்கிடதகி கிடதகி
திகிரி அணிந்தவர்
தொம் கிடதகி தொண கிடதகி கிடதகி
'ஜோதியானவர்
நம்கிடதகி நம்கிடதகி கிடதகி
நாமம் ஆயிரம் வடபத்ரசயனுக்கு
சூடிகொடுத்தபூமகளாகிய கோதை கவுத்துவம்
எனக் கவுத்துவம் ஆடி அமர்ந்தாள்

4. அனுருத்திரன் ஆடல் தென்மோடி கூத்துப் பாணியில்

ஆண்டாள் அமர்ந்ததும் அனுருத்திரன் அறிமுக மானான்

தென் மோடிப்பணியில் அரசனுக்குரிய வரவு விருத்தமான்

நெற்றியில் ஒட்டிய பட்டமதியொளி
நிசியை விலக்கிடவே
நேரிய மங்கையர் கூரிய வேல்விழி
நெஞ்சை உழக்கிடவே
பொற்றை இரத்தின மட்டவிழ் மாலை
புடை புடையே புரழ
போர் வலி பெற்றனுருத்திரனாகிய
பூபதி வந்தனனே என நான் பாட அதற்கு தினேஸ் ஆடினான்

தருவும் என்னால் பாடப்பட்டது

சீயம் நிகராய தூயந் நல்ல்
சித்ர மனமொத்த சீலன்
ஆயன் அருளிய பாலன் –அனு
ருத்திரன் தோற்றினானே

எனும் பாடலுக்கும் அவன் அனுருத்திரனாக அபிநயித்து அழகாக ஆடினான்.

(தொடரும்)

# கலைஞர் அறிமுகம்



**உங்களைப் பற்றிய அறிமுகம்**

புத்தளம் மாவட்டத்தின் உடப்பு கிராமத்தில் பிறந்த நான் இன்று எனது குடும்பத்தவர்களுடன் இக்கிராமத்திலேயே வாழ்ந்து வருகின்றேன். 1977 ஆம் ஆண்டில் விஞ்ஞான மற்றும் கணித ஆசிரியராக நியமனம் பெற்ற நான் பலாலி ஆசிரிய கலாசாலையில் விஞ்ஞான பாட பயிற்சியை பெற்றபின் கொஃவிபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் நான்கு வருடங்கள் கடமையாற்றிய பின் புஃஉடப்பு தமிழ் மகா வித்தியாலயம், புஃஆண்டிமுனை தேசிய பாடசாலையிலும் கடமையாற்றினேன். பின்னர் புத்தளம் கல்விப் பணிமனையில் விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகராக பணியாற்றிய பின்பு தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். மொத்தமாக 41 ஆண்டுகள் கல்விப் பணி புரிந்த நான், வடமேல் மாகாண கல்வி திணைக்களத்தினால் வழங்கப்படும் சிறந்த ஆசிரியருக்கான விருதினை 2006ம் ஆண்டிலும்,'சிறந்த ஆசிரிய ஆலோசருக்கான விருதினை' 2012 ஆம் ஆண்டிலும் பெற்றுள்ளேன்.

சிறுபராயத்திலிருந்து கலைத்துறையில் ஆர்வம் மிக்க நான் கவிதை, சிறுகதை, சிறுவர் கதை, பாடல் ஆக்கம் ஆகிய இலக்கிய துறைகளில் ஈடுபட்டு பல விருதுகளையும் பரிசில்களையும் பெற்றுள்ளேன்.

**எனக்குள் எழுத்தார்வம் ஏற்பட்டமை பற்றி...**

வடமேல் மாகாணத்திலேயே இன்றும் தமிழர்களின் இருப்பை பறைசாற்றி நிற்பதுடன் தமிழர்களின் கலை, கலாசார விழுமியங்களைப்



பேணிப் பாதுகாக்கும் ஒரே ஒரு தமிழ் கிராமம் உடப்பு என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய சிறப்புமிக்க எமது கிராமத்தில் பல நாடக கலைஞர்கள், பாரம்பரிய இசைக் கலைஞர்கள், சித்திரக்கலைஞர்கள், எழுத்தாளர்கள் என பலர் தோன்றி தமது கலைப் பணிகளை புரிந்து இன்று எம்மை விட்டு பிரிந்துள்ளனர். அத்தகைய கலைஞர்களுள் ஒருவரான 'வில்லிசை வேந்தன்' கலாபூஷணம் அமரர். பெரி. சோமாஸ்கந்தர் அவர்களே எனது தமிழ் மொழி ஆசான் ஆவார். அதேபோல் பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்றபோது எனது தமிழ் மொழி விரிவுரையாளராக மூதறிஞர் பண்டிதர் சொக்கன் ஐயா அவர்களே திகழ்ந்தார். இவர்கள் இருவருமே நான் இலக்கிய துறையில் கால் பதிப்பதற்கும், பின்னர் கவிதை, சிறுகதை, பாடலாக்கம், சிறுவர் கதைகள் ஆகியவற்றை படைப்பதற்கும் காரண கர்த்தாக்கள் ஆவார்கள்.

பாடசாலை நாட்களில் அங்கு நிகழும் இலக்கிய மன்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளேன். ஆரம்ப காலத்தில் வீரகேசரி பத்திரிகையில் இடம் பெறும் மக்கள் மன்றம் பகுதியில் எனது ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டன. 1985 ஆம் ஆண்டில் சனத்தொகை வளர்ச்சியும் சூழல் மாசுபடுலும் என்ற எனது கட்டுரை வீரகேசரியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. தினகரன் வார மஞ்சரியில் 'அன்னை எனும் ஆலயம்' எனும் எனது சிறுகதை 1988 ஆம் ஆண்டில் பிரசுரமானது. பின்னர் 'மலரத் துடிக்கும் மொட்டுக்கள்''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ'; ஆகிய எனது இரு சிறுகதைகள் தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரமாகின.

**வாசிப்பு மற்றும் தேடல் அனுபவம்**

இளம் பராயதிலிருந்தே வீரகேசரி, தினகரன், ஆகியவற்றின் வார மஞ்சரிகளில் வெளிவரும் சிறுகதைகளை வாசிப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டவன் நான். இன்றும் அந்த வழக்கங்களைப் பின்பற்றிவருவதுடன் 'ஞானம்' சஞ்சிகையில் வெளிவரும் சிறுகதைகள் மற்றும் ஆக்கங்களையும் வாசிப்பதில் ஆர்வம் கொண்டுள்ளேன்.

மூதறிஞர், பண்டிதர் 'சொக்கன்' ஐயா அவர்கள் எழுதிய 'செல்லும் வழி இருட்டு' என்பதே நான் வசித்த முதல் நாவலாகும். அதன் பின் வீர கேசரியின் அனுசரணையில் வெளியான, நிலக்கிளி, ' வரலாறு அவளைத் தோற்று விட்டது.' 'காலங்கள் சாவதில்லை', காட்டாறு ', போன்ற நாவல்களை வாசித்ததன் மூலமே எனது இலக்கியத் தேடல் மேலும் அதிகரித்தது. அத்தோடு இலங்கையில் தேசிய பத்திரிகைகளில் வெளிவரும் கட்டுரைகள்



கவிதை சிறுகதை சிறுவர் கதை பாடல்கள் போன்றவற்றை வாசிப்பதுடன் கவிஞர் கண்ணதாசன், கவிஞர் பா விஜய் கவிஞர் வைரமுத்து ஆகியோரின் கவிதைகளையும் வாசிப்பதன் மூலம் எனது கவிதை புனையும் திறனை வளர்த்துக் கொள்ளுவதில் ஆர்வம் காட்டி வருகின்றேன்.

**இதுவரை பெற்ற விருதுகள் மற்றும் மதிப்பளிப்புகள்**

2019 ஆம் ஆண்டில் புத்தளம் மாவட்ட செயலகத்தினால் கலைஞர்களை கௌரவித்து வழங்கப்படும் 'கலாதினி' விருதினை பெற்றேன்.வடமேல் மாகாண கலாசார திணைக்களத்தினால் 2021ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 'வயம்ப விசுள மினி' போட்டியில் கலந்துகொண்டு எனது 'மலரத்துடிக்கும் மொட்டுக்கள்' என்ற நூலுக்கும், எனது பாடலாக்கத்திற்கும் முதற் பரிசுகளைப் பெற்று அவற்றுக்கான விருதுகளையும் பெற்றுள்ளேன்.

தினகரன் நாளிதழும், சங்கவி பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனமும் இணைந்து 2022 ஆம் ஆண்டில் நடத்திய விருது வழங்கும் விழாவில் 'தேசிய கலா விபூஷணம் விருதினையும், வாழ்நாள் சாதனையாளர் விருதினையும் பெற்றுள்ளேன்.

2022 ஆம் ஆண்டில் புத்தளம் மாவட்ட கலைஞர்களை கௌரவித்து புத்தளம் மாவட்ட செயலகத்தினால் வழங்கப்பட்ட விருதினை புத்த சாசனம் சமய மற்றும் கலாசார அலுவலர்கள் அமைச்சர் கௌரவ, விதுர விக்ரமநாயக்க அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன்.



கலாசார அலுவல்கள் திணைக்களமும் முந்தல் பிரதேச செயலகமும் இணைந்து 2021 ஆம் ஆண்டில் நடாத்திய தேசிய இலக்கிய விழா போட்டியில் கலந்து கொண்டு கவிதை, சிறுகதை, சிறுவர் கதை, பாடலாக்கம் ஆகிய பிரிவுகள் அனைத்திலும் முதலாம் இடங்களை வென்று அவற்றுக்கான பரிசீல்களையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளேன்.



கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து 2020 ஆம் ஆண்டில் நடத்திய தேசிய இலக்கிய விழா போட்டியில் கலந்து கொண்டு எனது பாடலாக்கத்திற்காக தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தினை பெற்றுள்ளேன்.

புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவலர்கள் அமைச்சினால் 2021 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்காக நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் கலந்துகொண்டு எனது பாடலாக்கத்திற்காக தேசிய மட்டத்தில் ஆறுதல் பரிசினை பெற்றுள்ளேன்.

**இதுவரை வெளியிட்ட நூல்கள் தொடர்பாக**

நூல் வெளியீடு என்பது எழுத்தாளர்களுக்கு பெரும் சிரமத்தையும் பொருளாதார ரீதியில் பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தக்கூடிய விடயமாகும். தினகரன் வார மஞ்சரியில் பிரசுரிக்கப்பட்ட எனது மூன்று சிறுகதைகளையும் மற்றும் எனது ஆறு சிறுகதைகளையும் சேர்த்து 2020 ஆம் ஆண்டில் 'மலரத் துடிக்கும் மொட்டுக்கள்' எனும் எனது சிறுகதை தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளேன். எமது ஊரில் கலைஞர்களை ஊக்குவிக்கும் திவ்ய ஒளி கலை மன்றத்தின் வெளியீடாகவே இந்நூல் வெளிவந்துள்ளது.

இதுவரையில் இலக்கியப் போட்டி நிகழ்வுகளில் கலந்து கொண்டு அதில் வெற்றி பெற்ற கவிதைகளையும், மேலும் எனது சில கவிதைகளையும் தொகுத்து விரைவில் எனது கவிதை தொகுப்பு நூலை வெளியிட உள்ளேன்.

**எழுத்துத்துறை தவிர்த்து ஈடுபாடு கொண்டவை**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நடாத்தும் அரச ஊழியர்களுக்கான இரண்டாம் மொழி (தமிழ் மொழி) பயிற்றுவிப்பாளராக கடமையாற்றுகின்றேன்.

எமது ஊரில் உள்ள திவ்ய ஒளி கலை மன்றத்தின் ஒரு உறுப்பினராக இருப்பதுடன், இந்த மன்றத்தின் மூலம் எமது மூத்த கலைஞர்களை பாராட்டி விருதுகள் வழங்குதல், ஐந்தாம் தர புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி கௌரவித்தல், கலை நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், இலக்கியப் போட்டிகளுக்கு மாணவர்களையும் இலக்கிய ஆர்வலர்களையும் கலந்து கொள்ளச் செய்தல் போன்றவற்றையும் மேற்கொண்டு வருகின்றேன்.

அகில இலங்கை சமாதான நீதவானாக நான் விளங்குவதால் எனது சேவையை பெற்றுக் கொள்பவர்களுக்கு தேவையான உதவிகளையும் புரிந்து வருகின்றேன்.

**நன்றிக்குரியவர்கள்**

நான் கலைத்துறையில் ஈடுபடுவதற்கு காரண கர்த்தாக்களாக இருந்த 'வில்லிசை வேந்தன்' கலாபூஷணம் அமரர். பெரி. சோமாஸ்கந்தர் மற்றும் மூதறிஞர். பண்டிதர் சொக்கன் ஐயா ஆகியோர் எனது நன்றிக்குரியவர்களாவர். அத்துடன் எனது இலக்கிய ஈடுபாடு சில வருடங்கள் தொய்வு நிலையில் காணப்பட்டது. என்னை மீண்டும் இலக்கியத் துறையில் ஈடுபாடு காட்டுவதற்கு ஊக்கமளித்த திரு கே கனகவேஸ்வரன் (மு.பு)மற்றும் உடப்பூர் திவ்ய ஒளி கலை மன்றத்தின் தலைவர் திரு. பா. முருகானந்தன் ஆகியோருக்கும் மற்றும் எனது ஆக்கங்களை தங்கள் பத்திரிகைகளில் பிரசுரித்த வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகை ஆசிரியர்களுக்கும் எனது இலக்கிய பயணத்தில் துணை நிற்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

**கே.மகாதேவன்**

## மணவையின் மருத்துவக் குறிப்பு

# மூட்டுவலி



"உடல் பருமன், மரபு, உடலுழைப்புக் குறைவு, மெனோபாஸ் காலகட்டத்தைத் தாண்டிய பெண்களின் உடல்நிலையில் ஏற்படும் ஹார்மோன் மாற்றங்கள், காசநோய், சர்க்கரைநோய், நோய் எதிர்ப்பு சக்தி குறைவது போன்ற பிரச்னைகள் இருப்பவர்களுக்கு மூட்டுவலி இருக்கும். சரியான சிகிச்சை எடுக்காதபட்சத்தில் காலப் போக்கில் அதன் பாதிப்பு அதிகரிக்கக்கூடும்."

நீண்டநாள் (Chronic) பாதிப்பு வகைகளில் ஒன்றான மூட்டு வலியில், வலி உணர்வு கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அதிகரிக்கும். எனவே, முதல்நிலையிலேயே பிரச்னையைக் கண்டறிந்து, அதற்கேற்ப வாழ்வியலில் மாற்றங்களைச் செய்வது, சிகிச்சை போன்றவற்றால் வருங்காலத்தில் பாதிப்பின் தீவிரம் குறைக்கலாம். உதாரணமாக, அன்றாடம் உடற்பயிற்சி செய்வது, உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருப்பது ஆகியவற்றை சரியாகச் செய்யவேண்டும். அதேநேரம், எந்தெந்த உடல் அசைவுகளைத் தொடர்ந்து செய்தால் பாதிப்பு அல்லது வலிஉணர்வு அதிகரிக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டு, அவற்றைக் குறைத்துக்கொள்ள வேண்டும். அடிக்கடி உட்கார்ந்து எழுவது, படிக்கட்டுகளில் அதிகம் ஏறுவதால் வலி எடுத்தால் அவற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

என்னென்ன பரிசோதனைகள்?

மூட்டுவலியைத் தவிர, வேறு ஏதாவது உடல் கோளாறுகள் இருக்கிறதா என்பதைக் கண்டறிய நோயாளியின் 'மெடிக்கல் ஹிஸ்டரி' பார்க்கப்படும். அதைப்பொறுத்து, உடல் சார்ந்த பரிசோதனைகள் பரிந்துரைக்கப்படும். மேலும், எக்ஸ்ரே மூலம் எலும்பில் பாதிப்புகள் ஏதும் இருக்கிறதா என்பதும், ரத்தப்பரிசோதனை மூலம் தொற்றுநோய் பாதிப்பு உள்ளதா என்பதும் கண்டறியப்படும்.

ஓரிரு நாளில் சரியாகிவிடும் என்று மருத்துவர்கள் தெரிவிக்கும் மூட்டுவலிகள் யாவும், தேவையான ஓய்வு கொடுத்தாலே சரியாகிவிடும். சரியாகாமல் இருக்கும் வலிகளுக்கு, மருத்துவப் பரிசோதனை, ஆலோசனை அவசியம். 'பாக்டீரியல்' தொற்றாக இருந்தால், அறுவை சிகிச்சை செய்யப்படும். மேலும், 'ஆன்டிபயாடிக் தெரபி' (Antibiotictheraphy) பரிந்துரைக்கப்படும்.

காசநோய், சர்க்கரைநோய் போன்ற பாதிப்பு இருப்பவர்களுக்கு, அதன் பக்கவிளைவு காரணமாகக்கூட மூட்டு வலி ஏற்படலாம். அப்படி இருந்தால், அவர்களின் நோயைக் கட்டுக்குள் வைப்பதற்கான சிகிச்சை அளிக்கப்படும். முதுகுத்தண்டுவடம் மற்றும் இடுப்பில் அதிகம் வலி ஏற்படுவது `அன்கைலாசிங் ஸ்பாண்டிலைட்டிஸ்' (Ankylosing spondylitis) என்ற பிரச்னையாக இருக்கலாம். இவற்றைத் தடுக்க மருந்து மாத்திரைகளே பரிந்துரைக்கப்படும்.

இடுப்பு மற்றும் முழங்கால் மூட்டுவலியால் பாதிக்கப்பட்டு, பாதிப்பின் கடைசி நிலையில் இருப்பவர்களுக்கு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படும். எந்தவொரு மூட்டுவலிக்கும் நிரந்தரத் தீர்வு கிடையாது என்பதை, நோயாளிகள் உணரவேண்டும். பரிந்துரைக்கப்படும் சிகிச்சைகள் அனைத்தும், வலியைக் குறைக்கும் மற்றும் கட்டுப்படுத்துமே தவிர, முழுமையாகக் குணப்படுத்தாது.



தமிழகத்தில் மருத்துவ சிகிச்சைகளை பெற விரும்புவோருக்கு இலவசமாக வழி காட்டி உதவிகளைப் பெற்றுக்கொள்ள
மணவை அசோகன்
(0778978792)

# உலக நாடக தினக் கொண்டாட்டம் 2023







சர்வ தேச அரங்க நிறுவனத்சதின் இலங்கை மத்திய நிலையமாக டவர் மண்டப அரங்க மன்றம் விளங்குகின்றது. உலக நாடக தினம் உலகம் பூராகவும் மார்ச்சு மாதம் 27 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இம்முறை டவர் மண்டப அரங்க மன்றத்தின் மூலம் உலக நாடக தினம் டவர் மன்ற அரங்க மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் எல்பிஸ்ரன் அரங்கில் நடைபெற்றது. புத்தசாசன கலாச்சார அமைச்சர் விதுர விக்கிர நாயக்க பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். கைலாசப்பிள்ளையும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்திருந்தார். இவ்விழாவை டவர் மண்டப அரங்க மன்றத்தின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளர் கலாநிதி சண்முக சர்மா ஜெயப்பிரகாஸ் முன்னின்று நடத்தியிருந்தார்.

# பொத்துவில் அஸ்மினின் பாடல் வெளியீட்டு விழா



சண்டாளனே ஏதோ ஆகுறனே" சென்னையில் பிரமாண்டமாய் நடைபெற்ற பொத்துவில் அஸ்மினின் பாடல் வெளியீட்டு விழா. ஐயோ சாமி நீ எனக்கு வேணாம் பாடல் மூலம் உலகின் கவனத்தை பெற்றவர் நம்நாட்டு கவிஞர் ,திரைப்பட பாடலாசிரியர் பொத்துவில் அஸ்மின். அவர் எழுதிய புதிய பாடல் "சண்டாளனே ஏதோ ஆகுறனே" பாடல் வெளியீட்டு விழா இந்தியாவின் புகழ்பெற்ற பல்கலைக்கழகமான SRM பல்கலைக்கழக வடபழனி வளாகத்தில் பிரமாண்டமாய் நடைபெற்றது. இயக்குனர் ராசய்யா கண்ணன் இயக்கத்தில் உள்ளத்தை உலுக்கும் உண்மை சம்பவத்தை மையமாக கொண்டு உருவாகியுள்ள திரைப்படம் "இது கதையல்ல நிஜம்" இப்படத்திலேதான் இப்பாடல் இடம்பெற்றுள்ளது. பாடலை பிரபல பின்னணிப்பாடகர் வேல் முருகன்,ஆலா பாலன் ஆலியோர் இணைந்து பாடியுள்ளனர். "இது கதையல்ல நிஜம்" ஏப்ரல் 7ஆம் திகதி திரைக்கு வருகிறது. இப்படத்துக்கு இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானிடம் பல ஆண்டுகள் பணிபுரிந்த தாஜ்நூர் இசையமைத்துள்ளார். சந்தோஷ் சரவணா , சுனு லட்சுமி, கோவை சரளா,நண்டு ஜெகன், ஆர்.வி.உதயக்குமார், மொட்டை ராஜேந்திரன்,சென்றாயன் நடிப்பில் வெளிவரவுள்ள இப்படத்தை கனடாவைச் சேர்ந்த இலங்கை தொழிலதிபர் கீதா ராதா இணைந்து தயாரித்துள்ளார். எம்.ஏ. ராஜதுரை ஒளிப்பதிவு செய்துள்ளார். சண்டாளனே பாடலை உத்தியோகபூர்வமாக இயக்குனர் அமீர் வெளியிட்டு வைத்து படக்குழுவினரை வாழ்த்திப் பேசினார். இப்பாடல் சுமார் நான்காயிரம் மாணவர்கள் மத்தியில் வெளியிட்டுவைக்கப்பட்டது. பாடலாசிரியர் அஸ்மின் பாடல் குறித்து பேசும்போது இதுவரை அமங்கலச்சொல்லாக கருதப்பட்டு வந்த "சண்டாளனே" என்ற வார்த்தையை காதலர்கள் பேசி கொஞ்சுகின்ற வார்த்தையாக எழுதியுள்ளேன். தாழ்த்தப்பட்டதாக கருதப்பட்டதை வாழ்த்தப்படுவதாக மாற்றியுள்ளேன். எல்லா சாதியினரும் ஏன் எல்லா சமூகத்தினரும் தமக்குள் செல்லமாக கூப்பிடும் நல்ல வார்த்தையாக சண்டாளன், சண்டாளி நிச்சயம் மாறும். அதன் மூலம் ஆங்கிலயேர்களால் கட்டமைக்கப்பட்ட வகுப்புவாதம் தகர்க்கப்படும் .ஒரு படைப்பாளியாய் அது என் கடமையும் கூட..இங்கு அனைவரும் சமமானவர்கள். எங்களுக்குள் பேதங்கள் இருக்கக்கூடாது. அனைவருக்கும் இப்பாடல் பிடிக்கும்.ஐயோ சாமி பாடலுக்கு நிச்சயம் இப்பாடல் பேசப்படும் பாடலாக இருக்கும் என்று குறிப்பிட்டார். இந்தப் பாடல் இணையத்தளங்களில் இப்போது வரவேற்பு பெற்று வருகிறது. Sandalane பாடலை MRT MUSIC தளத்தில் ரசிகர்கள் பார்வையிடலாம்.



# குறுந்திரைப்பட நாயகி

# தனுஷ்கா ரமேஷ்




















வாலு என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப் படுகிறவர் தனுஷ்கா ரமேஷ். இவர் நான்கு பாடல்களில் கதாநாயகியாக நடித்துள்ளார். லவ்வு, சகியே உட்பட இரண்டு குறுந்திரைப்படங்களில் கதாநாயகியாக நடித்துள் ளார். இவரை அண்மையில் பேட்டி கண்டதில் இவர் அளித்த விபரங்கள் இதோ,

உங்களைப் பற்றி கூறுங்கள்....

நான் தனுஷ்கா ரமேஷ்.

உங்களின் சொந்த இடம் எது?

களுவாஞ்சிகுடி, மட்டக்களப்பு

நீங்கள் நான்கு பாடகளில் கதாநாயகியாக நடித் துள்ளீர்கள். இரண்டு குறுந்திரைப்படங்களில் கதா நாயகியாக நடித்துள்ளீர்கள். இன்னும் எதிலாவது நடித்து வருகின்றீங்களா?

இன்னும் 2 முழுநீள திரைப்படங்களில் துணை நடிகையாக நடித்து வருகிறேன்.

இதில் நான் நடித்த முதல் குறுந்திரைப்படம் "Online". இப் படத்திற்கு குவியம் குழுவினரால் 2022 க்கான சிறந்த அறிமுக நடிகை விருது யாழ்ப் பாணத்தில் உள்ள தந்தை செல்வா மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது. இத் குறுந்திரைப்படம் நடிகரும் இயக்குனருமான R J neluவினால் எடுக் கப்பட்டது. இது ஒரு சமூக கருத்தினை கொண்ட படம். எனக்கு பெரிய அளவில் கௌரவிப்பை உருவாக்கிய இயக்குனருக்கும் படகுழு நண்பர்க ளுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது இயக்கத்திலும் நடிப்பிலும் வெளியாகிய "சகியே" காணொளிப்பாடல் 2023. 01.01 அன்று "tamil trove" YouTube தளத்தில் வெளியாகியது. இப்பாடல் எனது இயக்கத்தில் வெளியான முதல் படைப்பு. இதற்கு மக்கள் மத்தியில் நல்ல ஒரு அபிப்பிராயம் எனக்குக் கிடைத்தது. இப்பாடலை என்னாலும் செய்ய முடியும் என்று என்னை நம்பி எடுத்தவர் இதன் தயாரிப்பாளர் தாமோ பிரேம். அவருக்கு பெரிய நன்றியை தெரிவித்துக் கொள் கிறேன். இயக்குனர் கோடீஸ்வரனால் முதலில் இயக்கப்பட்ட காணொளிப்பாடலில் நான் கதா நாயகியாக நடித்து இருந்தேன். அவருக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கி றேன். புகாரி நளிரின் பள்ளிகூட குறுந்திரைப்ப டத்தில் நான் துணை இயக்குனராக பணியாற்றி இருந்தேன். மாகாண மத்தியில் வரவேற்பு மற்றும் சான்றிதழ்களும் கிடைக்கப் பெற்றது. எனது நடிப் பில் 3 படைப்புகள் இன்னும் வெளிவர இருக்கி றது.

நான் ஒரு நடிகை என்பதை காட்டிலும் நான் ஒரு பெண் புகைப்படக் கலைஞர். எனக்கு பல திற மைகள் இருக்கின்றது என்று எனக்குள்ளே இருந்த என்னை என்னை அடையாளம் காட்டியது எனது கல்லூரியான "விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி. இது புதுக்குடியிருப்பில் உள்ளது. இக் கல்லூரியும் எனது ஆசான் " க. பிரதீஸ்வரனும் கல்லூரி சேவையாளர்களும் இல்லை என்றால் நான் இந்த இடத்தில் இல்லை. உன்னால் முடியும் ஒரு நாள் நீ உலகம் பேசப்படும் ஒரு பெண்ணாய் மாறுவாய் உன் திறமையையை எனக்கு அடையா ளம் இட்டு என்னை உருவாக்கிய என் கல்லூரிக்கு நன்றி. என்னை மட்டும் அல்ல. இது பல திறமை யானவர்களை உருவாக்குகின்ற கல்லூரியாகும். பெண் என்றால் பிறந்தோம், வாழ்ந்தோம், இறந் தோம் என்று இல்லாமல் நான் இறக்கும் போது உலகம் பேசும் ஒரு சாதனை பெண்ணாக இறக்க வேண்டும் என்பது எனது ஒரு இலட்சியமாகவே மாறிவிட்டது.

பெண்களுக்காக சில கருத்துக்களை கூற விரும் புகிறேன். எனது அனுபவத்தில் பெண்ணால் முடியாதததது எதுவும் இல்லை. பெண் தோற்கடிகப்படுபவள் அல்ல. இவ் உலகை வெல்ல பெண்ணால் மட்டுமே முடியும். உனக்குள் என்ன திறமை உள்ளது என்று நீயே தேடு உன்னை உருவாக்க இங்கு யாரும் வர மாட்டார்கள். உன் வாழ்க் கையை நீ தான் வாழணும்.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

# சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணன்

எஸ்.மதனகோபால், மத்துகம.

கேள்வி:–80 வயதான இயக்குநர் இமயம் பாரதிராஜா, 24வயதுடைய ஒரு நடிகையை காதலிக்கிறாராமே உண்மையா சார்?

பதில்:–உண்மைதான். தனுஷ் நாயகனாக நடிக்கும் 'வாத்தி' படத்தின் பாடல் வெளியீட்டு விழா நடந்தது. இதில் சிறப்பு அதிதியாக இயக்குநர் பாரதிராஜா கலந்து கொண்டு உரையாற்றும் போதுதான் இந்த ரகசியத்தைக்கூறியுள்ளார்.

அவர் என்ன கூறினார் தெரியுமா? "தனுஷ் நாயகனாக நடிக்கும் வாத்தி படத்தில் நாயகியாக சம்யுக்தா நடித்திருக்கிறார். அதோ அங்கே அவர் அமர்ந்திருக்கிறார். பாருங்களேன் ஒரு தேவதையாக அல்லவா அமர்ந்திருக்கிறார். என்ன ஒரு அழகு. நான் அவரைக் காதலிக்கிறேன். நான் மட்டும் கொஞ்சம் இளமையோடு இருந்திருந்தால் கண்டிப்பாக அவரைத் திருமணம் செய்து கொண்டிருப்பேன். I love u சம்யுக்தா!" இதுதான் அவர் பேசியது!



எம்.மாகிர், எலபடகம.

கேள்வி:–பிக்பொஸ் பிரபலம் ஒருவர் 'லியோ' படத்தில் விஜயின் மகளாக நடிக்கிறாராமே...யார் அவர்?

பதில்:–பிக்பொஸ் சீசன்–6 நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போட்டியாளர்களின் ஒருவர் ஜனனி. பிக்பொஸ் நிகழ்ச்சியில் இவர் 70 நாட்கள் வரை தாக்குப்பிடித்து விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் பிக்பொஸ் ஜனனி விஜயின் 'லியோ' படத்தில் முக்கியமான ஒருகெரக்டரில் நடித்து வருவதாக சமீபத்தில் செய்தி வெளியானது. இந்த நிலையில் 'லியோ' படத்தில் விஜய்க்கு மகளாக நடித்து வருவதாகக்கூறப்படுகிறது. ஆனால் ஜனனியிடம் இது குறித்து கேட்டபோது "இப்போதைக்கு என் கரெக்டரைப்பற்றி வெளியே சொல்ல முடியாது. அது கம்பெனி சீக்ரட்"என்று கூறி இருக்கிறார். ஆனால் அதேநேரத்தில் விஜய்க்கு மகளாக நடிக்கிறேன் என்பதையும் மறுக்கவில்லை என்பதால் அவர் மகள் கரெக்டரில் நடிப்பது உறுதியாகிவிட்டது.



தற்போது காஷ்மீரில் 'லியோ' படத்தின் படப்பிடிப்பு விறு விறுப்பாக நடைபெற்று வரும் நிலையில் அடுத்து சென்னையில் நடைபெறும் படப்பிடிப்பில் விஜயுடன் ஜனனி கலந்துகொள்வார்என்று கூறப்படுகிறது.

ஆர்.எம்.உபைதுல்லா மாவனெல்ல.

கேள்வி:–லட்சுமிமேனன் என்று ஒரு நடிகை இருந்தாரல்லவா ...எங்கே ஆளையே காணோமே.சினிமாவை விட்டு ஒதுங்கி விட்டாரா...?

பதில்:–ஆதி நடிப்பில் அறிவழகன் இயக்கத்தில் ஹொரர் திரில்லர் கதைக்களத்தில் உருவாகும் 'சப்தம்'படத்தில் கதாநாயகியாக நீண்ட இடை வெளிக்குப்பிறகு நடிக்கிறார் லட்சுமி மேனன்.

'ஈரம்'படமூலம் தமிழ்சினிமாவில் தனக்கென தனி முத்திரை பதித்தவர் இயக்குநர் நா.அறிவழகன்.இவர் அடுத்ததாக நடிகர் ஆதியுடன் கைகோர்த்து 'சப்தம்'படத்தைஇயக்கி வருகிறார்.அத்துடன் இந்த படத்தின் மூலம் தயாரிப்பாளராகவும் அறிமுகமாகிறார்.



ஆல்'பா பிரேம்ஸ் இயக்குநர் அறிவழகன் மற்றும் 7ஜி பிலிம்ஸ் சிவா இணைந்து தயாரிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு கடந்த ஆண்டு டிசம்பர் 14ஆம் திகதி தொடங்கியது.இப்படத்திற்கு தமன் இசை அமைக்கிறார்

தற்போது இப்படத்தின் கதாநாயகியாக லட்சுமிமேனன் இணைந்துள்ளார் இதன் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாக உள்ளது.

எஸ்.எஸ்.ஜீ வா வவுனியா.

கேள்வி:– விஜய்யுடனும் அஜித்துடனும் நடிப்பதற்கு ஒரு நடிகை மறுத்து விட்டாராமே...யார் அந்த நடிகை?

பதில்:–தமிழ் திரை உலகில் உள்ள நடிகைகளுக்கு விஜய்,அஜித் ஆகியவர்களுடன் நடிக்கவேண்டும் என்ற வாழ்நாள் கனவு இருந்து வரும் நிலையில் விஜய் அஜித் ஆகிய இருவருடனும் நடிக்க வந்த வாய்ப்பை நடிகை சாய் பல்லவி மறுத்ததாக கூறப்படுவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அஜித் நடித்த'துணிவு' திரைப்படம் கடந்தபொங்கல் தினத்தில் வெளியாகி மிகப் பெரிய வெற்றி பெற்றது என்பது தெரிந்ததே.இதைப்படத்தில் மஞ்சுவாரியார் கேரக்டருக்கு முதலில் பரிசீலனை செய்யப்பட்டவர் சாய் பல்லவி என்று கூறப்படுகிறது.ஆனால் அந்த கேரக்டரில் தன்னால் நடிக்க முடியாதென்று சாய்பல்லவி கூறியதாக தகவல் வெளியானது.

இந்த நிலையில் தற்போது விஜய் நடித்துவரும்'லியோ'திரைப்படத்தில் திரிஷா நடித்துவரும் கேரக்டரில் நடிப்பதற்கு முதலில் சாய் பல்லவியிடம் அணுகப்பட்டது என்றும் ஆனால் அவர் இந்த படத்தில் அவர் நடிக்க முடியாது என கூறி விட்டதாக தெரிகிறது.திரிஷா தற்போது நடித்து வரும் கேரக்டரில் முக்கியத்துவம் இல்லை என்றும் அதனால் அந்த கேரக்டரில் நடிக்கமுடியாது என்றும் சாய்பல்லவி கூறியதாக கூறப்படுகிறது.இந்த நிலையில் தற்போது நடிகை சாய்பல்லவி சிவகார்த்திகேயன் நடிப்பில் கமல்ஹாசன்தயாரிப்பில் ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் உருவாகி வரும் எஸ் கே.21 படத்தில் நடிக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதுஏற்கனவே அவர் தமிழில் செல்வராகவன் இயக்கத்தில் உருவான 'என்.ஜி.கே.'தனுஷ் நடிப்பில் உருவான 'மாரி2' உள்பட ஒருசில படங்களில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



எம் .எஸ்.ராஜா வத்தளை.

கேள்வி:–நடிகர் செந்தில் என்ன செய்து கொண்டிருக்கிறார். படங்களில் அவரை பார்க்க முடியவில்லையே..?

பதில்:–சுப்பர் ஸ்டார் ரஜினி காந்த் நடிப்பில் அவரது மகள் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கத்தில் உருவாகிவரும்'லால் சலாம்'திரைப்படத்தில் பழம் பெரும் நகைச்சுவை நடிகர் இணைந்துள்ளதாக தகவல் வந்துள்ளது.நடிகர் செந்தில் சுப்பர் ஸ்டார் ரஜினி காந்த்துடன் 'எஜமான்','அருணாசலம்','முத்து','வீரா',படையப்பா'உள்பட பல படங்களில் நடித்துள்ள செந்தில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் இந்த படத்தில் நடிக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது!

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# காஜல் அகர்வாலுக்கு முக்கியத்துவம்

சினி மஞ்சரி



# 'தீராக்காதல்'

தமிழ் திரையுலகில் இளம் நடிகராக வலம் வருபவர் ஜெய். ஜெய் நடிக்கும் புதிய படத்தின் அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. தமிழ் திரையுலகில் இளம் நடிகராக வலம் வரும் ஜெய் தன் இன்னசெண்ட் கதாபாத்திரங்கள் மூலம் ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். தொடர்ந்து பல வெற்றி படங்களை கொடுத்த இவர் கடைசியாக இயக்குனர் சுந்தர் சி இயக்கத்தில் நடித்திருந்த 'காபி வித் காதல்' திரைப்படம் கடந்த ஆண்டு வெளியாகி கலவையான விமர்சனங்களை பெற்றது. இதையடுத்து, இவர் தற்போது இயக்குனர் ரோகின் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிக்கிறார். இந்த படத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ், ஷிவதா ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கின்றனர். ரவிவர்மன் நீலமேகம் ஒளிப்பதிவு செய்யும் இப்படத்திற்கு பிரசன்னா ஜி.கே. படத்தொகுப்பு மேற்கொள்கிறார் இந்நிலையில், இப்படத்தின் டைட்டில் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்திற்கு 'தீராக்காதல்' என படக்குழு தலைப்பு வைத்துள்ளது. மேலும், இது தொடர்பான முதல் தோற்ற போஸ்டரையும் படக்குழு வெளியிட்டுள்ளது. முன்னணி நிறுவனமான லைகா நிறுவனத்துடன் ஜெய் கைகோர்த்துள்ளது படத்தின் மீதான எதிர்பார்ப்பை ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.



உலக அழகி ஐஸ்வர்யா ராய் மற்றும் நடிகர் விவேக் ஒபராய் நடிப்பில் வெளியான கியூன்! ஹோ கயா நா என்ற படத்தில் சிறு வேடத்தில் தோன்றிய நடிகை காஜல் அகர்வால்.

2007ம் ஆண்டு கதாநாயகியாக லட்சுமி கல்யாணம் என்ற காதல், அதிரடி கலந்த தெலுங்கு படத்தில் முதன்முறையாக அறிமுகம் ஆனார். அதன்பின்னர். தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி என 15 ஆண்டுகளில் 50 படங்களில் நடித்து விட்டார்.

இதற்கிடையே அவருக்கு திருமணமும் நடந்தது. இதனால், படங்களில் நடிப்பதில் இருந்து விலகியது ரசிகர்களுக்கு வருத்தம் ஏற்படுத்தியது. எனினும், குழந்தை பிறந்த பின்பு, மீண்டும் படங்களில் நடிக்க வந்து ரசிகர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தி உள்ளார்.

சமீபத்தில் வெளியான தனது கோஸ்டி திரைப்படம், குழந்தை பிறந்த பின்பு நடிக்க வந்தது உள்பட பல விசயங்களை அவர் பேட்டியில் பகிர்ந்து கொண்டார். முதன்முறையாக இந்த படம், முழுவதும் காஜல் அகர்வாலுக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது கமல்ஹாசனுடன் இந்தியன்2 படத்திலும் அவர் நடித்து வருகிறார். குதிரை சவாரி, வில் வித்தை, சிலம்பம் போன்ற கலைகளில் கூட பயிற்சி எடுத்து கொண்டேன். தினசரி 15 மணிநேரம் படப்பிடிப்பில் செலவிடுகிறேன் என்று காஜல் கூறுகிறார். அவர் அளித்த பேட்டியில், ஒவ்வொரு படத்திலும் என்னுடைய நடிப்பு திறனை நான் கண்டறிகிறேன். இந்த தருணத்தில், எனது நடிப்பு தொழிலில், என்னுடைய ஒவ்வொரு படமும் வேறுபட்டு இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

பல்வேறு கதாபாத்திரங்களில் நடிக்க முயற்சிக்க வேண்டும் என்பது எனது விருப்பம்.

# முன்னேற்றத்திற்கு காரணம் பயம்தான்



சாகுந்தலம் கதாபாத்திரத்தில் நடிக்க எனக்கு மிகவும் பயமாக இருந்தது என நடிகை சமந்தா கூறினார். தமிழ், தெலுங்கில் முன்னணி கதாநாயகியாக வலம் வரும் சமந்தா சமீபத்தில் தசை அழற்சி நோயில் சிக்கி சிகிச்சைக்கு பின் தேறி உள்ளார். தற்போது மீண்டும் படங்களில் நடித்து வருகிறார். ஏற்கனவே சமந்தா நடித்து முடித்த சாகுந்தலம் படம் திரைக்கு வர உள்ளது. துஷ்யந்தன், சகுந்தலை பற்றிய புராணபடமாக இது தயாராகி உள்ளது. இதில் சகுந்தலை வேடத்தில் நடித்து இருக்கிறார். இந்த நிலையில் சமந்தா அளித்துள்ள பேட்டியில், 'டைரக்டர் சாகுந்தலம் படத்தின் கதையை சொன்னபோது என்னால் நடிக்க முடியாது என்று சொல்லிவிட்டேன். காரணம் அந்த கதாபாத்திரத்தில் நடிக்க எனக்கு மிகவும் பயமாக இருந்தது. நான் சகுந்தலை போல இருக்க மாட்டேன். எனக்குள் அந்த தேஜஸ், கம்பீரம் இருக்காது என தோன்றியது. அதன் பிறகு வற்புறுத்தி நடிக்க வைத்தனர். கதாபாத்திரம் சிறப்பாக வந்துள்ளது.

அதன்பிறகு ஏதாவது ஒரு கதாபாத்திரத்தில் நடிக்க முடியாது என எனக்குள் பயம் ஏற்பட்டால், அந்த கதாபாத்திரத்தில் நடித்தே ஆக வேண்டும் என்று முடிவு செய்து கொள்வேன். பயத்தை தாண்டி செல்ல முயற்சி செய்கிறேன். என் எண்ணங்கள், வாழ்க்கை முறை எல்லாவற்றிலும் இதைத்தான் அனுசரிக்கிறேன். ஒரு மனுசியாக, நடிகையாக மூன்று ஆண்டுகளாக எனது முன்னேற்றத்திற்கு காரணம் இந்த பயம்தான்'' என்றார்.

# 14 வருடத்திற்கு பின்

# ஸ்விம்மிங் சூட்டில் நயன்தாரா

பில்லா, வில்லு போன்ற படத்திற்கு பிறகு மீண்டும் ஸ்விம்மிங் சூட் அணிந்து நடித்திருக்கும் நயன்தாரா. தென்னிந்திய திரை உலகின் டாப் ஹீரோயின் ஆக வலம் வரும் லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா, தற்போது பாலிவுட்டில் ஜவான் படத்தின் மூலம் என்ட்ரி கொடுக்கிறார். இந்தப் படத்தை தமிழில் தெறி, மெர்சல், பிகில் போன்ற பிளாக்பஸ்டர் ஹிட் படங்களை கொடுத்த அட்லி இயக்கி வருகிறார். இந்த படத்தில் பாலிவுட் சூப்பர் ஸ்டார் ஷாருக் கான் கதாநாயகனாக நடிக்கிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று கொண்டிருக்கிறது. படத்திற்கு அனிருத் இசையமைத்து வருகிறார். இப்படத்தை வருகிற ஜூன் மாதம் 2ம் தேதி ரிலீஸ் செய்ய உள்ளதாக கடந்த ஆண்டு அறிவிப்பு வெளியான நிலையில், ஷூட்டிங் இன்னும் முடியாததால் படம் இன்னும் ரிலீஸ் ஆகாமல் இருக்கிறது. ஆகையால் படத்தை விரைவில் முடித்து வரும் அக்டோபர் மாதத்திற்குள் ரிலீஸ் செய்யும் முடிவில் படக்குழு உள்ளது. இந்நிலையில் ஜவான் படத்தின் மற்றொரு ஹாட் ஆன அப்டேட் சோசியல் மீடியாவில் வைரலாக பரவுகிறது. இந்த படத்தில் லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா 14 வருடத்திற்கு பின் ஸ்விம்மிங் உடை அணிந்து நடித்துள்ளதாக தகவல் பரவி வருகிறது. பாலிவுட் படங்களில் இப்படிப்பட்ட காட்சிகள் எல்லாம் இடம்பெறுவது சகஜம் என்றாலும், அஜித்தின் பில்லா மற்றும் விஜய்யின் வில்லு போன்ற படத்தில் ஸ்விம்மிங் சூட்டில் இளசுகளை திணறடித்த நயன் இப்போது ஜவான் படத்திலும் அப்படி நடித்திருக்கிறாராம். கடந்த சில வருடங்களாகவே தென்னிந்திய படங்களில் குடும்ப குத்து விளக்காகவே வலம் வந்த நயன்தாரா,திருமணத்திற்கு பிறகு அவருக்குள் இப்படி ஒரு மாற்றமா! என இந்த விஷயத்தை தெரிந்த பலரும் வாயடைத்து போய் உள்ளனர். ஏற்கனவே திருமணம் ஆகி குழந்தைகள் வேற இருப்பதால் நயன்தாராவின் மார்க்கெட் படுத்துவிட்டதால், அதையெல்லாம் தட்டித்தூக்க வேண்டும் என்ற முடிவுடன் கவர்ச்சி பக்கம் திரும்பி உள்ளார். இருப்பினும் இந்த தகவல் எந்த அளவிற்கு உண்மை என்பது படம் ரிலீசானால் தெரிந்து விடும்.



# என் திறமையை கண்டுபிடித்தது வெற்றிமாறன்தான்

நடிகர் சூரி



நடிகர் சூரி தற்போது நடித்துள்ள திரைப்படம் 'விடுதலை'. இப்படம் வருகிற 31ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. வெற்றிமாறன், தற்போது சூரி கதாநாயகனாக நடிக்கும் 'விடுதலை' படத்தை இயக்கியுள்ளார். எழுத்தாளர் ஜெயமோகனின் துணைவன் என்கிற சிறுகதையை மையமாக வைத்து இப்படம் உருவாகி வருகிறது. விஜய் சேதுபதி இப்படத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இளையராஜா இசையமைக்கும் இப்படத்தை ஆர்.எஸ் இன்ஃபோடெயின்மெண்ட் சார்பில் எல்ரெட் குமார் தயாரிக்கிறார். இப்படம் வருகிற மார்ச் 31ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதையடுத்து 'விடுதலை' படத்தின் கதாநாயகன் சூரி மாலை மலர் நேயர்களுக்காக பிரத்யேகமாக பேட்டி அளித்தார். 'விடுதலை' படம் குறித்தும் அந்த படத்தில் நடித்த அனுபவம் குறித்தும் பல விஷயங்களை பகிர்ந்துள்ளார். அதில், இயக்குனர் வெற்றிமாறனுக்கு பெரிய நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால், நம்மிடம் இப்படி ஒரு திறமை இருக்கிறது என்பதை நாம் கண்டுபிடிப்பதற்கு முன்பு இன்னொருவர் கண்டுபிடிக்கிறது பெரிய விஷயம். என்னிடம் இருக்கும் இந்த குமரேசனை கண்டுபிடித்ததற்கு வெற்றிமாறன் அண்ணாவிற்கு பெரிய நன்றி. இதற்கான தகுதியை ஏற்படுத்தி எனக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என பல விஷயங்களை பகிர்ந்துள்ளார்.

# முகத்தை வெள்ளையாக மாற்ற எளிமையான அழகு குறிப்புகள்



**தக்காளி**

முகத்தில் உள்ள அதிக அளவு எண்ணெய் பசையை நீக்க உதவும். முகத்தில் இருக்கும் பாதிக்கப்பட்ட செல்களை நீக்கி முகம் பொலிவாக இருக்க தக்காளியை பயன்படுத்தலாம்.

சருமத்தில் உள்ள சுருக்கங்களை நீக்கி இளமையாக வைத்திருக்கவும் தக்காளி உதவும். வெயிலில் இருந்து சருமத்தை கருமை ஆகாமல் பாதுகாக்கிறது. இதனால் முகம் மேலும் அழகாக மாற தக்காளி உதவுகிறது.

வாரம் இரண்டு முறை இவ்வாறு செய்து பாருங்கள் முகம் வெள்ளையாக அழகாக மாறிவிடும்.

**உருளைக்கிழங்கு**

வெயிலினால் சருமத்தில் ஏற்படும் கருமையை நீக்கி சருமத்தை வெள்ளையாக மாற்றி பொலிவாக இருக்க உருளைக்கிழங்கு உதவும்.

முகத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய்யை நீக்கி முகம் பொலிவடைய செய்யும். முகப்பருக்களை நீக்கவும், முகத்தில் உள்ள கரும் புள்ளிகளை அகற்றவும் (Face Brightness potato face pack) உருளைக்கிழங்கு உதவும்.

தேவையான பொருட்கள் உருளைக்கிழங்கு ஒன்று முதல் செய்முறை ஒரு உருளைக்கிழங்கை தோல் உரித்து சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ளுங்கள். வெட்டிவைத்த உருளைக்கிழங்கை மைய அரைத்து கொள்ளுங்கள். அரைத்து வைத்த உருளைக்கிழங்கை முகத்தில் பூசி மசாஜ் செய்து இருபது நிமிடம் ஊறவிட வேண்டும். பிறகு குளிர்ந்த நீரில் முகத்தை கழுவுங்கள்.

இரண்டாவது செய்முறை வெட்டிவைத்த உருளைக்கிழங்கை மைய அரைத்து கொள்ளுங்கள். அரைத்து வைத்த உருளைகிழங்கை வடிகட்டி அதன் சாறை பஞ்சில் (Cotton) நனைத்து முகத்தில் மசாஜ் செய்து இருபது நிமிடங்கள் ஊறவைக்கவும். பிறகு குளிர்ந்த நீரில் முகத்தை கழுவுங்கள். இவ்வாறு வாரம் ஒரு முறை செய்தால் முகத்தில் உள்ள கருமை நீங்கி சருமம் அழகாக மாறும்.

## கோடை வெயில் கொளுத்தும்

கோடை வெயில் கொளுத்தும் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மற்றும் மே ஆகிய இரண்டு மாதங்கள் கோடை வெயில் கொளுத்தும் என்பதால் இந்த நேரத்தில் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. குறிப்பாக நண்பகல் 12 மணியிலிருந்து மாலை 3 மணி வரை வெளியே செல்வதை தவிர்க்க வேண்டும், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் கண்டிப்பாக வெளியே செல்லக் கூடாது.

மேலும் தினமும் நான்கு முதல் ஐந்து லிட்டர் சுத்தமான தண்ணீரை குடிக்க வேண்டும், நீர்ச்சத்து அதிகமாக உள்ள கம்பங்கூழ் நுங்கு ஆகியவைகளை அருந்தலாம். வெயில் காலம் முடியும் வரை சாம்பார் சாதம் சப்பாத்தி கேழ்வரகு ஆகியவற்றை அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும்

அதேபோல் இளநீர் மோர் தயிர் தர்பூசணி நுங்கு ஆகியவற்றையும் அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும். பிரிட்ஜில் வைத்த குளிர்ந்த நீரை அருந்துவதை தவிர்த்து மண் பானையில் நீரை ஊற்றி பருகுவது சாலச்சிறந்தது. மேலும் இறுக்கமான உள்ளாடைகளை அணிய வேண்டாம் வெயிலில் செல்பவர்கள் முகம் கழுத்து ஆகிய பகுதிகளில் கிரீன் தடவி விட்டு செல்வது நல்லது.



## இளம் பெண்களுக்கான குர்தி ஆடைகள்

குர்தி டிசைன் பெரும்பாலும் ஜார்ஜட் துணியில், காலர் கழுத்து கொண்ட மாடலாக இருக்கிறது. இக்குர்தி முட்டி வரை நீண்டு அங்கு அரை வட்டமாக குடை போல் வெட்டப்பட்டிருக்கும். இந்த வடிவத்திற்கு பல வித பிராண்ட் கொண்ட துணியே எடுப்பாக இருக்கும். மிக மெல்லிய துணியில் ஆன இக்குர்தி இளம் பெண்களுக்கு பொருத்தமாக இருக்கும்.

**கைட் (காற்றாடி) டிசைனர் குர்தி**

இது மிகவும் வித்தியாசமான கோணத்தில் தைக்கப்பட்டிருக்கும் டிசைனாக இருக்கிறது. இந்த குர்தி இடுப்பு வரை சாதாரணமாக வந்து இடுப்பிலிருந்து கீழே வரும் பகுதி முக்கோண வடிவில் இருக்கும் இந்த முக்கோண பகுதி கால் முட்டி வரையோ அல்லது கணுக்கால் வரையிலோ நீண்டிருக்கலாம்.

**ஹை–லோ டிசைனர் குர்தி**

இந்த மாடல் குர்தி முன்புறம் குட்டையாகவும், இருபுறங்களிலும் நீண்டும் பல அடுக்குகளாக இருக்கும். இது நீண்ட அகலமான முழு நீள ஸ்கர்ட் போலவும் முன்புற நடுப்பகுதி மட்டும் குட்டையாகவும் இருக்கும்.

**ட்ரையோ கட் குர்தி**



சிறு குழந்தைகள் முதல் இளம் பெண்கள் வரையில் பலரையும் கவரும் டிசைனாக இந்த குர்தி இருக்கிறது. உட்புற துணி நீளமாக கால் முட்டி வரையிலோ அல்லது கணுக்கால் வரையிலோ இருக்கும். அதன் மேல் உட்புற துணியின் வண்ணத்திற்கு மாற்றான நிறத்தில் வரும் மேற்புற துணி முன்புறம் ஒரு துண்டாகவும், மற்ற இரு புறமும் இரண்டு துண்டாகவும் பிரிந்து நீண்டிருக்கும். இது பெரும்பாலும் சில்க், சில்க்காட்டன், ராசில்க், டஸ்ஸர் போன்ற துணிகளில் போடும்போது அழகாக இருக்கும்.

**பேட்–விங் டிசைன்**

இது கிட்டத்தட்ட 'கஃப்தான்' மாடல் போல் தோன்றும். சிறகை விரித்த வெளவால் போல் தோற்றம் தரும் இந்த டிசைன் அணிந்துக் கொள்ள சவுகரியமாக இருக்கும். மெல்லிய துணிகளில் பல வண்ணங்களும், சிறு பூக்களும் நிறைந்த ஃப்ளோரல் டிசைன் கொண்ட துணிகளில் தைக்கப்படும்போது இந்த குர்தி மிக அழகாக இருக்கும்.



# சுஹிர் பொன்னுசாமியுடன் பணிபுரிவது அருமை

## The Birds Eyewitness என்ற அமெரிக்க திரைப்பட இயக்குனர் கிறிஸ்டோபர் விணன்

The Birds Eyewitness என்ற அமெரிக்க திரைப்படத்தை இயக்கியவர் கிறிஸ்டோபர் விணன். இந்தத் திரைப்படத்தில் இலங்கையைச் சேர்ந்த சுகிர் பொன்னுசாமி என்ற கலைஞர் நடித்துள்ளார். இது இலங்கைக்கு பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும். இந்தத் திரைப்பட அனுபவங்கள் குறித்து இந்த திரைப்படத்தை இயக்கிய கிறிஸ்டோபர் விணன் கூறிய விபரங்கள் வருமாறு.

**திரைப்படம் தயாரிப்பதில் எப்படி ஆர்வம் வந்தது ?**


உறுதியாக தெரியவில்லை! மற்றும் எனக்கு நினைவில் இல்லை! நான் 8 வயதில் கெமராவை முதலில் எடுத்தேன்! நான் என் சகோதரன் மற்றும் அக்கம் பக்கத்து குழந்தைகளுடன் சேர்ந்து திரைப்படம் எடுப்பேன். நான் அவர்களை நடிக்க வைப்பேன். நாங்கள் பயிற்சி செய்து கதாபாத்திரங்களில் நடிப்போம். அந்தத் திரைப்படங்கள் அர்த்தமுள்ளதாக இல்லை. ஆனால் அவை மிகவும் வேடிக்கையாக இருந்தன.

**ஒரு திரைப்பட தயாரிப்பாளராக உங்களின் இன்ஸ்பிரேஷன் யார்?**

உத்வேகம் தரும் அளவுக்கு நான் போதுமான படங்களை பார்ப்பதில்லை! நான் பார்க்க விரும்பும் பல திரைப்படங்கள் மற்றும் பல திரைப்பட தயாரிப்பாளர்கள் உள்ளனர், அவர்களின் படைப்புகளை நான் விரும்புகிறேன்.

**கதையை எப்படி எழுதினீர்கள்?**

பல வருடங்களுக்கு முன்பு எனது சொந்த ஊரான லா கிரெசென்டாவைச் சுற்றி வந்தபோது இந்தக் கதையை நான் கண்டுபிடித்தேன். சவக்கிடங்குக்கு வெளியே உட்கார்ந்து கத்திக் கொண்டிருந்த இந்தப் பறவையை நானும் என் நண்பர்களும் பார்த்தோம். அது 'எனக்கு உதவு' என கத்திய வண்ணம் இருந்தது. அந்த தருணத்தை என்னால் ஒருபோதும் விட்டுவிட முடியவில்லை, அது மிகவும் வேடிக்கையானது என்று நான் நினைத்தேன், அது பல ஆண்டுகளாக என் கற்பனையை வேட்டையாடியது, அந்தப் பறவை



யின் பின்னணியில் உள்ள கதையை நினைத்துப் பார்த்தேன், சவக்கிடங்கை இயக்கும் தனது தாயைக் கொல்லும் இந்த பையனைக் கண்டுபிடித்தேன். உடன். ஆனால் அது சைக்கோவைப் போலவே இருப்பதாக நான் நினைத்தேன். பறவை ஒரு கொலைக்கு சாட்சியாக இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும், நான் பெர்க்லியில் இருந்தபோது, ஆயுட்காலம் நீடிக்கப்படாவிட்டா லும், ஆயுளை நீடிக்க நிறைய மருத்துவத் துறைகள் உள்ளன என்று நான் நிறைய யோசித்தேன். எனவே வயதானவர்களை யாராவது கொல்வது வேடிக்கையாக இருக்கும் என்று நினைத்தேன். பின்னர், என் சொந்த வாழ்க்கையில், பொறாமை, உடைமை மற்றும் நம்பிக்கை போன்ற எண்ணங்களைச் சுற்றியுள்ள ஒரு முறிவை நான் அனுபவித்து வருகிறேன். அந்த விஷயங்கள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்ப்பது, ஒரு மனிதன் தன்னை ஏமாற்றியதற்காக தன் மனைவியைக் கொல்லும் கதையை உருவாக்க எனக்கு உதவியது, மேலும் ஒரே சாட்சி ஒரு பறவை மட்டுமே, மேலும் அவர் தனது பிணவறைக்கு வணிகத்தை கொண்டு வருவதற்காக ஒரு முதியோர் இல்லத்தில் நிறைய பேரைக் கொன்றார்.

**உங்கள் நடிகர்களை எப்படிதேர்வு செய்தீர்கள்?**

அனைத்து நடிகர்களிம் உண்மையில் நான் கடந்த காலத்தில் பணிபுரிந்தவர்களுடன் வேரூன்றியுள்ளது. நாங்கள் பிரேக்டவன் எக்ஸ்பிரஸைப் பயன்படுத்தினோம், ஆனால் பெரும்பாலான பகுதிகள் சிறிய விளம்பரங்கள் அல்லது பிற படைப்புத் திட்டங்களில் பணிபுரிய எனக்குப் பிடித்த நபர்களால் நிரப்பப்பட்டன.

**உங்கள் படத்தில் ஆஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட நடிகர் இருக்கிறார். எரிக் ராபர்ட்ஸுடன் பணிபுரிந்தது எப்படி?**

எரிக் ராபர்ட்ஸ் ஒரு காரணத்திற்காக புகழ் பெற்றவர் மற்றும் நான் அவருடன் பணிபுரியும் ஒவ்வொரு முறையும் என்னால் அதைப் பார்க்க முடியும். அவரது ஆற்றல் நம்பமுடியாதது மற்றும் அவரது படைப்புத் தேர்வுகள் எப்போதும் என்னை ஆச்சரியப்படுத்துகின்றன. இந்த நேரத்தில், நாங்கள் அவரை மழையின்றி விட விரும்பினோம், எனவே அவரது பாவங்களுக்கான ஸ்கிரிப்ட்டின் எலும்புக்கூட்டை உருவாக்கினோம். நாங்கள் அவரை எங்களுடன் மேம்படுத்த அனுமதித்தோம், அதனால் அது






உருவாகும்போது வேடிக்கையான தருணத்தைக் கண்டறிய முடியும். மிஸ்டர். ராபர்ட்ஸுடன் பணிபுரிவது மிகவும் வேடிக்கையாக உள்ளது, ஏனென்றால் அவர் அறைக்குள் நுழையும் போது, ஓ இப்போது விஷயங்கள் நடக்கின்றன.

**90 களின் நன்கு அறியப்பட்ட கனவு நாயகி கத்லீன் கின்மோண்ட் உடன் பணிபுரிவது எப்படி?**

கத்லீன் அற்புதமானவர் மற்றும் அவரது படைப்பாற்றல் மற்றும் பொறுமை நிகரற்றது. அவள் ஸ்கிரிப்டை உண்மையில் உணர முடியும் என்பதால், ஒவ்வொன்றிலும் அவளுக்கு நிறைய இருந்தது. இது கிட்டத்தட்ட அவரது கதாபாத்திரத்தின் மேல் ஒரு வித்தியாசமான கதைசொல்லலைக் கொண்டிருப்பது போன்றது. அவரது படைப்புத் தேர்வுகள் எப்போதும் சரியானவை. நான் அவளை மிகவும் நம்புகிறேன், அவள் என்ன செய்கிறாள், அவளுடன் பணிபுரியும் ஒரு அற்புதமான நேரத்தை நான் அனுபவித்தேன். அவளுடைய குணம் அவளது நிஜத்திலிருந்து சற்று வித்தியாசமானது, ஏனென்றால் உண்மையில் அவள் மிகவும் அன்பானவள், கனிவானவள். Syd இல் உள்ள வேறு சிலர் அவரது ஆற்றலை குழந்தை வரம் என்று விவரித்துள்ளனர், நான் ஒப்புக்கொள்கிறேன். அவள் ஒரு காட்சியில் அடியெடுத்து வைக்கும் போது நாம் அனைவரும் விளையாடுவது போல் இருக்கும்

**இன்ஸ்டாகிராம் மற்றும் வைன் டிரெண்டிங் கலைஞர் இவான் பிரீனுடன் பணிபுரிந்தது எப்படி?**

இவானுடன் பணிபுரிகிறேன். பிரீன் மிகவும் வேடிக்கையாக இருக்கிறார், ஏனென்றால் அவர் இயல்பாகவே வேடிக்கையாக இருக்கிறார். அவர் கதாபாத்திரத்தில் நகைச்சுவையின் சொந்த சுவையை கொண்டு வரும்போது அவர் எப்போதும் எனதுமனதை பிடிக்கிறார். அவர் பேசும் பாணியில் இருந்து அவரது நடத்தை வரை அவரது ஒவ்வொரு செல்லிலும் வேடிக்கை இருக்கிறது. அவர் நடிகர்களுடன் இணைந்தது நான் மிகவும் அதிர்ஷ்டசாலி. அவருடன் பணிபுரிவது சுவாரஸ்யமாக இருந்தாலும், சில சமயங்




களில் லாங்டேக்கிற்கும் அவரது உள்ளடக்கத்தை உருவாக்கும் போது அவர் பழகிய விதங்களுக்கும் இடையே சிறிது துண்டிப்பு இருப்பதாக நான் உணர்கிறேன். சில நேரங்களில் நான் பால் கறப்பது போல் உணர்கிறேன், அவர் ஏற்கனவே எனக்குக் கொடுத்த ஒரு கணத்தை மீண்டும் செய்கிறேன். அவர் என்ன செய்கிறார் என்பது ஒரு தைரியமான உணர்வுடன் வருவதாகவும், அதில் ரீடேக் அல்லது ரீடோ இல்லை என்றும் அவர் என்னிடம் சொல்லும்போது நாங்கள் அதைச் சுருக்கமாக விவாதித்தோம். இது சுவாரஸ்யமானது, ஏனென்றால் நான் படமெடுக்கும் போது, ஒரு கேமரா இயக்கம் அல்லது செயல்திறனை முழுமையாக்குவதற்கு நான் மீண்டும் மீண்டும் செய்கிறேன்.


**அமெரிக்கப் பார்வையாளர்களுக்குத் தெரியாத ஒரு நடிகரையும் நடிக்க வைத்துள்ளீர்கள். சுஹிர் பொன்னுசாமியுடன் பணிபுரிந்தது எப்படி?**


சுஹிருடன் பணிபுரிந்தது அருமை. அவரது நடிப்புப் பாணி நாடக அல்லது மிகைப்படுத்தப்பட்டதாக இல்லை. இது எப்பொழுதும் மிகவும் நுட்பமானது மற்றும் அடக்கமானது மற்றும் உண்மையான தொடர்பு போன்றது. அவர் ஒரு நடிப்பைக் கொடுத்த பிறகு, அது எவ்வளவு உண்மையானது என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. யாரோ ஒருவர் அவரிடம் கடந்த காலத்தில் உண்மையில் அவர் யாரையாவது கொன்றாரா என்றும் இது ஒரு பொழுதுபோக்கா என்றும் கேட்டார். அவர் நடிப்பதாக நம்பமுடியாதவர். அவருக்கும் எனக்கும் இடையே உள்ள சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், விவரம் மற்றும் திரைப்பட தர்க்கத்தில் அவர் எவ்வளவு அக்கறை காட்டுகிறார் என்பதுதான். கதையின் உலகில் ஏதாவது நடக்குமா இல்லையா என்பதில் நாம் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்கிறோம். இது கேமராவில் இருந்தால், அதை நம்ப வேண்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன், மேலும் உலகங்களைக் கண்டுபிடிக்க கேமரா மற்றும் திரைப்படத் தயாரிப்பைப் பயன்படுத்தலாம், அதேசமயம் சுஹிர் எல்லாவற்றையும் யதார்த்தமாக வைத்திருக்க விரும்புகிறார், அதற்கு நம்பகத்தன்மை அவசியம். அவரது கருத்தை நான் எப்போதும் பாராட்டுகிறேன், ஏனென்றால் அது மிகவும் புத்திசாலித்தனமாகவும் தகவலறிந்ததாகவும் இருக்கிறது, அவர் மிகவும் திறமையான நடிகர், அவர் எவ்வளவு உண்மையானவர் என்பதால் நடிகர்கள் நடிக்கிறார்கள் என்பதை மறந்துவிடுகிறார்கள். அவரது தலையில் உள்ள எண்ணங்கள் கூட ஒரு காட்சியின் போது நிகழ்த்தப்படுகின்றன என்று நீங்கள் சில நேரங்களில் சொல்லலாம்.

## நிறம் தீட்டுங்கள்




## விலங்குகளின் உறுப்புக்களை பெயரிடுங்கள்





## வழிகாட்டுங்கள்



## 5 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



# ஏறாவூரின் கல்விப் பின்புலத்தில் தடம் பதித்த கல்வி ஆளுமை ஓய்வு நிலை அதிபர் கே.காலிதீன்

ஏறாவூரின் கல்விப் பின்புலத்தில் தடம் பதித்த கல்வி ஆளுமை ஓய்வு நிலை அதிபர் கே.காலிதீன்.

ஏறாவூரின் கல்விப் பின்புலத்தில் தடம் பதித்த கல்வி ஆளுமை ஓய்வு நிலை அதிபர் கே.காலிதீன்.மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் ஏறாவூர் மாக்கான் மாகார் மகாவித்தியாலயத்தில் அதிபராகக்கடமையாற்றிய நிலையிலேயே 37 வருட கல்விச் சேவையில் இருந்து இவர் ஓய்வு பெற்றார்.சிறந்த நிருவாகியான இவர் 12 வருடங்கள் ஆசிரியராகவும்,25 வருடங்கள் அதிபராகவும் சேவையாற்றியுள்ளார். எல்லாத்தரப்பினரினதும் நன்மதிப்பைப் பெற்ற இவர் ஆசிரியர்களையும், மாணவர் களையும் நல்வழிப்படுத்துவதில் ஆளுமை கொண்டவர்.

இவர் எறாவூரைச் சேர்ந்த மர்ஹூம் சுலைமாலெவ்வை காசினார் சின்னத்தம்பி செயிலத்தும்மா தம்பதியினருக்கு மூத்த மகனாக 1954.11.16ஆம் திகதி பிறந்தவர். இவருக்கு ஒரு சகோதரனும்



ஏழு சகோதரிகளும் உள்ளனர்.இவர் தனது ஆரம்பக் கல்வியை ஏறாவூர் அறபா வித்தியாலயத்தில் கற்று பின்னர் ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையில் க.பொ.த உயர்தரம் வரை கற்றவர்.பாடசாலைக் கல்வியுடன் மார்க்கக் கல்விக்கும் மதிப்பளித்து ஏறாவூர் சாவியா பள்ளிவாயலில் நடைபெற்று வந்த அரபுக் கல்லூரியில் சில வருடங்கள் மார்க்கக் கல்வியைக் கற்று பின்னர் இடை நிறுத்திக் கொண்டார். 1975ஆம் ஆண்டில் இல்லற வாழ்வில் இணைந்த இவருக்கு மூன்று ஆண் மக்களும் இரண்டு பெண் மக்களும் உள்ளனர்.

இவர் 19770512ஆம் திகதி ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் மட்ᵒஅல்முனீரா பெண்கள் மகா வித்தியாலயம், மட்ᵒ கித்துள்வெவ அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் கடமையாற்றி 1979ஆம் ஆண்டு தொடக்கம் 1981ஆம் ஆண்டு காலப்பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சமூகக் கல்வி பாடநெறியைப் பயின்றார்.பயிற்சியின் பின் ஏறாவூர் மாக்கான் மாக்கார் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய வேளையில் 19890601ஆம் திகதி அதிபர் சேவைக்கு போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டார்.

அக்காலப்பகுதியில் இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய எஸ். எச்.எம். ஹுசைன் ஓய்வு பெற்றுச்சென்றதும் 1991.0.101ஆம் திகதி தொடக்கம் 1991.04.08 ஆம் திகதி வரை அதிபராகக் கடமை புரிந்துள்ளார். பின்னர் இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் யூ.எல். ஆதம் லெவ்வை இடமாற்றம் பெற்றுச் சென்றதும் மீண்டும் 1991.11.05ஆம் திகதி தொடக்கம் 1994.03.29ஆம் திகதி வரை அதிபராக கடமையாற்றியுள்ளார். இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றும் போதே 1992.06.01ஆம் திகதி அதிபர் சேவை தரம் 2க்கு நியமிக்கப்பட்டார். இக்கால கட்டத்திலேயே ஏறாவூர் மீராகேணி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை என்ற பெயரில் இயங்கிய இப் பாடசாலையை 1992.09.06ஆம் தொடக்கம் ஏறாவூர் மீராகேணி அல் அக்ஸா வித்தியாலயம் என பெயர் மாற்றுவதற்கு இவர் வழிசெய்தார்.

பின்னர் தனது சுயவிருப்பத்தின் பேரில் 1994.03.30ஆம் திகதி முதல் ஏறாவூர் ஐயங்கேணியில் புதிதாக அமைக்கப்பட்ட மட்/ ஹிஸ்புல்லாஹ் வித்தியாலயத்தில் அதிபர் பொறுப்பை ஏற்றார். இவ்வூரின் எல்லைக் கிராமத்தில் வன்செயலுக்கு மத்தியில் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை பல கட்டங்களில் இடம்பெயர நேரிட்ட போதிலும் தொடர்ந்து இயங்குவதற்கு வழி வகுத்தார். இங்கு கடமையாற்றும் போதே 20020101ஆம் திகதி அதிபர் சேவை தரம் 1க்கு பதவியுயர்வையும் பெற்றுக் கொண்டார். மேலும் இப்பாடசாலையில் கடமை புரியும் போதே வெளிநாடு செல்வதற்கான அரிய வாய்ப்பான கல்விச் சுற்றுலா புலமைப் பரிசில் கிடைத்தது. உலகவங்கியின் அனுசரணையுடன் கஷ்டப் பிரதேச பாடசாலையைச் சேர்நத 27 அதிபர் குழுவுடன் மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடு



களிலுள்ள கல்விப் புலத்தைச் சுற்றிப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் இவருக்குக் கிடைத்தது.

இக்காலகட்டத்திலேயே ஏறாவூர் மாக்கான் மாக்கார் மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றியவர் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து 2006.12.05ஆம் ஆண்டு இப்பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டார். 2006ஆம் ஆண்டு; இப்பாடசாலைக்கு மூன்றாவது தடவையாக அதிபராக பொறுப்பேற்ற காலிதீன் அதிபர் ஏற்கனவே அதிபராக கடமையாற்றிய என்.எம்.அலிவர் விட்டுச் சென்ற இடத்திலிருந்து பாடசாலை நிர்



வாகத்துக்கும், ஆசிரியருக்குமிடையே சிறந்த உறவை கட்டியெழுப்பி இக்கலாசாலையை மிகவும் முன்னேற்றகரமான முறையில் கொண்டு செல்வதற்கு உந்துகோலாக அமைந்தார்.

திறன் கொண்ட அதிபராக அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதற்கு அமைவாய் அகப்புறச் சுத்தமுடன் அறிவிலும் ஆற்றலிலும் ஆளுமைத்திறனிலும் சிறந்த மனத்துடன் இவ்வித்தகத்தின் அனைத்து செயற்பாடுகளிலும் விழுக்காட்டு விகிதத்தை அதிகரிக்கச் செய்யும் செயற்பாட்டில் ஈடுபாடு காட்டிய அதிபர் காலிதீன் அவர்களைப் பற்றி இவ்வூரே நன்கறியும்.சுறுசுறுப்பு மிக்க இவரிடம் பல அசாதாரண திறமைகள் நிறைந்திருந்தமையை வித்தகத்தின் ஆசிரியர் குழாம் நன்கறியும். காலநேரம் உணர்ந்து காரியங்களை சாதித்து முடிப்பதில் இவருக்கு நிகர் இவரே என்றால் மிகையாகாது. ஆசிரியர்களினதும், மாணவர்களினதும், பெற்றோர்களினதும் இயல்புகளை துல்லியமாக கணக்கிட்டு அவர்களுக்கு ஏற்றாற் போல் நடந்து கொள்ளும் உளவியல் நிபுணத்துவம் வாய்ந்த ஒருவர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டி உள்ளது.

பாடசாலை வளாகத்தின் பௌதீக வளங்களை தன் இடையறாத முயற்சியின் பயன்பேறாய் பெற்றுக் கொடுத்தவர் இவர். சகல அரசியல்வாதிகளுடனும் அன்னியோன்னியமான தொடர்புகளைப் பேணியதோடு அவர்களின் மூலம் பாடசாலைக்கான தேவைகளை நிறைவுசெய்வதில் மிகவும் கரிசனை செலுத்திய ஒருவர். பாடசாலை நிர்வாகத்தைப் பொறுத்தவரை ஆசிரியர்களுக்கும் தனக்குமான உறவை மிகநேர்த்தியாகப் பேணிய ஒருவராகவே இவரை நான் பார்க்கின்றேன். எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எந்த ஒரு ஆசிரியரினதும் மனம் புண்படும் அளவுக்கு இவர் நடந்து கொண்டதில்லை.

சிற்சில சந்தர்ப்பங்களில் பாடசாலை நிருவாக விடயங்களில் முரண்பாடு காணப்பட்ட வேளைகளில் அவர்களின் இருப்பிடம் நாடிச்சென்று அதனை சுமுகமான முறையில் தீர்த்துவைத்தார். ஆசிரியர்களோடு இவர்பேணிய நெருக்கமான உறவு பாடசாலை மீது அவர்கள் பற்றுறுதியுடன் செயற்பட்டு மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் சிறப்பாக செயற்பட காரணமாக அமைந்தது என்றால் மிகையல்ல.

இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டன.அந்த வகையில் தமிழ் மொழித்தினம், ஆங்கிலத் தினம், கணித, விஞ்ஞானப் போட்டிகள், சமூகவிஞ்ஞானப் போட்டிகள், 100 சதுர எண் கணித்தப் போட்டிகள், தேசிய மீலாத் போட்டிகள், வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள்




என்பவற்றில் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி மாகாண மட்டம், தேசிய மட்டம் வரை சென்று பல வெற்றிகளைப் பெற்று பாடசாலைக்கு புகழ் சேர்த்தனர்.

இவ்வாறு ஆளுமைத்திறன் படைத்த,சிறந்த நிருவாகியாக, சிறந்த ஓர் அதிபராகவும், பாசமுள்ள தந்தையாகவும்,நேர்மையாளராகவும் விளங்கியும் துலங்கியும்,இப் பாடசாலையின் இன்றைய வளர்ச்சிக்குப் பாடுபட்ட கே.காலிதீன் அதிபர்; நீண்ட ஆயுளோடு நீடித்து வாழ பிரார்த்தனைகள்.

**கலாபூஷணம் பி.எம்.எம்.எ.காதர்**
மருதமுனை தினகரன் நிருபர்

தொடர்புகளுக்கு :
எம்.எஸ்.பாஹிம்...
Whatsap: 0714901181

# சிங்கார நினைவு 05

மிக அண்மித்த உணர்விலிருந்து அவருடைய உரை வெளிவந்து கொண்டிருந்தது. பொருத்தமான ஒருவர் பொருத்தமான இடத்தில் பொருத்தமாக என் மனசின் வரைபடத்தைக் கிளர்த்திக் கொண்டிருந்தார்.

அவர் அருணா செல்லத்துரை என அறியப்பட்ட பன்முக ஆளுமை முகம்.



முல்லைத்தீவு குறித்த அவரது வரலாற்றுத் தேடலும் பதிவும் கனதியானது. அவரது நூல்கள் காத்திரமானவை. முல்லைத்தீவு நீராவிப்பிட்டியில் எனது என் மனசின் வரைபடம் வெளியிடப்பட்டபோது நூல் குறித்து திறனாய்வுரை நிகழ்த்த அவரையே தெரிவு செய்தேன்.

அவர் ஆழமாக அழகாக இயல்பாகப் பேசினார். தமிழ் முஸ்லிம் இணையுறவு அனுபவம் அதில் வெளிப்பட்டது. அற்புதமான மனிதர் அருணா செல்லத்துரை.

அருணா செல்லத்துரையென்ற ஊடக ஆளுமை ஊடகத்துள் மட்டும் சுருங்கியவரல்லர். நாடகம், கூத்து, வர லாறு என்று விரிந்தவர். ஆய்வுப்புலத்துக்கு அதிக பெறுமானம் வழங்கியவர். அருணர் ஓர் ஆய்வுத்துறை ஆளுமை. 'ஒரு ஊடகவியலாளனின் ஊடறுப்பு'' இவரது எழுத்துக்கள்.

'அடங்காப்பற்று வன்னியில் ஆதிகால தமிழர் வரலாறு இயக்கர் வாழ்புலங்கள்'' இவரது ஆய்வெழுத்தின் உச்சப் பனுவல். இதற்கென சாகித்ய விருது உட்பட பல்வேறு விருதுகள் கண்டவர். 'பண்டாரம் வன்னியர்கள் வரலாறு'' நூலுருவுக்கு கரிகாலச்சோழன் விருது கண்டவர்.




ஊடகவியலாளராக, படைப்பாளராக, ஆய்வாளராக, வரலாற்றுத் தேடலாளராக, பத்தியாளராக, பேச்சாளராகப் பன்முகங் கொண்டவர் அண்ணர் அருணா செல்லத்துரை அவர்கள்.

முல்லைத்தீவு முள்ளியவளையைச் சேர்ந்தவர். அயலூர் உறவு என்றாலும் இவரை நான் முதன்முதலில் கண்டு கொண்டது தொலைக்காட்சித் திரையி ல்தான். ரூபவாஹினி செய்தி வாசிப்பாளராக இருந்தார் அருணா. ஊடகத்துறை சார்ந்து இலத்திரனியலில் ஒலி ஒளி குரலாளராக ஒரு காலகட்டத்தை நிரப்பச் செய்தவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் பணி செய்தவர்.

அருணா அண்ணரை முதன்முதலில் நேரில் சந்தித்தது 2004இல். வடமாகாண இலக்கிய விருதுக்குத் தெரிவாகி யாழ்ப்பாணம் போனபோது. அவ்வாண்டுக்கான ஆளுனர் விருதுக்காக வந்திருந்தார். அண்மையூரைச் சேர்ந்த ஓர் ஆளுமையைக் காலம் தாழ்த்தி சேய்மையூரில் சந்திக்கிறேன். நான் முல்லை என்றதும் முஸ்தபா காக்காவின் மகன் என்றதும் பூரித்தார். பூரிப்பின் தொடர்ச்சி எமக்குள் அடர்ந்தது.

ஆய்வுப்புலத்தில் நீண்டகால பரீட்சயம் மிக்க அருணா செல்லத்துரை இன்னும் புதுப்புது ஆய்வொழுங்கில் ஈடுபட்டுள்ளார். மாந்தை பற்றிய ஆய்வுத்தேடலும் இதில் அடங்கும். வன்னி முஸ்லிம்கள் குறித்தும் அவரது ஆய்வும் தேடலும் பனுவலாக வேண்டுமென்பது நமது அவா.

# ரபான்

தூக்கத்துக்கும் கனவுக்குமிடையே காதுகளில் நிரம்பி வழிந்தது ரபான் இசை. இசையின் ரம்மியத்தில் கண் திறக்கிறான் இருள் சூழ்ந்த ஒற்றையடிப் பாதையை ஒளிப்பொட்டால் நிரப்புகிறது சூள் வெளிச்சம்; சிலபோது லாந்தர் ஒளி.

ஒளிப்பொட்டில் கண் பொதித்து தூக்கத்தைத் துரத்தினான் ரிபான். முற்றத்து மாமரத்தடியில் மண்குடத்து நீர் அவனது முகத்தில் குளிர்ந்தது பற்பொடியை கலீமா விரலில் எடுத்துப் பல் துலக்கினான் கொப்பளித்தான் மீண்டும் முகம் கழுவினான் கழுவினான் என்ன ரெண்டு கண்ணிலும் குளிர் நீரை அப்பினான். இதற்குள் ஒளிப்பொட்டு நெருங்கி விட்டது. ரபானின் ஓசை காதண்டை கேட்டது.

ரிபானுக்குள் ஸஹர் பொழுதுகள் ரபானின் இசையால் நிரம்பின. இத்தனை அழகிய ஓசைக்குப் பின்னாலொரு உருவம் கண்டான்.

இருளின் முகம் கறுத்தது. நரை நீண்டதாடி கூர்ந்து உறுத்தும் நீள் பார்வை சுருங்கி ஊதிய முகத்தோற்றம் மெலிந்த உருவைச்சுற்றிய பழுப்பேறிய ஆடை. நடக்கும் போது ஓசை கிளர்த்தும் மிதியடி.

பக்கீரர் அந்த ஊரின் முதுசம்;. ரபான் அவரின் பத்து விரல்களில் நர்த்தனமாடியது. ஆள்த்தோற்றத்துக்குப் பொருத்த மில்லாதகுரல். அழகுக் குரல். இவன் காதிலும் இனித்தது. உம்மாவின் சேலைத்தலைப்பில் ஒடுங்கி நின்றவன் ரபான் நர்த்தனத்தில் மயங்கினான்.

கீதமும் கஸீதாவும் நிசப்தப் பொழுதைத் தட்டியெழுப்பு பவர்பக்கீரர். பல தசாப்தமாக ஸஹர் அழைப்பு பணி செய்பவர். உம்மம்மா அரிசியும் தேங்காயும் மாம்பழமும் காசும் கொடுத்தா. சிரிப்பற்ற முகத்தில் மெலிதாய் பல் தெரிந்தது. அன்று 27ஆம் கிழமை இராத்திரி அவரோடு இவனை ஒத்த சிறுவனும் வந்திருந்தான். அவனது கையில் பை நிறைய பொரிகள். ஸஹர் உழைப்பின் பெறுமானம் அது.

பக்கீரர் பேசுவதை ரிபான் கேட்டில்லை.அவருடைய ரபான் இசையைத்தான் கேட்டிருக்கான. நேரம்தப்பாமல் நோன்பின் இரவுகளில் உரிய நேரத்தில் உரிய வீட்டுவாசலில் வந்து நிற்கும் இசை அது.

றமழான் கலாசாரங்களாலும் ஆனது என்பதற்கு ரிபானின் குக்கிராமமும் சாட்சிதான்.இருபத்தேழாம் இரவு என்பதால் பக்கீரர் கொஞ்சம் இளைப்பாறினார். ஸஹர் சாப்பாட்டை உம்மா பரிமாறினா.மாட்டிறைச் சிக்குழம்பும் குத்தரிசிச் சோறும் பிறகு பாலுஞ் சோறும் விறாந்தையில் பக்கீரருக்கும் பேரனுக்கும் ஸஹருணவு.உள்ளே குசினிக்குள் ரிபான் ராத்தாமாருடன் ஒட்டிக்கொண்டு தின்றான்.

இவனுக்குள் ஒரு பக்கீரர் வளர்ந்தார் ஒரு ரபான் கைகளில் முளைத்தது சிறகுகள் விரல்களில் வளர்ந்தன பாடவும் முயன்றான். ரிபானின் பகல் பொழுதுகள் பக்கீரரின் மாதிரி ஆயின.

இன்னும் நாலு தசாப்தம் கழித்து தானும் பக்கீரராக ஊர்முழுதும் ரபான் ஓசையெழுப்பலாமென எண்ணினான் ரிபான். ஆனாலுமென்ன ரமழான் வந்தது. ஸஹரும் வந்தது.ஆனால் ஊரூராய் எழுப்பும் பக்கீரரும் இல்லை ரபானும் இல்லை. அந்த இருட் பொழுதுமில்லை சூளுமில்லை ஒற்றை ஒளிப் பொட்டு லாம்புமில்லை. அலாரரம் அடிக்கிறது. இவனது பேரப்பிள்ளை ரிவியை முறுக்குகிறான். செல்போனில் ரபான் சத்தத்தை ரொன்னாக நிரப்பி வைத்துக்கொண்டு பக்கீரராகிறான் ரிபான். மீண்டும் சொல்போனில் ஒலிக்கிறது ரபான் சத்தம்.


பொன்மீரா

# மற்றமை கவிதையாகி நிற்றல்

உலகக் கவிதை தினம் மார்ச் இருபத்தொன்று.கவிதையைக் கொண்டாடும் காலத்தின் குறியீடு. மார்ச் 20 சர்வதேச குருவிகள் தினம். மார்ச் 21 சர்வதேச கவிதை தினம்.மார்ச் 22 சர்வதேச நீர் தினம்.

'குருவியும் ஒரு கவிதைதான். கவிதையும் ஒரு குருவிதான். தண்ணீரும் ஒரு கவிதைதான். கவிதையும் நீர்த்திரவம்தான். நான் நீராலானவன்''என்று பாடினான் கவிஞனொருத்தன்.

உலகக் கவிதை தினத்தின் நினைவுச்சுவடாக மற்றமை வெளியிட்டிருக்கிறது 'யாரோ எமக்கு எதிராக நிற்கிறார்கள்''ஈழத்தின் கவிஞர் பதின்மரின் ஐம்பது கவிதைகளின் திரட்டு. மற்றமை மேமன்கவி தொகுத்திருக்கும் இந்தப் பிரதி இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்த கவிகளின் கூட்டு. கெக்கிராவ சுளைஹா, மாரிமுத்து சிவகுமார், வெலிமடை ரபீக், தினுஸா மகாலிங்கம், முல்லை முஸ்ரிபா, சிவனுமனோகரன், துவாரகன், பாலரஞ்சனி ஜெயபால், அனார், மேமன்கவி ஆகியோரின் கவிதைகளால் யாரோ எமக்கு எதிராக நிற்கிறார்கள் பிரதி கவிதையாகி நிற்கிறது.




கவிதை காலத்தின் ஊற்று கவிதை காலத்தின் பெருக்கு கவிதை காலத்தின் நதியெடுப்பு கவிதை காலத்தின் சமுத்திர ஓசை. அது காலம் முழுதும் கேட்டுக்கொண்டிருக்கும் மகா ஒலி.

மற்றமை கொண்டாடும் உலகக் கவிதை பெயல் மணக்கும் சமுத்திரத்தின் துளிதான். இன்றைய கவிதைப்பெருக்கு காலத்தில் மற்றமையும் கவிதையைக் கொண்டாடுகிறது.

# ஔவன் கவிதை

மௌனத்தின் நிறம்
பூவரசு வேலிகளிடையே
ஒரு பறவையின் சிறகு
வேலி நீக்கி
நகர்ந்த காலடியில்
ஆயிரம் முட்களின் ரணம்
உள்மன நினைவுகளில் வலி
சிதைவுற்ற காலத்தின் சுவடு
இவனைச் சுட்டது
உள்ளே பேரமைதி

எவருடைய குரலும்
இயங்கா மவுனம்
ஆயிரங்காலத்து மவுனத்தை
உடைக்கும் சொல்லொன்றை
முன்மொழிபவர் எவர்
பறவையின் சிறகில்
படிந்த ரத்தத்தில்
இவனது நிறம்
மண் பிசைந்த
ரேகையின் நிறம்

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் -5

பாண்டிச்சேரி, காரைக்காலில் மிகவும் அருமையாக நடித்த எம்.ஜி.ஆருக்கு பொதுமக்களின் கைதட்டலும் ஆசியும் கிடைத்தது. அத்தோடு நாடகக் கம்பனி முதலாளியின் பாராட்டும் கிடைத்தது. இந்தச் செய்தியைக் கேட்ட எம்.ஜி.ஆரின் தாய் சத்தியபாமா தன் மகனின் வளர்ச்சியைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். சத்தியாபாமா தனது மகன் எம்.ஜி.ஆரின் நடிப்புத் திறமையை அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடம் சொல்லிப் பெருமைப்பட்டாள். இந்த நேரத்தில் எம்.ஜி.ஆரைப் பார்க்க ஆசைப்பட்டார் சத்தியபாமா. நாராயணன் இரு பிள்ளைகளையும் வீட்டுக்கு அழைத்து வந்தார். சத்தியபாமா தனது இரு பிள்ளைகளையும் கட்டியணைத்து ஆனந்தப்பட்டார். அடுத்த நாள் சத்தியபாமா தனது இளைய மகன் எம்.ஜி.ஆரை



பார்த்து "அன்று பார்த்ததை விட இன்று இன்னும் மெலிந்து போய் இருக்கிறாய்" என்று சொல்லி கவலைப்பட்டார். ஆனால் இதை எம்.ஜி.ஆர். பொருட்படுத்தவில்லை.

எம்.ஜி.ஆர். நாடகத்தில் நன்றாக நடிக்கிறார் என்ற விடயத்தை சத்தியபாமா வாடகைக்கு குடியிருக்கும் வீட்டின் சொந்தக்காரரர் ஆறுமுக நாடார், அவரது மனைவி மக்களும் அறிந்ததை அடுத்து "நாங்கள் இதுவரையில் எம்.ஜி.ஆரை பார்க்கவில்லையே" என்று கூறி பார்க்க வருகிறார்கள். வீட்டின் சொந்தக்காரரர் ஆறுமுக நாடார் வயதானவரும் ஊரில் நல்லவர் என்று பெயர் எடுத்தவரும் பல கள்ளு கடைகளுக்கு சொந்தக்காரரும் பல தோட்டங்களுக்கு சொந்தக்காரரும் ஆவார். இவர் ஒரு நாட்டு வைத்தியரும் கூட. சத்தியபாமா தனது மகன் எம்.ஜி.ஆரின் உடல் மெலிந்து போவது பற்றி ஆறுமுக நாடாரிடம் ஆலோசனை கேட்டார். ஆறுமுக நாடார் எம்.ஜி.ஆரை உடனே அழைத்து, கைப்பிடித்து நாடியைப் பார்த்தார். பின்னர் சத்தியபாமாவை நோக்கி "உங்கள் மகன் ராமச்சந்திரனுக்கு பெரிதாக ஒரு நோயுமில்லை. உஷ்ணம் அதிகமாக இருக்கிறது. அதனால் குடல் புண், குடல் பூச்சி ஏற்பட்டு உடல் மெலிகிறது. இதனைக் குணப்படுத்தி விடலாம். நீங்கள் கவலைப்படாதீர்கள். இதற்கு மருந்து கொடுத்து சுகமாக்கலாம்" என்று கூறியதும் சத்தியபாமா ஆறுதலடைந்தார். ஆறுமுக நாடார், சத்தியபாமாவை தனியாக அழைத்து "எம்.ஜி.ஆருக்கு வைத்தியம் ஆரம்பிக்க வேண்டும். நாடகக் கம்பனி முதலாளியிடம் எப்படியாவது ஒரு மாதம் லீவு கேட்டு, லீவு கிடைத்ததும் சொல்லி விடுங்கள்" என்று கூறி விட்டு சென்றார். இந்த விடயத்தை சத்தியபாமா எம்.ஜி.ஆரிடம் கூறினார். எம்.ஜி.ஆர். அதைக் கேட்டு "நான் நன்றாகத்தான் இருக்கிறேன். எதற்காக என்னைத் தொந்தரவு செய்கிறீர்கள்?" என்று சொல்லி வருத்தமடைந்தார். மேலும் "லீவு எடுக்கத் தேவையில்லை. எனக்கொரு நோயுமில்லை, நோயிருந்தாலும் ஒரு மாதமெல்லாம் லீவெடுக்க முடியாது அம்மா" எனக் கூறி விட்டு இருவரும் நாடகக் கம்பனிக்கு சென்று விட்டார்கள்.

திடீரென்று ஒருநாள் சத்தியபாமா நாடகக் கம்பனிக்கு சென்று நாராயணனை சந்தித்து தனது மகன் எம்.ஜி.ஆரின் உடல்நிலை பற்றி எடுத்துக் கூறினார். இதனைக் கேட்ட நாராயணன், சத்தியபாமாவை அழைத்து முதலாளியிடம் பேச வைத்தார். முதலாளியைப் பார்த்த சத்தியபாமா பயபக்தியோடு, வணக்கத்துடன் தனது இளைய மகன் எம்.ஜி.ஆரின் உடல் மெலிவு பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினார்.

"தாயாகிய நான் எப்படியும் எனது பிள்ளைகள் நன்றாக இருக்க வேண்டும் என நினைத்து செயல்களில் ஈடுபடும்போது கடவுளின் கிருபையும் உங்களைப் போன்ற பெரிய மனிதர்களின் ஆசீர்வாதமும் உதவியும் கிடைக்குமென்று நினைக்கிறேன்" என கூறினார்.


சத்தியபாமா கூறியதைக் கேட்டதும் சற்று யோசித்து விட்டு கம்பனி முதலாளி சச்சிதானம்பிள்ளை சத்தியபாமாவை நோக்கி "அம்மா, நீங்கள் சொல்கின்றபடி ராமச்சந்திரனுக்கு உள்ள வேகமான செயலுக்கும் விவேகமான அறிவுக்கும் அழகுக்கும் ஏற்ற உடம்பு இல்லையே என்பதை இப்போதுதான் நான் யோசிக்கிறேன். நீங்கள் கேட்டபடி ராமச்சந்திரனுக்கு ஒரு மாதம் லீவு தருகிறேன். அவனது உடல் ஆரோக்கியத்தை சரி செய்து விட்டு அனுப்பி வையுங்கள்" என்றார்.

கம்பனி முதலாளி பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் எம்.ஜி.ஆரை அழைத்து வர சொன்னதும் "முதலாளி ஏன் அழைக்கின்றார்? நான் என்ன தவறு செய்தேன்?" என யோசித்துக் கொண்டு எம்.ஜி.ஆர். முதலாளியிடம் வந்தார். அந்த இடத்தில் அம்மாவைப் பார்த்ததும் "அம்மா எதற்கு நாடகக் கம்பனிக்கு வந்திருக்கிறார்?" என யோசித்தார். அந்த நேரத்தில் எம்.ஜி.ஆர். தாயாரைப் பார்க்காமல் முதலாளியைப் பார்த்துக் கொண்டு கைகட்டி நின்றார். முதலாளி, எம்.ஜி.ஆரை நோக்கி "ராமச்சந்திரா... உனக்கு உடல் மெலிந்துள்ளது. மேலும் கொஞ்சம் உடல் பெருத்தால் நன்றாக இருக்கும். உனது அழகுக்கும் திறமைக்கும் புத்திக் கூர்மைக்கும் உடல் கொஞ்சம் பெருத்து இருப்பது நல்லது. எனவே நீ இப்போது உனது அம்மாவுடன் போயிருந்து ஒரு மாதத்திற்குள் உடல்நிலையை சீர்படுத்திக் கொண்டு வா. அத்தோடு காலையில் வழமையாக மேற்கொள்ளும் உடற்பயிற்சியை செய்யத் தவறி விடாதே. முடிந்தால் இடையில் கம்பனிக்கு வந்து போகலாம்" எனக் கூறி தாயாருடன் அனுப்பி வைத்தார்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சக்கரபாணி மனதில் "தம்பி எப்படியாவது நல்ல குணமாகி சீக்கிரம் வர வேண்டும்" என்று கடவுளை வேண்டிக் கொண்டு வெளியே சென்று அம்மாவுடன் தம்பியை வழியனுப்பி வைத்தார்.

நாடக கம்பனியிலிருந்து வீடு நோக்கி போகின்ற வழியில் எம்.ஜி.ஆர். அம்மாவைப் பார்த்து "என்னம்மா இதெல்லாம்... நான் ஒரு மாதம் வீட்டுக்கு வந்து என்னுடைய உடம்பை பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது தேவையா? நம் குடும்பம் இருக்கும் நிலையில் இது அவசியம்தானா?" என கேட்டார். எம்.ஜி.ஆர். வீட்டுக்கு சென்ற பிறகு மறுநாள் காலையில் அந்த வீட்டின் சொந்தக்காரரான ஆறுமுகம் நாடார் வீட்டுக்கு வந்து எம்.ஜி.ஆரை அழைத்து நாடி பிடித்துப் பார்த்தார்.

(தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# மறைந்தாலும் மறக்க முடியாத நடிகர் நாகேஷ்



தமிழ் திரையுலகில் காலத்தால் அழிக்க முடியாத நினைவுகளை ரசிகர்கள் மனதில் பதித்து சென்றவர்களில் நடிகர் நாகேஷும் ஒருவர். கதாநாயகன், நகைச்சுவை நடிகர், வில்லன், குணச்சித்திர வேடம், நடனம் என பலவற்றிலும் சிறந்து விளங்கியவர் நாகேஷ்.

தன்னுடைய ஒட்டுமொத்த திறமையை வெளிப்படுத்தி தமிழ் திரையுலகில் அனைவரையும் சிரிக்க வைத்துவிட்டு இதே தினத்தில் ரசிகர்கள் அனைவரையும் விட்டு இந்த மண்ணுலகை விட்டு விண்ணுலகம் சென்றார்.

நாகேஷுக்கு முந்தைய நகைச்சுவை நடிகர்களான என்.எஸ்.கிருஷ்ணன், தங்கவேலு போன்றோர் கருத்துக்களுடன் நகைச்சுவை கூறி வந்த நிலையில் முதல்முதலாக பாடி லேங்வேஜ் மூலம் நகைச்சுவையை அள்ளித் தெளித்தவர் நாகேஷ். இவர் நடித்த 'திருவிளையாடல்' தருமி, 'தில்லானா மோகனாம்பாள்' வாத்தி, 'காதலிக்க நேரமில்லை' செல்லப்பா, போன்ற பல கேரக்டர்களை பல தலைமுறைகள் ஞாபகம் வைத்திருக்கும் படங்களாக அமைந்தது. மேலும் முன்னணி கதாநாயகர்களாக எம்.ஜி.ஆர்சிவாஜி, கமல்ரஜினி, அஜித்விஜய், ஆகிய மூன்று தலைமுறை நடிகர்களுடன் 1000 படங்களுக்கும் மேல் நடித்து அசத்தியுள்ளார் . கமல் நடித்த 'அபூர்வ சகோதரர்கள்' படத்தில் வில்லன், 'அவ்வை சண்முகி' படத்தில் மேக்கப் மேன், போன்ற வேடங்களிலும் ரஜினியுடன் அவர் நடித்த 'தில்லுமுல்லு', அதிசயபிறவி, படிக்காதவன், தளபதி, ஆகிய படங்களில் இணைந்து நடித்துள்ளார். விஜய்யுடன் நாகேஷ் நடித்த 'பூவே உனக்காக' படத்தில் நாகேஷின் பண்பட்ட நடிப்பு அந்த படத்திற்கு பெரும் பலமாக இருந்தது. அஜித்துடன் அவர் நடித்த 'பூவெல்லாம் உன் வாசம்' படத்தில் அஜித்தின் தாத்தாவாகவும் சிவகுமாரின் தந்தையாகவும் அருமையாக நடித்திருப்பார். நாகேஷின் நடிப்பை முழுக்க முழுக்க வெளிப்படுத்த காரணமாக இருந்தவர் அவருடைய நண்பரும், இயக்குனர் சிகரமுமான கே.பாலசந்தர்தான் என்று கூறினால் அது மிகையாகாது. 'எதிர்நீச்சல், நீர்க்குமிழி, பாமாவிஜயம், இரு கோடுகள், தாமரை நெஞ்சம், போன்ற பல படங்கள் காலத்தால் அழியாதவை.

நடிப்பு, நடனத்தை அடுத்து நாகேஷ் ஒரு படத்தை இயக்கவும் செய்தார். இவரது மகன் ஆனந்த்பாபு முக்கிய வேடத்தில் நடித்த 'பார்த்த ஞாபகம் இல்லையோ' படம் நாகேஷ் டைரக்ட் செய்த ஒரே படம் என்பது குறிப்பிடத்தக்கது.

நாகேஷ் மீது கமல், ரஜினி இருவருமே மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர். அதனால்தானோ என்னவோ நாகேஷின் கடைசி படமாக கமலின் 'தசாவதாரம்' அமைந்தது. நாகேஷின் மீது அளவில்லா பாசம் வைத்திருந்த ரஜினி, அவருடைய இறப்பிற்கு பின் அவரை 'கோச்சடையான்' படத்தில் உயிர்த்தெழ வைத்தார். நாகேஷ்... மாறும் உடல் மொழி... ஏறி இறங்கும் குரல் ஜாலம்... தமிழர்களின் 40 ஆண்டு கால சாயங்காலச் சந்தோஷம். ஈர்க்குச்சி உடம்பால், சிரிப்புத் தீக்குச்சி கிழித்தவர்!...

★ பூர்வீகம் மைசூர். ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டரான தந்தை ஊர் ஊராகப் பணியாற்ற, குடும்பம் மட்டும் தமிழ்நாட்டில் தாராபுரத்தில் இருந்தது. தாராபுரம் பீமராய அக்ரஹாரம்தான் நாகேஷ் வளர்ந்த தொட்டில்! பெற்றோர் கிருஷ்ணராவ் ருக்மணி வைத்த பெயர் நாகேஸ்வரன். பின்னாளில் நாகேஷ் ஆனது. வீட்டுச் செல்லப் பெயர் குண்டப்பா! பள்ளி நாடகத்தில் நாகேஷுக்கு எமன் வேஷம். வசனம் பேசிக் கொண்டே பாசக் கயிற்றினை வீச வேண்டும். இவர் வீசிய பாசக் கயிறு எசகுபிசகாக ஒருவர் கழுத்தில் போய் விழுந்தது. பள்ளித் தலைமை ஆசிரியரின் கழுத்து அது! இளம் வயதில் வீட்டில் கோபித்துக் கொண்டுஹைதராபாத்துக்கு வந்தவர். ரேடியோ கடை, ஊறுகாய் கம்பெனி எடுபிடி, மில்லில் கூலி வேலை என்று பல வேலைகள் பார்த்திருக்கிறார்!

★ முதன்முதலில் நாடகத்தில் வயிற்று வலி நோயாளியாக நடித்தார். அன்று அவரதுநடிப்பைப் பாராட்டி, முதல் பரிசை வழங்கியவர் எம்.ஜி.ஆர்!

★ கோயம்புத்தூரில் பி.எஸ்.ஜி. ஆர்ட்ஸ் காலேஜில் படித்தபோது, அடுத்தடுத்து மூன்று தடவை அம்மை போட்டது. முகம் முழுக்க அம்மைத் தழும்புகளை வைத்துக்கொண்டு பலரது முகத்தை மலரவைத்தது அவரது நடிப்பின் வெளிச்சம்! ஹோட்டலில் தங்கியிருந்த நாகேஷை அவரது நாடக நடிப்பின் மீது கொண்ட காதலால்... தன் வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடு செய்து தந்தவர் நடிகர் பாலாஜி!

★ இவர் மனைவி பெயர் ரெஜினா. ஆனந்த்பாபு, ரமேஷ் பாபு, ராஜேஷ் பாபு என்று மூன்று மகன்கள். மூன்று மகன்களும் வெவ்வேறு மதங்களில் திருமணம் செய்துகொண்டபோது மனமார ஆசி வழங்கியவர்! முதல் படம் 'தாமரைக்குளம்' ஷூட்டிங்கின்போது, சரியாக நடிக்கவில்லை என்று உதவி இயக்குநர்கள் நாகேஷைக் கடிந்தனர். உடன் நடிக்க வந்த எம்.ஆர்.ராதாவிடம் மனம் வெதும்பி நடந்ததைச் சொன்னார் இவர். 'மத்தவன் எல்லாம் நடிகன், நீ கலைஞன்... கவலைப்படாம நடி' என்றாராம் ராதா! 'அபூர்வ ராகங்கள்' படத்தில் கண்ணதாசனுக்கு வைத்தியம் பார்க்க டாக்டராக வருவார் நாகேஷ். கண்ணதாசனிடம் ஒரு கவிதை சொல்லச் சொல்வார் இவர். கவிதை சொன்ன கண்ணதாசனிடம் பீஸ் கேட்பார் இவர். 'இது தான்யா ஃபீஸ்' என்பார் அவர்! முறைப்படி யாரிடமும் நடனம் கற்றுக்கொண்டது இல்லை. யாரையும் காப்பி அடித்ததும் இல்லை. ஆனால், நடனத்தில் 'நாகேஷ் பாணி' என்கிற தனி முத்திரையைக் கொண்டுவந்தார்! எம்.ஜி.ஆருடன் 45 படங்களில் நடித்த நகைச்சுவை நடிகர் இவர்தான். அதில், 19 படங்களில் இவருக்கு ஜோடி மனோரமா! 'திருவிளையாடல்' படத்தின் காட்சிகளை ரஷ் பார்த்த சிவாஜி, 'நாகேஷின் நடிப்பு பிரமாதம். தயவுசெய்து எதையும் கட் பண்ணிடாதீங்க' என்று டைரக்டர் ஏ.பி.நாகராஜனிடம் கேட்டுக்கொண்டாராம்! நகைச்சுவையில் மட்டுமல்ல; 'நீர்க் குமிழி' குணச்சித்திரம், 'சர்வர் சுந்தரம்' ஹீரோ, 'அபூர்வ சகோதரர்கள்'ல் வில்லன், 'மகளிர் மட்டும்' பிணம் என்று வெளுத்துக்கட்டியவர்! 'அபூர்வ ராகங்கள்' ஷூட்டிங். பாலசந்தர் ஆக்ஷன் சொல்லிவிட்டார்.

நாகேஷ், கோப்பையைக் கையில் எடுத்து சுவரில் தெரிந்த தன் நிழலைப் பார்த்து, 'சியர்ஸ்' என்று சொல்ல... படம் பார்த்தவர்கள் பாராட்டினார்கள். நாகேஷின் டைமிங் சென்ஸுக்கு இது ஒரு சாம்பிள்!இவரை எப்போதும் 'டேய் ராவுஜி' என்று செல்லமாக அழைப்பார் பாலசந்தர்!



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

# நுவரெலியாவில் வசந்தகால கொண்டாட்டங்கள்



நுவரெலியா வசந்த கால கொண்டாட்டங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையில் நடாத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா மாநகரசபை ஆணையாளர் திருமதி சுஜீவா போதிமான்ன தெரிவித்தார். நுவரெலியா நகரம், கிரகரி வாவி, கிரகரி வாவி சுற்றுப்பகுதி,விக்டோரியா பூங்கா போன்ற சுற்றுலா தலங்களை சுத்தப்படுத்துவதுடன், பல விளையாட்டு நிகழ்வுகளை உள்ளடக்கிய வசந்த விழாவை பிரமாண்டமாக நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்துடன் இணைந்து நுவரெலியா பேரூந்து நிலையம் சுத்தம் செய்யப்பட்டதுடன் நுவரெலியா கிரகரி வாவியில் நீரில் மிதக்கும் நீர்வாழ் தாவரங்கள் மற்றும் பிளாஸ்டிக் போத்தல்கள் உள்ளிட்ட பல்வேறு திண்மக் கழிவுகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டன. இதற்கு நுவரெலியா மாநகரசபை சுகாதார திணைக்கள அதிகாரிகள் , படகு உரிமையாளர்கள் மற்றும் நுவரெலியா மாநகரசபையின் பணியாளர்கள் ஒத்துழைப்பு வழங்கினர். நுவரெலியா நகரசபையின் சுகாதார திணைக்களம் கூறுகையில், வாவியிலுள்ள பாசி உள்ளிட்ட நீர்வாழ் தாவரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் கிரகரி வாவியில் நீரில் மிதந்து வரும் பிளாஸ்டிக் போத்தல்கள் உட்பட அதிக அளவு திடக்கழிவுகள் அகற்றப்பட்டன. வசந்த விழாவை முன்னிட்டு நுவரெலியா விக்டோரியா பூங்காவில் பல்வேறு வகையான மலர் செடிகள் நாட்டப்பட்டு மிகவும் கண்கவர் வகையில் தோட்டத்தை தயார் செய்ய நுவரெலியா மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் நுவரெலியாவிற்கு வரும் உள்ளூர் உல்லாசப் பயணிகள், நுவரெலியா நகரை அண்மித்த மக்கள், முறைசாரா முறையில் வீசும் கழிவுகள் நுவரெலியாவின் அழகுக்கு அச்சுறுத்தலாக உள்ளதால் நுவரெலியா மாநகரசபை சுகாதார திணைக்கள அதிகாரிகள் முறைசார்ந்து கழிவுகளை அகற்றுமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

தலவாக்கலை குறூப் நிருபர்



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.